வி. ஜீவகுமாரன்



# குதிரை வாகனம்

UMi
The Ultimate

# குதிரை வாகனம்

வி. ஜீவகுமாரன்

UMi Unique
Media Integrators
The Ultimate
Thirumullaivoyal, Chennai-600 109.
umi.infobooks@gmail.com

**Unique**
**Media Integrators**

No.8, 6th Cross, 8th Main Road,
Vaishnavi Nagar, Thirumullaivoyal,
Chennai-600 109. umi.infobooks@gmail.com

---

**Kuthiraivaganam**
This edition published and distributed by UMI
© : Publisher

All rights reserved except for the inclusion of brief quotations in a review, no part of this publication may be reproduced, stored in retrieval system, or transmitted in any form or by any mean, electronic, mechanical, photocopying, recording, or otherwise without the written permission of the publisher.

Published March, 2017

ISBN: 978-93-85471-78-0

Price : ₹ 225/-

Text DTP, Layout &
Cover Design by: Unique Media Integrators

Printing and Binding:
Mani Offset. Chennai.

**Unique Media Integrators** and its office bearers can't be held responsible for the consequences of any actions taken as a result of information provided in this book.

# குதிரை வாகனம்

வி.ஜீவகுமாரன்

## இது ஒரு வாசகனின் ஆசியுரை

தம்பி ஜீவகுமாரன் என்னிடம் ஆசியுரை எழுதித் தருமாறு கேட்டபோது சும்மாவேனும் நான் மறுப்புத் தெரிவிக்கவில்லை. அதற்குக் காரணம் அவ்வாறு ஒரு ஆசியுரை வழங்க வேண்டும் என்று எனக்கு உள்ளுக்குள் ஒரு பெருவிருப்பம் இருந்ததே அதற்குக் காரணம். மறுப்புத் தெரிவிக்காமல் உடனே "அதற்கென்ன" என்று சொல்லி ஒத்துக் கொண்டேன்.

நான் ஒரு வாசகனாக இருந்து இந்நாவலுக்கு ஆசியுரை வழங்குவதைப் பெருமையாகக் கருதுகிறேன்.

ஒரு வாசகனாகத் தம்பி ஜீவகுமாரன் எழுதிய சிறுகதைகள், சிறுகதைத் தொகுப்புகள், நாவல்கள் மற்றும் அவரது ஆக்கங்களில் தொண்ணூறு வீதத்தை நான் வாசித்திருக்கிறேன். எனது விருப்புக்களையும் ஆக்கங்கள் பற்றிய அபிப்பிராயங்களையும் அவரோடு மின்னஞ்சல் மற்றும் முகநூல் பக்கம் மூலம் எழுத்து வடிவிலும், நேரிலும், தொலைபேசியிலும் பகிர்ந்து கொண்டிருக்கிறேன்.

வாசகன் என்ற முறையில், வாசகர்களோடு பேசப்போகின்ற சந்தர்ப்பம் இது.

நான் எழுதித்தர நிறையவே இருக்கிறது. எதை எழுதுவது. எதை விடுவது என்று இப்போது தடுமாறு கின்றேன். நான் எழுதப்போவது அவரைப் பற்றிய புத்தகம் அல்ல. அவர் எழுதிய ஆக்கங்களைப் பற்றியது. அதனைத் தெரிவு செய்வதில் சிரமம் இருந்தது. சில பக்கங்களில் நிறைய எழுதவேண்டுமென்றால் கொஞ்சம் சிரமம்தான்.

ஜீவகுமாரன் என் கண்களுக்கு முன்னால் வளர்ந்த ஓர் எழுத்தாளன். இலக்கியவாதி.. அவரது ஒவ்வொரு ஆக்கங் களும் ஒவ்வொரு படிக்கற்கள். அந்தப்படிக்கற்கள் ஒவ்வொன்றும் மேல்நோக்கி நகர்ந்து செல்வதை அவரின் எழுத்துக்களை வாசிப்போருக்கு உடன் விளங்கும். அவரிடம் எனக்கு இன்னொரு பிடித்த விடையம் சளைக்காத உழைப்பு. ஒருபுத்தகம் முடிந்த கையோடு அடுத்த புத்தகம் அல்லது புத்தகங்கள் வெளிவரக்காத்திருக்கும். “அண்ணை, இரண்டு மூன்று மாதங்களில் இரண்டு வெளிவரும்”, என்பார். நான் ஆச்சரியத்துடன் ஆடிப்போவேன். இதற்கிடையில், “ஞானம்”, “ ஜீவநதி” சஞ்சிகைகளிலும்... வீரகேசரி, தினக்குரல், கனடா பத்திரிகைகளிலும் அவரது ஆக்கங்கள் வெளிவந்து கொண்டே இருக்கும். இதனிடையே முகநூலில் கருத்துக்கள் பத்திகள், என்று எழுதிக்கொண்டே இருக்கிறார். எல்லோருக்கும் இவ்வாறான வேகம் அமைந்து விடுவதில்லை. எதையாவது நிறைய எழுதிக்குவித்துக் கொண்டிருப்பவன் எதிர்காலத்தில் உலகம்போற்றும் சிறந்த எழுத்தாளனாக வருவான் என்று “தாமரை”யில் ஒரு கட்டுரை வாசித்தேன். அப்போதெல்லாம் தம்பி ஜீவகுமாரனைத்தான் நான் நினைத்துப்பார்ப்பதுண்டு. இவருக்கும் அப்படியான தொரு எதிர்காலம் உண்டு என்பதை நான் அறிவேன். இந்தத்

தீர்க்க தரிசனத்தை நான் எழுதியதாகவே இருக்கவேண்டும் என்று விரும்புகின்றேன்.

"குதிரை வாகனம்"அடுத்த வெளியீடாக வருகிறது என்பதை நான் முகநூலில் செய்தியாக வாசித்தேன். அதற்கு நானும் ஆசியுரை எழுதுவேன் என்று அப்போது எனக்குத் தெரியாது.

இன்று காலையில் இவர் எழுதிய மக்கள்... மக்களால்... மக்களுக்காக... என்ற நாவலை மீண்டும் ஒருதடவை வாசித்தேன். இந்தப் புத்தகப் பற்றி நான் பலமுறை அவரோடு உரையாடி இருக்கிறேன்.

ஆழமான புனிதமான காதலைச் சொல்லுகின்ற விதம் அருமை. பாத்திரப்படைப்புகள் அற்புதம். காதலி - ராசாத்தி, காதலன் - கதை சொல்லி, அன்பைச்சொரியும் அப்பா. சொல்லி மாளாது. இன்று காலையிலும் விம்மி வெடித்து அழுதேன்.

"கடைசியாக இது அத்தனையும் உன் சொத்து இதனை நீ அந்தப் பெட்டைக்குக் குடுத்தாலும் குடுப்பாய் என என் அடிமனம் சொல்லுது...அப்பா என்ற முறையில் உனக்குச்சொல்ல வேண்டிய கடமை ஒன்றிருக்கிறது. விருப்பம் என்டால் அம்மா இல்லாத காலத்தில் எல்லாத்தை யும் விற்று எங்கள் சொந்தக்காரர் யாருக்கும் தெரியாமல் அந்தப் பெட்டைக்குக் காசாய்க் குடு. காணி பூமியாய்க் கொடுத்து அதுகளை வாழவைக்க நினைத்தால் இவ்வளவு காலமும் நீயும் அந்தப்பிள்ளையும் கட்டிக்காத்த புனிதம் களங்கப்பட்டுப்போகும்..."

இந்த இடத்தில் நான் வாய்விட்டு "அப்பா" என அழுதேன். அந்த நாவலில் வரும் முக்கியமான நிகழ்வு அது.

தகப்பன் மகனுக்கு எழுதிய கடிதம் இது. இந்த நாவலின் முதல்பக்கமே பெரிய சோகத்துடனும் ஒரு சவாலுடனும் ஆரம்பிக்கின்றது. கடைசிவரைக்கும் காதலித்த தலித் பெண்ணையும் அவள் பெற்ற நான்கு பிள்ளைகளையும் அவளது கணவன் இறந்த பின்பும் உதவுகின்ற காதலின் புனிதம் பவித்திரமானது. காதலன் திருமணம் செய்யாமல் யாருக்கும் தெரியாமல் உதவுவது இன்னும் பெருமை கொள்ள வைக்கிறது.

"மக்கள்... மக்களால்... மக்களுக்காக....", இந்தப் புத்தகம் பலவிதமான கருத்துக்களை சிறப்புற சொல்லு கின்றது. இதற்குள் புலம்பெயர் மண்ணில் எமது இயக்கங் களின் அரசியல் அடாவடித்தனங்கள் அனைத்தும் யதார்த்தத்தை பிரதிபலிக்கும் எழுத்துக்கள்.

வரப்போகிறது "குதிரை வாகனம்".

இதைப்பற்றி அதிகம் எழுதவேண்டும் என்பதைவிட வாசகர்கள் வாசித்து அறிவதே சிறந்ததென்று கருதுகிறேன். வாசித்து பல இடங்களில் விம்மி வெடித்து அழுதிருக் கிறேன். பல தலைமுறைக்கதைகளை ஆசிரியர் மிகச் சிறப்பாக நகர்த்திச் சென்றிருக்கிறார்.

குடும்பம், கௌரவம், என்று முரண்பட்டிருக்கும் நம்மவரின் வாழ்க்கை முறை, திருவிழா நிகழ்வுகள். சாதிப் பிரிவினைகள், இனப்பிரிவினைகள், இதனால் ஏற்படும் குடும்பப் பிளவுகள், இராணுவ அடக்குமுறை, விடுதலை இயக்கங்களில் சேருதல், புலம்பெயர்தல். இளம்சந்ததியின் புலம்பெயர்ந்த ,வாழ்க்கையில் எத்துணை கட்டுடைப்பு உண்டோ அத்தனையையும் இந்நாவலில் பதிவு செய்திருக் கிறார். இதனால் இங்குள்ள குடும்பங்கள் படும்

அவஸ்த்தைகள் மனதைக் கொஞ்சம் வலிக்கச் செய்கிறது. இதுவே யதார்த்தமுமாகும். நாவல் மூன்று காலங்களையும் பிரதிபலிக்கிறது. வாசிக்கும்போது விறுவிறுப்பை குறைக் காமல் பாத்திரங்கள் எம்மோடு பேசுகின்றன.

"மக்கள்... மக்களால்... மக்களுக்காக..." நாவல் போலவே இந்த நாவலிலும் கதை சொல்லியே கதாநாயகன். இரண்டு நாவலிலும் இறுதிவரை கதை சொல்லியின் பெயர் தெரிவிக்கப்படாமல் சாதுரியமாக நகர்த்திச் சென்றிருக் கின்றார்.

இந்த நாவலில் எத்தனையோ பாத்திரங்கள் வருகின்றன. என்னைப்பாதித்த அமைதியான பாத்திரம் கதைசொல்லியின் மனைவியாக வரும் பவித்திரா தான். இந்தப்பாத்திரம் கட்டுக்களை உடைக்கும்போது எமக்கு கண்ணீர் மழையாகச் சொரியும்.

இந்தநாவலும் இவருக்கு நல்லதொரு பெயரைப் பெற்றுக்கொடுக்கும் என்பதை உறுதிப்படுத்தலாம். இவரது நாவல்கள் சிங்களம், மலையாளம், ஹிந்தி, ஆங்கிலம் என மொழிமாற்றம் செய்யப்பட்டிருப்பது தமிழ் இலக்கியத்திற்கு இவரால் கிடைத்த பெருமையாகும். யதார்த்தத்தைப் பிரதிபலிக்கும் இவரது எழுத்துக்கள் இலக்கிய உலகில் நின்று நிலைக்கும். இவரின் படைப்புகள் இந்தியாவிலும் இலங்கையிலும் பல்கலைக்கழக மாணவர்களால் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டிருப்பது பெருமையே. இவருக்குக் கிடைத்த பரிசுகளுடன் இதுவும் ஒரு பரிசைப் பெற்றுக் கொடுக்கும் என்பதை நிச்சயமாக நம்பலாம்.

பல இலக்கிய அமைப்புகளுடன் இலக்கியப் பாலமாக இவர் ஆற்றிவரும் தொண்டுகள் போற்றுதற்குரியதாகும்.

இவரது வெற்றிக்குப்பின்னால் இலக்கியத் தோழி யாக வாழ்க்கையில் துணையாக நல்ல எழுத்தாளராக ஊக்க மளித்துவரும் சகோதரி திருமதி. கலாநிதி ஜீவகுமாரனின் பங்கு அளப்பரியது. அவரையும் இவ்வேளை பாராட்டு கின்றேன்.

இறுதியாக இந்தக் "குதிரை வாகனம்". அதனில் என்னையும் ஏற்றிச் சென்று ஆசிவழங்க அனுமதி தந்த எழுத்தாளர் தம்பி ஜீவகுமாரன் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள். என்றும் நிலைத்து நிற்கும் உங்கள் எழுத்துக்கள்.

நன்றி
அன்புடன்

முல்லை பொன்-புத்திசிகாமணி
முன்னாள் வீரகேசரி நிருபர்(முல்லைத்தீவு)
செயலாளர், யேர்மன் தமிழ் எழுத்தாளர் சங்கம்.
05-02-2015
Meschder str.
1959846 Sundern
Germany
0049-29337493

## சமூக மாற்றத்தினை மிருதுவாக வெளிப்படுத்தும் சமூகவரலாற்று ஆவணப் பதிவான குதிரை வாகனம்.

தமிழில் நாவலிலக்கியத்தின் வளர்ச்சி இந்தியத் தமிழ்ச்சூழலுக்கு அப்பால் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுளில் மையங்கொண்டிருக்கும் உண்மையை ஈழத்துத் தமிழ் நாவல் வளர்ச்சியை முன்வைத்து ஏற்றுக் கொள்ள வேண்டியவர்களாகவுள்ளோம். பிரான்ஸ், அவுஸ்தி ரேலியா, கனடா, டென்மார்க் முதலிய நாடுகள் பலவற்றில் வாழ்ந்துவரும் ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்கள் பலரும் படைத்து வெளியிட்டுவரும் நாவல்களின் வடிவம், பொருள், போக்குகள், அவை வெளிப்படுத்தும் அனுபவவெளிகள் என்பன இத்தகைய முடிவைத் தரவைக்கின்றன. புலம் பெயர்ந்து சென்ற எழுத்தாளர்களின் அனுபவவெளிகள் விரிவானவை. அவை வெறுமனே ஈழத்தின் உள்ளூர் வாழ்வு முறைகளோடு மாத்திரம் மட்டுப்பட்டவையல்ல. அத்துடன், புலம்பெயர்தேசத்து மொழிகளுடனான பயிற்சி யும் தேர்ச்சியும் நாவலிலக்கியத்தின் உலகளாவிய நிலையி லான மாற்றங்களை உள்வாங்கிக்கொள்ளவும் அத்தகைய போக்குகளோடு கூடிய நாவல்களை படைப்பாக்கம் செய்ய வும் சந்தர்ப்பத்தினை வழங்கின. ஏனைய நாடுகளுடன்

ஒப்பிடுகையில் டென்மார்க் தமிழிலக்கியச் செயற்பாடுகளுக் கான போதுமானதும் வாய்ப்பானதுமான வெளிகளுள்ள நாடாகாது என்பது பொதுநிலையில் உணரத்தக்கது. எனினும் இந்த நாவலைப் படைத்துள்ள வி.ஜீவகுமாரன் அவர்கள் டென்மார்க்கில் இருந்து சிறுகதை மற்றும் நாவலிலக்கிய படைப்பாக்கச் செயற்பாடுகளில் தொடர்ச்சி யாகவும் சுறுசுறுப்பாகவும் ஈடுபட்டு வருபவர். கடவுச்சீட்டு (நாவல்), ஜேர்மனிய கரப்பான் பூச்சிகள்(சிறுகதைத் தொகுதி), ஜீவகுமாரன் கதைகள்(சிறுகதைத் தொகுதி), கோமதி(குறுநாவல்), சங்கானைச் சண்டியன்(நாவல்), மக்கள்..மக்களால்...மக்களுக்காக..(நாவல்). யாவும் கற்பனை அல்ல(சிறுகதைத்தொகுப்பு) போன்றவற்றை நூல்களாகத் தந்துள்ளார்.

இப்போது “குதிரை வாகனம்” எனும் இந்த நாவலை ஈழத்தின் சமூகவரலாற்றில் கடந்த ஓர் ஐம்பதுவருட காலத்தில் நிகழ்ந்தேறிவிட்டதும் நிகழ்ந்துவருவதுமான சமூகமாற்றத்தின் ஒரு வெட்டுமுகமாகத் தருகின்றார் (இந்த வெட்டுமுகம் குறுக்கு வெட்டுமுகமாக அமைந்துள்ளது என்று கூறுவது அதிகப்பிசங்கித்தனமானது). இதற்குத் துணையாகப் பாரம்பரியமான வாழ்வு முறைக்குள்ளும் சமூக அதிகாரத்துடனும் முன்னைப் பழம் பெருமைகளுடனும் வாழ்ந்த ஒரு குடும்பத்தின் “நீர்த்துப்போதல்” கதைப் பொருளாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அந்தக் குடும்பத் தின் ஐந்து வம்சாவழியினரின் வாழ்விலான மாற்றங்களை கூறுவதன் வாயிலாக ஈழத்துத் தமிழர் வாழ்வில் குறித்த ஐம்பது ஆண்டுகளில் அந்த மாற்றங்களைச் சாத்தியமாக்கிய உள்ளாயும் புறமாயும் தொழிற்பட்ட விசைகளை இனங் காட்டுகின்றார். பாரம்பரியத்தினையும் பரம்பரைப்

பெருமைகளையும் விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டு வாழ்ந்த, வாழ்ந்து வருகின்ற சமூகம் ஒன்றின் பிரதிநிதிகளான மனிதர்களின் கருத்துநிலைகள், மனப்போக்ககள், உளப் பாங்குகள், நம்பிக்கைகள், சமூக உறவுகள், சமூக ஊடாட்டங் கள், அதிகாரத்தளங்கள், உற்பத்தி உறவுகள், சமூக அந்தஸ்து, சமூக கௌரவம் முதலானவற்றில் ஏற்பட்டுவந்த மாற்றங் களை இந்த நாவல் மிக எளிமையாகப் பதிவாக்குகின்றது. இலங்கையில் **1958**[ம்] மற்றும் **1983**ம் ஆண்டுகளில் நடத்தப் பட்ட இனக்கலவரங்கள், அதன் பின்னான இனமுரண் பாட்டுச் சூழலும் போர்களும், வேலைதேடி மத்தியகிழக்கு நாடுகளுக்கான பயணங்கள், விடுதலை இயக்கங்களின் தோற்றமும் அவற்றுக்கிடையிலான முரண்களும், உள் நாட்டிலான இடப்பெயர்வுகளும் நோக்கினடியான இடம் பெயர்த்தல்களும், புலப்பெயர்வுகள், தீவிரமான இறுதி யுத்தம் முதலிய விசைகளின் வழியே மேற்கண்ட அமிசங் களில் படிப்படியாக நிகழ்ந்த மாற்றங்களை ஜீவகுமாரன் மிக நுண்மையான அவதானிப்புகளுடன் இந்த நாவலில் வரை வாக்கம் செய்கின்றார்.

இலங்கையின் யாழ்ப்பாணக் குடாநாட்டின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள தீவுப்பகுதிகளில் ஒன்றான காரை நகர் பிரதேசத்து மனிதர்கள் எந்தளவிற்கு தங்களது அர்ப் பணிப்பு மிக்க வணிக நடவடிக்கைகளால் இலங்கையின் அகத்தே எல்லை கடந்த தொடர்புகளைக் கொண்டவர் களோ அந்தளவிற்கு தீவகத்திற்கே உரித்தான மரபுப்பிடிப்புக் களாலும் பாரம்பரியங்களாலும் இறுகக் கட்டுண்டவர்கள். அந்தப் பிரதேசத்தில் மரபுப்பிடிப்போடும் பாரம்பரிய பெருமைகளையும் முன்னிறுத்தி வாழ்ந்த குடும்பத்து மனிதர்கள் இங்கிலாந்து, ஜேர்மனி, டென்மார்க்,

அமெரிக்கா, மலேசியா போன்ற நாடுகளுக்குப் புலம் பெயர்ந்து சென்ற சூழலில், அந்தக் குடும்பத்தின் பெருமை யினை காக்கவேண்டும் என்ற விருப்புடையவரும் கால மாற்றத்தினால் நிகழும் மாற்றங்களின் போக்கினை புரிந்து கொள்ளத்தக்கவருமான டென்மார்க்கில் வாழும் ஒரு பாத்திரத்தின் மரணத்தினை நோக்கிய காலத்தில் அவர் நினைவில் மீட்டுகின்ற சம்பவக் கோர்வையே கதையாக்கப் பட்டுள்ளது. சொந்த நாட்டிலுள்ள குலதெய்வமான முருகன் கோயிலுடன் இணைந்த வாழ்வு, அந்தக் கோயிலுக்கு தங்கள் குடும்பத்தின் பெயரால் கொடுக்கப்பட்ட கோயிலோடு குடும்பப் பெருமையை நிலைக்கவைத்த குதிரை வாகனம், குடும்பத்தின் பெருமையினையும் அடையாளத்தினையும் நிலைநாட்டும் மூதாதையர் சொத்தான பெரிய வீடு என்பவற்றின் பெருமைகள் சரியச் சரிய, ஐம்பத்தெட்டு வயதான அந்தக் குடும்பத்தின் வம்சாவழியின் மூன்றாவது நிலையில் வரும் மனிதன் ஒருவனின் வாழ்வும் முடிந்து போகும் வகையில் கதை பின்னப்பட்டுள்ளது. அலங்கரிக்கப் பட்ட குதிரை வாகனமான பழம் பெருமைமிக்க வாழ்வை சொந்த ஊரிலும் வெளிநாட்டிலும் காலமாற்றத்தை அனுசரித்தாயினும் பாதுகாத்துவிடவேண்டும் என்று துடிக்கும் மனிதர்களிடை, மாற்றம் நிற்காது நகரும் ஒரு செயன்முறை என்பதை நாவல் வெளிப்படுத்துகின்றது. சமூக மாற்றத்துக்கான எந்தவொரு புறவிசையும் மாற்றத்தினை வேண்டாத அல்லது விரும்பாத அகவிசைகளிலும் வலிமை குன்றியதே என்பது நுண்மையாகப் பதிவாக்கப்பட்டுள்ளது.

ஜீவகுமாரனின் குதிரை வாகனம் நாவல் மரணத்தை அண்மித்த ஒருவனது வாழ்வு குறித்ததான சாட்சியமாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக நாவலைப்

படித்து முடிக்கும்போது பின்வரும் அமிசங்கள் மனதை விட்டு நீங்காத பதிவுகளாகின்றன. அவையாவன:

- யாழ்ப்பாண சமூகத்தில் நிலவிவரும் சாதிக் கட்டமைப்பின் இறுக்கமும் அதன் தளர்ச்சியும் அதற்கான அக மற்றும் புற விசைகளும் பற்றிய பதிவுகள்.
- குடும்பத்தின் பெருமையை-கௌரவத்தினை நிலை நாட்டுதல் என்பது சாதிக்குரியதான பெருமையை நிலைநாட்டுதலாக கருதப்படும் நடைமுறை பற்றிய குறிப்புகள்.
- சாதியம் தொடர்பான மனப்பாங்கிற்கு சமாந்தரமாக யாழ்ப்பாணத்து மனிதர்களிடம் இருந்துவந்த இனம் மற்றும் மதம் தொடர்பான முற்சாய்வான கருத்து நிலைகள் தொடர்பான பதிவுகள்.
- இலங்கையில் இனமுரண்பாட்டின் படிப்படியான வளர்ச்சியும் அதன்வழி விளைந்த மாற்றங்களும் தொடர்பான வரலாற்றுப் பதிவுகள்.
- ஒரு கிராமிய சமுதாயத்துக்கேயான மரபுவழிப்பட்ட அமிசங்கள் மற்றும் கிராமிய வழக்காறுகள் தொடர் பான பதிவுகள்.
- கோயிலோடு இணைந்த கிராமிய வாழ்வின் அதிகாரங்கள் பற்றிய பதிவுகள்.
- புலம்பெயர்ந்து குடியேறிய நாடுகளில் மனிதர் களிடையே சொந்த ஊரின் தொடர்ச்சியாகவும், புதிய சூழலின் மாறுதல்களாகவும் அமைந்த பதிவுகள்.
- மனிதர்களிடையிலான கூட்டு உறவிலான விரிசல் களும் தனியாள் நலன் நோக்கிய சிந்னைகளும் செயற் பாடுகளும் பற்றிய விளக்கங்கள்.
- தலைமுறைகளிடையிலான சிந்தனை முறைகளில் நிகழ்ந்துவரும் மாற்றங்கள் தொடர்பான விவரணங்கள்.

- சாதிக்கட்டமைப்பில் அடுக்கப்பட்ட நிரலமைப்பில் கீழ்நிலையில் அடுக்கப்பட்ட பிரிவினரின் மேலெழு கைக்கான உற்பத்தி உறவுமுறைகளிலான மாற்றமும் பொருளாதார காரணிகளும் பற்றிய பதிவுகள்.

யாழ்ப்பாண சமூகத்தில் நிலவிவரும் சாதிக் கட்டமைப்பும் அது சார்ந்த ஏற்றத்தாழ்வுகளும் பாரபட்சப் படுத்தல்களும் நாவலின் கதைப்பொருளுக்கு தவிர்க்க முடியாத அமிசமாகியுள்ளது. சாதிக்கட்டமைப்பு சார்ந்து முன்னவர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்த இறுக்கங்களி லான மீறல்களும், மீறமுடியாமைகளும் வெளிக்கொணரப் படுகின்றன. இந்த மீறல்கள் சில சமயங்களில் மூத்தவர் களிடம் சாத்தியமாவதும் இளையவர்களிடம் சாத்திமாகா திருப்பதுமான சமூகத்தின் "விந்தைகளையும்" ஜீவகுமாரன் நுணுக்கமாக இனங்காட்டுகின்றார். இந்த நாவலில் வரும் முதலாம் சந்ததியைச் சேர்ந்த, சாதிப் பெருமையை வெளிப் படையாகப் பேணுகின்ற அப்பப்பா(சண்முகத்தார்) தங்கள் குடும்பத்திற்கு குடிமையாக இருந்த கணபதி என்பவன் கடுக்கண் அணிந்ததற்காக திருவிழாவில் வைத்துக் காதுச் சோணையை கொக்குச் சத்தகத்தால் அறுத்தெறிந்த சம்பவம் குறிப்பிடப்படுகிறது. சண்முகத்தாரின் பேரனான இந்த நாவலில் வரும் கதைகூறும் பாத்திரம் "அப்பப்பா உயிருடன் இருந்திருந்தால் அவருடன் நான் இதற்காக சண்டை போட்டுக் கதைத்திருப்பேன்" என்று கூறுவது சந்ததிவழியே யான சிந்தனை மாற்றத்தினை புலப்படுத்துகின்றது. சண்முகத்தார் என்ற அப்பப்பாவின் சாதிப் பெருமை தவிர்ந்த ஏனைய பெருமைகளைப் பேசும் கதைகூறும் பாத்திரத்தின் மகனான இராகுலன் தன் தந்தையைப் பார்த்து "குரங்கின் வாலாய் இருந்து தேய்ந்துபோன கடைசி முள்ளந்தண்டு

எலும்பு போலத்தான் உங்கள் சண்முகத்தார் படலம் அப்பா" என்று கூறுவது அடுத்த சந்ததியின் கருத்து மாற்றத்தினைப் பிரதிபலிக்கின்றது. எனினும், இராகுலனின் மனைவி, வேறு சாதியைச் சேர்ந்தவனைத் திருமணம் செய்த இராகுலனின் சகோதரிபற்றி தனது மாமிக்கு கூறும்போது "ஊம்.. பறவாயில்லை மாமி... நாளைக்கு எங்கடை வீட்டுக்கு கூட்டிக்கொண்டு வந்திடாதையுங்கோ... எங்களுக்கும் இரண்டு பொம்பிளைப் பிள்ளையள் இருக்கு அதுகளும் வயதுவரும்பொழுது நல்ல காரியங்களை எங்கடை இனம் சனங்களோடை நடத்த வேணும்..." என்கின்றாள். இது நான்காவது சந்ததியில்கூட சாதிபற்றிய பிடிமானத்தில் மாற்றம் ஏற்படாத போக்கினைக் காட்டுகின்றது.

தமிழர்களிடையேயான சாதியம் மாத்திரமன்றி, சிங்களவர் மற்றும் முஸ்லிம்கள் பற்றிய இனத்துவ கண்ணோட்டமும், கிறிஸ்தவர்கள் பற்றிய மதம்சார்ந்த புரிதல்களும் தொடர்பாக தமிழ்ச் சமூகத்தின் பரம்பரைப் பெருமை பேசும் மாந்தர்களின் உளப்பாங்கு பிரச்சாரமின்றி எடுத்துரைக்கப்படுகிறது. இவை சார்ந்த யாழ்ப்பாணத்து மனிதர்களின் முற்சாய்வான கருத்துநிலைகள் புலம்பெயர்ந்த தேசங்களில் எவ்வாறு மாற்றமுறுகின்றன என்பது பற்றியும் விவரிக்கின்றார். அப்பப்பாவின் பெரியவீட்டிலிருந்த வீட்டு வேலை பார்க்கும் சிங்களப் பெண்ணின் மகளை இனக்கலவர காலத்தில் சுருட்டுச்சுற்றும் தொழிலாளர்கள் தாக்கிய சம்பவத்தினை விவரிக்கிறார். அந்தப் பெண்ணிற்கு தமிழ்க் கொடூரர்களால் பிறந்த பிள்ளையை சொந்த மகளாக வளர்க்கும் நாவலின் கதைசொல்லும் பாத்திரத்தின் தகப்பனாரை சிங்களப் பிள்ளையை வளர்ப்பதால் உறவுகள் உதாசீனம் செய்தமை கூறப்படுகின்றது. இரண்டாம் தலை

முறையிலேயே வீட்டுவேலைக்கார சிங்களப் பெண்ணின் மகள் சண்முகத்தார் குடும்பத்தில் வளர்ப்பு மகளாக மாற்றம் பெற்றமை குறிப்பிடத்தக்கதொரு மாற்றமே. பாசங்கொட்டி வளர்க்கப்பட்ட சிங்களப் பிள்ளை பபிதா விடுதலை இயக்கங்கள் தோன்றிய காலத்தில் இயக்கத்தில் சேர்ந்து போராடச் சென்றமையும், இறுதி யுத்தகாலத்தில் இராணுவ வலயத்தில் காணாமல் ஆக்கப்பட்டமையும் இனத்துவ முரண்பாடு வலுத்துவிட்ட இலங்கைச் சமூகத்திற்கு ஒரு வரலாற்றுச் செய்தியாகிவிடுகின்றது. அவ்வாறே, முஸ்லிம் கள் தீண்டத்தகாதவர்களாகக் கருதப்பட்ட சம்பவம் ஒன்றினைக் கூறுகின்றார். சண்முகத்தாரின் மகனான கதை சொல்லும் பாத்திரத்தின் தந்தையார் கோயில் கிணற்றில் தண்ணீர் அள்ளிக்குடித்த முஸ்லிம் பாய் வியாபாரியை திட்டித் தாக்கச் சென்ற சம்பவம் பின்னர் முஸ்லிம்களை வடக்கிலிருந்த வெளியேற்றிய சம்பவத்துடன் தொடர்பு படுத்தி பேசப்பட்டமையும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது சாதி அடிப்படையிலான பெருமை பேசும் சமூகத்தில் அதி காரம் பெற்றவர்கள் தம்நாட்டில் வாழும் ஏனைய இனத்தவர் களை பார்க்கும் கண்ணோட்டத்தினைப் பிரதி பலிக்கின்றது. எனினும், பெருமைக்குரிய சண்முகத்தாரின் மூத்த பேரனின் மகன்மார் இருவர் இலண்டனில் மணம்முடித்த பெண்களைப் பற்றிக் கூறும்போது "அவர்கள் கிறிஸ்தவர்கள் என்றும் கதை உலாவுதாம்... இஸ்லாம் என்றும் கதை உலாவு தாம்... அந்த முஸ்லிம் வியாபாரியை கோயில் வீதியில் வைத்துத் தண்டித்ததுக்குத்தான் இந்தத் தலைக்குனிவு..." என்று குறிப்பிடுவது புலம்பெயர் வாழ்வில் பெருமை அடிபட்டுப் போனதைக் காட்டுகின்றது.

புலப்பெயர்வுகள் சாதியம் தொடர்பான இறுக்கங்

களைக் குலைத்தது, தளர்ச்சியை ஏற்படுத்தின என்பது பொதுவான ஒரு கருத்து. இத்தகைய புலப்பெயர்வுகளுக்கு முதன்மைக் காரணியாக இலங்கையில் ஏற்பட்ட இனமுரண் பாடு அமைந்தது. இனமுரண்பாட்டின் வளர்ச்சியில் இனக்கலவரங்கள், இயக்கங்களின் உருவாக்கம், உறவினர்கள் இயக்கங்களை நாடிச் செல்லலும் அதனால் ஏற்பட்ட இராணுவ அச்சுறுத்தல்களும் போன்ற காரணிகள் அமைந்த தனை அக்கால சூழமைவுகளுடன் இணைத்து வெளிப் படுத்துகிறார். புலப்பெயர்வு சண்முகத்தார் குடும்பத்தின் நான்காம் மற்றும் ஐந்தாம் வம்சாவழியில் ஏற்படுத்திய மாற்றங்களை இயல்பாக அவை நிகழும்போக்கிலேயே காட்டுகின்றார். அந்த மாற்றங்கள் பழம்பெருமைகள் குறித்த விவாதங்களாகவும் விரிகின்றன. யாழ்ப்பாணத்து வாழ்வே தெரியாத இராகுலனின் மூத்தபிள்ளையும் இளைய பிள்ளை யும் சாதிமாறித் திருமணம் முடித்த தங்கள் அத்தை அப்பப்பாவை வைத்தியசாலையில் பார்க்க வந்தமை பற்றி விவாதிக்கும்போது, இளையவள் "இது அம்மாவின் தவறு" தாய் சாதிப்பிடிப்போடு பேசியதைச் தவறு என்று சுட்டிக் காட்ட, மூத்தவளோ "ஒருவரும் வேண்டாம் என்று விட்டுப் போனவ ஏன் திரும்பி வருவான்.." என்று டெனிசில் பேசிக்கொள்வதாகக் கூறுவது ஐந்தாவது சந்ததிக்கான கருத்தேற்றத்தின் வீச்சினைப் புலம்பெயர்ந்த சூழலில் காட்டுகின்றது. புலம்பெயர்ந்திருந்தும் கூட்டுவாழ்வை விரும்பும் மனிதர்களும், சொந்த ஊரில் வாழ்ந்து கொண்டு தனியாள் வாதத்தினை விரும்பும் மனிதர்களையும் எதிரிடை யான சூழல்களில் நிறுத்திக் காட்டுகின்றார். "நாங்கள்-எங்களது என்ற கிழக்காசிய கலாசாரத்தை பற்றி நிற்கும் என்னையும் நான்-எனது என்ற மேலைத்தேய கலாசாரத்தி

னுள் போயிருக்கும் அண்ணன்மாரையும்-மச்சான்மாரையும் அவள் தனது மொழியில் ஒப்பீடு செய்து கொண்டிருந்தாள்" என்று இதனை வெளிப்படுத்துகின்றார்.

கூட்டுவாழ்வு குலைந்து, பெருமை மங்கி, தனித்தவர் களாக மனிதர்கள் மாறிவரும் தருணத்தில் குடும்பப் பெருமை - குலப்பெருமை சரிவடைந்து செல்லும் நிலைமாற்றத்தினை குறிப்பிடும் அதே நேரத்தில் சாதிக்கட்டமைப்பில் அடிநிலை யில் வைத்துக் குடிமைகளாகப் பார்க்கப்பட்டவர்களின் குடும்பங்களில் ஏற்பட்டுவந்த மாற்றங்கள்-சமூக மேலெழுகைகள் பற்றியும் எழுத்தாளர் விளக்குகின்றார். கடுக்கண் அணிந்ததற்காகக் காதறுக்கப்பட்ட கணபதியின் வம்சாவழியில் சவூதிஅரேபியாவுக்குச் சென்று பொருளீட்டி, சாதிப்பெருமை காத்த பெரியவீட்டினை விலைக்கு வாங்கு மளவிற்கு ஏற்பட்ட மாற்றம்கூட மிக நுணுக்கமாகக் காட்டப்படுகின்றது. அந்தக் குடும்பங்களின் வல்லமைக்கு அவர்கள் ஐரோப்பாவுக்கோ அமெரிக்காவுக்கோ ஜேர்மனிக்கோ செல்லமுடியாது விட்டலும் வேறு வகையி லான மாற்றத்தை சாத்தியமாக்கிக்கொண்டமை வெளிக் காட்டப்படுகின்றது. சாதிய சமூகம் ஒன்றின் அசைவியக் கத்தினை வரலாற்றின் தவிர்த்துவிடமுடியாத போர்க் காலத்து சூழமைவில் வைத்து விளக்கும் இந்த நாவல் யாழ்ப் பாணத்துச் சமூகவரலாற்றினை பதிவாக்கும் ஆவணமாகத் தனித்த கவனிப்பைப்பெறும்.

இவற்றுக்கு அப்பால் வடிவத்தில் எளிமை, வாசக அடிமட்டம் வரை சென்றடையும் மொழி, நேர்தியான விவரணத்தன்மையும் காட்சிப்படுத்தலும், சிக்கலற்ற அத்தியாய அடுக்கல் முதலியவற்றால் படிக்கத்தூண்டும் நாவலாக அமைந்துள்ளது. வரலாற்று நிலைப்பட்ட பதிவு

களுக்கு எந்தளவிற்கு முதன்மையளிக்கப்பட்டுள்ளதோ அந்தளவிற்கு கிராமிய வழக்காற்றுப் பதிவுகளுக்கும் முக்கியம் கொடுக்கப்பட்டுள்ளது. கோயில் திருவிழாக்கால வழக்கங்கள், நாட்டர் விளையாட்டுக்கள், இரத்த உறவுசார் மரபுகள், சாதி வழக்குகள், மரபான வீடமைப்புகள் முதலியவை பொருத்தமான பிரமாணங்களில் சேர்மானமாகியுள்ளன. அத்தடன் கணவன் மனைவிக்கிடையிலான மென்மையான உறவுப் பரிமாறல்கள், நல்ல நட்பின் உறுதுணை, வேண்டாத உறவுகளின் புறக்கணிப்புகள், பிள்ளைப் பாசம், இளவயது காதல் முதலிய குடும்ப வாழ்வின் மென்மையான உணர்வுகள் விரவியுள்ளன.

ஜீவகுமாரன் குதிரை வாகனத்தின் மூலமாக புலம் பெயர் வாழ்வினைப் பதிவாக்குகின்றார் என்றோ அல்லது சொந்த ஊர் வாழ்வின் நனவிடைத் தோய்கிறார் என்றோ யாராவது இந்த நாவலை வரையறுப்பார்களேயானால் அது ஒருபரிமாணப் பார்வையாகவே அமையும். பெருமைகளென்று கருதியிருந்த ஒரு வாழ்வுமுறையின் கரடுமுரடான தோல் உதிர்க்கப்படுதலும் புதிய மென்மையான தோலின் உருவாக்கமும் உதிர்ந்தும் உதிராதிருக்கும் விகாரங்களும் வாழ்வுக்கான பல்வேறு களங்களில் எப்படி நிகழ்கின்றது என்பதை ஒரு சமூக வரலாற்றாசிரியனின் அணுகுமுறைகளுடன் பல்பரிமாணத்தன்மையுடன் நோக்குகின்றபோது யாழ்ப்பாணத்துச் சமூகமாற்றம் தொடர்பான புதிய புரிதல்கள் குதிரை வாகனத்தின் மூலம் சாத்தியமாகும்.

இ. இராஜேஸ்கண்ணன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
சமூகவியல் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
மின்னஞ்சல்: rkannan73@gmail.com

# என்னுரை

*எனது கடந்த ஒன்பது வருட எழுத்துலக வாழ்க்கையில் மக்கள்.. மக்களால்... மக்களுக்காக (2009), சங்கானைச் சண்டியன் (2010), கோமதி (2010), கடவுச்சீட்டு (2013) வரிசையில் ஐந்தாவது நாவலாக இந்த "குதிரை வாகனத்தை" தங்களின் கைகளில் ஒப்படைக்கின்றேன்.*

*சுமார் இரண்டாண்டுகள் இதனுடன் நடந்தும்... ஓடியும்... இதன் மீதேறி சவாரியும் செய்து வந்திருக்கின்றேன். நூல் வடிவில் அது உங்கள் கைகளுக்கு வரும் இச்சமயம் தொடக்கம் இதனை எழுதியவன் என்ற உரிமையைத் தவிர இனி இதன் மீது எனக்கு எந்த உரிமையும் இல்லை என்பதில் உறுதியாக இருக்கின்றேன்.*

*இனி, இது உங்களின் நாவல். உங்களினதும் எனதுமான இலக்கிய உலகிற்கானதே. இதற்கான விமர்சனங்களும் அதற்குரியதே.*

*நிச்சயமாகத் தங்களின் விமர்சனங்களையும் அறிவுரைகளையும் திறந்த மனதுடன் ஏற்று அவற்றை எனது அடுத்த படைப்பிற்கு உரமாகப் பயன்படுத்துவேன்.*

*எனது சிறுகதைகள்... பத்தி எழுத்துகள்... எனது முன்னைய நாவல்கள் போன்று இதுவும் நான் சார்ந்த எனது*

சமுதாயம் பற்றிய எனது பதிவே. ஆனால் அளவின் அடிப் படையில் இது நாவல் என்னும் வடிவம் பெறுகின்றது.

ஐந்து தலைமுறைகளுக்கூடாக சுமார் 60 வருட கால நிகழ்வுகளை இந்தக் "குதிரைவாகனத்தினூடு" நகர்த்திச் சென்றிருக்கின்றேன்.

"யாவும் கற்பனை" என்று இறுதியில் மனமறிந்த ஒரு பொய்யைச் சொல்லி இதனை உங்கள் கையில் ஒப்படைக்க நான் விரும்பவில்லை. பதிலாக, உங்களையும்... என்னை யும்... உங்கள் அயலவர்களையும்.. என் அயலவர்களையும் ஏதோவொரு வகையில் பாதித்த சில விடயங்களை இதில் பதிவு செய்திருக்கின்றேன் என்பதனை இந்த என்னுரையில் நான் சொல்வது இந்த நாவலுக்கு ஓர் உண்மைத் தன்மையைக் கொடுக்கும் என நம்புகின்றேன்.

மேலாக இந்த நாவலுக்குரிய ஒரு முன்னுரையை யாவரிடம் பெறுவது என்று நினைத்த பொழுது என் கண் முன்னே தோன்றியவர் யாழ். பல்கலைக்கழக சமூகவியல் துறையைச் சார்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. இராஜேஸ் கண்ணன் அவர்களே. தனிப்பட்ட எந்தப் பழக்கமோ... நட்போ எதுவும் இல்லையாயினும் எனது "ஜீவகுமாரன் கதைகள்" சிறுகதைத் தொகுதியை அதன் வெளியீட்டின் பொழுது அவர் ஆய்வு செய்த விதத்தை மேடையில் இருந்து அணுவணுவாக ரசித்திருந்தேன். அதில் வெளியாகியிருந்த பத்துக் கதைகளையும் ஆழமாக வாசித்து விட்டு, அவர் மேடைக்கு வந்திருந்தது அவரின் பேச்சில் தெரிந்தது. மேலாக கதையின் கரு... களம்... மொழிநடை... நகர்வு என்பவற்றைத் தாண்டி எந்த எந்த இடத்தில் எனது பேனா மூலம் சில மன உணர்வுகளை இறக்கி வைத்திருந்தேன் என நாடி பிடித்து அதனை சபைக்கு முன்னே வைத்திருந்தார்.

எனவே தான் இந்த குதிரைவாகனத்தின் அழகை... அல்லது நிறைகுறைகளை ஆராயும் பொறுப்பை அவரிடம் அளிக்க விரும்பித் தொலைபேசியில் தொடர்பு கொண்ட பொழுது எவ்வித மறுப்பும் தெரிவிக்காது ஒத்துக் கொண்டார். அவருக்கு என் மனமார்ந்த நன்றிகள்.

ஓவியர் சௌந்தர்! டென்மார்க்கிற்கு நான் வந்து 30 ஆண்டுகள் ஆகின்றன. இந்த 30 ஆண்டுகளும் அவர் தன்னைத்தான் தினம் தினம் வளர்த்துக் கொண்டிருக் கின்றார். அந்த வளர்ச்சியை அவரது முகநூல் வழியாக இன்று கண்டுகொண்டிருக்கின்றேன். எனது "ஜேர்மனிய சிறுகதைகள்" என்ற தொகுப்பிற்கான அனைத்துச் சிறுகதை களுக்கும் ஓவியம் வரைந்து அந்தக் கதைகளைப் பெருமைப் படுத்திய கலைஞன் அவர். பேனா எனது ஆயுதம் என்றால். தூரிகை அவரது ஆயுதம். நன்றி சௌந்தா!

இந்த நாவல் முழுவதையும் மிக ஆழமாக வாசித்து அனைத்து எழுத்துப் பிழைகளையும் திருத்த உதவிய டென்மார்க்கில் வாழும் கவிஞர், எழுத்தாளர், திரு. பரமநாதன் அவர்களுக்கும்... இலக்கிய ஆர்வலரும் எனது நண்பருமான குப்பிளான் திரு. லோகநாதன் அவர்களுக்கும்... நாற்பது வருடங்களுக்குப் பின் முகநூல் வழியாக சந்தித்த பொழுது, "நானும் உங்களுக்கு எழுத்து பிழை பார்த்து தருகிறேன்" என முன்வந்த என் பள்ளித் தோழன் - தற்பொழுது இங்கிலாந்தில் வசிக்கும் திரு. அற்புதானந் தனுக்கும்... இலங்கையில் வசிக்கும் ஆசிரியரும் கவிஞரு மான கஜரதி பாண்டித்துரை அவர்களுக்கும்... எழுத்துப் பிழைத்திருத்தம் செய்ததுடன் வழமையாகத் தொலை பேசியில் என்னை வாழ்த்துவது போல இந்த நாவலுக்கும் ஆசியுரை வழங்கி என்னைக் கௌரவித்த ஜேர்மனியில்

வாழும் இலக்கிய ஆர்வலரும் எழுத்தாளரும் முன்னாள் வீரகேசரி நிருபருமான திரு. புத்திசிகாமணி அண்ணன் அவர்களுக்கும், என்றென்றும் எனது நன்றிகள்.

இந்த நாவலுக்கு பல தகவல்கள் தேவைப்பட்ட பொழுது அதனைத் தந்துதவிய குடும்ப நண்பர்கள், இலக்கியத்துறையைச் சார்ந்தவர்கள், குறிப்பாக டாக்டர். ஞானசேகரன், டாக்டர் ஜின்னாஹூா ஷபிபுத்தீன் ஆகியோருக்கு எனது நன்றிகள்.

அவ்வாறே இந்த நாவலை அழகான முறையில் அமைப்புச் செய்து தந்த ஜீவநதி ஆசிரியர் க.பரணீதரன், அச்சிட்டு வெளியிட உதவிய UMi Unique Media Integrators பதிப்பகத்தாருக்கும் எனது நன்றிகள்.

இறுதியாக இந்த நாவலின் படைப்பில் என்னுடன் பயணப்பட்டு... பல இடங்களில் விவாதித்து... மீண்டும் மீண்டும் எழுத்துப் பிழைகள் திருத்தி... என் பணிகளைத் தன் கையில் எடுத்துக் கொண்டு இந்த இருவருடமும் என்னைக் குதிரைவாகனத்தில் தனித்துச் சவாரி செய்ய அனுமதித்த என் பள்ளித் தோழியும் வாழ்க்கைத் துணைவியுமான கலாநிதிக்கும் மனமார்ந்த நன்றிகள்.

27-11-2016 அன்று காலம் சென்ற அவரின் தாயாரும்... எனது மாமியாரும்... அகில உலக அளவில் நற்றிணைப் பதிப்பகம் ப. சிங்காரம் நாவல் விருதிற்கான போட்டியில் எனது "கடவுச்சீட்டு" நாவல் முதல் பரிசு பெற்ற பொழுது "இன்னொரு ஆண்பிள்ளையைப் பெற்றது போல இருக்கிறது" என மகிழ்ந்தவரும்... ஞானம்-ஜீவநதி இரண்டு இதழ்களின் சந்தாதாரராகவும்... என் முதல் வாசகியுமாக விளங்கிய திருமதி. சொர்ணலக்சுமி சேதுகாவலர் அவர்கள் இன்று உயிரோடு இருந்திருந்தால் இந்தக் குதிரை வாகனத்

திற்கு இன்னும் சிறப்புச் செய்திருப்பார். அவருக்கு என் கண்ணீருடனான கௌரவத்தையும் இதில் சமர்ப்பித்துக் கொள்கின்றேன்.

*அன்புடனும் நன்றியறிதலுடனும்...*

வி. ஜீவகுமாரன்

புவியியல் சார்ந்த கணினிப் பதிவுப்பொறுப்பாளர்
புலம்பெயர்ந்தோருக்கான அரசநூலக தமிழ்ப்பகுதிப் பொறுப்பாளர்

Havevang 28, 2 TV., 4300 Holbaek, Denmark
*0045-59464547, 0045-28774547*
E-mail.: jeevakumaran5@gmail.com
Website: www.jeevakumaran.com

# 1

நேற்று மாலை.

"ஹரி! நீ எத்தினை நாள் லீவிலை வந்தனி...? எப்ப திரும்பிப் போகின்றாய்?"

"அங்கிள், நான் சோட் லீவிலைதான் வந்தனான். நாளை மறுநாள் ஈவினிங் இங்கிருந்து இலண்டன் ரான்சிற்.. பிறகு டிறெக்ராய் யு.ஸ்.ஏ. தான்"

"இவ்வளவு தூரம் வந்தனி. இன்னும் ஒரு கிழமை நின்று போனால் அப்பா அம்மாக்கும் சந்தோசமாய் இருக்கும் தானே"

பாலன் எங்கு வருகிறான் என எனக்குப் புரிந்து விட்டது.

"பாலன்...", மெதுவாகக் கூப்பிட்டேன்.

திரும்பிப் பார்த்தான்.

"பிளீஸ்... நீ எனக்கு பிறண்டாய் இரு... டொக்டராய் இராதே... அவன் போகட்டும்"

"ஏன் அங்கிள்" ஹரி பாலனைக் குறுக்கிட்டான்.

"ஒன்றுமில்லை" என்று சொல்ல வெளிக்கிட்ட பாலன் உடைந்து விட்டான்.

அபிராமி அண்ணியும் பவித்திராவும் அவனைப் போய் அணைத்துக் கொண்டார்கள்.

அப்படியே கீழே இறங்கிப் போய் விட்டான்.

மற்றவர் அனைவரும் பேயறைந்தது போல என் கட்டிலைச் சுற்றி வந்து நின்று கொண்டார்கள்.

*

நேற்றிருந்த இறுக்கம் இன்று இருக்கவில்லை.

கடந்து போன இரவு எல்லோரையும் ஆசுவாசப் படுத்தியிருக்கலாம்.

"எனக்குக் கூடத் தெரியாத உங்கள் உறவினர்கள் யாராவது வந்து பார்ப்பதானால் அவர்களுக்கும் சொல்லி விடுங்கள். ஊரிலை சரி... மற்ற வெளிநாடுகளிலை சரி... துடக்கு வழியில் உள்ள உறவினர்கள் ஏதாவது நல்ல காரியங்கள் செய்வதாய் இருந்தால் அவற்றையும் தள்ளி வைத்துவிடச் சொல்லி விடுங்கள்"

பாலன் பவித்திராவிடமும் பிள்ளைகளிடமும் சொல்லிக் கொண்டு நின்றான்.

பாலன்!

என் உயிர்த் தோழன்.

எங்கள் ஊர்க்கோயில் சாம்பசிவக்குருக்களின் மகன். இங்கு டென்மார்க்கில் பெரிய வைத்திய அதிகாரி. ஸ்ரெலெஸ்கோப்பைக் கையில் எடுத்தாலும் தர்ப்பைக் கட்டையை இன்னமும் கைவிடவில்லை. வெள்ளிக் கிழமையையே மறந்துவிட்ட நம்மவர் மத்தியில் இவனைப் பார்த்து நான் என்றுமே பெருமைப்படுவதுண்டு.

இன்றும் டென்மார்க் கோயில்களில் தேர்த்

திருவிழாக்காலங்களில் பிரதமகுருக்களான அவனின் தந்தை வழி உறவினரான சுப்பிரமணியக் குருக்களுடன் நின்று ஒத்தாசை செய்து, பூசைகள் செய்வான், பாலசுப்பிரமணியக் குருக்கள் என்ற என் பள்ளித் தோழன் பாலன்.

கோயிலைத் தவிர வெளியிடங்களில் பாலன் என்றே நான் அவனை அழைப்பேன்.

எங்கள் ஊர் முருகன் கோயிலின் கிழக்கு வீதியில் உள்ள தீர்த்தக் குளத்தில் பாலனுடன் நீச்சலடித்துத் தாமரைப் பூக்கள் பிடுங்கி வருவது, இப்போது நடந்த ஒன்று போல நினைவில் மேலெழுந்து வருகிறது.

பபிதாவுக்குத் தாமரைப் பூக்கள் என்றால் கொள்ளை விருப்பம்.

அவளின் முகம் மலர்ந்தால் அப்பா அம்மாவின் முகங்களும் தாமாகவே மலரும்.

பவித்திரா விசும்புவது கேட்கின்றது.

நினைவுகளின் இரைமீட்டலினுள் லயித்துப் போயிருந்த என்னை அவளின் விசும்பல் ரொம்பவே தொந்தரவு செய்கிறது.

எதுவுமே இனி மாறப்போவதில்லை.

அது அதுக்குரிய காலத்தை நமக்கு மதிக்கத் தெரிய வேணும்.

குலை தள்ளிய வாழையை அழகாக இருக்கிறது என யாரும் விட்டு வைப்பதில்லை.

குலையுடன் சேர்த்து வாழையையும் வெட்டினால் தான் குட்டி வாழைகள் செழித்து வளர முடியும்.

கடைசியாக அதன் இலையையும் தண்டையும்

எடுக்கலாம். அவ்வளவுதான்.

பவித்திராவுக்கு எத்தனையோ தடவைகள் சொல்லி வைத்திருந்தேன், எனது மரணம் என்பது மிக அமைதியாக... என்னை உண்மையில் நேசித்த இரண்டொரு ஜீவன் களுடனும்... என்னை நேசிக்காவிட்டாலும் நான் நேசித்த இரண்டொரு ஜீவன்களுடனும்... எங்கள் 3 பிள்ளை களுடனும்... எம் சம்பந்தி வீட்டுக்காரர்களுடனும் மிக அமைதியாக நடக்க வேண்டும் என்று.

அல்லது... அது இது என்று உலகமே தெரியாத பவித்திராவை அந்தச் சடங்கு இந்தச் சடங்கு என்று மரண வீட்டுக்கு வரும் சொந்த பந்தங்கள் களைக்கப்பண்ணி விடுவார்கள்.

எட்டுச் செலவுக்கு அது செய்... இது செய்... இது அவருக்கு சின்னனில் விருப்பம் என ஆயிரத்தெட்டுப் பல கார வகைகளைச் செய்யச் சொல்லி அவளை ஆட்டிப் போடுவார்கள்.

என் பிள்ளைகளுக்கும் திரும்பத் திரும்பச் சொல்லி வைத்திருந்தேன் - "நானும் அம்மாவும் இருக்கும்வரை எங்களுக்குப் பிள்ளைகளாய் இருங்கள். அதுவே போதும். அதற்குப் பின்பு டென்மார்க்கிலும் பாடை கட்டி... பறை அடித்து.... நிலபாவாடை விரித்து.... தோளில் காவி... எதுவுமே வேண்டாம்" என்று.

*பறை!... பறை!!.... பறை!!!*

தேரின் வடக்கயிற்றை அனைவரும் பிடித்திருக்கும் பொழுது சிதறு தேங்காய்கள் உடைபட்டுக் கொண்டிருக்க... இளநீரும் தேங்காய்ச் சொட்டுகளும் பறந்து கொண்டிருக்க செவிப்பறை வெடிக்க ஒலிக்கும் அந்தப் பறையோசை.

அதனுடன் சேர்ந்து சங்கோசை... சேமக்கல ஒலிகள்... மணியோசை... தாமரைக்குளம்... சாம்பசிவக் குருக்கள்... அவரின் பின்னால் பாலன்...இவையாவும் என்னை எங்கள் ஊர் முருகன் கோயிலுக்கு கூட்டிச் செல்லுகிறன.

கோயிலின் நான்கு வீதியிலும் கட்டியிருந்த ஒலி பெருக்கிகள், "முதல் வணக்கம் எங்கள் முருகனுக்கே" என்று முதல்நாள் திருவிழாவின் அதிகாலையில் திருப்பள்ளி எழுச்சி பாடத் தொடங்கும்.

அந்தச் சத்தம் கேட்டவுடன் அப்பம்மா எல்லோரையும் நித்திரைப் பாயை விட்டு எழுப்புவா. தொடர்ந்தும் படுத்திருந்தால், "இப்ப செம்புதண்ணீர் தான் வரும்" என மிரட்டல் வரும். அத்துடன் ஆளுக்காள் பாயைச் சுற்றிக் கொண்டு எழுந்து கொள்வோம்.

பின்பு பகல் திருவிழா முடியும் வரை தொடரும் பக்திப்பாடல்கள்... மாலையில் சினிமா பாடல்கள் மற்றும் திரைப்பட வசனங்கள்.... இரவுத் திருவிழாவின் பொழுது மீண்டும் பக்திப்பாடல்கள்... இரவு சுவாமி இருக்கைக்குப் போன பின்பு இரவின் தாலாட்டாய் சில இனிமையான பழைய பாடல்கள் என பன்னிரண்டு நாட்களும் அந்தச் சுற்றாடல் களை கட்டும்.

சிலவேளை தேய்ந்த ஒலித்தட்டு ஒரே வரியைத் திரும்ப திரும்ப பாடும் பொழுதும் சரி... ஒலிக்கருவி மெதுவாய் சுற்றும் பொழுது பாடல்கள் றப்பராய் இழுபடும் பொழுதும் சரி... எமக்குச் சிரித்துச் சிரித்து வயிறு நோகும். பிள்ளையார் கோயிற்கொடி இறங்கி அடுத்த ஏழாம் நாள் எங்கள் முருகன் கோயிலில் கொடியேறும்.

இந்த ஏழு நாட்களுக்கும் இடையில் எங்கள் அப்பப்பாவின் பெரிய நாற்சார் வீடு கலகலக்கத் தொடங்கி விடும். வீட்டின் பின்வளவில் குடியிருந்த நாலைந்து குடிகளும் எங்கள் வீட்டு வளவைச் சுத்தம் செய்யத் தொடங்கி விடுவார்கள்.

செக்கல் பொழுதுகளில் வளவின் மூலைகளில் குப்பைகள் சிறிதாகவும் பெரிதாகவும் கொளுத்தப்பட்டுக் கொண்டிருப்பதும் அழகாய்த்தான் இருக்கும்.

குப்பை எரியும் பொழுது சின்னப் பிள்ளைகளான நாங்கள் சுற்றி நின்று அதில் கல்லைத் தூக்கிப் போடும் பொழுது நெருப்புப் பொறிகள் சிறிய பாம்புகள் போல நெளிந்து நெளிந்து மேலெழுந்து செல்வது கொள்ளை அழகாய் இருக்கும்.

வீட்டின் முன்னால் தென்னோலையால் மேயப் பட்டிருக்கும் பெரியமால் போதாது என்று அதிலிருந்தும் பத்திகள் இறக்கப்படும்.

பன்னிரண்டு திருவிழா நாட்களுக்காக கோண்டாவி லில் இருந்து கோயிலுக்குப் பெரிய லைற் மெசின் வரும். அந்த லைற் மெசின்காரனின் சின்ன லைற்மெசின் எங்கள் வீட்டுக்கும் வந்து விடும். அவனுக்கும் பன்னிரண்டு நாட்களும் சாப்பாடு எங்கள் வீட்டில்தான்.

வீட்டில் வந்து நிற்கும் அனைவருக்கும் கிணற்றில் தண்ணீர் அள்ளி ஊற்ற முடியாது என்பதால் ஒரு சின்னத் தண்ணீர் இறைக்கும் மெசினும் பொருத்தப்படும். காலை யும் மாலையும் இரண்டு பெரிய தொட்டிகளும் வீட்டில் உள்ள பெரிய அண்டாக்கள், மற்றும் பெரிய பாத்திரங்கள், வாளிகள், குடங்கள் எல்லாம் தண்ணீரால் நிரப்பப்படும்.

அதே லைற் மெசினில் இருந்து கறண்ட் எடுத்து அப்பா தனது ரேப்ரைக்கோடரை பெரிய சத்தமாகப் போட்டு விடுவார். வீடு முழுக்க லவுட் ஸ்பீக்கர் போட்ட மாதிரி இருக்கும். அப்பா இல்லாத நேரங்களில் எங்களுக்குப் பிடித்தமான சினிமாப் பாடல்களைப் போட்டு விடுவோம். அப்பாவைத் தூரத்தில் காணும் பொழுது, "கற்பனை என்றாலும் கற்சிலை என்றாலும் கந்தனே உனை மறவேன்" என்ற பாடலை மாற்றி விடுவோம்.

தண்ணீரில் அரிசி ஊற வைத்து.... பின் நீரைவடிய விட்டு....காயப்போட்டு... மா இடித்தல், வறுத்தல் என்பன ஒரு பக்கத்தில் நடைபெறும். அப்படியே மிளகாய், மல்லி எல்லாம் வறுத்து இடித்து அரிப்பது இன்னோர் பக்கத்தில் நடக்கும்.

மாலை வேளைகளில் ஒரு புறம் வறுத்த மாவின் மணம் மூக்கை வருடிச் செல்லும். மறுவினாடி பல சரக்கு வகைகளை சேர்த்து இடித்த தூளின் மணம் வந்து போகும். அது தும்மலைக் கொடுத்தாலும் அந்த மணத்தில் ஒரு இரசனையிருக்கும்.

வீட்டின் பின்னால் பட்டுப் போன மரங்களைத் தறித்து விறகு கொத்திக் கொண்டு பறையடிக்கும் காத்திகேசு நிற்பான். இந்த விறகுகள் போதாது என்றால் எங்கள் இரட்டை மாட்டு வண்டியைக் கட்டிக் கொண்டு விறகு காலையில் வாங்கிக் கொண்டு வருவான்.

கார்த்திகேசு...காத்திகேயன்... காத்தியேசன்... கார்த்திகேயன்... என எந்தப் பெயர்வடிவில் அவன் பெயர் பிறப்புச் சான்றிதழில் பதிவு செய்யப்பட்டு இருக்கின்றதோ தெரியாது. ஆனால் நாங்கள் எல்லோரும் வயது வித்தியாசம்

இல்லாமல் அழைப்பது "காத்திகேசு" என்று தான்.

காத்திகேசு, அவன் மனைவி பறுவதம், என் வயதை ஒத்த... அல்லது என்னைவிட ஒன்று, இரண்டு வயது கூடிக் குறைந்த மூன்று மகன்மார், ஒரு மகள் என அனைவரும் இந்த திருவிழாக்காலங்களில் எங்கள் வீட்டில் இருபத்தினான்கு மணித்தியாலமும் வேலை செய்து கொண்டு இருப்பார்கள்.

நான், பபிதா, பெரியப்பாவின் மகன்மார் இருவர், சின்ன மாமியின் இருமகன்மார், மகள் ஒருத்தி என எழுவரும் பகலில் பாடசாலைக்குப் போய் அங்கிருந்து உணவு இடைவேளையின் பொழுது நேரடியாகக் கோயில் பகல் திருவிழாவுக்கு வருவோம்.

சண்முகத்தாரின் ஏழு பேரப்பிள்ளைகள் என அப்பா சொல்லுவார்.

இல்லை ஆறு பேர்தான் என தங்களுக்குள் பெரியம்மாவும் சின்ன மாமியும் மறுதலிப்பார்கள்.

இது அப்பாவுக்கும் அம்மாவுக்கும் எனக்கும் மனதுக்கு வேதனையாக இருந்தது. பபிதாக்கும் அவ்வாறே இருந்திருக்கும். ஆனால் அவள அதனை வெளியில் காட்டிக் கொண்டதில்லை.

பெரிய மாமியும் உயிரோடிருந்திருந்தால் இதனைத் தான் செய்திருப்பாவோ தெரியாது.

காத்திகேசுவின் பிள்ளைகளை அந்தப் பன்னிரண்டு நாட்களும் பாடசாலைக்கு அனுப்ப காத்திகேசு சம்மதிப் பதில்லை. தனக்குத் துணையாக எங்கள் வீட்டு வேலை களைச் செய்வதற்கு அவர்களை அவன் வைத்துக் கொள்வான். அவனுக்கு எங்கள் வீட்டில் உள்ள பயபக்தியோ அல்லது பரம்பரை பரம்பரையாக எங்கள் அப்பப்பா

குடும்பத்தின் மீது இருந்த பயமோ தெரியாது, அவன் அப்படித்தான்.

வீட்டின் முன்மாலுக்கு முன்னேயுள்ள பெரிய மாமர நிழலின் கீழ் இருந்து அப்பம்மா எப்போதும் அப்பப்பாவின் கதைகளை எங்களுக்குச் சொல்லிக் கொண்டே இருப்பார்.

அப்பம்மா சொன்னவற்றை எழுதிக் கொண்டே போனால் இராமாயணம், மகாபாரதம் போல பல காண்டங்களாய் எழுதிக் கொண்டே போகலாம். மூலக்கதை கிளைக்கதைகள் என அவ்வளவு கதைகள் இருக்கு. அத்தனையும் என் மனதில் பதிந்திருக்கு.

எல்லாவற்றிலும் அப்பப்பாவைத் தலை நிமிர்ந்து பார்த்த நான், அவரை வெறுத்த ஒரே ஒரு சந்தர்ப்பம் காத்திகேசுவின் தகப்பன் கணபதியின் காதை அறுத்த சம்பவத்தைக் கேட்ட பொழுதுதான்.

கணபதிக்குக் கூட ஏன் அப்படி ஒரு ஆசை அந்தக் காலத்தில் வந்ததோ தெரியாது.

கோயில் தேர், தீர்த்தம் எல்லாம் நன்றாக நடந்து முடிந்து வைரவமடையன்று கணபதி காதில் கடுக்கன் போட்டுக் கொண்டு கோயிலடிக்கு வந்திருக்கின்றான்.

அப்பப்பா பார்த்த மாத்திரம் ஒரு கணம்தானாம்.

பாய், பெட்டி, கடகம் விற்கும் மனுசிக்குப் பக்கத்தில் கிடந்த கொக்கச் சத்தகத்தை எடுத்துக் கொண்டு போய் கடுக்கனைப் பிடித்து இழுத்து காதுச் சோணையுடன் சேர்த்து ஒரே வெட்டுத்தானாம்.

காதுச் சோணை நிலத்தில் கிடந்து துடித்ததாம். கணபதி இரத்தம் வடியும் காதைப் பொத்திக் கொண்டு நிலத்தில் கிடந்து குழறினானாம். ஆனால் யாருமே அப்பப்

பாவை எதிர்த்து ஒரு வார்த்தை கூட கதைக்கவில்லையாம். சரி, பிழை என்று கதைக்க யாருக்குமே துணிவில்லையாம். காத்திகேசு மட்டும் அழுது கொண்டு தகப்பனுக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்தானாம்.

இந்தச் சின்னக் களங்கமும் சேர்ந்ததுதான் "அப்பப்பா என்ற அந்தப் பெரிய மலை" என நான் நினைப்பேன்.

ஆனால் அப்பம்மா இறக்கும் வரையில் அவனவனை அந்த அந்த இடத்தில் வைக்க வேண்டும் என்று அப்பப்பா வின் செயலை நியாயப்படுத்திக் கொண்டே இருந்தார். அதற்கு வேறொரு ஆழமான காரணம் இருந்தது. குளிர் காற்றின் அளவைக் கொண்டு பெய்யவிருக்கும் மழையின் அளவை கணிக்கும் விவசாயி போல அப்பம்மாவின் பல கணிப்புகள் தவறியதே இல்லை.

அப்பப்பா உயிருடன் இருந்திருந்தால் பிற்காலத்தில் அவருடன் நான் இதற்காகச் சண்டை போட்டுக் கதைத்திருப்பேன்.

ஆனால் நான் பிறப்பதற்கு சில மாதங்கள் இருந்த பொழுது, 58ஆம் ஆண்டுக் கலவரத்தில் அப்பப்பா இறந்து போய்விட்டாராம். கூடவே பெரிய மாமியும்.

அந்த ஆண்டு திருவிழா வேளையில் எங்கள் பாட சாலைக்கு மட்டக்களப்பில் இருந்து ஒரு ஆசிரியர் இடமாற்றம் பெற்று வந்திருந்தாராம். அவரின் இளவயது மகனுடன் பெரியமாமிக்கு முளைத்த காதல் முற்றிவிடாமல் தடுக்க, அப்பப்பா தனது செல்வாக்கைப் பயன்படுத்தி கச்சேரிக் கல்விஅதிகாரியைக் கொண்டு அந்த ஆசிரியருக்கு மன்னாருக்கோ வவுனியாவுக்கோ இடமாற்றம் பெற்றுத் தர முயற்சித்துக் கொண்டிருந்தார். அப்பம்மா பள்ளி விடு

முறையின் பொழுது அப்பப்பாக்கு சமைத்துத் தர உதவியாக இருக்கும் எனக் கூறி பெரியமாமியை பண்டாரவளைக்கு அனுப்பி வைத்திருக்கின்றார். அதுவே அவாவின் உயிருக்கும் எமனாகியிருக்கிறது.

அவர் கடையில் வேலை பார்த்திருந்த ஒரு சிங்கள வன் சந்தர்ப்பம் பார்த்துக் கடையைச் சூறையாடி விட்டுக் கடைக்கும், கடைக்கு பின்னால் இருந்த தென்னந்தோப்பில் அமைந்திருந்த அப்பப்பாவின் வீட்டுக்கும் நெருப்பூட்டி விட்டு ஓடிவிட்டானாம். ஒரே தெருவில் அமைந்திருந்த அவரின் ஒன்பது கடைகளும்... கட்டப்பட்டுக் கொண்டிருந்த பத்தாவது கடையும் நெருப்பின் சுவாலைகளுக்குள் இருந்ததைப் பார்த்த பொழுது அவருக்கு ஏற்பட்ட மார்பு வலியில் இருந்து அவர் மீண்டும் எழும்பவே இல்லையாம்.

அப்பப்பாவின் உடலை ஐந்தாம் நாள்தான் ஊருக்கு கொண்டு வந்தார்களாம். ஆனால் பெரிய மாமியின் உடல் கிடைக்கவே இல்லையாம்.

கணபதியின் காதறுத்த அடுத்த மூன்று மாதத்தினுள் சாவீடு... காடாத்து... அந்தியேட்டி எல்லாம் முடிந்து விட்டதாம்.

ஊர் முழுக்க பின்வளவில் இருந்த கணபதிதான் செய்வினை செய்து போட்டான் என்று கதைத்துக் கொண்டதாம். அதுக்குப் பிறகு எல்லாக் குடும்பங்களிலும் கவலையான விடயங்கள் நடக்கும் பொழுது இந்த செய்வினைக் கதைகள் வந்து போகும். காத்திகேசுவைக் காணியால் எழுப்ப வேண்டும் என்று எனது அப்பா சொன்ன பொழுது கூட அப்பம்மாதான் குடும்பத்தை எழுப்பிறது குருவிக் கூட்டைக் கலைக்கிற மாதிரி என்று விட

வில்லையாம்.

அப்பப்பா போன பின்பு எவ்வளவோ நடந்து முடிந்த போதும் இப்போதும் அந்த வீடும் வளவும் அப்பப்பாவின் பெயரால்தான் பண்டாடரவளை சண்முகத்தார் வீடு... பண்டாரவளை சண்முகத்தார் வளவு எனவே அழைக்கப் படுகிறது.

எனது கண்கள் கட்டிலுக்குப் பக்கத்தில் இருந்த மருந்து மேசையில் அந்தப் படத்தைத் தேடுகின்றன.

பவித்திராவுக்குப் புரிந்து விடுகிறது.

“எத்தனை தரம் அதைப்பார்த்துக் கொண்டு இருக்கப் போறியள்”, என்று சொல்லிக் கொண்டே பவித்திரா அதனை எடுத்து நீட்டுகின்றாள்.

“பிள்ளைகள்... மருமக்கள்... பேரப்பிள்ளைகளின் படங்களைத் தவிர அப்பாவுக்கு இந்தக் கோயில் படம்தான் எப்போதும் முக்கியம்”, பானுவின் குற்றச்சாட்டு இது.

பானு எனது மகள் தான்.

திரும்பிப் பவித்திராவைப் பார்க்கின்றேன், இதுதான் நான் யாரையும் பார்க்காமல் இருக்க விரும்புகின்றனான் என்ற பார்வையின் பதிலை அவள் புரிந்திருக்க வேண்டும்.

“பேசாதே”, என கைவிரலால் பவித்திரா பானுவுக்கு சைகை காட்டுகிறாள்.

இந்தப் படம் நான் உயர்தரம் படித்த பொழுது எனது நண்பன் ஒருவனின் யசீக்கா கமராவை இரவல் வாங்கி எடுத்த படம்.

கோயிலின் முகப்பு.

எங்கள் திருவிழா அன்று எடுத்த படம் அது.

கோயில் வாசலில் எங்கள் குதிரை வாகனம் கம்பீரமாக நிற்கிறது.

அதனை எங்கள் ஏழாம் திருவிழா அன்று மட்டும் வெளிவீதியில் சுவாமி ஊர்வலம் போகத் தூக்குவோம்.

அதனைத் தூக்கிக் கொண்டு வீதிவலம் வரச் சரியாகப் பதினாறு திடகாத்திரமான ஆண்கள் வேண்டும்.

முன், பின், வலப்பக்கம், இடப்பக்கம் என நாலு நாலு பேராகப் பதினாறு பேர் வேண்டும்.

ஒரே உயரமும் ஒரே பலமும் கொண்ட பதினாறு பேரால் தான் ஆட்டம் அசைவு இல்லாமல் உள்வீதியில் கொண்டு செல்லுவதற்கும்... மேளக்காரரின் தாளத்திற்கு வெளிவீதியில் கொண்டு ஓடுவதற்கும்.... முழங்கையில் தாங்கியபடி சுவாமியை ஆட்டி ஆட்டி உள்ளே கொண்டு வருவதற்கும் இயலும்.

பகலுக்கும் இரவுக்கும் இந்த பதினாறு பேரின் பங்களிப்பு கட்டாயம் தேவை.

குதிரைவாகனம் வெவ்வேறு வீதிகளில் வலம் வரும் பொழுது நாதஸ்வரக்காரரின் வெவ்வேறு தாளலயக்கட்டு வாசிப்புக்கு ஏற்ப மலைக்குள் இருந்து சிங்கம் புறப்படுவது போல கம்பீரமாக இருபுறமும் பார்த்தபடி சிம்மகதியிலும்... பின் புலிப்பாய்சல் போல முன்நோக்கி வேகமாகவும்... யானையைப் போல் மிடுக்குடன் அசைந்து அசைந்து நடந்தும்... காளைமாட்டைப் போல அதீத கர்வத்துடனும் .... இறுதியாக சுவாமி இருப்பிடத்திற்கு வரும்பொழுது களைத்துப் போன சர்ப்பம் தனது புற்றுக்குள் நுழைவது போல மெதுமெதுவான சர்ப்பகதியிலும் செல்வது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

பக்தர்கள் அனைவரும் அந்தக் காட்சியை மிகவும் ரசித்து பலத்த கரகோஷம் செய்து மகிழ்வார்களாம். முருகனின் நடையழகை தமக்குள் உள்வாங்கி அந்த கம்பீரம் தமக்குள்ளும் வந்து விட்டதாக உணர்வார்கள்.

தம்முடன் எடுத்து வந்திருந்த பூக்களை வாகனத்தை நோக்கி "முருகனுக்கு அரோகரா" என்று சொல்லியபடி வீசி வணங்குவார்களாம். குதிரைவாகனத்தைக் காவுபவர்களின் வியர்த்த உடலில் அந்த பூக்களின் இதழ்கள் ஒட்டியபடி அவர்கள் காவிச்செல்வது மிக அழகாக இருக்கும்.

இதுவே எங்கள் விழாவின் உச்சக்கட்டமாக இருக்கும் என அப்பம்மா தன் முகம் எல்லாம் பெருமை பொங்கச் சொல்லிக் கொண்டு இருப்பா.

ஒவ்வோர் தாளவாசிப்புக்கும் அப்பப்பா நாதஸ்வரக் காரர்களுக்கு பட்டுத்துண்டு போர்த்தியும் காசும் கொடுத்தும் கௌரவப்படுத்துவாராம்.

அப்படி ஒரு பெருமை எங்கள் குதிரை வாகனத்திற்கும் எங்கள் திருவிழாவிற்கும் இருந்த காலம் அது.

அதுமாத்திரம் இல்லை. ஏழு மைல் தூரத்தில் உள்ள அம்மன் கோயிலில் சூரன்போர்த் திருவிழா நடாத்துவதற்கு இந்தக் குதிரைவாகனத்தைதான் தோள்களில் காவிச் செல்வார்களாம்.

அங்கு பின்னேரம் சூரன்போர் முடிந்த பின்பே இரவில் எங்கள் முருகன் கோவில் சூரன்போர் தொடங்கும். மீண்டும் எங்கள் குதிரை வாகனத்தில் எங்கள் முருகன்.

அநேகம் பேர் பலா மரத்தில் வாகனம் செய்த காலத்தில் முதிரை மரங்களைக் கொண்டுவந்து அந்த வாகனத்தை அப்பப்பா செய்வித்தவராம்.

அதில் தான் முருகன், வள்ளி - தெய்வானை சமேதரராய் வீதி வலம் வருவார்.

பெரிய குதிரை வாகனம். சிவப்பு நிறத்தில் மை பூசி... ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும்.

ஒவ்வொரு கொடியேற்றத்தின் பொழுதும் அதனைத் தூசுதட்டி பெயின்ற்பூசி அப்பப்பா ஆயத்தங்கள் செய்யத் தொடங்கி விடுவாராம். கொடியேற்றத்திற்கு முதன்நாள் பண்டாரவளையில் இருந்து வரும் அவர் பூங்காவனத்திற்கு அடுத்த நாள்தான் திரும்பிச் செல்வாராம்.

எங்கள் ஏழாம் திருவிழாக்கும் தேர்த் திருவிழாக்கும் மலைநாட்டில் இருந்து பிரத்தியோகமாக அந்தூரியப் பூக்கள் மெயில் வண்டியில் வந்து கோயிலின் உள்வீதியில் உள்ள அத்தனை தூண்களையும் அலங்கரிக்குமாம். அவ்வாறே வெளிவீதியைச் சுற்றி ரியூப் லைற் கட்டப் பட்டிருக்கும் கதியால்களையும் அலங்கரிக்குமாம்.

எங்கள் பெரிய குதிரை வாகனத்திற்குப் பக்கத்தில் நிற்கும் சிறிய வெள்ளைக் குதிரைகள் இரண்டையும் அப்பப்பா இறந்த பின்பு வட்டுக்கோட்டை ஆசாரியாரைக் கொண்டு அப்பம்மா செய்வித்தாராம்.

எங்கள் வளவில் நின்ற மிகப் பெரிய வேம்பு மரத் தாலும், இலுப்பை மரத்தாலும் அவை செய்யப்பட்டதாம். ஒன்று பிள்ளையாருக்கு... மற்றது அம்மனுக்கு...

7ம் திருவிழாவிற்கு யாழ்ப்பாணத்தில் எந்த மேளக் காரருக்கும் முற்பணம் கொடுத்து ஒழுங்கு செய்வதில்லை யாம். அத்தனை பிரபல்யமான மேளக்காரரும் பண்டார வளை சண்முகத்தாரின் பூசை என்று ஞாபகம் வைத்து வருவார்களாம். வீதியில் அத்தனை கூட்டத்தின் மேளக்

கச்சேரியும் அட்டகாசமாக இருக்குமாம். அதற்காகவே எட்ட எட்ட உள்ள ஊர்களில் இருந்து வண்டி கட்டிக் கொண்டு வருவார்களாம்.

அன்று காலையில் இருந்து இரவுவரை மேளக் காரருக்கு சாப்பாடும் தண்ணி வகையும் வீட்டின் பின்னால் அமைந்திருந்த மாலுக்குள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும். அங்குதான் அப்பப்பாவின் பண்டாரவளைக் கடைகளுக்கு அனுப்பப்படும் சுருட்டு சுற்றப்படுவது.

தவிற்காரர் வந்து தங்கிப் போவதால் தவிற்காரர் மால் என்று கூடச் சொல்வதுண்டாம்.

கொக்குவில், கோண்டாவில் பகுதிகளில் இருந்து வரும் சுருட்டை விடச் சொந்தமாக அப்பப்பா ஆட்களை வைத்துச் சுருட்டி விற்கும் சுருட்டுக்குப் பண்டாரவளையில் நல்ல மவுசாம். பக்கத்துப் பக்கத்துத் தோட்டப் பிரதேசக் கடைக்காரரும் அப்பப்பாவின் கடையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் வந்து வாங்கிக் கொண்டு போவார்களாம்.

எதில் எதில் பணம் போட்டால் அது பெருத்து வளரும் என்று அப்பப்பா துல்லியமாக கணக்குப் போட்டு வியாபாரம் நடத்துவாராம். அப்படித் தொடங்கப்பட்டது தான் அவரின் சுருட்டு வியாபாரமும் பின் சுருட்டு மாலும். மாதம் முழுக்க காலை எட்டுமணி தொடக்கம் மாலை ஐந்து மணிவரை சுருட்டு தொடர்ந்து சுற்றப்பட்டுக் கொண்டிருக்கு மாம். அவர்களுக்கு இருநேரச் சாப்பாடும் இரண்டு நேர தேத்தண்ணயும் அப்பம்மாவின் கண் காணிப்பில் தான் நடக்குமாம்.

அப்பம்மாக்கு ஒத்தாசைக்குப் பலர் இருந்த பொழு தும் வீட்டோடு வந்திருந்து வேலை செய்ய ஒரு சிங்களப்

பெண்மணியையும் அவளுடன் அவளது கைக் குழந்தையை யும் கொண்டு வந்து அப்பப்பா விட்டிருந்தாராம்.

அது அப்பப்பாவின் சிங்கள வைப்பாட்டியாக இருக்க வேண்டும் என்று ஊர் காதும் காதும் வைத்தால் போல் குசுகுசுத்துக் கொண்டதாம்.

ஆனால் அப்பப்பாவோ அப்பம்மாவோ இதற் கெல்லாம் அசைந்து விடுபவர்களாக இருக்கவில்லை.

அந்தச் சிங்களக் கைக்குழந்தைக்கு ஜாமினி என்று பெயர் வைத்தார்களாம். எங்கள் அப்பா, பெரியப்பா, பெரிய மாமி, சின்ன மாமி நால்வருடன் அவளையும் தன் பிள்ளை போல அப்பம்மா வளர்த்தாவாம். பெரியமாமியும், சின்ன மாமியும் படித்த பெண்கள் பாடசாலையிலேயே அவளும் பாலர் வகுப்பில் சேர்க்கப்பட்டாளாம்.

அப்பாவும் பெரியப்பாவும் சைக்கிளில் யாழ்ப்பாணம் போய்ப்படிக்க... பெரியமாமி, சின்ன மாமி இருவருக்கும் கூடவே ஜாமினிக்கும் பாடசாலைக்குப் போய்வர கார் ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததாம். இதனை அப்பப்பா பெருமையாகச் சொல்வாராம் தன் பெண் பிள்ளைகளை அந்த ஊரில் இருந்து முதன் முதலாக யாழ்ப்பாணம் அனுப்பி... அதுவும் காரில் அனுப்பி படிப்பித்தவராம் என, எவரும் செய்யாத ஒன்றைத் தான் செய்வதில்தான் எப்போதும் அப்பப்பாக்குப் பெருமை.

நான் வளர்ந்து வரும் காலத்தில் கொழும்பில் வேலை பார்ப்பவர்கள் விடுமுறைக்கு யாழ்ப்பாணம் வரும் பொழுது தங்கள் பிள்ளைகளுடன் வேலைக்காரப் பெண் என்று ஒருத்தியைக் குட்டையாக வெட்டிய தலைமயிருடனும், சீத்தைத் துணியில் தைத்த பாவாடை சட்டையுடனும்

கொண்டு திரிவதைப் பார்க்கும் பொழுது என் அப்பப்பா வையும் அப்பம்மாவையும் நினைத்துப் பெருமைப்பட்டிருக் கின்றேன்.

அப்பப்பா சரி... அப்பம்மா சரி... அவ்வாறு எந்த வேறு பாட்டையும் ஜாமினிக்குக் காட்டவேயில்லையாம்.

ஆனால் பெரியமாமியும், சின்ன மாமியும் காட்டினார்கள் என்பது வேறு விடயம்.

தமக்குள் கதைக்கும் பொழுது சிங்களத்தி என்றே கதைப்பார்களாம்.

இதனைப் பின்நாளில் எனது அம்மா சொல்லி வேதனைப்படுவா.

அதே வேளை கோபப்படுவதிலும் சரி.... இரக்கம் காட்டுவதிலும் சரி... பல குணாதிசயங்களில் நான் அப்பப்பாவை ஒத்து இருக்கின்றேன் எனக் கவலையும் படுவா... பெருமையும் அடைவா.

மாமிமார் இருவரும் வயதுக்கு வந்த பொழுது அவர் களின் சாமத்திய வீட்டு நிகழ்வை நடாத்திய விதமாகத்தான் ஜாமினி வயதுக்கு வந்தபொழுதும் அப்பப்பா தடல் புடலாகச் செய்தாராம்.

ஜாமினிக்கு பெரியளவில் சாமத்தியம் செய்வதில் இரண்டு மாமிகளுக்கும் பெரிய உடன்பாடு இல்லாதால் அப்பம்மாவும் பட்டும் படாமலும் தான் எல்லாவற்றிலும் பங்கு பற்றினாவாம்.

ஏறச் சொன்னால் எருதுக்கு கோபமும், இறங்கச் சொன்னால் முடவனுக்கு கோபமும் வரும் நிலையில் தானாம் அப்பம்மா தன் இரண்டு மகள்களுக்கும் அப்பப்பாக்கும் இடையில் நின்று தவிப்பாவாம்.

ஜாமினி வயதுக்கு வந்து கொஞ்சக் காலத்தினுள் அவளின் தாய்க்கு அடிக்கடி இருமல் வந்து... பின் அது கசம் என்றறிந்து யாழ்ப்பாணத்தில் இருந்த தனியார் மருத்துவ மனையில் வைத்தியம் செய்யத் தொடங்கும் பொழுது சுவாசப்பைகள் இரண்டிலும் அது முற்றாகப் பரவி விட்டதாம்.

பின்பென்ன?... ஜாமினியை அப்பம்மாவின் கைகளில் கொடுத்து விட்டு அவளது தாய் கண்ணை மூடி விட்டார்.

ஜாமினி வீட்டுக்குப் பிள்ளை போலவும்... வேலைக் காரி போலவும் அப்பம்மாக்கு உதவி செய்து கொண்டிருந் தாளாம்.

குடும்பத்தில் நடந்து கொண்டிருந்த எதிலும் பெரியப்பா பெரிதாகப் பட்டுக் கொள்வதில்லையாம்.

பெரியப்பாக்கு இருந்தது எல்லாம் “வைற் கொலர் ஜொப்” என்று சொல்லப்படும் அலுவலக உத்தியோகம் பற்றிய கனவு தான்.

அப்பாக்கு எந்தக் கனவும் காண்பதற்கு இருக்க வில்லை. கூடவே அவருக்கு எந்தப் படிப்பும் ஏறவில்லை

அப்பப்பா சொல்வதைச் செய்து கொண்டிருப் பதையே தன் வாழ்க்கை என்று எண்ணி வாழ்ந்து கொண்டிருந்தாராம்.

கோலத்தில் போடப்படும் புள்ளிகள் போல் எவர் எவர் எப்படி இருந்தாலும் அனைவரையும் இணைக்கும் கோடாய் இருந்து வந்தது அந்த முருகன் கோயில் பன்னிரண்டு நாள் உற்சவமும்... குறிப்பாக எங்கள் ஏழாம் திருவிழாவும் குதிரை வாகன ஊர்வலமும் தான்.

## 2

58 கலவரத்திற்கு முன்பு... 58 கலவரத்திற்குப் பின்பு என்று எங்கள் வாழ்க்கையைப் பிரித்துக் கொள்ளலாம்.

பெரியப்பா எதிர்பார்த்த மாதிரியே வங்கி அதிகாரியாகி, கச்சேரியில் காசாளராக இருந்த பெரியம்மாவை விரும்பி... பின் அவரையே, தரகரைக் கொண்டு பேச்சுத் திருமணமாகச் செய்து, இரண்டு ஆண் பிள்ளைகள் பிறந்தது.... 58 கலவரத்திற்கு முன்பு நடந்தது.

சின்ன மாமி சரி... பெரியமாமி சரி... திருமணமாகாமலே இருக்கும் பொழுது கலவரம் வந்து எல்லாவற்றையும் புரட்டிப் போட்டு, அப்பப்பாவையும் பெரிய மாமியையும் கொண்டு சென்றது 58ம் ஆண்டின் நடுப் பகுதியில் நடந்தது.

அப்பாக்கு அப்பப்பாவின் வியாபாரம் பிடிக்காமல் வீட்டை விட்டு ஓடிப்போய் ஆமியில் சேர்ந்தது... பின் அவரை கட்டாயமாக இழுத்து வைத்துக் கல்லாப் பெட்டியில் குந்த வைத்தது... அவராக விரும்பி மச்சாள் முறையான அம்மாவை திருமணம் செய்தது... கலவரம் முடிந்து நாலைந்து மாதங்களில் நான் பிறந்தது 58ன் பிற்பகுதியில்

நடந்தது.

நிகழ்ந்த நிகழ்வில் மிக மோசமானது எங்கள் வீட்டில் இருந்த ஜாமினிக்கு நடந்த கொடுமைதான்.

ஆம்!

58 கலவரம் வைகாசி மாதத்தின் பிற்பகுதியில் தென்னிலங்கையில் கொடுமையாகக் கொளுந்து விட்டு எரிந்து கொண்டிருந்த பொழுது.... யாழ்ப்பாணக் குடா நாட்டில் சில சில இடங்களில் இருந்த சிங்கள பேக்கரிகள் தீக்கிரையாக்கப்பட்டுக் கொண்டு இருந்தன.

அப்பப்பாவின் செய்தி எங்களுக்கு தந்தி மூலம் கிடைத்து... உடல் கிடைக்காமல் வீட்டில் சாவீடு கொண்டாடிக் கொண்டு இருந்த பொழுதுதான் அந்த அசம்பாவிதம் நடந்தது.

வீட்டுக்குச் சுருட்டுச் சுற்றவரும் அத்தனை பேரும் சுருட்டு சுருட்டும் மாலுக்குள் வைத்து... தேநீர் எடுத்துக் கொண்டு சென்ற ஜாமினியைத் தாக்கு தாக்கென்று தாக்கிக் குற்றுயிருராயப் போட்டுச் செல்ல... அதில் யாரோ ஒருத்தன் திரும்பி வந்து மயக்கமாய் இருந்த அவளைக் கற்பழித்தது தான்.

தலைநிமிர்ந்து நின்ற எங்கள் குடும்பத்தினருக்கு விழுந்த முதல் கறுத்தப் பூச்சு அது.

முதல் அடி அது!!

அப்பா மிகவும் கோபத்தில் அத்தனை சுருட்டுத் தொழிலாளரையும் அடித்து நொருக்கிப் பொலிசில் பிடித்துக் கொடுத்து அவளுக்கு நடந்த கொடுமைக்குப் பிராயச் சித்தம் தேடினாலும் அவளுக்கு ஏற்பட்ட களங் கத்தைத் துடைக்க முடியவில்லை.

வாழ்வு என்பது புதைக்கப்பட்ட பல உண்மை களோடுதானே பயணிக்கின்றது.

அப்பப்பாவின் 31ம் நாள் கிருத்தியங்கள் முடிந்து அடுத்தநாள் மீண்டும் சுருட்டு சுருட்டத் தொடங்குவதாக அப்பா சொல்லியிருந்தாராம்.

அப்போதுதான் அடுத்த அடி எங்கள் குடும்பத்திற்கு விழுந்ததாம்.

சுருட்டுச் சுற்ற வந்தவர்கள் எவரும் அப்பப்பாவின் அந்தியேட்டிக்கு வரவில்லையாம்.

அத்துடன் அத்தனை சுருட்டுத் தொழிலாளர்கள் சரி... மற்றைய மற்றைய கிராமங்களில் இருந்தும் எந்தச் சுருட்டுத் தொழிலாளர்கள் சரி... எங்கள் வீட்டுக்கு சுருட்டுச் சுருட்ட வரமாட்டோம் என்று அவர்களது சுருட்டுச் சுற்றும் தொழிலாளர் சங்கத்தில் முடிவெடுத்திருந்தார்களாம்.

ஒரு துளி விசம் ஒரு குடம் பாலையே வீணாக்கி விடுவது போல ஒருத்தனின் காமச்செயல் அத்தனை சுருட்டுத் தொழிலாளர்களையும் எங்கள் குடும்பத்தையும் பாதித்தது வேதனையான விடயமே.

அப்பா அவர்களிடம் மன்னிப்புக் கேட்டு அவர்கள் மீது போட்ட வழக்கை வாபஸ் பெற்றால்தான் தாம் வேலைக்கு திரும்புவதாக ஊர் விதானையார் மூலம் சமாதானத் தூது அனுப்பபட்டதாம்.

“அந்த ஒருவன் யாரென்று உங்களுக்குத் தெரியும். நீங்கள் சட்டத்தின் முன் அவனை நிறுத்துங்கள். நான் உங்கள் அனைவரிடம் மன்னிப்புக் கேட்கின்றேன்” என்று இறங்கி வந்தாராம்.

ஆனால் அவர்கள் அவனைப் பற்றித் தெரிந்திருந்தோ

அல்லது தெரியாமல் இருந்தோ அவனைக் காட்டிக் கொடுக்க மறுத்து விட்டார்களாம்.

அப்பா வழக்கை வாபஸ் பெறவும் இல்லையாம்... மன்னிப்புக் கேட்கவும் மறுத்து விட்டாராம்.

நான் உலகம் அறியாத வயதில்... நான் பிறந்த அந்த 58ம் ஆண்டில்... அப்பா எடுத்த முடிவு பற்றி இன்று இந்த 58 வயதில் மரணப்படுக்கையில் படுத்திருக்கும் தருணத்தில் கூட பெருமைப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறேன்.

அப்பப்பாவின் மரணம் கொடுத்த வேதனையில் அனைவரும் மூழ்கி இருந்ததாலும்... ஜாமினிக்கு நடந்த கொடுமையை நினைத்துப் பொங்கிக் கொண்டு இருந்ததாலும் அவள் வயிற்றுள் ஒரு குழந்தை ஜனித்திருக்கும் என்று யாரும் யோசிக்கவில்லை. அதனை அறிந்த பொழுது அவள் வயிற்றில் அவளையும் அறியாமல் வளர்ந்த கருவை அழிக்க முடியவில்லை. தாய் மரத்தில் பிள்ளை மரம் நன்கு வேரூன்றி விட்டிருந்தது. பிரிக்க முயற்சித்தால் ஒன்றில் தாய்மரம் கருக்கூடிய.... அல்லது பிள்ளை மரம் கருக்கூடிய.... அல்லது இரண்டும் கருக்கூடிய நிலைதான் நிலவியதாம்.

சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தின் சார்பில் வீட்டுக்கு சமாதானத்திற்கு வந்த விதானையாரிடம் அப்பா கேட்டா ராம், "உங்கள் மகளுக்கு இப்படி நடந்திருந்தால் இப்படி பேச வருவீர்களா?" என்று.

அத்துடன் விதானையார் ஏதும் சொல்லாமல் போய் விட்டாராம்.

"சிங்களவன்கள் அவையின்ரை கடையை எரித்தும் இவைக்கு புத்தி வரவில்லை", என்று ஊர் கதைத்ததாம்.

அந்த சிங்களவனிட்டை உழைத்த காசில் தான்

இப்பிடி ஒரு கோயிலைக் கட்டியதும், எங்கள் குதிரை வாகனம் வீதிவலம் வருவதும் என்று அப்பா திருப்பிச் சொன்னவராம்.

அப்பா என்றுமே எதற்காகவும் உண்மையை விட்டுக் கொடுப்பவர் இல்லை... எனக்கு அறிவு வந்த தருணம் தொடக்கம் அவரின் செயற்பாடுகள் ஒவ்வொன்றிலும் அதனை நான் உணர்ந்து வந்திருக்கின்றேன்.

அதுதான் என்னிலும் நன்கு ஊறியிருக்கிறது எனப் பவித்திரா அடிக்கடி சொல்வாள்.

அடுத்த ஆண்டே ஜாமினி அழகிய ஒரு பெண் குழந்தையைப் பெற்று அம்மாவின் கைகளில் கொடுத்து விட்டு... பேறுகால ஜன்னி வந்து கண்களை மூடிக் கொண்டாள்.

களங்கம் ஒன்றைத் தன் வயிற்றில் சுமந்து கொண்டிருக்கின்றேன் எனக் கவலையுடன் ஒரு நாள் ஜாமினி காத்திகேசுவின் மனைவியுடன் கதைத்துக் கொண்டு இருக்கும் பொழுது மனம் வருந்திச் சொன்னாளாம், “என்னை அழிச்ச இந்தச் சுருட்டு மால் ஒருநாள் அழிந்து போகும்” என்று.

மனவேதனையில் சொன்ன அந்த அப்பாவியின் வார்த்தைகள் எவ்வளவு உண்மையானது என்பதனை அடுத்த இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் அனைவரும் உணர்ந்து கொண்டோம்.

எங்கள் குடும்பத்தில் விதி சதுரங்கம் விளையாடிய பொழுதுதான் அது உறுதியானது.

ஜாமினியின் பிள்ளைக்கு “பபிதா” என்று அம்மா பெயரிட்டார். தந்தையின் பெயர் என்னும் இடத்தில் அப்பா

தன் பெயரைப் பதிந்தாராம். அம்மா ஏதும் பேசவில்லையாம். ஊர் தான் குசுகுசுத்ததாம்.

குறிப்பாகப் பெரியம்மாவும்... சின்ன மாமாமியும்.

மீண்டும் ஒரு தடவை நான் அப்பாவையும் அம்மாவையும் நினைத்துப் பெருமைப்படும் தருணங்கள் அவை.

இனியொரு பிள்ளை பிறந்தால் எங்கே பபிதாவில் உள்ள பாசம் குறைந்து விடும் என்பதால் அப்பா அம்மா இன்னோர் பிள்ளையைப் பெற்றுக் கொள்ளவில்லையாம்.

இதே அப்பா அம்மாவுக்கு மீண்டும் மீண்டும் நான் மகனாய்ப் பிறக்க வேண்டும் என ஆண்டவனைப் பிரார்த்தித்த தருணங்கள் ஆயிரமாயிரம்.

பெரியப்பா, பெரியம்மா, சின்ன மாமி எவர்க்கும் அப்பா அம்மா அவ்வாறு நடந்து கொண்டது பெரிய திருப்தியில்லை.

"என் மகனை எந்த உரிமையில் நீங்கள் தூக்குகின்றீர்களோ... அதேயளவு அன்பையும் பாசத்தையும் பபிதா மீது காட்டினால் தான் நீங்கள் எங்கள் வீட்டு எல்லைக்குள்ளும் நாங்கள் உங்கள் வீட்டு எல்லைக்குள்ளும் உரிமையுடன் வந்து கொண்டாட முடியும்", என்று உறுதியாகச் சொல்லி விட்டார் அப்பா.

அவர்களும் விரும்பியோ விரும்பாமலோ பபிதாவை ஏற்றுக் கொண்டார்கள்.

இத்தனை அனர்த்தங்கள்... சுருட்டுத் தொழிலாளர்களின் எதிர்ப்பு... இவைகளைத் தாண்டி அப்பா மீண்டும் மலையகம் சென்று வியாபார முயற்சி செய்ய விரும்பிய பொழுதும் அப்பாவின் அளவுக்கதிகமான நேர்மைத் தன்மையை வியாபாரம் விரும்பவில்லைப் போலும்.

கடன்களே அதிகரித்தன.

சின்ன மாமிக்கும் திருமணம் கூடி வர... எங்களின் பெரிய வீட்டை அவாவுக்குச் சீதனமாகக் கொடுத்து விட்டு... அப்பாவுக்கு சீதனமாய்க் கொடுத்த அம்மாவின் வீட்டுக்கு என்னையும் பபிதாவையும் கூட்டிக் கொண்டு திரும்பி விட்டார் அப்பா.

அன்று முழுக்க அப்பம்மா அழுது கொண்டிருந்தது இப்போதும் ஞாபகம் இருக்கின்றது.

அப்பப்பாவின் நினைவுகளுடன் அப்பம்மா சின்ன மாமியுடன் பெரிய வீட்டிலேயே இருந்து கொண்டார்.

பெரிய வீடு வெறும் பெயர் அளவில் மட்டும் பெரிய வீடு இல்லை.

அது ஒரு பரம்பரையின் சின்னம்.

பல குடும்பங்களின் வாழ்வாதாரம்.

அப்பாவின் வியாபாரம் நொடிக்கத் தொடங்கிய காலங்களிலும் பின்னால் குடியிருந்த காத்திகேசு தேவைக்குத் தினக்கூலியாக எங்கள் பெரிய வீட்டுக்கு வேலைக்கு வந்து செல்வான். மற்றும்படி ஊருக்குள் மரம் தறிப்பு.. வேலி அடைப்பு... தோட்ட வேலை என தன் பிள்ளைகள் மனைவியுடன் சென்று விடுவான்.

மாதம் முழுவதும் அவனை எங்கள் வீட்டு வேலைக்கு அமர்த்திக் கொள்ள அப்பாவின் வியாபாரமும் போதுமாய் இருக்கவில்லை.

ஒருநாள் அவனுடைய மனைவி அப்பம்மாவிடம் சொல்லிக் கொண்டு இருந்தாளாம், "எத்தினை நாளைக்குத் தான் ஒழுக ஒழுக ஓலைக் கொட்டிலுக்கை கிடக்கிறது.

சின்னக் கல் வீடாய் கட்டுவம் என்று யோசிக்கிறம். அவரும் பிள்ளை களுமாய்க் கட்டுவினம்.. சாமான்களுக்கு மட்டும் தானே காசு" என்று.

அன்று முழுக்க அப்பம்மாவுக்கு மனசு சரியில்லை யாம் என்று அம்மா பின் நாளில் சொல்லும் பொழுது அப்போது எனக்கு விளங்கவில்லை. அதனை நான் விளங்கிய பொழுது வாழ்வு எனக்குப் பல அனுபவங்களைக் கற்றுத் தந்திருந்தது.

# 3

இன்று ஞாயிற்றுக் கிழமை. லீவு நாள்.

வீட்டில் மனைவி மகளுடன் பொழுதைக் கழிக்காமல் பாலன் ஆஸ்பத்திரிக்கு வந்திருந்தான்.

என்னைப் பார்க்க வந்திருந்தவர்கள் எல்லோரும் "ஐயா வாருங்கள் என்று ஒதுங்கிக் கொண்டார்கள்".

என்னைக் கவனிக்கும் நேர்ஸ்மாரும் அவனுக்கு வணக்கம் வைத்து விட்டே சென்றார்கள்.

எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது.

இந்த ஆஸ்பத்திரியின் ஓர் உயர் அதிகாரி... இன்றும் கோயில்களில் குருக்களாய் இருக்கும் ஒருவர் எனது பாலிய நண்பனாய் இருப்பதும்.... என்னைப் பார்க்க தனது ஓய்வு நாளில் தனது குடும்பத்துடன் பொழுது போக்காது ஆஸ்பத்திரிக்கு வந்திருப்பதும் எனக்குப் பெருமைதானே.

"எப்படி இருக்கிறது?"

பொய்யான புன்னகையால், "நல்லாய் இருக் கின்றேன்", என்று பதில் சொல்லுகின்றேன்.

என் நெற்றியை வருடியபடி, "எங்கள் முருகன் உனக்கு

எந்தத் தீங்கும் வர விடமாட்டார். நீ பயப்பிடவேண்டாம்", எனக் காதில் இரைச்சல் இல்லாதவாறு சொன்னான்.

"பயமா? எனக்கா??", என என்னை நான் கேட்டுக் கொள்கின்றேன்.

பக்கத்து மேசையில் வைத்திருக்கும் சூரன்போர்ப் படத்தை என் கை விரல்களைக் கொண்டு சுட்டிக் காட்டிப் புன்னகைக்கின்றேன்.

அவன் புரிந்து கொண்டான்.

சூரன் தெற்கு வீதிக்கு வந்ததும் தான் அதிகமான வீர விளையாட்டுகள் நடக்கும்.

சிலம்பாட்டம்... கம்பு சுற்றுதல்... மான் கொம்புச் சண்டை... மான் கொம்பு கொண்டு கம்பு சுற்றலைத் தடுத்தல்... நெருப்புச் சங்கிலி சுற்றுதல்... மின்வாள் வீச்சு... இரும்பு வளையச்சுருள் சுற்றுதல்...இத்தியாதி... இத்தி யாதி...

நான் அறிந்த காலம் முதல் இரும்பு வளையச்சுருள் சுற்றுவதும்... அதன் வேகத்தில் அது தார் நிலத்தில் படும் பொழுதெல்லாம் தீப்பொறி எழுவதும் "லையன் வேலுப் பிள்ளை" என்ற சண்டியன் சுற்றும் பொழுதுதான் நடை பெறும்.

எல்லோரும் சுற்றலாம். ஆனால் வேகமாய்ச் சுற்றினால்தான் நிலத்தில் சுருள் படும் பொழுது நிலத்தில் இருந்து தீப்பொறி எழும். அது அவன் சுற்றும் பொழுது எப்போதும் நடைபெறும்.

அவனுடைய உயரமும் தடித்த உடலும் தசைக் கட்டுகளும் பார்க்கப் பிரமிப்பாய் இருக்கும்.

அவனின் பெயருக்கேற்றவாறு அவனது மேற்கைகள்

இரண்டிலும் இரண்டு கர்ச்சிக்கும் சிங்கங்களின் படங்கள் பச்சை குத்தப்பட்டிருக்கும்.

அவன் அதனைச் சுற்றும் பொழுது அவனுடைய கம்பீரம் அனைவரையும் கவரும்.

எண்ணை தேய்த்த கருமையான அவனுடல் மின்சார வெளிச்சத்தில் ஒளிரும்.

சின்ன வயதில் இருந்து அதனைப் பார்த்துப் பார்த்து... அடுத்தடுத்த நாட்களில் மாடு கட்டும் கயிற்றை முற்றத்தில் நின்று சுழற்றிச் சுழற்றி.... பின்பு இணுவிலில் வசித்த ஒரு பயில்வானிடம் வீட்டுக்குத் தெரியாமல் இரும்பு வளையச்சுருள் சுற்றப் பழகி... எனது பதினெட்டாவது வயதில் முதல் தடவையாக கோயில் வீதியில் நான் இரும்பு வளையச்சுருள் சுற்றிய பொழுது அனைவரின் கை தட்டல் களும் வானைப் பிளந்தன.

அன்றும் தீப்பொறிகள் நிலத்தில் இருந்து எழுந்தது.

லையன் வேலுப்பிள்ளைக்கு என்மீது சின்னப் பொறாமை வரவும் இது காரணமாய் அமைந்தது என்பதை பின்பொரு சம்பவத்தில் தான் அறிந்தேன்.

தெற்கு வீதியில் உள்ள தார் நிலத்தில் மட்டு மில்லாது... சுவாமியை இறக்கும் வடக்கு வீதியில் உள்ள தேர் முட்டி மேடையில் நின்று இரும்பு வளையச்சுருள் சுற்றியதும்... அதே நேரத்தில் பின் வீதியில் வான வேடிக்கை யும் எனக்கு முன்னால் தீப்பந்தச் சுற்றல்களும் நடந்து கொண்டிருந்ததும்... இப்பொழுதும் என் கண்கள் முன்னால் ஓடிக்கொண்டு இருக்கின்றன.

இளங்கன்று! பயமறியாத வயது!!

ஊரிலேயே பெரிய பணக்கார வீட்டுப் பிள்ளை என்ற

திமிர்!!!

அன்று இரவு சுவாமி உள்ளே போன பின்பு நிலவு வெளிச்சத்தில் நாவல் மரத்தடியில் இருந்து பாலன் பல மணிநேரமாக என்னைப் பாராட்டிக் கதைத்துக் கொண்டு இருந்தான்.

என்னைப் பார்த்துக் கொண்டு, தான் சூரனின் கழுத்துக்குக் கிட்ட கொண்டு போக வேண்டிய வேலை கண்ணுக்குக் கிட்டக் கொண்டு போய் விட்டதாக சிரித்துச் சிரித்துச் சொல்லிக் கொண்டிருந்தான்.

அன்று வீட்டுக்கு வர வீட்டில் நல்ல அமர்க்களம் நடந்தது - இதெல்லாம் எனக்குத் தேவையா என்று.

ரியூசனுக்கு போறன் போறன் எண்டு இதுவா நடக்குது என.

"பாலனைப் பார்... எவ்வளவு கெட்டிக்காரனாய்ப் படித்துக் கொண்டு கோயில் வேலையும் பார்த்துக் கொண்டு எவ்வளவு மரியாதையான பிள்ளையாக இருக்கிறான்.

நீ என்னவெண்டால் ரியூசனுக்கும் ஒழுங்காயப் போகாமல் சண்டியனாய் வர வழிதேடுறாய்"

மனதுக்குள் சிரித்தேன் - என் பாலன் என்னைப் புரிந்து கொண்டு பாராட்டியதையும் வீட்டில் எனக்குக் கிடைத்த மரியாதையையும் நினைத்து.

ஆனால் அப்பா சத்தம் போட்டு முடிந்து சாப்பிடப் போக, அப்பம்மா தன் கண்களால் தன்னருகே வரும்படி சைகை காட்டினா.

போய் நின்றேன்.

"நீ அப்பப்பாவைப் போல தைரியசாலி எனக் காட்டி

விட்டாய்" என்று சொல்லியவாறு தான் அவ்வளவு நாளும் அணிந்திருந்த அப்பப்பாவின் புலிப்பல்லுப் போட்ட சங்கிலியை என் கழுத்தில் போட்டுவிட்டுத் தன் கண்கள் கலங்க என்னைக் கட்டிக் கொஞ்சியது இப்போதும் ஞாபகத்தில் இருக்கிறது.

அப்பாக்கும் அம்மாக்கும் அது மிக்க மகிழ்ச்சி என்றாலும் அதனை வெளிக்காட்டாதவாறு, "நீங்கள் தான் உசுப்பேத்தி உசுப்பேத்தி அவனைப் பழுதாக்கி வைத்திருக்கிறியள்", என கடிந்து கொண்டார்.

அப்பம்மாவும், "உன்னை விட அவன் நல்லாய் வருவான்" என தலையைக் குனிந்தபடி மெதுவாகச் சொல்லிக் கொண்டா.

வீட்டாரின் எதிர்பார்ப்பு அத்தனையும் ஒரு பல்கலைக்கழகப் பட்டம்... ஒரு பெரிய பணக்காரக் குடும்பத்தில் கல்யாணம்... தொடர்ந்தும் பண்டாரவளை சண்முகத்தார் வீடும்... அவர்களின் திருவிழாவும்... என்ற பெருமையைக் காப்பாற்றுவதாய்தான் இருந்தது என்பதனை நான் நன்கு அறிவேன்.

நன்கு படிக்கத்தான் முயற்சித்தேன்.

ஆனால் பத்தாம் வகுப்புவரை பாடமாக்கிப் பாடமாக்கி அதனை ஒரு அட்சரமும் பிசகாமல் ஒப்புவித்து பாஸாகிக் கொண்டு வந்த ரெக்னிக்கை உயர்தரத்தில் பயன்படுத்த முடியாது போனதை உயர்தரப் பரீட்சை எழுதிக் கொண்டிருக்கும் பொழுதே உணர்ந்து கொண்டேன்.

பாலன் மிகச் சிறந்த சித்திகளுடன் பல்கலைக்கழகம் போய் விட்டான்.

அதுவும் எனக்குப் பெருமைதான்.

இன்று அவனே எனக்கு வைத்தியம் பார்க்கின்றான்.

அவன் பல்கலைக் கழகம் போன பிறகு எனக்குக் கோயில் பக்கம் போவதே பெரிதாகப் பிடிப்பதில்லை.

ஆனாலும் பன்னிரண்டு நாள் திருவிழாவுக்கும் கட்டாயம் போய் விடுவேன்.

பாலன் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்த பொழுது அவன் இல்லாத கோயில் திருவிழாக்கள்.... எதிர் காலம் இதுதான் என்ற முடிவில்லாமல் ஓடிக்கொண்டிருந்த அந்தக் காலம் மிகவும் வேதனையானதொரு காலம்.

அதனால் ஆமை போல என்னையே நான் என்னுள் ஒடுக்கிக் கொண்டு வாழ்ந்தேன் என்றே சொல்ல வேண்டும்.

அடுத்தடுத்த ஆண்டுகளிலும் இரும்பு வளையச்சுருள் சுற்றினேன் ஆயினும் முதல் ஆண்டில் நான் சுற்றிய வீச்சு அடுத்தடுத்த ஆண்டுகளில் இருக்கவில்லை என நான் நன்கு அறிவேன்.

உடலின் பலத்தை மனதின் பலம் எவ்வாறு கட்டி யாள்கிறது என உணர்ந்த ஆண்டுகள் அவை.

கோயிலில் சந்திக்காவிட்டாலும் சந்தைக்குச் செல்லும் சமயங்களிலும் சாம்பசிவக்குருக்கள் மட்டும் என்னை இடைசுகம் கேட்டுக் கொள்வார். பாலனின் புதினங்களையும் சொல்வார்.

என் களையிழந்த நடவடிக்கைகளை நன்கு கவனித் தாரோ இல்லையோ ஒரு நாள் பின்னேரம் கோயில் தீர்த்தக் கேணியடிக்கு என்னை வரச் சொன்னார்.

பாலனுடன் இருந்து கதைக்கும் அதே கேணிக்கட்டில் அமர்ந்திருந்த அவருடைய வாயிலிருந்து உதிர்ந்த வார்த்தை

கள் என்னைப் பிரமிக்க வைத்தன.

"பாலனையும் உன்னையும் எப்பவுமே என்ரை இரண்டு பிள்ளைகளாய்த் தான் பார்க்கிறனான். உண்மை யைச் சொன்னால் பல்கலைக்கழகம் போனதாலை அவன் உன்னை விடக் கெட்டிக்காரன் இல்லை. அவன் உன்னைப் போலை பிறந்திருக்கக் கூடாதோ என எத்தனையோ நாள் யோசித்திருக்கிறன்... உன்ரை அப்பப்பாவின்டை ஆளுமை முழுக்க உன்னிடம் இருக்கு. அவரின் கம்பீரம்... துணிவு... நேர்மை... இந்தக் கோயிலை இப்பிடி எழுப்பியதே அவர் தான்... அவரின்ரை ஆசீர்வாதம் எப்பவும் உனக்கு இருக்கும்... வராத மேற்கல்வியைப் பற்றிக் கவலைப்படாமல் இதுவரை கிடைத்த கல்வியை வைச்சு என்ன செய்யலாம் என்று யோசி. "சர்வே ஜனகா சுகினோ பவந்து... லோகா சமஸ்தா சுகினோ பவந்து" என்று பூசையை முடிக்கிற பொழுது நான் உன் அப்பப்பாவையும் பாலனையும் உன்னை யும் நினைக்காமல் இருக்கிறதில்லை" கண்கள் கலங்க தான் கொண்டு வந்திருந்த பாரதியார் பாடல்கள் புத்தகத்தை எனக்குக் கொடுத்தார்.

அதில் மூலை மடிக்கப்பட்டிருந்த பக்கத்தை வாசித்ததும் என் கண்கள் கலங்கியன.

இரு கைகளாலும் கும்பிட்டு விட்டு அதே கலங்கிய கண்களுடன் விடை பெற்றேன்.

"தேடிச் சோறுநிதந் தின்று பல சின்னஞ் சிறுகதைகள் பேசி" என்ற பாரதி பாடலின் பக்கம்.

"நான் வீழ்வேன் என்று நினைத்தாயா" என்பது

"நீ வீழ்வாய் என்று நினைத்தாயா" என்று எனக்கு அறிவுரை சொல்லுவது போலப்பட்டது.

அதனைப் பாரதி பாடியது போல எனக்குத் தெரியவில்லை.

என் அப்பப்பா எனக்காக பாடியது போல் இருந்தது.

எங்கள் சாம்பசிவக் குருக்கள் எனக்காக பாடியது போல இருந்தது.

என் பாலன் எனக்காக பாடியது போல இருந்தது.

# 4

எங்கள் கற்பனைகளுக்கும் விருப்பங்களுக்கும் கனவுகளுக்கும் ஏற்ப வாழ்க்கை அமைந்து விடுவதில்லையே. நாம்தான் அதனை எங்கள் வழியில் வழிநடத்திக் கொண்டு இருக்கின்றோம் என நினைத்துக் கொள்வதுண்டு.

ஆனால் அதுதான் எங்களைத் தன் வழியில் நடத்திக் கொண்டு இருக்கின்றது என இந்த 58 வருட வாழ்க்கை எனக்கு இப்பொழுது உணர்த்தி இருக்கின்றது.

அல்லது இப்போதும் எங்கள் குடும்பப் பெருமை களைப் பேசியபடியே எங்கள் கோயில் திருவிழாக் களுடனும்... அன்னதானங்களுடனும்... காத்திகேசன் குடும்பங்கள் போல இன்னும் பல அடிமைக் குடிகளை வைத்துக் கொண்டும்... குதிரை வாகனத்தை எங்கள் பரம்பரையின் சின்னமாக எங்கள் பிள்ளைகளுக்கும்... அண்மையில் பிறந்த என் பேரனுக்கும் காட்டிக் கொண்டு மல்லவா இருந்திருக்க வேண்டும்.

ஆனால் மொத்தமாக என்னை வேருடன் கிளப்பி மொழி... கலாசாரம்.. பண்பாடு அத்தனையையும்

நூற்றியெண்பது பாகையூடு திருப்பி வைத்த ஒரு சமுதாயத்தின் கைகளில் தாரை வார்த்துக் கொடுத்து... இன்று குணப்படுத்த முடியாத நோயாளியாக இந்தக் கட்டிலில்...

அப்பப்பாவின் மரணத்தின் பின்பு, கிட்டத்தட்ட கீழே விழுந்த உத்தரியத்தை அப்பா தூக்கித் தோளில் போட்டுக் கொண்டாலும் 83 நாட்டுக் கலவரத்தின் பின்பு குளவிக் கூட்டுக்குக் கல்லெறிந்தது போல அமைந்து விட்டன.

கலவரத்திற்கு முதலே பெரியப்பா கொழும்பிலேயே ஒரு வீட்டை வாங்கிக் கொண்டு அங்கேயே தங்கி விட்டார்.

காலைப்பதிப்பாக வரும் ஆங்கிலப் பத்திரிகைச் செய்திகளிலும்... மாலைவேளைகளில் லயன்ஸ் கிளப் கூட்டங்களிலும் அவர் வாழ்க்கை போய்க் கொண்டு இருந்தது.

அவருடைய இரண்டு மகன்மாரும் பெரியப்பா பெரியம்மாவுடன் கொக்குவிலில் இருந்த பெரியம்மாவின் வீட்டுக்கு நல்லூர்த் திருவிழாக் காலங்களுக்கு வரும் பொழுது எங்கள் வீட்டிற்கும் வந்து விட்டுப் போவார்கள். அவர்களுக்கு எங்களின் ஏழாம் திருவிழாவான குதிரை வாகனத் திருவிழாவிற்கு வருவதைவிட நல்லூர்த் தேர்த்திருவிழாக்கு வருவதில்தான் ஏதோ ஒரு கெளரவம் ஒட்டிக் கொண்டிருந்தது போலும். பணக்காரக் கந்தன் என்பது காரணமாக இருக்கலாமோ என்னவோ?

"என்ன படிக்கின்றீர்கள்".... "நல்லாய் படியுங்கள்"... போன்ற கேள்வி பதில்களுடனும் என்னுடன் அதிகமாக ஒட்டியும்..... பபிதாவுடன் அதிகம் ஒட்டாமலும் பழகிக் கொண்டு இருந்தார்கள்.

பபிதாவை அப்பா தத்தெடுத்ததில் பெரியப்பாவுக்கும் பெரியம்மாவிற்கும் எப்போதும் உடன்பாடு இருக்கவில்லை.

சின்ன மாமிக்கு அப்பப்பாவின் பெரிய வீட்டைச் சீதனமாகக் கொடுத்திருந்தாலும், அப்பம்மா தொடர்ந்து அங்கேயே வாழ்ந்திருந்ததால் அவாவிடம் அடிக்கடி போய் வந்து கொண்டு இருந்தோம். பெரியப்பா பெரியம்மா எங்கள் வீட்டை வந்து போகாவிட்டாலும் அப்பம்மாவிடம் பெரிய வீட்டுக்கு வருவார்கள். நாங்கள் அவர்களைச் சந்திப்பது அதிகமாக அங்குதான்.

திருவிழாக்காலங்களில் அங்கேயே அனைவரும் கூடுவோம்.

பெரியப்பா கொழும்பில் இருந்து வருவது மிகக் குறைவு. ஆனால் அவரின் காசோலை அப்பாவின் பெயருக்கு வரும்.

எங்கள் ஏழாம் திருவிழாவும் அப்பப்பா இருந்த காலத்தில் இருந்தது போல அமளி துமளியுடன் இருக்கா விட்டாலும் சாதாரணமாய் நடந்து கொண்டிருந்தது.

உற்சவக் காலத்திருவிழாவிற்கான பட்டோலையில் பண்டாரவளை சண்முகத்தார் வீட்டுத் திருவிழா என்றுதான் இருக்கும்.

வீதிக்கு இரண்டு மூன்று கூட்ட மேளம் என்ற நிலை மாறி ஏதோ கோயில் மேளத்துடன் சுவாமி வீதி சுற்றி வரும். இரவிரவாய் வில்லுப்பாட்டு... சங்கீதக் கச்சேரி... தேவன் குழுவினரின் பாட்டுக் கச்சேரி என்றிருந்தது, இப்போது ஏதோ ஒரு சிறிய கதாப்பிரசங்கத்துடன் இரவு பூசை முடிந்து விடும்.

83 கலவரத்தின் பொழுது பெரியப்பாவின் கொழும்பு வீடு எரிந்ததும்... அவர் பெரியம்மாவின் சீதன வீட்டுக்குக் கொக்குவிலுக்கு வந்ததும்... ஹட்டனில் படிப்பித்துக் கொண்டிருந்த சின்ன மாமியும் சின்ன மாமாவும் அவர்களின் மூன்று பிள்ளைகளும் சீதனமாய்க் கொடுத்த அப்பப்பா அப்பம்மாவின் பெரிய வீட்டுக்கு இடம் பெயர்ந்ததும்... அதுவரை அந்த வீட்டில் இருந்த நாங்கள் அம்மாவுக்கு சீதனமாய்க் கொடுத்திருந்த அம்மம்மா அம்மப்பா வாழந்திருந்த வீட்டுக்கு வந்ததும் அப்போது தான்.

பெரியப்பாவின் மகன்மார் இருவரும் இனி கொழும்பு வாழ்க்கை சரி வராது வெளிநாடுதான் போக வேண்டும் என்ற நினைப்பில் இருந்தார்கள்.

பாலனும் கொழும்புப் பல்கலைக்கழகம் மூடப் பட்டதால் அது மீண்டும் திறக்கும் வரை யாழ்ப்பாணமே கதி என வந்து விட்டான்.

ரியூசன் வகுப்புகள் இல்லாத வேளைகளில் காதலியைத் தேடி ஓடும் காதலன் போல பாலனைத் தேடிப் போய் கோயில் தீர்த்தக் குளத்தடியில் இருந்து நேரம் போவது தெரியாமல் பேசிக் கொண்டு இருப்பேன்.

பாலனின் நிலைப்பாடும் இனி இலங்கையில் இருக்க முடியாது என்பதாய் இருந்தது.

சாம்பசிவக்குருக்களும் பாலனின் நியாயமான எண்ணத்தை ஆமோதித்தார். ஆனால் பாலனுக்கு அடுத்த ஒன்றரை வருடத்தில் சிறப்புத் தேர்வை எழுத வேண்டி யிருந்தது.

பின்வீட்டில் இருந்த காத்திகேசனின் மூத்தவன் சவுதிக்குப் போய் பணம் பணமாய் அனுப்பிக் கொண்டிருக்க

அவன் தான் கட்டியிருந்த சிறிய மண்வீட்டை இடித்து விட்டுப் பெரிய கல்வீட்டைக் கட்டிய பொழுது வெளி நாட்டு மோகம் சின்ன மாமி குடும்பத்தையும் தொற்றத் தொடங்கி விட்டது என்று அப்பம்மா அப்பாவிடம் சொல்லிக் கவலைப்பட்டது எனக்கு நன்கு தெரியும்.

ஆனால் அப்பப்பாவின் மரணத்துடன் ஆரம்பித்த அப்பம்மாவின் கவலைகள் மெதுமெதுவாக அவரைத் தின்று கொண்டே வந்ததாலோ என்னவோ 83 கலவரத்தில் பெரியப்பாவின் வீடு எரிந்த செய்தியைக் கேட்டது தொடக்கம் அவர் மிகவும் மௌனமாகி ஒரு நாள் காலையில் சின்ன மாமி தேநீர் கொடுக்க எழுப்பிய பொழுது அவர் எழுந்திருக்கவேயில்லை.

எங்கள் பரம்பரையின் ஒரு தலைமுறையின் கடைசி ஆத்மா கண்களை மூடிய நாள் அது.

எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கின்றது.

அப்பம்மாவின் இறுதிச் சடங்கை நடத்த அப்பா விடம் அதிக பணம் இருக்கவில்லை.

பெரியப்பாவும் நொடித்துப் போன நிலையில் அப்பா அவரிடம் போய்க் காசு கேட்டுக் கொண்டு நிற்கவில்லை. சகோதரியிடம் காசு கேட்பது கௌரவக் குறைச்சல் என்று அப்பா குமைந்து கொண்டு இருந்தது எனக்கு நன்றாய் விளங்கியது.

நேரே சாம்பசிவக் குருக்களிடம் நான் போய்க் கடன் கேட்டேன்.

அவர் அடுத்து எந்த வார்த்தையும் சொல்லவில்லை.

ஆயிரம் ரூபாய்களை எடுத்துக் கொடுத்தார்.

அவர் அன்று வேதனையில் சொன்ன வார்த்தைகள்

என் நெஞ்சில் இன்றும் எனக்குள் மறையாது இருக்கின்றது.

"கெட்டுப் போயிருந்து நல்லாய் வரலாம். ஆனால் நல்லாய் இருந்த ஒரு குடும்பம் கெட்டுப் போகக் கூடாது"

அந்த வார்த்தைகளை என் சிரசின் மேல் வாங்கிக் கொண்டேன்.

என் நிலையில் இருந்து இன்று வரை நான் தவறி விடாமல் இருப்பதற்கு "அந்த வார்த்தையே" என்னைக் காப்பாற்றுகின்றது.

# 5

அப்பம்மாவின் அந்தியேட்டி முடிந்து ஒன்றரை இரண்டு மாதத்தில் பபிதா வயதுக்கு வந்தாள்.

அவளுக்குச் சிறப்பாகப் பூப்புனித நீராட்டு விழா செய்ய அம்மாவுக்கு விருப்பமாய் இருந்தது.

எனக்கும் அப்பாவுக்கும் அவ்வாறே.

ஆனால் சிங்களப் பெண்ணைத் தத்தெடுத்தது என்பதில் என்றுமே உடன்பாடு இல்லாத பெரியப்பா குடும்பத்தினர் சரி... சின்ன மாமி குடும்பத்தினர் சரி... அப்பம்மாவின் ஆட்டத்திவசம் முடிய முதல் எந்த நல்ல காரியமும் செய்யக் கூடாது என்று பின்னடித்தார்கள்.

"இருக்கும் வரை அம்மாவை நல்லாய்ப் பார்த்து அவாவை நல்ல படியாக வழி அனுப்பி வைத்தாச்சு... இது வாழுற பிள்ளை... அதையேன் செய்யக் கூடாது" என்று அப்பா தன் பக்கத்து நியாயத்தைக் கதைத்துக் கொண்டு நின்றார்.

பெரியப்பா எதுவும் நியாயம் சொல்லாமல், இரு பகுதி சொல்வதுக்கும் "ஆமாம்" போட்டுக் கொண்டு

நின்றாரே தவிர "இது சரி" அல்லது "இது பிழை" என எதுவும் சொல்லவில்லை.

நானோ இத்தனை வருடங்களாகக் கட்டிக் காத்து வந்த "பண்டாரவளை சண்முகத்தார்" குடும்பத்துள் இவ்வாறு ஒரு விரிசல் வந்திடக் கூடாது என்ற பயத்தில், அச்சமயம் விடுமுறையில் வந்திருந்த பாலனுடன் இது பற்றிக் கதைத்துக் கொண்டு இருந்தேன்.

நான் கதைத்துக் கொண்டு இருந்தேன் என்பதைவிட அவனுடைய அபிப்பிராயத்தை அறிய பெரிதும் விரும் பினேன் எனச்சொல்லலாம்.

"உங்கள் அப்பம்மாவின் மரணம் நல்ல மரணம்... வாழ்வாங்கு வாழ்ந்து நல்ல விதமாய்ப் போய்ச் சேர்ந்த சீவன் அது. இயற்கையாக நடந்த அந்த மரணத்தைக் காரணம் காட்டி அதே இயற்கையாக நடந்த பபிதாவின் நிகழ்வைத் தடுக்கிறது எந்த விதத்திலும் நியாயம் இல்லைத்தானே"

பாலன் வீட்டு முற்றத்தில் கிடந்த தென்னங்குற்றியில் நாமிருவமும் கதைத்துக் கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண்டே வந்த சாம்பசிவக்குருக்கள் சொன்னதுதான் இன்னும் நியாயமாகப் பட்டது.

"இந்த வைபவத்தை நீங்கள் செய்யாமல் இருந்தால் தான் உங்கள் வீடு மரணம் நிகழ்ந்த வீடு போல இருந்து கொண்டே இருக்கும்"

என் இரண்டு கைகளும் மனதினுள் அவரைக் கூப்பி வணங்கின.

விதை செடியாகி... செடி மரமாகி... மரம் பூத்துக் குலுங்கி... காய் கனிகளைக் கொடுத்து... பின்னர் அந்த மரமே மண்ணுக்கு உரமாகப் போவது போலவே

இயற்கையுடன் இணைந்து மனித வாழ்வு இருக்கும் பொழுது அப்பம்மாவின் மரணத்தையும் பபிதாவின் பூப்பெய்திய சடங்கையும் முடிச்சுப் போட்டு பார்ப்பதில் எந்த நியாயமும் இல்லை என்ற பாலனினம் சாம்பசிவக்குருக்களினதும் கோட்பாடுகள் என்னை மிகவும் கவர்ந்திருந்தன.

அப்பா அம்மாவிடம் சென்று சாம்பசிவக் குருக்கள் சொன்னவற்றை அச்சொட்டும் மாறாமல் சொன்னேன்.

பபிதாவின் கண்கள் தழும்பின.

ஓடி வந்து "அண்ணா" என்று என்னைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

குடும்பத்தின் மூத்த தலைச்சான் ஆண்பிள்ளை நான் சொன்ன பிறகு வேறென்ன?

தடல்புடலாக ஆயத்தங்கள் நடந்தன.

அப்பா போய் அழைத்த பொழுது சின்ன மாமி அப்பம்மாவின் ஆட்டத்துவசம் நடக்க முதல் இது நடப்பதால் தாங்கள் வரவே மாட்டம் என்று நேருக்கு நேர் சொல்லி விட்டார்.

அப்பா ஏதும் பேசவில்லை.

ஆனால் அவர்கள்... "அம்மம்மா இறந்திருந்தால் அம்மா இதை முன்னின்று செய்வாவோ", என்று அம்மாவின் மீது குற்றத்தை திருப்பிய பொழுதுதான் அப்பா மிகவும் கோபப்பட்டார்.

"இன்னொரு பிள்ளை எங்களுக்குப் பிறந்தால் பபிதாவிலை இருக்கிற பாசம் எங்கை குறைந்திடுமோ என்று தம்பியனுக்குப் பிறகு எந்தப் பிள்ளையையும் பெறாமல் இருக்கிற அவளைத் தப்பாகச் சொன்னால் ஐயா வாழ்ந்த இந்த வீடும் நிலமும் கூட உன்னை மன்னிக்காது"

அப்பா கோபத்தில் தான் அந்த வார்த்தைகளை உதிர்த்தார் என்றாலும் அதனை அப்பா சொல்லியிருக்கக் கூடாது என்று இன்று இந்த மரணப்படுக்கையில் கிடக்கும் இந்த விநாடி வரை எண்ணிக் கொண்டே இருக்கின்றேன்.

நல்லவர்கள் மனம் நொந்து சொல்லும் வார்த்தை களுக்கு எப்போதும் ஒரு வலிமையுண்டு என்பதை அந்தச் சம்பவம் மீண்டும் மீண்டும் என் வாழ்நாளில் எனக்கு உணர்த்திக் கொண்டே இருந்தது.

அப்பாவும் அம்மாவும் நானும் விரும்பியபடி பபிதாவின் சாமத்தியவீடு மிகவும் சிறப்பாக நடந்தது.

அம்மா பகுதியாட்கள் எல்லோரும் இரண்டு மூன்று நாட்கள் எங்கள் வீட்டிலேயே தங்கி நின்று பந்தல் போடுவது... வாழை கட்டுவது... பலகாரஞ் சுடுவது.... இர விரவாய்ச் சமைப்பது என்று முழுமூச்சாய் உதவினார்கள்.

பந்தலுக்குச் சாதாராண வெள்ளை கட்டாமால் கட்டம் போட்ட வெள்ளை கட்டி சிவப்பு, பச்சை, நீலம், மஞ்சள் நிறங்களான பட்டுத்துணிகலான கரைகள் வைத்து மிக அழகாக அப்பா செய்வித்திருந்தார். அதனைச் செய்தவர்களுக்கு மூன்று நாட்கள் எடுத்துக் கொண்டது இப்போதும் ஞாபகம் இருக்கின்றது.

அப்பப்பாவழி காரைநகர் சொந்தக்காரர் எல்லாம் அன்று காலையே வந்து தாங்கள் செய்ய வேண்டிய முறைகளை எந்தக் குறையும் இல்லாமல் செய்தார்கள். அவர்களும் அந்தப் பந்தல் அமைப்பைப் பார்த்து மிகவும் பாராட்டினார்கள்.

அப்பப்பா தங்களுக்கு மலையகத்தைக் காட்டி விட்டதால் தான் தாங்கள் அனைவரும் இன்று நல்லாய்

இருக்கின்றார்கள் என்று வழமைபோல அவரின் புகழ்பாடிக் கொண்டே இருந்தார்கள்.

சாம்பசிவக்குருக்கள் தான் பிரதம குருக்களாய் வந்து நின்று எல்லாத்தையும் சிறப்பாகச் செய்தவர்.

பாலனும் லீவில் நின்றபடியால் குருக்களுக்கு அவனும் உதவியாக வந்திருந்தான்.

பல்கலைக்கழகத்தில் அடுத்த ஆண்டு தனது டாக்டர் படிப்பை முடிக்க இருக்கும் நிலையில் அவன் அங்கு வந்ததை விட வேறு எதுவும் எங்களைக் கௌரவப்படுத்தியிருக்க முடியாது.

எல்லாச் சடங்கும் முடிந்து நாங்கள் நாலு பேரும் சாம்பசிவக் குருக்களின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்ற பொழுது அவர் அப்பாவைக் கட்டியணைத்து மெதுவாகச் சொன்னார், "நீங்கள் ஒரு கோயில் கட்டி கும்பாபிசேகம் செய்த புண்ணியத்தை இன்று பெற்றிருக்கின்றீர்கள்", என்று.

உங்கள் குடும்பத்தில் இரண்டு அம்மன்கள் என அம்மாவையும் பபிதாவையும் ஆசீர்வதித்தார்.

இறுதியாகத் தட்சணையாக 101 ரூபாவைத் தட்டத்தில் வைத்து அப்பாவும் அம்மாவும் கொடுத்த பொழுது அதில் இருந்த ஒற்றை ரூபாவை மட்டும் எடுத்துக் கொண்டு 100 ரூபா தாளைப் பபிதாவின் கையில் கொடுத்து அவ்ளை ஆசீர்வதித்து விட்டுப் போனார்.

அப்பா சங்கடத்தில் நெளிந்த பொழுது "இது இந்தச் சின்ன பண்டாரவளை சண்முகத்தாருக்கு நாங்கள் செய்ய வேண்டிய கடமை" என என்னைக் காட்டிச் சிரித்து விட்டுச் சென்றார்.

எனக்கு எதுவும் சொல்லத் தோன்றவில்லை.

இது எல்லோரும் சொல்லும் ஒன்றுதான்.

எனக்கு அப்பப்பாவைத் தெரியாவிட்டாலும் அவடைய பல குணாதிசயங்கள் எனக்குள் இருப்பது ஏதோ உண்மை போலும். எனது சின்ன மாமிக்குப் பகிடியாக மட்டும் அடிக்கடி சொல்வேன் “நான் யாருடைய காதையும் அறுக்க மாட்டேன்....” என்று.

அதற்கும் அதை அம்மா எனக்கு சொல்லித் தந்து போட்டா எனக் குறை வேறு.

உண்மையில் அப்பம்மாதான் அந்தக் காதறுத்த கதையை அப்பப்பாவின் வீரப்பிரதாபம் எனச் சொல்லித் தந்தது.

நாங்கள் நினைத்தபடி சின்ன மாமி சாமத்திய வீட்டிற்கு வரவில்லை.

அதனால் அப்பா மிகவும் கோபமாயிருந்தார்.

“இவள் ஹட்டனாலை வரும்வரை அம்மாவை அத்தனை வருசமும் வைத்துப் பார்த்தது நான். இவளவை ஒரு கண்டறியாத துக்கம் கொண்டாடுகிறாளவை” என்று அப்பா தனக்குள் ஏசிக் கொண்டிருந்தார்.

பின்னேரம் போல் பெரியப்பா, “காலையில் கச்சேரிக்கு எனது பென்சன் அலுவல்களாகப் போனதால் பிந்திவிட்டது”, என்ற ஒரு பொய்யோடு பெரியம்மாவுடன் வந்திருந்தார். அண்ணாமார் வரவில்லை.

அம்மா பலகாரங்கள் தேநீர் கொடுத்து உபசரித்தார்.

ஆனால் அங்கு ஒரு மௌனயுத்தம் நிலவியது.

புறப்படுவதற்கு எழுந்த பொழுது பெரியப்பா தனது பொக்கற்றில் இருந்து ஒரு என்வலப்பை எடுத்து பபிதாவிடம்

கொடுக்கப் போனார்.

"அண்ணை நாங்கள் பணச்சடங்கு செய்யேல்லை... செய்தது என் பிள்ளைக்கு நல்ல விடயம்... நீ உன்ரை தங்கச்சிக்குப் பயந்து வராமல் விட்டுட்டு இப்ப வந்து அவமானப்படுத்துறாய்...."

சொல்லி முடிக்க முதல் பொல பொலவென்று அழத் தொடங்கி விட்டார் அப்பா.

"ஐயா இருக்கேக்கை எண்டாலுஞ் சரி... போன பிறகு எண்டாலுஞ் சரி... நாங்கள் மூன்று பேரும் ஒருத்தருக்கு ஒருத்தர் இருக்கிறம் என்ற திமிரிலை தான் நான் இருந்தனான். ஆனால் இண்டைக்கு அப்பிடி இல்லை நீங்கள் இரண்டு பேரும் மட்டுந் தான் ஒண்டு.... நான் படிக்காதவன், பெரிய காசுக்காரன் இல்லை எண்டு என்னைப் பிறத்தி பண்ணிக் காட்டிப் போட்டியள்." அப்பா அழுது அழுது கதைக்க பெரியப்பா கல்லுப் போலை நின்றார்.

"நீங்கள் தான் வராட்டியும் பறவாயில்லை... காத்தியேசனை இரண்டு மூண்டு நாளைக்கு உதவிக்கு வந்து நிக்கச் சொல்லி தம்பியனிட்டை சொல்லி அனுப்பினனான். அவன் வருவான் எண்டு பறுவதமும் சொல்லி அனுப்பின வள். பிறகு அவனும் வரேல்லை... இவள்தான் அவனையும் தடுத்துப் போட்டாள்... அவனுக்கு சவுதிக்காசு வாற தடிப்பு..."

அன்று அப்பாவை என்னாலும் அம்மாவாலும் தடுக்க முடியவில்லை.

கடைசியாக அம்மா கண்சாடையால் பெரியம்மா விடம் பெரியப்பாவைக் கூட்டிக் கொண்டு போகச் சொல்லிச் சொல்ல... பெரியப்பா எங்கள் வளவைத்

தாண்டிய பிறகுதான் அப்பாவின் ஆவேசம் குறைந்தது.

அவர்கள் வராமலே இருந்திருக்கலாம் எனத் தேன்றியது.

"உடும்பு போலை பாம்புக்குத் தலையையும் மீனுக்கு வாலையும் காட்டிக் கொண்டு இருந்தால் கடைசியில் பாம்புடனும் நட்பாக இருக்க முடியாது. மீனுடனும் நட்பாக இருக்க முடியாது. ஏதோ ஒன்றிற்கு உண்மையாய் இரு" என்பது தான் அப்பா அடிக்கடி எனக்கும் பபிதாக்கும் சொல்வது.

அதை இன்றுவரை நான் காப்பாற்றிக் கொண்டிருக் கின்றேன் என்பது தான் அப்பா அம்மாவின் ஆத்மாக்களுக்கு நான் செய்து வரும் கைமாறு.

நான் பாம்பாகவே தலைகாட்டி, பாம்பாகவே சீறி, பாம்பாகவே கொத்த வேண்டிய இடத்தில் கொத்தி வாழ்ந்தேன் என்றால்.... பபிதா பதுமையாக எவரையும் புண்படுத்தாது எதற்கும் மசிந்து எவர் எது செய்தாலும் அதனைத் தாங்கி வாழப் பழகியிருந்தாள்.

அதனையும் தாண்டி அவள் சீறுவது என்றால் எவராவது என்னைக் காயப்படுத்த முயலும் சந்தர்ப்பங்களில் தான்.

எங்கள் குடும்பத்தின் சரஸ்வதியும் அவள் தான்.

இலட்சுமியும் அவள் தான்.

வீரமாகாளியும் அவள்தான்.

அவளுக்குள் இருந்த அந்த ஆவேசக் குணம் தான் அவளை நாங்கள் இழக்கவும் காரணமாய் இருந்தது.

# 6

இன்று பானு தன் கைக்குழந்தையுடன் வந்திருந்தாள்.

சரியாக மூன்று வருடத்துக்குப் பின் அவளை நான் காண்கின்றேன்.

பவித்திராக்கு அவளுடன் என்ன பேசுவது.... அவளுடன் தான் ஏதாவது பேசிவிட்டால் நான் என்ன சொல்லி விடுவேனோ என்று தாய்மைக்கும் தாலிக்கும் நடுவே நின்று தள்ளாடுகின்றாள். எப்படி நான் பானுவின் வரவை எதிர்கொள்கின்றேன் என்று என்னைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடியும், பானுவின் குழந்தையைக் கையில் வாங்கவும் முடியாது... வாங்காமல் இருக்கவும் முடியாதும் நின்று தத்தளிக்கின்றாள்.

கொட்டி விட்ட பனி உறையாமலும் உருகாமலும் கார்களின் புகைபடிந்து இருக்கும் வீதியோரப் பனிக்கட்டிகள் போல, மறக்கவும் முடியாது மன்னிக்கவும் முடியாது இந்த மூன்றாண்டுகள் இருந்தது போலலே இன்றும் நான் எந்த எதிர்ப்பையோ... கோபத்தையோ... மகிழ்ச்சியையே.... ஏற்பையோ காட்டாது மௌனமாகக் கட்டிலிலேயே படுத்திருந்தேன்.

நேர்ஸ் வந்து பின்னேரத்திற்குரிய ஊசியைப் போட்டு விட்டுப் போகின்றாள்.

இப்போதெல்லாம் ஊசி போட்ட பின்பு அந்த வலி அதிக நேரம நீடிக்கிறது.

பவித்திரா வந்து சிவந்து போயிருந்த அந்த இடத்தைத் தேய்த்து விடுகிறாள்.

மௌனமாய் நின்ற பானு குழந்தையுடன் கிட்ட வந்து அவனை என் நெஞ்சினில் கிடத்துகின்றாள்.

எனக்கு எதுவும் சொல்ல முடியவில்லை.

அவனை உற்றுப் பார்க்கின்றேன்.

அவனும் என்னை உற்றுப் பார்த்து ஏதோ சொல்கின்றான்.

அவனுக்கு வயது 4 மாதம் மட்டும் தான்.

அவனது வாயில் இருந்து குமிழி குமிழியாக எச்சில் வருகிறது.

அதனைத் துடைத்தபடி... "என்னடா.. நீயும் பண்டாரவளை சண்முகத்தாரா?" எனக் கேட்க முதலே என் குரல் உடைந்து விட்டது.

பவித்திரா ஒரு பக்கமும் பானு மறுபக்கமும் வந்து என்னைப் பிடித்துக் கொண்டார்கள்.

நான் அழுததைப் பார்த்துக் குழந்தை அழத் தொடங்கி விட்டது.

பவித்திரா அவனை வாங்கித் தன் தோள்களில் போட்டுக் கொண்டாள் - இதற்காகவே இத்தனை காலம் காத்திருந்தது போல.

பானுவோ பக்கத்தே இருந்த ஒரு கதிரையை எடுத்து

எனது கட்டிலுக்குப் பக்கமாகப் போட்டுக் கொண்டு என் தோளில் சாய்ந்து கொள்கின்றாள்.

என் கை அவளின் தலையைத் தடவியபடி.

பானுவை எப்போதும் பபிதாவின் இடத்தில் வைத்துத்தான் நான் பார்த்ததுண்டு.

சிறுவயது முதல் பபிதாவைப் போலத்தான் அவளது பொறுமையும் சீற்றங்களும்.

பவித்திரா அடிக்கடி சொல்வாள் "ஆண்பிள்ளை யாய்ப் பிறந்திருந்தால் உங்களைப் போலவே வந்திருப்பாள்" என்று.

நானும், "அதுதான் ஆண்பிள்ளையை உன்னைப் போலை பொம்பிளைப்பிள்ளையாய் பெத்து வைச்சிருக் கிறியே" என்று அவளைப் பதிலுக்குச் சீண்டுவேன்.

மூத்தவன் இராகுலன் அசல் அம்மாப் பிள்ளைதான்.

நான் எது சொன்னாலும் சரி... தாய் எது சொன்னாலும் சரி... தங்கச்சியார் எது சொன்னாலும் சரி... அடுத்த வார்த்தை பேச மாட்டான்.

எல்லாத்திற்கும் "ஆம்" தான்.

அதனால்தானோ என்னவோ, கல்யாணத்திற்குப் பின்பும் மனைவி சரி... மாமன் மாமி சரி எது சொன்னாலும் மறு வார்த்தை சொல்லாதவனாய்ப் போய் விட்டான்.

அவனுக்கும் இரண்டு பெண் பிள்ளைகள் ஐந்து வயதிலும், மூன்று வயதிலும்.

தினமும் வேலையால் வரும் பொழுது என்னிடம் வருவான்.

சனி ஞாயிறுகளில் மனைவி பிள்ளைகளுடன்

வருவான்.

இன்று பானு வந்ததால் இனி மருமகள்காரி வருவாளோ... இல்லை இராகுலனைத் தான் வர விடுவாளோ தெரியாது.

பானுவின் திருமணம் அப்படி ஒரு பூகம்பத்தை எங்கள் குடும்பத்தினுள் ஏற்படுத்தியிடிருந்தது.

அவளது பட்டப் படிப்பு முடிந்ததைக் கொண்டாட அன்றுமாலை எல்லோரும் றெஸ்ரோரன்றில் கூடியிருந்தோம்.

நாம் இரவு உணவு உண்ண ஒரு ரெஸ்ரோரன்றில் ஒழுங்கு செய்ததிருந்ததால் பாலன் குடும்பத்தை அழைக்க முடியவில்லை.

பாலன், அண்ணி அபிராமி, ஹரிணி சகிதம் பெரிய மலர்க்கொத்துடன் பல்கலைக்கழகத்திற்கு வந்து பானுவை வாழ்த்தி அவளுடனும் எங்களுடனும் சேர்ந்து படம் எடுத்த பின்பு, பானுவின் கையினுள் ஒரு என்வலப்பைக் கொடுத்து விட்டுப் போயிருந்தார்கள்.

என்வலப்பைப் பிரித்த பானுவின் கண்கள் விரிந்ததை அவதானிக்க கூடியதாய் இருந்தது.

“ஆயிரம் குறோன்கள் அம்மா”, பவித்திராவின் காதில் அவள் குசுகுசுக்க அது கொஞ்ச நேரத்தில் என் காதுகளுக்கும் எட்டியது.

“பாலன் நான் உனக்கு என்ன கைமாறு செய்யப் போகின்றேன்” என மனதும் வாயும் முணுமுணுத்தது.

அனைவரும் சந்தோசமாகச் சாப்பிட்டுக் கொண்டு இருந்த பொழுது பானுவாகவே தன் காதல் விடயத்தை

உடைத்தாள்.

எனக்குப் பிரக்கேறி விட்டது.

இராகுலனின் மாமன் மாமியின் முகங்கள் முற்றாக மாறி விட்டன.

இராகுலன் வழமைபோல மௌனமாகவே இருந்தான்.

இளையவன் ஹரி “நீ என்னட்டையாவது சொல்லியிருக்கலாமே... நான் விசாரித்து இருப்பேனே” என்றான்.

“நீ விசாரித்த பிறகு லவ் பண்ணுறதுக்குப் பெயர் லவ் இல்லை. அதுக்கு வேறு பெயர்”

அதே பானு!

பபிதாவின் சீறும் மறு உருவம் கொண்ட அதே பானு!!

“இப்ப உன்ரை லவ்வாலை எங்கடை பரம்பரையே தலையெடுக்க முடியாமல் பண்ணீட்டியே... பாவி”, பவித்திரா கொஞ்சம் பலமாக விசும்பத் தொடங்க பக்கத்து மேசையில் சாப்பிட்டுக் கொண்டிருந்த டெனிஸ்காரர்கள் கொஞ்சம் விநோதமாக எங்கள் மேசையைப் பார்த்தார்கள்.

“பிளீஸ்... எல்லாரும் இப்ப சாப்பிடுங்கோ... வீட்டை போன பிறகு நான் அவளோடை கதைக்கிறன்”

அந்த வினாடியை அமைதிக்குக் கொண்டு வந்தாலும் எனக்குள் எரிமலை வெடித்துக் கொண்டு இருந்தது.

இது என் வாழ்வில் நடந்த இரண்டாவது பூகம்பம்!

முதலாவது பூகம்பம் இலங்கையில் எங்கள் பெரிய வீட்டுப் பிரச்சனை நடந்த பொழுது இங்கு டென்மார்க்கில் வந்த மாரடைப்பு.

இரண்டு சந்தர்ப்பத்திலும் டென்மார்க்கின் வைத்திய வசதிகளே என்னைக் காப்பாற்றின.

இலங்கையில் இருந்திருந்தால் நிச்சயம் இறந்திருப் பேன் - வைத்திய வசதி போதாமையாலில்லை; அவமானத் தால்!

முதலாவது எங்கள் பரம்பரைக்கே நடந்த அவமானம்!

இரண்டாவது எங்கள் குடும்பத்திற்கு நடந்த அவமானம்!!

ரெஸ்ரோரரன்ரில் இருந்து இராகுலன் தன் வீட்டுக்கு போய் விட்டான்.

இராகுலனின் மாமன் மாமியும் தங்கள் வீட்டுக்குப் போய் விட்டார்கள்.

மருமகள்க்காரிக்கு முகம் கொஞ்சமும் சரியில்லை.

மூத்த குழந்தையைக் கையில் பிடித்து இழுத்துக் கொண்டு போன விதத்தில் அது தெரிந்தது. இளையவளை இராகுலன் தோளில் போட்டுக் கொண்டு பின்னால் போனான்.

நான் அமைதியாகக் காரை ஓட்டிக் கொண்டு இருந்தேன்.

சின்னவன் எனக்குப் பக்கத்தில் முன் சீற்றில் அமர்ந்திருந்தான்.

தாயும் மகளும் பின் சீற்றில்.

காரினுள் பயங்கர அமைதி நிலவியது.

கொஞ்ச நேரங் கழித்து நான் பானுவிடம் கேட்டேன்.

"இந்தக் கலியாணத்தாலை நாளைக்கு உன்ர தம்பிக்கு

பேசியொரு கல்யாணம் செய்ய முடியாமல் போகும் என்டதை நீ யோசிச்சுப் பார்க்கேல்லையா"

கார் விரைவுப் பாதையில் விரைந்து கொண்டிருந்தது.

சிறிது நேரம் மௌனமாய் இருந்த பானு, "நாளைக்கு இவன் இதையும் விடவும் குறைவான ஒரு இடத்திலை லவ் பண்ணமாட்டான் எண்டதுக்கு என்ன உத்தரவாதம்" என்றாள்.

"சட் டப் யுவர் மௌத்... யூ பிச்.... யார் என்று நினைத்துக் கதைக்கிறாய்... அப்பா அம்மா போலை நான் அமைதியாய் இருப்பன் என்று நினைக்கிறியா? நான் உனக்கு அண்ணாவாய் இருந்திருந்தால் றெஸ்ரோறன்ரில் வைத்து வெளுத்திருப்பன்"

சின்னவன் ஹரிக்கு அப்படியொரு கோவம் எங்கிருந்து வந்ததோ தெரியவில்லை.

அப்படிச் சீறினான்.

நான் அவனின் மடியில் தட்டினேன்.

"இது எல்லாம் நீங்களும் அம்மாவும் கொடுத்த செல்லம்.... ஊருக்கே நியாயம் சொல்லுற உங்களுக்கு உங்கடை மகளை ஒழுங்காய் வளர்க்கத் தெரியேல்லை எண்டு நாளைக்கு ஊரே சிரிக்கப் போகுது"

"அப்பாவும் நானும் உங்கள் மூண்டு பேரையும் ஒண்டாய்த்தான் வளர்த்தனாங்கள்", சொல்லி முடிக்க முதல் பவித்திரா விசும்பத் தொடங்கினாள்.

பவித்திரா எப்போ கண் கலங்கத் தொடங்கினாலும் எல்லோரும் அமைதியாகி விடுவோம்.

இது அடிக்கடி நடக்கும் ஒன்றில்லை.

இந்த முப்பது வருட தாம்பத்தியத்தில் மூன்று அல்லது நாலு தடவை நடந்திருக்கும்.

அன்றும் அவ்வாறே நடந்தது.

காரினுள் மீண்டும் ஒரு மரண அமைதி.

அது தன்னைத் தானாகச் சுவீகரித்துக் கொண்டது.

கார் தனது வேகத்தைக் குறைத்து விரைவுப் பாதையில் இருந்து வெளியேறி நாங்கள் வசித்திருந்த நகரத் தெருக்களில் ஓடத் தொடங்கியது.

*

"வேண்டுமென்றே பிள்ளையை மடக்கிப் போட்டான்கள்..."

"இப்பிடிச் செய்தால் சாதியிலை உயர்ந்திடலாம் எண்ட எண்ணம் போலை...."

"காத்திகேசுவின் தகப்பன் கணபதியனுக்கு அப்பப்பா செய்த பழி பாவம் தான் இப்ப இந்தக் குடும்பத்தை போட்டு ஆட்டுது"

இத்தியாதி இத்தியாதி ஊர்விடுப்புகள் உலாவிய பொழுதும் "காத்திகேசுவின் தகப்பனுக்கு அப்பப்பா செய்த பழி பாவம்" என்பதுதான் என்னை ரொம்பவே வருத்தியது.

சின்ன வயதில் அப்பப்பாவின் பெருமையைத் தம்பட்டம் அடித்து திரிந்திருந்தாலும் வயது வர வர அதில் உள்ள நோவையும் வலியையும் நன்கு உணர்ந்திருந்தேன்.

பானுவின் காதல் விடயம் றெஸ்றோரன்ரினுள் வைத்துக் கதைத்துப் பின் காரினுள் மௌனமாகி விட்ட விடயம் என நாங்கள் நினைத்திருந்தாலும்.... அடுத்தடுத்த நாளே ஊருக்கு அவலாகி விட்டது.

செய்திகளை முந்தித் தரும் தினத்தந்தி வரிசையில் இராகுலனின் மாமி... எங்கள் சம்பந்தி நின்றிருக்கின்றார் என்று அறிந்த பொழுது இன்னமும் வேதனையாக இருந்தது.

செத்த வீட்டுக்குத் துக்கம் விசாரிப்பது போலவும்... ஊர்த் துலாவாரத்தை அறிவது போலவும்... அடுத்த நாள் மாலையில் ஆட்கள் வீட்டுக்கு வரத்தொடங்கினார்கள்.

"பிள்ளையை இலண்டனுக்குக் கொண்டு போங்கோ" என அறிவுரை வேறு.

"இலண்டனிலை இனி ஒரு அரேபியனைப் பிடித்தால் கனடாவுக்கோ கொண்டு போறது" என நானே முற்றுப் புள்ளி வைத்தேன்.

அடுத்த அடுத்த கிழமை வீடு கொஞ்சம் அமைதியாக இருந்தது போல இருந்தது.

ஊருக்குள்ளும் கொஞ்சம் தண்ணி ஊற்றி அணைத்தது போல இருந்தது.

இராகுலனின் சம்பந்தி வீட்டார் மட்டும் "என்ன அவள் சொல்லுறாள்" என பவித்திராவிடம் அடிக்கடி கேட்டுக் கொண்டு இருந்தார்கள்.

அவர்களுக்கு மாலைத் தேநீருக்கு ஏதாவது நொறுக்குப் பணியாரம் தேவை போலும்.

ஒரு நாள் பவித்திரா பொறுமை இழந்து "அவள் அவனோடை ஓடினாலும் கட்டாயம் உங்களுக்குச் சொல்லு வோம்... நாங்களாக செய்து வைத்தாலும் கட்டாயம் உங்களுக்குச் சொல்லுவோம்" என்று சொன்னதுடன் அந்த அத்தியாயம் முடிந்தது.

தொடர்ந்து போடப்படும் தொடர்குறிகளை நிறுத்து வதற்கு கட்டாயம் சிலவேளை முற்றுப்புள்ளிகள்

தேவைதான். அதனை பவித்திரா செய்ததில் எனக்கு மனதினுள் மகிழ்ச்சியே.

ஒரு ஊமையே வலியின் உச்சத்தில் "பா..பா.. பா..." என்று கத்துவது போலத்தான் எப்போதும் மௌனமாகவும் பொறுமையாகவும் இருக்கும் பவித்திராவின் இந்த எதிர்வினை என எனக்குப் பட்டது.

அடுத்து வந்த கோடை விடுமுறைக்கு இரண்டு கிழமைக்கு வேலை விடயமாக நோர்வேக்குப் போகிறேன் என்று போனவள் தான்.

பின்பு தான் தெரிந்தது பெடியனின் உறவினர்களின் அனுசரணையுடன் நோர்வேயில் அவளுக்குத் திருமணம் நடந்தது என்று.

திருமண அழைப்பிற்குப் பதிலாக எங்களுக்கு ஒரு கடிதம் மட்டும் வந்தது.

"அன்புள்ள அப்பா அம்மாவுக்கு பானு எழுதிக் கொள்வது...

நான் எடுத்த முடிவு இப்போதும் சரி என்றே நான் உறுதியாக இருப்பதால் உங்களிடமும் இராகுலன் - ஹரியிடமும் எந்த மன்னிப்பும் கேட்கப் போவதில்லை.

எத்தனை வருடங்கள் நான் காத்திருந்தாலும், நீங்கள் எனக்கு இந்தத் திருமணத்தை நடத்தி வைக்கமாட்டியள் என உறுதியாகத் தெரிந்தபடியால்தான் நானாக இந்த முடிவை எடுத்துக் கொண்டேன்.

நீங்கள் வாழ்ந்த வழியிலையேதான் நாங்கள் வளர வேண்டும்... வாழ வேண்டும் என்ற உங்களின் எதிர்பார்ப்பு இலங்கையில் எங்கள் ஊரின் அமைப்பு முறைக்கு சரிவருமோ இல்லையோ தெரியாது... ஆனால் பிறந்து மூன்று மாதத்தில்

இருந்தே இந்த நாட்டுக் கலாசாரத்தில் வளர்ந்து விட்டுத் திருமண வயது வரேக்கை மட்டும் அப்பிடியே நீங்கள் காட்டும் ஒருவனுடன் வாழ்வை இணைப்பதை என்னால் கற்பனை பண்ண முடியாது அப்பா.

அமெரிக்காவிலை வளர்ந்த ஒருத்தியிடம் ஒரு அச்சு வேலியாளையும்... கொப்பனேகனில் இருக்கும் ஒருவனிடம் ஒரு கொடிகாமத்தானையும் எதிர்பார்க்கிறியள்.... அது முடியாதம்மா....

சின்ன வயதிலை இருந்து என்ரை பிள்ளை என்னைப் போலை யோசிக்கும் என்னைப் போலை நடக்கும் என்று யோசித்து... சிலதைக் கதைத்தால் நாகரீகம் இல்லை என நினைத்து விட்டு இப்போ நாங்கள் நடந்தது அநாகரீகம் எனக் குற்றம் சாட்டி எங்களை விலத்தி வைக்கிறது தவறு அப்பா! தவறு அம்மா!!

நாங்கள் உங்கள் வயிற்றில் இருந்து இந்த உலகத்துக்கு வந்திருந்தாலும் எங்களுக்கு என்றொரு ஆன்மா.. அதற்கான விருப்பு வெறுப்புகள்... அதற்குள்ளேயுள்ள துடிப்புகள் அத்தனையும் வேறுவேறே.

தண்ணியிலை தோய்த்து கொப்பியிலை ஒட்டுற தண்ணிப்படம் போல, அம்மாவைப் போலவே யோசித்து... அம்மா போலவே நடந்து... அம்மாவைப் போலவே பிள்ளைகளைப் பெற்று வளர்த்தால் இந்த உலகத்திற்கு இன்னோர் பவித்திரா கிடைக்குமே தவிர இன்னோர் பானு கிடையாது.

ஒன்று மட்டும் இறுதியாக...

இன்றுவரை அப்பா அம்மாவின் வழியில் நல்ல பிள்ளையாகவே வளர்ந்திருக்கின்றேன் என்றதுதான் எனக்

குப் பெருமை. அப்பாவுக்கு அம்மா எவ்வாறு ஒரு நேர்மை யான மனைவியாக, எங்களுக்குத் தாயாக இருந்தாவோ அவ்வாறே என் எதிர்கால வாழ்க்கையும் அமையும்.

உங்களுடன் இருந்த பொழுது உங்களுக்குத் தெரியாமல் ஒருநாள் கூட மொட்டாக்குப் போட்டுக் கொண்டு களவாக எந்த டிஸ்கோரெக்குக்கும் போன தில்லை... வாயில் புகை வடிவத்திலும் தண்ணி வடிவத்தி லும் எதையும் வைத்த தில்லை... மேலாக இனக்கவர்ச்சி என்ற பெயரில் எவனின் சுண்டு விரலும் என்னில் பட நான் அனுமதித்ததில்லை.

அவ் வகையில அப்பா அடிக்கடி சொல்லும் "சண்முகத்தாரின்" மரியாதைக்குரிய பூட்டியாகவே நான் வீட்டை விட்டுப் போகின்றேன். அந்தப் பெயருக்கு எந்தக் களங்கமும் வராத வகையில் வாழ்வேன்.

நிச்சயமாக என்னை வாழ்த்த மாட்டீர்கள் என்றாலும் என்னைச் சபிக்கமாட்டீர்கள் என்ற நம்பிக்கையுடன் - உங்கள் பானு"

அவளுடைய கடிதத்தில் இருந்த ஒவ்வொரு சொல்லும் என் மனதிலும் பவித்திராவின் மனதிலும் கல் மேல் எழுத்தாக பதிந்திருக்கின்றன.

இப்போ என் தோளில் சாய்ந்து அழுது கொண்டு நிற்கின்றாள்.

என்னால் என்ன செய்ய முடியும்?

பவித்திராவின் கையில் இருந்தாலும் பேரன் என்னை என்னைப் பார்த்துக் கொண்டு இருந்தான். ஏதோ ஏதோ என்னவோ கதைத்துக் கொண்டிருந்தான்.

இதனைக் கவனித்த பவித்திரா மீண்டும் அவனை என் நெஞ்சின் மீது கிடத்தினாள்.

சண்முகத்தாரின் பேரனும்! அவர் பேரனின் பேரனும்!!

காலம் எவ்வளவு விரைவாய் ஓடிவிட்டது.

"என்ன பெயர் வைத்திருக்கிறாய்?"

"உங்களுக்குப் பிடித்த பெயர்தான் அப்பா.... சூர்யா!... "

நானும் பவித்திராவும் புரியாமல் விழித்தோம்.

"ஆங்கிலத்தில் சூரியனுக்கு சண் என்றுதானே அர்த்தம்... குட்டிச் சண்முகத்தார்"

எனக்கு மூச்சு மேலும் கீழும் எழுந்து தாழ்கின்றது.

"எல்லாமே அர்த்தம் இல்லாமல் போயிட்டுது....", ஏதோ ஒரு விரக்தியில் சொன்னேன்.

எதனை நினைத்து நான் சொன்னேன் என்பது பவித்திராவுக்கும் தெரியும். பானுவுக்கும் தெரியும். அதில் தனக்கும் ஒரு பங்கு இருப்பதால் பானு மௌனம் காத்தாள்.

"இல்லையப்பா... எல்லாத்துக்கும் ஒரு அர்த்தம் உண்டு. அது கடவுள் தரும் வரம். அதுதான் இயற்கை. இல்லாவிட்டால் இந்த சூர்யா குட்டி எங்களுக்கேது", பவித்திரா கண் கலங்கினாள்.

குழந்தை என் நெஞ்சில் கிடந்தபடி தன் தலையால் என்னை மீண்டும் மீண்டும் முட்டினான்.

நான் சிரிக்க அவனும் சிரித்தான்.

"அம்மா நான் இனிப் போகவேணும்"

பவித்திரா தனது பேர்ஸ்சைத் திறந்து 1001 குறோன்களை எடுத்துக் குழந்தையின் கைக்குள் திணித்தாள்.

அவன் கெட்டியாய் பிடித்துக் கொண்டான்.

அவன் இன்னும் உந்தி உந்தித் தவழ்ந்து வந்து என் கழுத்தில் இருந்த சங்கிலியைப் பிடித்துக் கொண்டான் - சின்னனில் பானு அதனைப் பிடித்து விளையாடுவது போல....

கோயிலடியில் இரும்பு வளையச்சுருள் சுற்றிய அன்று அப்பம்மா போட்டு விட்ட புலிப்பற்கள் இரண்டு போட்ட தங்கச் சங்கிலிதான் அது.

அதனைக் கழற்றி அவனுக்குப் போடக் கையைத் தூக்கினேன்.

கையில் பிணைத்திருந்த மருந்து வயர்கள் என்னை அனுமதிக்கவில்லை.

பவித்திராவைப் பார்த்தேன்.

அவள் வந்து அதனைக் கழற்றி அவனுடைய கழுத்தில் போட்டு விட்டாள்.

சண்முகத்தாரின் சங்கிலி போகவேண்டிய இடத்துக்குத்தான் போகிறது என நினைத்துக் கொண்டேன்.

அவனுக்கு என்ன புரிந்ததோ தெரியாது.

சிரித்தான்!

“போயிட்டு வாடா குட்டிச் சண்முகத்தார்”

அவனுக்கு விடை கொடுக்கும் பொழுது என் குரல் கம்மியது.

கண்கள் கலங்கின.

பானுவும் கண்களைக் கசக்கிக் கொண்டு விடை பெற்றாள்.

பவித்திரா வாசல்வரை இருவரையும் கொண்டு போய்

விட்டு விட்டு வந்தாள்.

“குரங்கின் வாலாய் இருந்து தேய்ந்து போன கடைசி முள்ளந்தண்டு எலும்பு போலத்தான் உங்கள் சண்முகத்தார் படலம் அப்பா” இராகுலன் அடிக்கடி சொல்வது தான்.

“இந்த உயிர் என்னை விட்டுப் போகும்வரை அது என்னில் இருந்து போகும் என்று நான் நினைக்கவில்லை. உனக்கெப்படி ஹரிப் பொட்டரும்... கடற்கன்னியும்... கொப்பனேகன் காணிவேலுமோ... அதற்கு ஆயிரம் மடங்கு மேலே எனக்கு எங்கடை அந்தப் பெரிய வீடும்.. கோயில் திருவிழாவும்... குதிரை வாகனமும்...”

“அந்த நினைவுகளை... அல்லது அந்த இழப்புகளை வைத்து என்னத்தைச் சாதிக்கப் போறியள்...”, இது இராகுலன்.

“டே உங்கடை தலைமுறைதான் வரவுக்கும் செலவுக் கும் லாப நட்டம் பார்த்து வாழுறது.... நாங்கள் அப்பிடி யில்லையடா... எங்கடை வீட்டிலை அன்று எத்தினை கொத்து அரிசி சமைக்க வேணும் எண்டு விடியற் காலையில் தெரியாது.... ஆட்கள் வர வர சமையல் நடக்கிற வீடடா அது... கொடுத்துக் கொடுத்து அழிஞ்ச குடும்பம் இல்லை யடா எங்கடை.. கொடுத்துக் கொடுத்து நல்லாய் வாழ்ந்த பரம்பரையடா....”

“அதுதான் கடைசியிலை....” - அவன் நிறுத்திக் கொண்டான்.

அவனுக்கு நன்கு தெரியும் எங்கு தொட்டால் என் பேச்சு நிற்கும் என்று.

எப்போ எங்கள் குடும்பக் கதைகள் வந்தாலும் அந்தப் புள்ளிக்கு வந்ததும் எல்லாவற்றிக்கும் முற்றுப்புள்ளி

வைப்பது போலாகி விடும்.

அவனுடன் அடிக்கடி கதைப்பது என் காதில் கேட்கிறது.

எனக்குத் தெரிந்த ஒரே பதில் : அப்பப்பா அந்த பெரிய வீட்டையும் வளவையும் கோயிலுக்கு எழுதி வைச்சிருக்க வேணும்... அப்படிச் செய்திருந்தால் பின்னாளில் அது கோயிலின் அன்னதான மடம் போல மாறியிருக்க வாய்ப்பு இருந்தது. வந்தவர்கள் எல்லோருக்கும் சாப்பாடு போட்ட அந்த வீடு கோயிலின் அன்னதான மடமாக மாறுவதில் தவறேதும் இல்லைத்தானே.

தன்ரை பிள்ளையளும் தன்னைப் போலவே இருக்குங்கள் எண்டு தப்புக் கணக்கு போட்டது தான் அவர் விட்ட பெரிய பிழை.

அதே பிழையைத் தான் பானு விடயத்தில் நானும் பவித்திராவும் விட்டதும்.

பண்டாரவளைக் கடைகளையும் கோயில் திரு விழாக்களையும் குதிரை வாகனத்தையும் கவனிச்ச அப்பப்பாவுக்கு வீட்டைக் கவனிக்கத் தெரியேல்லை.

அப்பம்மா எல்லாத்தையும் பார்த்துக் கொள்வா என அவர் நினைச்சார்.

பாவம் அவா என்ன செய்வா?

காலையில் கிழக்குத் திசையைப் பார்த்து கும்பிடவே மட்டும் தெரிந்த வெள்ளாந்தி மனுசி அது!

மனிதர்களின் சூதுவாது எதுவும் தெரியாத பெண் ஜன்மம் அது.

## 7

பெரியதொரு அலை வந்து கடற்கரையில் நங்கூரம் இடப்பட்டிருக்கும் பாரிய கப்பலைப் பிரட்டிச் செல்லும் பொழுது, கரையில் பொந்து கட்டி வாழும் நண்டுகளையும் தண்ணீரினுள் இழுத்துச் செல்வது போலவே... 83 கலவரம் வந்து முழு இலங்கைத் தமிழரையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உலுக்கி விட்டுப் போயிருந்தது.

58 கலவரத்தை ஒரு கனவு போல மறந்து போய் அடுத்த 25 ஆண்டுகளுள் மீண்டும் தென்னிலங்கையில் தங்கள் வியாபார நிலையங்களை நிறுவுவதையும்... என்னதான் தரப்படுத்தல் என்ற ஒன்றால் தமிழ்ப் பிள்ளை களின் உயர்கல்வியில் அரசு கை வைத்திருந்தாலும் வெட்ட வெட்டத் தழைக்கும் வாழை போல இலங்கை முழுவதும் தமிழனும் தமிழும் ஊடுருவுவதையும் எவராலும் எதுவும் செய்ய முடியவில்லை.

74இல் யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத் தமிழா ராய்ச்சி மாகாநாட்டில் நடந்த அனர்த்தங்களுக்குப் பின்பு நீருக்கு அடியில் மெதுவாக அசைந்து கொண்டிருக்கும் உயிரினங் கள் போலத் தமிழ்ப் பிரதேசங்களிலும்... ஏன்

சிங்களப் பிரதேசங்களிலும் மெது மெதுவாக ஊடுருவிக் கெண்டிருந்த விடுதலை இயங்கங்களின் நடவடிக்கைகளை அரசு இயந்திரம் முளையிலேயே பிடுங்க முயற்சித்துக் கொண்டிருந்த பொழுது வெடித்தது தான் 83 கலவரம்.

வானொலியில் இந்த இடத்தில் தாக்குகிறார்கள்... அந்த இடத்தில் தாக்குகிறார்கள்... மக்கள் அமைதியாக இருங்கள் என்று ஒலிபரப்பப்பட்ட பொழுது அது "இன்ன இன்ன இடத்தில் நீங்கள் தமிழரைத் தாக்காமல் அமைதியாக இருக்கின்றீர்கள்" என அர்த்தப்படுத்தப்பட்டது.

எரியும் நெருப்பில் எண்ணையை விட விட அது மூண்டு எரியத் தொடங்கியது.

வீட்டுக்கு வேலைக்கு அமர்த்தப்பட்ட பண்டாவும், மெனிக்காவும், அவர்களின் வாரிசுகளும் திருப்பித் தாக்கிய நிகழ்வு இலங்கை முழுக்க அரங்கேற்றப்பட்டு மக்கள் அகதி முகாம்களிலும் கோயில்களிலும் தஞ்சமடைந்து இறுதியாகக் கடல்வழியாக கப்பல்களில் யாழ்ப்பாணம் வந்திறங்கினார்கள்.

"அமைதி" என்பது பெயரளவில் வந்தாலும், "விடுதலைப் போராட்டம்" என்று தமிழர்கள் அழைத்தாலும் சரி... "பயங்கரவாதம்" என்று அரசாங்கம் அழைத்தாலும் சரி... உரிமைக்கான போராட்டம் வெவ்வேறு விடுதலைக் குழுக்களால் முன்னெடுக்கப்பட்டது.

தமிழர்கள் ஒவ்வொருவரும் பயங்கரவாதிகளாகப் பார்க்கப்பட்ட சூழ்நிலையில் உலகநாடுகளும் அகதிகளுக்கான கதவுகளை அகலத் திறந்து விட்டன.

பாலன் அடிக்கடி சொல்வான் கலவரத்திற்குப் பின்பு பல்கலைக்கழகத்தில் இருந்து கொழும்பு ஆஸ்பத்திரிகளுக்கு

செல்லும் பொழுது முன்பு கிடைத்த எந்த மரியாதையும் கிடைப்பதில்லை என.

"சக டாக்டர்கள் தான் மதிக்கிறார்கள் இல்லை யென்றால்... நேர்ஸ்மாரும் மதிப்பதில்லை.... ஆக வேதனை என்னவென்றால் "ஆய் பொவன் மாத்தையா" என்று சொன்ன துப்பரவுத் தொழிலாளர்கள் சரி... வாசலில் நிற்கும் காவலாளிகள் சரி... யாரும் கூட மதிப்பதில்லை என்பான். பைனல் எக்ஸாம் முடிய கட்டாயம் ஏதோ ஒரு ஸ்கொலசிப் எடுத்துக் கொண்டு ஏதாவது ஒரு வெளிநாடுதான்... அப்பிடி நான் போனால் கட்டாயம் உன்னையும் கூப்பிடுவன்"

கோயில் கேணியடியில் இருந்து சொல்லிக் கொண்டிருப்பான்.

"என்னதான் வெளிநாட்டுக்குப் போனாலும் இந்தப் பன்னிரண்டு நாள் திருவிழாவுக்கும் வந்து விடவேணும் பாலன். குதிரை வாகனத்தின் முன்கொம்பு எப்பவும் என் தோளில் இருக்க வேணும்...."

"அப்பாவும் தான் கோயிலுக்குப் பிரதம குருக்களாய் இருக்கிறார்... நானுந்தான் சின்ன வயது முதல் அப்பாவுக்குப் பின்னாலை மணியடிச்சுக் கொண்டு இருந்து, பிறகு இப்ப பூசையும் பண்ணுறன்... ஆனால் உனக்கு இருக்கிற மாதிரி ஒரு பிடிப்பு... அல்லது இறுக்கம் எனக்கில்லையே"

அவ்வழியே ரியூசனுக்குப் போயிட்டுத் தனது நண்பிகளுடன் வந்து கொண்டிருந்த பபிதா தனது கையில் இருந்த கச்சான் பையை எனக்குத் தந்து விட்டு "அண்ணா சௌக்கியமா" என பாலனையும் கேட்டு விட்டு சென்றாள்.

"ரியூசன் நடக்குதா? கச்சான் விக்கிற ஆச்சியுடன் கூட்டு வியாபாரம் நடக்குதா" என நானும் சிரித்தபடியே

சொன்னேன்.

அப்பால் சென்ற அவள் "உங்களுக்குக் கச்சான் தந்ததுக்கு மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று விளை யாட்டாக ஒரு கும்பிடு போட்டு விட்டுப் போனாள்.

பாலனுக்கும் கடலையை நீட்டியபடி..."எதுக்காக இந்தக் கோயிலோடை இவ்வளவு இறுக்கம்... பிடிப்பு என்றா கேட்டாய்" என்றேன்.

பாலனும் "ஓம்" எனத் தலையாட்டினான்.

"பாலன்... உனக்கும் சரி... உன்ரை அப்பா சாம்பசிவக் குருக்களுக்கும் சரி... இந்தக் கோயில் ஆயிரத்தில் ஒரு கோயில். ஆனால் எங்கடை கோயில்.. அங்கை நிற்கிற குதிரை வாகனம்... எங்கடை வளவு... பெரிய வீடு எல்லாமே எங்கடை பரம்பரையின்ரை அடையாளம். இந்த நாலையும் அழிச்சு விட்டால் எனக்கு அடையாளம் இல்லாமல் போய் விடும்"

சொல்லி முடித்த பொழுது எனக்கு மூச்சு மேலும் கீழும் வாங்கியது.

"உன்னைப் போல ரொம்பச் சென்ரிமென்ற் கொண்ட ஒருத்தன் எனக்கு பிறண்ட்டாய் இருக்கிறது எனக்கு எவ்வளவு பெருமை"

"நான் நினைக்கிறன் அது என்ரை அப்பப்பாட்டையும் அப்பாட்டையும் இருந்து எனக்கு வந்திருக்க வேணும்"

"உம்... இல்லாவிட்டால் பபிதாவைத் தன் பிள்ளையாய்த் தத்தெடுத்தது மட்டுமில்லாமல் இனியொரு பெண்பிள்ளை பிறந்ததால் அவளில் இருக்கிற பாசம் எங்கே குறைந்திடுமோ என்று இன்னுமோர் பிள்ளையைப் பெற்றெடுக்காமல் இருக்கிற அப்பாவும் அம்மாவும்

எவ்வளவு சென்ரிமென்றான ஆக்கள்"

தொடர்ந்து கதைத்துக் கொண்டிருந்ததால் சாடை யாகப் பசியெடுக்கும் போல் இருக்க நானும் பாலனும் தீர்த்தக் கேணியில் ஒரு தடவை நீச்சல் அடித்து விட்டு கை நிறையத் தாமரைப் பூக்களையும் பிடிங்கிக் கொண்டு வெளியே வந்தோம்.

சைக்கிளில் ஏறப் போன பொழுது பாலன் "இதுகளை யும் பபிதாக்குக் கொடு... அவளுக்கு தாமரைப் பூக்கள் என்றால் நல்ல விருப்பம் என்று எனக்குத் தெரியும்" என்றபடி தனது கையில் இருந்த பூக்களையும் என்னிடம் தந்தான்.

பபிதாக்கு இரண்டு உடன் பிறவாத சகோதரர்கள் என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டேன்..

*

வீட்டை வந்ததும் தாமரைப் பூக்களைக் கையில் வைத்துக் கொண்டு சைக்கிளில் இருந்தபடியே "பபிதா" என்று குரல் கொடுத்தேன்.

"ரியூசனுக்கு போனவளை இன்னும் காணேல்லை.... பொதுவாய் இந்த நேரம் வந்திடுவாள்" அம்மாவில் பதட்டம் தெரிந்தது.

"இரண்டு மணித்தியாலத்துக்கு முதல் கோயிலடி யிலை கண்டனான். ரியூசனுக்கு போற பெட்டையளோடை எனக்குக் கச்சான் பைக்கற் தந்திட்டுப் போனவள்..."

"அவள் எனக்குச் சொல்லாமல் ஒருத்தர் வீட்டையும் போகமாட்டாள்... ஒருக்கா அந்தப் பிள்ளையளின்டை வீட்டை போய்ப் பார்த்து சைக்கிளிலை ஏத்திக் கொண்டு வா..."

அம்மா சொல்ல முதலே எனது சைக்கிள் பறந்தது.

றோட்டுகள்... ஒழுங்கைகள்... வயற்கரைகள்... வாழைத் தோட்டங்கள்... பனங்கூடல்கள்... என வெவ் வேறு இடங்களில் இருந்த அவளுடன் ரியூசனுக்குப் போகும் அவளது தோழிகள் ஏழு பேரின் வீடுகளுக்கும் தேடிப் போனேன்.

ஆறு வீடுகளில் அவரவர்கள் நின்றிருந்தனர்.

தங்களுடனேயே அவள் வந்ததாயும்... என்னையும் பாலனையும் கோயிலடியில் தாம் கண்டதையும்... அவள் எங்களுக்குக் கச்சான் தந்து விட்டுச் சென்றதை நினைவில் வைத்துச் சொன்னார்கள்.

ஆனால் ஏழாவது வீட்டில் எங்கள் வீட்டில் நிலவிய அதே பதற்றம் நிலவியது.

"இவர்கள் இருவரும் எங்கே போயிருப்பார்கள்" என்ற பதட்டத்துடன் வீட்டை திரும்பவும் வந்தேன் - இந்த இடைவெளியில் அவள் வந்திருப்பாளா எனப் பார்ப்பதற் காக.

எங்கள் வீட்டு முற்றத்தில் ஆட்கள் நிறைந்திருந் தார்கள்.

அம்மாவின் அழுகைச் சத்தம் பலமாக ஒலித்தது.

அப்பா கல்லாக வீட்டுக் குந்தில் அமர்ந்திருந்தார்.

"அவள் எங்களை எல்லாம் ஏமாத்தி விட்டுப் போய்விட்டாள்" என அம்மா குழறியபடி ஓடி வந்து என்னைக் கட்டிப் பிடித்து அழத்தொடங்கினா.

அவாவின் கையில் ஒரு கடிதம் இருந்தது.

"நானும் சுபாவும் எங்கள் விருப்பத்தின் பேரில்

இயக்கத்தில் இணைந்து கொண்டோம். எங்களைத் தேட வேண்டாம்”

விறைத்துப் போய் நின்றேன்.

ஒரு ஐந்து நிமிட இடைவெளியில் சுபாவின் அண்ணன்காரன் அவனது வீட்டிற்கு வந்திருந்த துண்டைக் கொண்டு வந்தான்.

“நானும் பபிதாவும் எங்கள் விருப்பத்தின் பேரில் இயக்கத்தில் இணைந்து கொண்டோம். எங்களைத் தேட வேண்டாம்” என்றிருந்தது.

எங்கள் வீடு மரணவீடு போல் அன்று மாறியிருந்தது.

அக்கம் பக்கம், சொந்தக்காரர்கள், பெரியப்பா, பெரியம்மா, அண்ணன்மார்... சின்னமாமி, சின்னமாமா, சின்ன மச்சான்மார், சின்ன மச்சாள் எல்லோரும் துக்கம் விசாரிக்க வந்திருந்தார்கள்.

அவளின் சாமத்திய வீட்டு நேரத்தில் வராத உறவுகள் எல்லாம் ஒரு வகையில் மரணவீடாகிப் போன எங்கள் வீட்டுக்குத் துயரம் விசாரிக்க வந்திருந்தது ஒருபுறம் எனக்கு வியப்பாயும், மறுபுறம் மனதுக்கு கோபமாயும் இருந்தது.
காத்திகேசனும் பறுவதமும் கூட வந்திருந்தார்கள்.

அப்பப்பா அவனுடைய அப்பாவின் காதறுத்த நிகழ்வை வைத்து அவனுடைய குடும்பத்தின் மீது எப் போதும் எனக்கு ஈவிரக்கம் இருந்தது. ஆனால் பபிதாவின் சாமத்திய வீட்டுக்கு உதவி செய்வதற்கு அவனோ அவன் மனைவியோ வராதது எனக்குள் மிகவும் கோபமாக இருந்தது.

ஆனால் எதையும் அன்று வெளிக்காட்டவில்லை.

என் ஆதங்கம் முழுக்க அடுத்து என்ன செய்வது என்பது தான்.

பாலன் சுதுமலையில் ஒரு இயக்கத்தின் அலுவலகம் இருக்கிறது என்றும் அங்கு போய் விசாரிக்கலாம் என்றும் ஆலோசனை சொன்னான்.

இன்னொருவன், "யாழ். பல்கலைக்கழகதிற்கு பின்னால் திருநெல்வேலி வீதியில் இன்னோர் இயக்கத்தின் அலுவலகம்", இருக்கின்றது என்றான்.

"அல்லைப்பிட்டிக்கும் மண்கும்பானுக்கும் இடையில் மூன்றாவது ஒரு இயக்கத்தின் காரியாலயம் உள்ளது" என வயதானவர் ஒருவர் சொன்னார்.

ஆளுக்காள் ஒவ்வோர் இயக்கங்களின் பெயர்களையும் அவர்களின் விபரங்களையும் சொல்ல ஓர் ஆட்டோவை அமர்த்திக் கொண்டு நானும் பாலனும் மற்றப் பிள்ளையின் அண்ணன்மார் இருவரும் ஒவ்வோர் இடமாகப் போனோம்.

ஒவ்வோர் இடத்திலும்... காத்திருப்புகள்... சிறிலங்கா ஆமியின் தோரணையில் விசாரணைகள்... இயக்கங்கள் வேறுபட்டவைகளாய் இருந்தாலும் அவர்களின் பதிலும் பதில் சொல்லும் தோரணையும் ஒன்றாகவே இருந்தன.

"அவர்கள் இங்கு இருக்கிறார்களா என்று எங்களுக்குத் தெரியாது. தெரிந்தாலும் சொல்லமாட்டம். காரணம் மற்ற இயக்கங்களாலை அவையின்ர உயிருக்கு பாதகம் ஏற்படும். எல்லாத்துக்கும் மேலாக நீங்கள் சொல்லுற விதத்திலை அவை கட்டாயத்தின் பேரில் வந்தது போலத் தெரியவில்லை... சொந்த விருப்பத்திலேயே வந்திருக்கினம்... ஆனபடியால் அவை உங்களோடை திரும்பி வருவினம் எண்டு நாங்கள் நினைக்கேல்லை"

பொறுமையிழந்த மற்றப் பிள்ளையின் தமையன் "சின்னப் பிள்ளைகளுக்கு என்ன சொந்த விருப்பம் இருக்கப் போகுது... எல்லாம் ரியூசனுக்கு போற இடங்களிலை உங்கடை மூளைச்சலவைதான் காரணம்...", சொல்லி முடிக்க முதல் ஒருத்தன், "என்ன கனக்கக் கதைக்கிறீர்" என்றபடி இடுப்பில் இருந்த ரிவோல்வரை எடுத்து லோட் செய்தான்.

நிலைமை மோசமாகப் போகின்றது எனப் புரிந்து கொண்டோம்.

நானும் பாலனும், "அவர் தங்கச்சி போன கவலையில் கதைச்சுப் போட்டார்", என சமாதானம் செய்து மன்னிப்பும் கேட்டுக் கொண்டு அங்கிருந்து கிளம்பினோம்.

ஆட்டோவில் அனைவரும் குமுறிக் கொண்டு இருந்தோம்.

ஆட்டோ அமைதியாக பண்ணைப் பாலத்தைத் தாண்டிக் கொண்டு இருந்தது.

மாலைச் சூரியன் தண்ணீருக்குள் சென்று கொண்டிருந்தான்.

"தம்பியவை...மக்களுக்காகப் போராடுறம் என்று புறப்பட்டவர்கள் மக்களுடன் பேசுவதற்கு வன்முறையையும் துப்பாக்கியையும் தூக்கினால் இந்தப் போராட்டம் இறுதியில் வெற்றி பெறாது"

வயோதிபரான அந்த ஆட்டோ ட்ரைவர் சொன்னதை நாம் அனைவரும் மௌனமாக ஆமோதித்தோம்.

எந்த ஜனநாயக அமைப்பும் பெரும்பான்மையைப் பெறும் பொழுது அதுவே ஒரு சர்வாதிகார அமைப்பாக மாறிவிடுவதுண்டு என எங்கோ படித்த ஞாபகம் வந்து போனது.

# 8

இன்று ஞாயிற்றுக் கிழமை.

விடுமுறை தினம் என்பது ஆஸ்பத்திரியினுள் நன்கு தெரியும்.

பணியாட்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருக்கும்.

புதிதாக ஒரு நோயாளி வராவிட்டால் அல்லது அனுமதிக்கப்பட்டு இருந்த ஒருவர் துண்டு வெட்டி வீடு செல்லாவிட்டால் துப்பரவு பணியாளர்களோ... படுக்கை விரிப்புக்குப் பொறுப்பானவர்களோ வரமாட்டார்கள்.

டாக்டர்கள் வாட் றவுண்ட் வந்து நோயாளிகளைப் பார்ப்பது இல்லை.

மிகவும் அவசரம் என மருத்துவத் தாதிமார் அறிவித்தால் மட்டும் வருவார்கள்.

இராகுலன் கட்டாயம் தனியாகவோ அல்லது தனது இரண்டு மகள்களுடனோ தான் வருவான்.

சிலவேளை மருமகளுடன் சேர்ந்து வருவான்.

ஆஸ்பத்திரியில் நல்ல சாப்பாடு தருகிறார்கள்

என்றாலும் கேட்கமாட்டான்.

எனக்கும் பவித்திராவுக்கும் ஊர் மரக்கறி மீன் கறிகளுடன் சாப்பாடு எடுத்து வருவான்.

சாப்பாட்டுப் பெட்டியைத் திறந்தாலே பக்கத்து கட்டில்காரர் திரும்பிப் பார்க்கினம் என்று சொன்னாலும் கேட்க மாட்டான்.

இராகுலனைப் பிள்ளையாகப் பெற முற்பிறப்பில் புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

அவ்வளவு நிதானம்.

அதிகமாகப் பேசமாட்டான்.

எதற்கும் பதட்டப்படாமல் அமைதியாகப் பிரச் சனைகளை கேட்டுக் கொண்டு இருந்து விட்டு ஒரு தீர்வு சொன்னான் ஆயின் சரியானதாகவும் இருக்கும். நியாய மானதாகவும் இருக்கும். எதற்காகவும் பிழையான ஒன்றுடன் சமரசம் செய்து கொள்ள மாட்டான்.

இன்று போல் ஒரு ஞாயிறு பின்னேரம் வீட்டிற்குத் தனியே இராகுலன் வந்த பொழுது பவித்திரா அவனுக்குப் பிடித்தமான கடலைவடை செய்து கொடுத்த பொழுது அதையும் சாப்பிட்டுக் கொண்டு அவனே எனக்குச் சொன்னான், “எனக்கு முன்னாலை இருக்கிற என்னுடைய அப்பா, என்னுடைய அப்பா மட்டும் இல்லை... அவருக் குள்ளை ஒரு அப்பப்பா இருக்கிறார்... அப்பம்மா இருக் கிறார்... அவை கட்டிக்காத்த ஒரு கோயில் இருக்கு... திருவிழா இருக்கு... குதிரை வாகனம் இருக்கு.... நிறை வேறாத பல தோல்விகளும், மற்றவர்கள் செய்த துரோகத் தின் தழும்புகளும் இருக்குது அதுக்குப் பிறகு தான் உங்களுக்கு அம்மாவும் நாங்கள் மூன்று பிள்ளைகளும்”.

எவ்வளவு நிதர்சனமான உண்மை.

இராகுலன் தொடர்ந்தான்.

"ஆனால் நான் அப்பிடியில்லை... எனக்கு நானும் என் மனைவியினதும் என் பிள்ளைகளினதும் சந்தோசமும் அவையின்ர எதிர்காலமும் தான் முதல்..." அவன் சொல்லி முடிக்க முதல் நானும் பவித்திராவும் அவனை நிமிர்ந்து பார்க்க...."புரியுதப்பா... நிச்சயமாக அதுக்குப் பிறகு உங்களைப் பற்றிய அக்கறைகளும் இருக்கு" என முடித்துக் கொண்டான்.

"அப்ப உனக்குத் தம்பி தங்கச்சியில் அக்கறை யில்லையோ... " பவித்திரா கேட்டாள்.

"அக்கறை எண்டது வேறு.. அவையின்ரை பொறுப்பு எல்லாத்தையும் என்ர தலையில் தூக்கி வைத்துக் கொண்டு நான் கஷ்டப்படுறதோ... சிலவேளை அதாலை ஏமாற்றங்களைச் சந்திக்கிறதோ எனக்குச் சரி வராது... அவை அவை தாங்களாக வாழுறதுக்கும் தங்களைத் தாங்களே முன்னேற்றுவதுக்கும் இந்த நாடு எல்லா வசதியையும் செய்து கொடுத்து இருக்கு...."

அவன் சொல்வதில் உள்ள உண்மைகள் உடனே புரியாவிட்டாலும்... அல்லது ஏற்றுக் கொள்ள முடியாது இருந்தாலும்... மாடு இரைமீட்டுவது போல மீண்டும் மீண்டும் யோசிக்கும் பொழுது அதில் உள்ள உண்மையும் அதன் ஆழமும் விளங்கும்.

அன்று இருள் கவ்வும் வரை இருந்து கதைத்துவிட்டு வீட்டுக்குப் போகும் பொழுது பவித்திரா மிகுதிக் கடலை வடைகளைச் சுற்றிக் கொடுக்கும் போது "தாங்ஸ் அம்மா... " என்றபடியே சொன்னான், "நான் எனது பிள்ளைகளுக்கு

இப்படிக் கட்டிக் கொடுத்து விடவேண்டும் என்று யோசிப்பேனோ தெரியாது" என்று.

அப்படி வேறு வேறு சிந்தனைகளுடன், வேறு ஒரு நாட்டில் அவதாரம் எடுத்திருக்கும் எங்கள் சந்ததியைப் பல சந்தர்ப்பங்களில் ஏற்றுக் கொள்ளவும் முடியாது, மறுக்கவும் முடியாது இருக்கிறது.

இன்று அவனை அதிகமாகவே ஆஸ்பத்திரிக்கு எதிர்பார்க்கின்றேன்.

ஏதோ அவனுடன் அதிகம் கதைக்க வேண்டும் போல் இருக்கின்றது.

அது ஏன் என்று தெரியாது.

பின்பொருமுறை கதைக்க முடியாமல் போய் விடும் என்ற என் உள்மனவுணர்வு தானோ தெரியாது.

திரும்பிப் பவித்திராவைப் பார்க்கின்றேன்.

ஒரு கொப்பியில் அவசர அவரசமாக ஏதோ எழுதிக் கொண்டு இருக்கின்றாள்.

ஆழமாக யோசிக்கின்றாள்.

பின்பு தனக்குள் சிரித்துக் கொள்கின்றாள்.

மீண்டும் கொப்பியில் எழுதுகின்றாள்.

இது ஒரு தாளலயம் போல மீண்டும் மீண்டும் நடந்து கொண்டிருக்க... "என்ன எழுதுகிறாய்..." என்றேன்.

சிரித்தபடியே தனது கொப்பியை எனக்குக் கிட்ட வாகக் கொண்டு வந்து காட்டுகின்றாள்.

அவள் பாலர் பள்ளிக்கூடத்தில் பாடும் டெனிஷ் பாட்டுகளைப் பானுவுடன் வந்து போன பேரனின் பெயரை வைத்துத் தமிழில் அவனுக்காகப் பாட்டுகள் எழுதிக்

கொண்டிருந்தாள்.

"மிஸ்டர் ஜாக்கொப் மிஸ்டர் ஜாக்கொப்" என்பதனை மாற்றி....

"மிஸ்டர் சூர்யா... மிஸ்டர் சூர்யா...
நித்திரையோ... நித்திரையோ...
மணி அடிக்குது... மணி அடிக்குது...
எழுந்து வா... எழுந்து வா...

அருள்நிதி தரவரும் சூர்யாவே
ஆனந்த மலையே சூர்யாவே
அலைகடலே பள்ளி
எழுந்தருள் வாயே சூர்யாவே

மிஸ்டர் சூர்யா... மிஸ்டர் சூர்யா...
நித்திரையோ... நித்திரையோ...
மணி அடிக்குது... மணி அடிக்குது...
எழுந்து வா... எழுந்து வா..."

டெனிஸ் பாட்டில் தொடங்கி திருப்பள்ளி எழுச்சி யில் முடித்திருந்தாள் தன் பேரனுக்கான பாடலை.

இப்படிப் பல பாடல்கள்.... திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, ஆண்டாள் பாடல்கள் என.

அவளின் தலையைத் தடவிக் கொடுத்தேன்.

"நீ மட்டும் இலக்கிய உலகத்துக்கை போயிருந்தால் அதிகம் பேரைத் தூக்கிச் சாப்பிட்டிருப்பாய்...."

சிரித்தபடியே சொன்னாள், "தூக்கிச் சாப்பிட்டு

என்ன செய்யுறது... என்ரை மூன்று பிள்ளைகளையும் நல்ல விதமாய் வளர்த்து உங்களையும் நல்லாய்க் கவனிச்சதே எனக்குப் போதும்"

வியப்பாகத் திரும்பிப் பார்த்தேன்.

அவள் தப்பாக விளங்கிக் கொண்டிருக்க வேண்டும்.

"என்னப்பா செய்யுறது.... பானுவுக்கு ஏதோ கஷ்ட காலம்... அதுதான் பிள்ளை அப்பிடிச் செய்து போட்டுது... எங்களிலை அன்பும் அக்கறையும் இல்லாட்டி கைக் குழந்தையையும் தூக்கிக் கொண்டு ஆஸ்பத்திரிப் படியேறி வந்திருப்பாளோ... அங்கை அவை வீட்டுக்கை புருஷன், மாமன், மாமிமாரோடை என்னென்ன பிரச்சனைப் பட்டு வந்தாளோ...", அவளையும் மீறி வந்த கண்ணீரைக் கசக்கிக் கொண்டு சொன்னாள்..., "அவள் கொண்டு வந்து காட்டின சின்னனின்ரை முகத்தைப் பார்த்த பிறகு உங்கடை முகம் எவ்வளவு பிரகாசமாய் இருக்கு எண்டு எனக்குப் பார்க்க நல்லாய்த் தெரியுது...."

"உண்மைதான் அந்தச் சின்னச் சண்முகத்தாரை இன்னும் கொஞ்ச நேரம் என் நெஞ்சில் போட்டு அவருடன் கதைத்துக் கொண்டு இருந்திருக்கலாம் போலிருக்கிறது" ஆமோதித்தேன்.

இரத்த சம்பந்தம் என்ற சொல்லுக்குள் ஏதோ அர்த்தம் இருக்கிறது தான்.

மாடிப்படிகளில் அனேகர் பேசிக்கொண்டு வரும் சத்தங்களும் காலடியோசைகளும் கேட்கின்றன.

இராகுலன் மனைவி பிள்ளைகளுடன் தான் வருகின்றான் போலும்.

பேத்திமார் இருவரும் ஓடி வந்து வலது இடது பக்கமாய் நின்று என்னை முத்தமிட்டு டெனிஸில் சம்பிரதாயமாய்ச் சொல்லும் "நாங்கள் உங்களை மிகவும் விரும்புகின்றோம்" எனற வார்த்தைகளை மீண்டும் மீண்டும் சொல்லுகின்றார்கள்.

இவர்கள் இதனைச் சொல்லும் பொழுது, நுனி நாக்கால் சம்பிரதாயத்திற்காக இல்லாது உண்மையில் மனதின் ஆழத்தில் எங்களில் வைத்திருக்கும் பாசத்தில் தான் சொல்கிறார்கள் என்பது எனக்கு நல்லாய்த் தெரியும்.

பின்பு பவித்திராவிடம் ஓடுகிறார்கள்.

அவளையும் கட்டி முத்தமிடுகின்றார்கள்.

"அப்பம்மா ஆஸ்பத்திரியோடை நிக்கிறதாலை தமிழ் படிக்கிறதை விட்டுடாதையுங்கோ... வெள்ளிக் கிழமைகளில் தமிழ் வகுப்புக்கு ஒழுங்காய்ப் போறனீங்கள் தானே..."

"அந்த ரீச்சர் ரொம்ப அலுப்பு அப்பம்மா"

மருமகள் சாப்பாட்டுப் பெட்டிகளைத் திறந்து எனக்கும் பவித்திராக்கும் சாப்பாட்டைப் போடுகின்றாள்.

"மாமாக்குக் குழம்பைக் கொஞ்சமாய் போடுங்கோ..."

"இல்லை மாமி... உறைப்பைக் குறைச்சுப் போட்டுத் தான் இண்டைக்கு செய்தனான்"

உணவுத் தட்டை நீட்டுகிறாள்.

"பிள்ளையளுக்கு மேல் லாச்சியில் ரொபி இருக்கு. எடுத்துக் குடு... நீங்கள் இரண்டு பேரும் ஜூஸை எடுத்துக் குடியுங்கோ" என இராகுலனைப் பார்த்துச் சொன்னபடி சாப்பாட்டை வாங்கிக் கொள்கின்றேன்.

“அது பிரச்சனையில்லை நீங்கள் சாப்பிடுங்கோ”

சாப்பாடு நல்லாய்த் தான் இருக்கிறது.

கரையக் காய்ச்சிய குத்தரிச்சோறு... சுறாக்கறி... கத்தரிக்காய்ப் பால்க்கறி... தக்காளிச் சம்பல்... பவித்திரா வுக்கு சுறாக்கறிக்குப் பதிலா முருங்கைக்காய்க் குழம்பு...

இரண்டு மூன்று கவளம் சாப்பிட்டிருப்பேன் என நினைக்கின்றேன்.

பேத்திமார் இருவரும் பவித்திராவின் பக்கத்தில் இருந்த கொப்பியை எடுத்துப் பார்த்து விட்டு “ஹாய்... அப்பம்மா தமிழ் ஹோர்ம் வேர்க் பண்ணுறா போலை” என்றபடி அதனை எடுத்துப் பார்த்தார்கள்.

“யார் அப்பம்மா.... சூர்யா?”

பவித்திரா தயங்கியபடி ”பானு மாமியின்ரை பேபி. சூர்யா என்று பெயர்”

“பெரிய சாதிக்காரி வந்தவாவோ” என ஏளனமாக மருமகள் கேட்டாள்.

நெஞ்சினுள் குத்தியது.

“அவளாய் ஆஸ்பத்திரிக்கு வரேக்கை வராதை எண்டோ சொல்லுறது”

பவித்திரா சொல்ல இராகுலன் ஏதும் சொல்ல வில்லை.

மருமகளின் முகம் மட்டும் கொஞ்சம் மாறியதை அவதானிக்கக் கூடியதாய் இருந்தது.

“ஊம்... பறவாயில்லை மாமி... நாளைக்கு எங்கடை வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு வந்திடாதை யுங்கோ... எங்களுக்கும் இரண்டு பொம்பிளைப் பிள்ளையள்

இருக்கு அதுகளும் வயதுக்கு வரும் பொழுது நல்ல காரியங்களை எங்கடை இனஞ் சனங்களோடை நடத்த வேணும்... பிறகு நல்ல இரண்டு இடத்திலை செய்து கொடுக்க வேணும்”

மருமகள் கதைத்துக் கொண்டே போக நான் ஏதோ சொல்ல நினைத்தேன் என்று நினைக்கின்றேன்.

பிரக்கேறி அரைவாசி நிலையில் படுத்துக் கொண்டும் இருந்து கொண்டும் இருந்த என்மீது எல்லாச் சாப்பாடும் கொட்டி விட்டது.

“ஏன் சாப்பிடேக்கை இந்தக் கதைகளை” என தன் மனைவியைச் சற்று அதட்டியபடி ஓடி வந்து எல்லா வற்றையும் ஒழுங்கு செய்தான் இராகுலன்.

பவித்திராவும் தனது சாப்பாட்டை வைத்து விட்டு பெட்சீற்றுகளைக் கீழே எடுத்துப் போட்டுத் தானும் இராகுலனுடன் சேர்ந்து சுத்தம் செய்தாள்.

பேத்திமார் வைத்தியத்தாதிகளை அழைக்கும் அழைப்புமணியை அழுத்த அவர்களும் ஓடி வந்து எனக்கு வேறு ஆடைகள் அணிவித்து புதுக் கட்டில் விரிப்புகள் விரித்து உதவி செய்தார்கள்.

அப்பொழுது எனது சேட்டை மாற்றும் பொழுது “அப்பம்மா... அப்பப்பாவின்ரை அந்தப் புலிப்பல் சங்கிலியைக் காணேல்லை...” என்றார்கள்.

பவித்திரா என்னைப் பார்த்தாள்.

“நேர்ஸ் போகட்டும் பொறு” என அவளுக்கும், பொறுங்கள் என பேரப்பிள்ளைகளுக்கும் கையைக் காட்டினேன்.

நேர்ஸ்மார் போக, இராகுலனைப் பார்த்து, "பானு முதன் முதல் தன்ரை கைக்குழந்தையோடை வந்திருந்தவள்... பிள்ளையை வெறுங்கையோடை எப்பிடி அனுப்பிறது?... அதுதான் அதைக் கழற்றி அந்தப் பிள்ளையின்ரை கழுத்திலை போட்டு விட்டுட்டன்".

இராகுலன் ஏதும் பேசவில்லை.

ஆனால் மருமகளோ "நீங்களும் பிள்ளையளும் ஆறுதலாய் வாங்கோ... நான் வாறன்..." என்று சொல்லி விட்டு விறுவிறு என்று வார்ட்டை விட்டு வெளியே போய் விட்டாள்.

பேத்திகள் இருவரும் "சொறி அப்பப்பா எங்களாலை தானே..." என்றனர் மன்னிப்புக் கேட்கும் தோரணையில்....

"இல்லைக் குஞ்சுகள்... நீங்கள் கேட்காட்டியும் அப்பப்பாவும் அப்பம்மாவும் உங்களுக்கும் அப்பாவுக்கும் சொல்லித்தான் இருப்போம். இது ஒளிக்கிற விசயம் இல்லையே..."

பவித்திரா ஏதும் பேசாது இருந்தாள்.

இராகுலனுக்கு நிச்சயம் தனது மனைவியின் நடத்தையில் உடன்பாடு இருக்காது எனினும் மௌனமாவே நின்றிருந்தான்.

ஏதும் பேசவில்லை.

"நீயும் இனி வெளிக்கிடு... போய் அவளைச் சமாதானப்படுத்து"

நானே சொன்னேன்.

அவனைப் பார்க்கப் பரிதாபமாய் இருந்தது.

கொஞ்ச நேரம் நின்றிருந்தவன் "சரி போவம்" என

பிள்ளைகளுக்குச் சொல்லியபடியே என்னையும் பவித்திராவையும் கட்டியணைத்துக் கொஞ்சி விட்டுப் புறப்பட்டான்.

என் கண்களிலும் பவித்திராவின் கண்களிலும் கண்ணீர் தளும்பியது.

அதனைத் துடைத்தபடி பேத்திமாரும் எங்களுக்கு முத்தமிட்டு விட்டு விடை பெற்றுக் கொண்டிருந்தார்கள்.

படியில் இறங்கும் பொழுது "இது அம்மாவின் தவறு. அப்படிக் கதைத்தது" என டெனிசில் இளைய பேத்தி சொன்னதும், மூத்தவள் "ஒருத்தரும் வேண்டாம் என்று விட்டு போனவ... ஏன் திரும்பி வருவான்?" என்று சொன்னதும் துல்லியமாகக் கேட்டது.

இது சிறியவர்களின் வார்த்தைகளாக எனக்குப் படவில்லை. பெரியவர்கள் நான்கு சுவர்களுக்குள் கதைப் பதை பிள்ளைகள் வெளியே வந்து கதைக்கின்றார்கள் என்றே பட்டது.

எனக்கு மீண்டும் பிரக்கேறியது.

# 9

வாழ்க்கையில் எல்லோருக்கும் ஏதோ ஒரு கால கட்டத்தில் ஒரு கஷ்டம் வந்து எல்லோரையும் ஒரு தடவை உலுப்பி எடுத்துப் போவதுண்டு. அதனைச் சனி மாற்றம் என்று சொன்னாலும் சரி... குருமாற்றம் அல்லது குரு திசை என்று சொன்னாலும் சரி... இயற்கை இந்தச் சமநிலையைச் செய்து கொண்டேயிருக்கும்.

அவ்வகையில் எங்கள் குடும்பத்தை உலுக்கிய விடயமாக பபிதா இயக்கத்திற்குப் போனதைச் சொல்ல லாம்.

அப்பம்மா இருக்கும் வரை மடத்தடிச் சாத்திரியார் சொன்னதாக அடிக்கடி சொல்வது, "அவள் சிங்களத்திக்குப் பிள்ளையாய்ப் பிறந்திருந்தாலும் அவளின்ரை சந்தோசம் துக்கங்கள் தான் எங்கடை வாழ்க்கையின்ரை நன்மை தீமை எல்லாத்தையும் தீர்மானிக்கும்".

ஏன் என்று கேட்டால் அவர் சொல்வது, "உன்னை அப்பாவும் அம்மாவும் நல்லாய்ப் பார்த்துக் கொள்வது பெருமையான விசயம் இல்லை. காரணம் நீ உன் அப்பா அம்மாவின்ரை பிள்ளை.... ஆனால் பபிதா.... யாரோ

ஒருத்தியின் வயிற்றிலை.... யாரோ ஒருத்தனின் களங்கத்தைச் சுமந்து கொண்டு வந்த சீவன்... அந்தச் சீவனை நல்லாய் வைச்சிருந்தால் தான் கடவுள் எங்களையும் நல்லாய் வைச்சிருப்பார்".

அப்பம்மா சொன்னதையும் தாண்டி அவளை அப்பாவும் அம்மாவும் நானும் ஊரில் உள்ள அனைவரும் வியக்கும் வண்ணம் நல்லாய் வைச்சிருந்தோம் என்பதை ஊரே அறிந்திருந்தது.

அவள் இயக்கத்திற்கு போன பின்பு தான் அவளின் பூர்வீகக் கதைகள் எங்கள் வீட்டிற்குள் வந்து போனதே தவிர அவள் இருந்தவரை என்றுமே அப்படி ஒரு எண்ணமே எங்களுக்குள் வந்ததில்லை.

எங்களுக்கு முன்பாகவோ அல்லது பின்பாகவோ அவளைப் பற்றி எவரும் குறையாக கதைத்ததில்லை.

அவள் இருந்தவரை எங்கள் வீட்டு இராஜகுமாரி அவள்தான்.

எனக்கு நல்லாய் ஞாபகம் இருக்கு.

அவளுக்கு நண்டும் கணவாயும் நல்ல விருப்பம்.

எங்கள் வீட்டில் நண்டுக் கறியும் கணவாய்க் கறியும் சமைக்கும் நாட்களில் அப்பா-அம்மாவின் சாப்பாட்டுக் கோப்பைகளில் நண்டுக் குழம்பும் கணவாயக் குழம்பும் இருக்குமே தவிர நண்டும் கணவாயும் இராது.

இருவருமே தங்கள் தங்கள் பங்கை எடுத்து அவளின்ர கோப்பைக்குள் போட்டு விடுவார்கள்.

எனக்கும் அது விருப்பம் தான்.

ஆனால் என்றுமே எனக்கு அதையிட்டுப் பொறாமை

வந்ததே இல்லை.

பொறாமை வந்திருக்க வேண்டிய வயது தான் அது.

ஆனால் வரவில்லை.

அவளில் பாசம் மட்டும தான் வந்தது.

அவள் பெரிய பிள்ளையாகும் வரை என்னுடன் தான் ஓடி வந்து படுப்பாள்.

பின்பும் தொடர அம்மாதான் "பொம்பிளைப் பிள்ளை தனியப் படுக்க வேணும்... இல்லை என்னோடை படுக்க வேணும்" என்று தன்னுடன் வைத்துக் கொண்டு படுப்பார்.

அவளுக்கு கொஞ்ச ஆஸ்மா முட்டுக் குணமும் உண்டு.

மழைகாலம் வந்தால் வீட்டில் உள்ள தடித்த அத்தனை பெட்சீற்றுகளும் அவளுக்கு கீழேயும் மேலேயும் தான்.

ஆனால் இயக்கத்திற்கு போன பின்பு... எந்தக் காட்டுக்குள்ளை... எந்தக் குளிருக்கை.. ஆஸ்மா வந்து எப்பிடிக் கஷ்டப்படுகிறாளோ என அம்மாவும் அப்பாவும் பெரிதும் கவலைப்படுவார்கள்.

என்னுடைய ஒரே நேர்த்திக் கடன் அவள் எந்தச் சந்தர்ப்பத்திலும் இன்னோர் இயக்கத்திடமோ... இராணுவத்திடமோ உயிருடன் பிடிபடக்கூடாது என்பது தான்.

பபிதாவின் அம்மா அனுபவித்த கொடுமையை எந்த ரூபத்திலும் அவள் அனுபவித்து விடக் கூடாது என்பது தான் எங்கள் மூவரின் பிரார்த்தனையாய் இருந்தது.

அவள் போன பின்பு எந்தப் பிள்ளைகள் இராணு

வத்தினரால் சுடப்பட்டாலும் சரி... மாற்று இயக்கங்களால் சுடப்பட்டு அந்த அந்த இயக்கங்களால் வீர வணக்கம் செலுத்தப்பட்டாலும் சரி... அந்த விபரங்களை அறிந்து, அது பபிதா இல்லையென்ற பின்புதான் எங்கள் வீட்டில் ஒழுங்காகச் சமையல் சாப்பாடு நடக்கும்.

அவள் இயக்கத்திற்குப் போனதுதான் அப்பா அம்மாவுக்கு வந்த முதல் இழப்பு.

அதாலை நான் நாட்டை விட்டு வெளிக்கிட வேண்டி வந்ததுதான் அவர்களுக்கு வந்த இரண்டாவது இழப்பு.

ஒரு நாள் செக்கல்படும் நேரம்.

கோயிலடிக்குப் போய் விட்டு வந்து கொண்டிருந்தேன்.

வீட்டு வாசலில் ஆமி ஜீப் ஒன்று நின்றது.

எங்கள் வீட்டு முற்றத்தில் ஆட்கள் கலவரப்பட்டுக் கொண்டு நின்றார்கள்.

ஆமியுடன் விவாதிக்கும் அப்பாவின் குரல் பலமாகக் கேட்டது.

பபிதாவைத் தேடி வந்திருக்கிறார்கள் எனப் புரிந்து விட்டது.

நான் வந்ததை தூரத்தில் கண்டவுடன், அம்மா "வராதே" என்பது போல் கை காட்ட, நான் பனைவெளிப் பக்கமாய் ஓடத் தொடங்கினேன்.

ஆமிக்காரர்களில் ஒருவன் கண்டு விட்டான்.

துரத்திக் கொண்டு வந்தான்.

நான் ஓடியிருக்காவிட்டால் வேறு விதமாய்ச் சமாளித்திருக்கலாம்

இனிப் பிடிபட்டால் தொலைச்சுப் போடுவான்கள் என்ற எண்ணத்தில் மேலும் விரைவாக ஓடத் தொடங்கினேன்.

பிடிபட்டால் கொழும்பு நாலாம்மாடியில் வைத்து பபிதா பற்றி... எனக்குத் தெரியாத அவளது இயக்கம் பற்றியெல்லாம் துளைத்தெடுத்து விடுவார்கள். இந்த விசாரணைகளில் என் நகக்கண்களுக்குள் ஊசி ஏற்றப்படலாம்... நகமே பிடுங்கப்படலாம்.... முகத்தை மிளகாய் பையால் மூடிப் போட்டு அடிக்கலாம்... ஆணுடம்பு நசுக்கப்படலாம்.... பின்புறத்தினுள் பொல்லாங்கட்டை செருகித் துன்புறுத்தலாம்.

இந்த எண்ணங்களால் வேலிகள்... பற்றைகள்... வயல் வரப்புகள்... எல்லாம் தாண்டிக் குதித்துப் பறந்து கொண்டிருந்தேன்.

நல்ல காலம். எங்கள் ஊரின் முழுச்சந்து பொந்துகளும் தெரியாததால் என்னைப் பின் தொடந்தவனால் ஓரளவுக்கு மேல் தொடர முடியவில்லை.

பனங்கூடல் நடுவே இருந்த ஈச்சம் பற்றைக்குள் ஒளிந்து கொண்டிருந்த பொழுது தூரமாக அங்கும் இங்கும் ஆமி ஜீப்புகள் ஓடுவது கேட்டுக் கொண்டேயிருந்தது.

ஆனால் எனக்குக் கிட்டவாக வரவில்லை.

இரவு ஒன்பது மணியைத் தாண்டியதும் அவதானமாக வீட்டை வந்த பொழுது அம்மா ஓடி வந்து கட்டிக் கொண்டு அழத்தொடங்கினா.

வந்தவங்கள் பபிதா பற்றி விசாரித்த பின்பு என்னைப் பற்றியும் விசாரித்திருக்கிறான்கள்.

அப்பா புத்திசாலித்தனமாய் நான் கொழும்புக்கு

பாலனின் பட்டமளிப்பு வைபவத்திற்குப் போயிருக்கிறேன் என்று சொல்லியிருக்கின்றார்.

நான் கொழும்பால் வந்ததும் என்னையும் நான் அங்குதான் போயிருக்கின்றேன் என்று உறுதிப்படுத்த, பாலனையும் சாம்பசிவக்குருக்களையும் அவரது மனைவியை யும் கூட்டி வரச் சொல்லி விட்டுச் சென்றிருக்கின்றார்கள்.

அன்று பாலனுக்குப் பட்டமளிப்பு என்பது உண்மை தான் என்றாலும் வீணாக அப்பா பாலனையும் இழுத்து விட்டுவிட்டார் எனத் தோன்றியது.

அன்று நடுநிசியாகும் வரை பக்கத்துப் பக்கத்து வீட்டுக்காரர்கள் எல்லாம் நிலவு வெளிச்சத்தில் கூடியிருந்து நாடு போகும் போக்குப் பற்றியும்... தங்கள் தங்கள் பிள்ளை களின் எதிர்காலம் பற்றியும் கவலையுடன் கதைத்துக் கொண்டே இருந்தார்கள்.

மிகவும் கவலையான விடயம் என்னவென்றால் ஆமி முதன்முதலாய் எங்கள் ஊருக்குள் வருவதற்கு பபிதாவும் அவள் தோழியும் காரணமாய்ப் போய் விட்டார்கள் என்பது தான்.

எல்லோரும் விசனப்பட்டுக் கொண்டார்கள்.

எல்லோருக்கும் செல்லப்பிள்ளை போல இருந்த வள்... இப்போது எல்லோராலும் ஏதோ விதத்தில் வெறுக்கும் நிலைக்குப் போய் விட்டாள் என்பது வேதனை யாக இருந்தது.

மற்றப் பிள்ளை வீட்டை போய் அவளின் இரண்டு அண்ணன்மாரையும் விசாரணைக்கு யாழ்ப்பாணக் கோட்டைக்கு அழைத்துச் சென்றதால் அந்தக் குடும்பத்தினர் மிகக் கலக்கத்தில் இருக்கின்றார்களாம் என்று ஆட்கள்

கதைத்துக் கொண்டு இருந்தார்கள்.

பபிதா அவளைக் கூட்டிச் சென்றாளா... அல்லது அவள் பபிதாவைக் கூட்டிச் சென்றாளா என்று ஆளுக்காள் பேசிக்கொண்டு இருந்தார்கள்.

அப்பா மட்டும் உறுதியாகச் சொன்னார்.

"யாரையும் யாரும் கூட்டிக் கொண்டு போகவில்லை. எல்லாப் பிள்ளைகளுக்கும் ரியூட்டரியில் வைச்சு நடாத்திய பிரச்சாரத்திலை இதுகள் இரண்டும் மயங்கிப் போட்டுது கள்..."

"எப்பிடித் மயங்கிப் போட்டுதுகள் என்று சொல்லுறி யள்.... அதுகள் நாட்டு விடுதலை வேண்டும் என்றுதானே போயிருக்குதுகள்"

"பதினாலு வயது... யோசிச்சு முடிவெடுக்கிற வயசா..."

அப்பாவின் குரல் கொஞ்சம் எழ அனைவரும் மௌனமானார்கள்.

பிறகு அவர்கள் கொஞ்சங் கொஞ்சமாகக் கலைந்து போக... நானும் அம்மாவும் அப்பாவுமே முற்றத்தில் எஞ்சியிருந்தோம்.

எங்களுக்குள்ளும் பெரிய மௌனம் சூழ்ந்து கொண்டிருந்ததை மூவரும் உணர்ந்து கொண்டிருந்தோம்.

நிலவு கிழக்குப் பக்கமாய்ச் சரியத் தொடங்க "நல்ல சாமமாய்ப் போயிட்டுது... சாப்பாட்டை எடுத்துக் கொண்டு வாறான்" என்று அம்மா எழுந்த பொழுது அப்பாவோ "பொறு... எப்பவும் சாப்பிடுறது தானே.... இனித் தம்பியனை இஞ்சை வைச்சிருக்கிறது புத்தியில்லை...

இவன் பொலிஸ் ஸடேசனுக்குக் கையெழுத்து வைக்கப் போனால் அவ்வளவுதான். அதுபடியாலை நீ கெதியாய்க் கொழும்புக்குப் போய் வெளியிலை போற வேலையளைப் பார். பாலனோடை நீ கதை... சாம்பசிவக்குருக்களோடை நான் கதைக்கிறன்" என்றார்.

அம்மா என்னைப் பார்த்தார்.

அவாவின் முகத்தை நிமிர்ந்து பார்க்கும் துணிவு எனக்கு இருக்கவில்லை.

தூரத்தில் ஏதோ ஒரு நாய் ஊளையிட்டது.

மற்ற மற்ற வீட்டு நாய்களும் ஊளையிடத் தொடங்கியன.

பபிதாவும் சிவசம்பு மாஸ்டரின் மகளும் இயக்கத் திற்குப் போனதால்தான் இராணுவம் ஊருக்குள் வந்தது என ஒரு நாய் ஊளையிட மற்ற ஊர் நாய்களும் சேர்ந்து ஊளையிட்டது போல அது எனக்குப் பட்டது.

கடைசியாக எங்கள் வீட்டு நாயும் கிணற்றுக் கட்டிலில் நின்று ஊளையிட்டது.

எனக்கு பபிதாவின் சாமத்திய வீட்டைப் புறக்கணித்த பெரியம்மாவின் முகமும்... சின்ன மாமியின் முகமும் வந்து போனது.

அன்றைய இரவு என்னை நித்திரை கொள்ள விடாமல் இந்த ஊளைச்சத்தங்கள் எரிச்சலூட்டிக் கொண்டிருந்தன.

*

அடுத்தநாள் என்னை றோட்டில் கண்ட எல்லோரும், "பொலிஸ் ஸ்டேசனுக்குப் போய் கையெழுத்து வைச்

சாச்சா?... அல்லது எப்போபோய் கையெழுத்து வைக்கப் போறீங்கள்" என்று கேள்விகளால் என்னைக் குடைந்து கொண்டிருந்தார்கள்.

அவர்களுக்கு இனியொரு தடவை ஊருக்குள் இராணுவம் வந்து விடக்கூடாது என்ற எண்ணமே தவிர வேறெதுவும் இல்லை.

அப்பா காசு பிரட்ட மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்.

தாலிக் கொடி உட்பட அம்மாவின் நகைகள்... பபிதாவுக்கு சாமத்திய வீட்டுக்கு செய்த நகைகள் எல்லாத்தை யும் அடைவு வைக்க யோசித்தார். அதுவும் போதாமல் இருக்க அதனை விற்றுவிடக் கணக்குப் பார்த்த பொழுது அப்போதும் அது போதாமல் இருந்தது.

எனவே அம்மாவின் வீட்டுப் பத்திரத்தை ஈடு வைத்து கடனாகக் காசு வாங்க அப்பா யோசித்தார்.

அம்மாக்குச் சீதனமாகக் கொடுத்த வீட்டில் ஏதோ நாங்கள் நாலு பேரும் வாழ்ந்தோமே தவிர அது ஒன்றும் பெரிய வீடு என்றில்லை. சின்ன மாமி கற்றனில் இருந்து திரும்பிவரும் வரை நாங்கள் எங்களுக்கு என்று ஒரு வீடு வேண்டும் என்று யோசித்திருக்கவே இல்லை. அம்மம்மாவும் அம்மப்பாவும் வாழ்ந்து போனபின்பு கவனிக்காமல் இருந்த அந்த அம்மாவின் சீதன வீட்டில்தான் நாங்கள் வாழ்ந் திருந்தோம். வீட்டைச் சுற்றி பெரிய காணியும் இல்லை. எனவே நாங்கள் எதிர்பார்த்திருந்த தொகையை யாரிடமும் பிரட்ட முடியாமல் இருந்தது.

அப்பொழுது ஒரு காரைநகர் வியாபாரி எங்கள் தூரத்து உறவினரும் கூட ஒரு ஆலோசனை சொன்னார்.

அப்பப்பாவின் பெரிய வீட்டையும் வளவையும் ஈடு வைத்தால் எமக்கு தேவைப்படும் அந்தத் தொகையைத் தருவதாக.

அப்பாவுக்கு வந்த கோபத்தைப் பாத்திருக்க வேண்டும்.

அது மாமிக்கு என்றோ எழுதிக் கொடுத்தாயிற்று என்பதால் இல்லை.

எப்படி அப்பப்பாவின் அந்தப் பெரிய வீட்டின் மீதும் வளவு மீதும் அவருக்கு கண் விழுந்தது என்று தான்.

உறுதியாகச் சொன்னார், "என்ரை பிள்ளை வெளி நாடு போகாட்டியும் பறவாயில்லை... அவனை ஆமிக் காரன்கள் வந்து பிடிச்சுக் கொண்டு போய் கொண்டாலும் சரி... அந்தக் காணியிலை சரி... வீட்டிலை சரி.... எவன்ரை கையும் படவிடமாட்டேன்"

அப்பா "ஆம்" என்று சொல்லியிருந்தாலும்... நான் மாட்டேன் என்றுதான் சொல்லியிருப்பேன். ஆனால் அன்று அப்பா கொண்ட ஆவேசத்தை என்றுமே நான் கண்ட தில்லை.

அப்பா வாழ்க்கையில் மிகவும் கவலைப்பட்டது என்றால் பபிதா வீட்டில் இருந்து இயக்கத்திற்குப் போன பொழுது தான்.

அதே போல் கோபப்பட்டது என்றால் இந்தக் காணி ஈடு வைக்கும் கதை வந்த பொழுது தான்.

அதேபோல் மிகவும் சந்தோசப்படுற ஒரு அப்பாவை நான் ஏதோ ஒரு நாள் காணவேண்டும் என்று எனக்குள் உறுதி எடுத்துக் கொண்டேன்.

எங்கள் குடும்பம் எந்தப் பிறவியில் செய்த புண்ணியமோ தெரியாது... நான் பாலனுடன் கொண்டிருந்த நட்பும், சாம்பசிவக்குருக்கள் எங்கள் அனைவரோடையும் வைத்திருந்த நல்ல அபிப்பிராயமும் தான் எனக்கு வானில் விடிவெள்ளியைக் காட்டியது.

ஆமி ஊருக்குள் வந்த மூன்றாம் நாளே வந்த சாம்பசிவக்குருக்கள் தானாகவே முன்வந்து சொன்னார், "தேவைப்படும் மிகுதிக் காசை நான் தருகிறேன். பாலனுக்கும் ரெலிபோனில் சொல்லிப் போட்டேன்... இனியும் ஸ்கொலசிப்... அது... இது... என்று பார்த்துக் கொண்டிருக்காமல் இரண்டு பேருமே எவ்வளவு விரைவில் இலங்கையில் இருந்து புறப்பட முடியுமோ... அவ்வளவு விரைவில் புறப்படுங்கள்", என்று.

இராணுவம் கொடுத்த ஒரு கிழமைக்குள் நாட்டை விட்டுப் புறப்பட்டு விட வேண்டும்.

அல்லது கட்டுநாயக்கா விமானநிலையத்தால் வெளிக்கிட முடியாது.

பாஸ்போட் எடுக்க வேண்டும்... ஏஜன்ற் ஒருவரைப் பிடிக்க வேண்டும்...என்றி விசாவில் முதலில் ரஸ்யாவுக்குப் போய் பின்பு அங்கிருந்து ஏதோ ஒரு ஐரோப்பிய நாட்டுக்குப் போகவேண்டும்.

ஒரு கிழமை கூட இருக்கவில்லை.

ஐந்து நாட்கள் மட்டுமே இருந்தன.

அந்தக் கெடு என்பது ஒரு உயிருக்கு விதிக்கப்பட்ட பாசக்கயிறு போல் இருந்தது.

அது கழுத்தை இறுக்கப் போகிறதா.... அல்லது அதை கழுத்தில் இருந்து தூக்கி எறிந்து விட்டுப் போகப்

போகிறமா என்பதனைத் தீர்மானிக்க முடியாமல் இருந்தது எங்கள் நிலைமை.

ஊரில் எவருக்கும் சொல்லவில்லை.

ஒருவருக்குச் சொன்னால் கூட அது ஒரு பத்திரிகைச் செய்தியாக மாறிவிடக் கூடிய நிலை.

அப்பா அம்மாவைக் கூட என்னைப் பயணம் அனுப்ப யாழ்ப்பாண பஸ் ஸ்டான்ட்டுக்கு வர வேண்டாம் என்று சொல்லியிருந்தேன்.

புறப்படுவதற்கு முதல்நாள் சைக்கிளை எடுத்துக் கொண்டு நான் படித்த பள்ளிக்கூடம்... விளையாடிய வயல்காணிகள்... தினமும் காலையில் செல்லும் சந்தை யடி... கடைசியாக மாமி வீட்டடிக்குப் போய் எங்கள் பெரிய வீடு முன்னால் உள்ள மால் - பின்னால் சுருட்டு மேடை அமைந்திருந்த அறை.... அதற்குப் பின்னால் இருந்த பனங்கூடல்.... நாவல் மரத்தடி... அதில் சாத்தி வைத்திருந்த வைரவர் சூலம்... அனைத்தையும் சுற்றி வந்தேன்.

சின்ன மாமிக்கு என் நடத்தை விநோதமாய் பட்டிருக்க வேண்டும்.

"எப்ப போய் ஆமியிட்டை கையெழுத்து வைக்கப் போறாய்"

"நாளைக்கு"

மேலும் அங்கு நின்றால் சின்ன மாமி இன்னமும் துளாவுவா என்பதாலும் சின்ன மாமா வந்தால் இன்னு மின்னும் துளாவுவார் என்பதாலும் கெதியாகவே சைக்கிளில் ஏறிக் கொண்டேன்.

சின்ன மச்சாளும் மச்சான்மாரும் ரியூசனுக்கு

ரவுணுக்குப் போயிருந்தார்கள்.

மனம் கனக்க சைக்கிளைக் கோயிலடிக்கு விட்டேன்.

பின்னேரப்பூசை முடிந்து சாம்பசிவக் குருக்கள் நடையைச் சாத்த ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்.

அவரும் ஐயரம்மாவும் மட்டுமே நின்றிருந்தார்கள்.

எனது வருகையை அவர்கள் புரிந்து கொண்டார்கள்.

அவரே என் நெற்றியில் மந்திரம் சொல்லி விபூதி இட்டு விட்டார்.

அவர்கள் இருவரையும் பக்கம் பக்கமாக நிற்கச் சொல்லி அவர்களின் காலில் விழுந்து கும்பிட்டேன்.

என் கண்களால் கண்ணீர் ஓடத் தொடங்கியது.

அவர்களும் அதனை எதிர்பார்க்கவில்லை.

"உன்ரை அப்பப்பா செய்த புண்ணியங்களும்... உன்ரை அப்பா அம்மாவின்ரை நல்ல குணங்களும் உனக்கு எந்த குறையும் கிட்ட வர விடாது. நீயும் பாலனும் சேமமாய் இருப்பியள்" என என்னை ஆசீர்வதித்தார்கள்.

குருக்கள் வாசல் கதவைப் பூட்ட திறப்பை தன் மடியில் இருந்து எடுத்தார்.

"ஒரு நிமிடம்" என்று சொல்லி விட்டு மூலஸ்தானத்திற்கு வலது பக்கத்து மண்டபத்தில் நிற்றிருந்த எங்கள் குதிரை வாகனத்திடம் ஓடினேன்.

அது அதன் அதே கம்பீரத்துடன் நின்றிருந்தது.

"நான் கோழையாகத்தான் ஓடிப்போறன்.... ஆனால் வீரனாயத் திரும்பி வருவேன்".

அதனிடம் சொல்லி விட்டு வெளியில் வந்தேன்.

அது முன்னும் பின்னும் ஆடியது போல இருந்தது.

அது என் பிரமையாகவும் இருக்கலாம்.

என்னைத் தேடி அப்பாவும் அம்மாவும் கோயிலடிக்கு வந்திருந்தார்கள்.

கையில் இருந்த கற்பூரத்தை வெளியில் வைத்திருந்த கற்பூரம் எரிக்கும் சட்டியில் வைத்துக் கொளுத்தி அம்மா வணங்கினா.

எங்கே அம்மா உடைந்து விடுவாவோ என நானும்... எங்கே நான் உடைந்து விடுவனோ என அம்மாவும் மிகவும் பயந்திருந்தோம்.

“உன்னை நம்பித்தான் என்ரை பிள்ளையை அனுப்புறன்”

அம்மா முருகனிடம் உறுதியாய்ச் சொன்னார்.

“நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். அவன் எங்கள் இரண்டு பிள்ளைகளையும் பார்த்துக் கொள்ளுவான்” என சாம்பசிவக்குருக்களும் அவர் மனைவியும் அம்மாவை ஆசுவாசப்படுத்தினார்கள்.

வீடு திரும்பினோம்.

அன்றிரவு வீட்டில் ஒரு மௌனப் போராட்டம் தான்.

யாரும் எவருடனும் எதுவும் பெரிதாகப் பேசிக் கொள்ளவில்லை.

மூவருக்கும் இடையே ஒரு மௌனயுத்தம் நிகழ்ந்து கொண்டிருந்தது.

இரவு நித்திரை எங்களை அணைக்கவில்லை.

அடுத்தநாள் அதிகாலை....

இரண்டாவது தடவையாக என் தொப்புள்கொடியை நானே அறுத்து விட்டதாக உணர்ந்த நாள் அது.

# 10

பானு வந்த அன்று மதியம் ஏற்பட்ட பிரக்கடிப்பு போல இப்போ அடிக்கடி வருகிறது.

நேற்று மாலை பாலன் வந்திருந்த பொழுது எனக்கு அடிக்கடி பிரக்கேறுவது பற்றி பவித்திரா அவனிடம் சொல்லிக் கவலைப்பட்டாள்.

"நான் நினைக்கிறன் நீ அதிகமாகக் கவலைப் படுகிறாய்... அல்லது ரென்சன் படுகிறாய்..." என்று சொல்லி விட்டுத் தானே என்னைச் சோதித்தான்.

மாலையில் எனக்குக் காய்ச்சல் இருக்கின்றதா என உடல் வெப்பநிலை அளக்க வந்த நேர்ஸ் பாலனை விநோத மாகப் பார்த்தாள்.

அவளுக்கு தெரியும் எனக்குரிய வைத்தியர் வேறு ஒருவர் என்று.

அவன் ஆஸ்பத்திரியின் பெரிய அதிகாரியாக இருந்தாலும் அந்த அந்த நோயாளிகளுக்கு அந்த அந்த வைத்தியர்கள் என்பது தான் விதிமுறை.

அவர்களை மீறி பாலனால் ஒரு பனடோல் கூட எனக்குத் தரமுடியாது.

அவ்வாறுதான் இந்த நாட்டில் உள்ள எல்லாத் துறைகளும்.

அதன் காரணமாகவே இந்த நாடு இவ்வளவு ஸ்திரமாய் இருக்கிறது.

நீதித்துறையின் அதிகாரத்திற்குப் பக்கத்தில் காவல்துறை செல்லவே முடியாது. இலஞ்சம் என்ற ஒன்றை காவல்துறையின் கண்களுக்கு கிட்டவே காட்ட முடியாது.

போதையில் காரோட்டிய வருங்கால முதலமைச்சர் ஒருவர் வாழ்நாள் முழுவதும் சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராய்க் கூட வர முடியாமல் போனதும் இந்த நாட்டில் தான்.

இலங்கையில் இருந்து தனியாக அகதியாக வந்த கணவன் அல்லது மனைவி, இலங்கையில் உள்ள அவர்களது குடும்பத்தை இங்கு அழைத்துக் கொள்வதை, அரசாங்கம் தாமாகவே முடிவெடுத்து தற்காலிகமாகத் தடுத்து நிறுத்தி வைத்தது பற்றி... பாராளுமன்றத்தில் எதிர்கட்சி உறுப் பினர்கள் கேட்ட கேள்விக்கு தவறான பதில் அளித்த ஆட்சி யும் கவிழ்க்கப்பட்டு பிரதம மந்திரியும் நீதி அமைச்சரும் சிறைக்கு அனுப்பப்பட்டதும் இந்த நாட்டில் தான்.

இலங்கை இந்தியாவில் இப்படி ஒரு செய்தி வருவதாயின் அடைப்புக் குறிக்குள் “யாவும் கற்பனை” என்றுதான் போட வேண்டும்.

“என்ன யோசிக்கிறாய்” என நிஜ உலகிற்குப் பாலன் என்னை அழைத்து வந்தான்.

“நாளைக்கு இந்த வாட் டொக்டர் ஜோன்சன் மத்தியூ ஒரு கொன்பரன்ஸ்க்கு வருவார். நான் அவரோடை கதைக்கிறன்... “இந்தாங்கோ கோயிலிலை இவனுக்கு

அர்ச்சனை செய்தனான். படுக்க முதல் வாய் முகம் கழுவின பிறகு பூசி விடுங்கோ. சின்னவளுக்கு இன்டைக்கு சங்கீத வகுப்பு இருக்கு கூட்டிக் கொண்டு போக வேண்டும் " எனக் கிளம்பினான்.

"அவளுக்கு 24 வயதாகப் போகுது... இப்பவும் சின்னவள் தானே... பெரியவள் என்று ஒருத்தி இருந்தாலும் பறவாயில்லை.... ஹரிணி என்று என்ன அழகான பெயரை வைச்சிட்டு சின்னவள் சின்னவள் எண்டு கூப்பிட்டுத் திரிகிறாய்" சிரித்தபடியே சொன்னேன்.

"நீங்களும் ஹரி என்ற அழகான பெயரை வைச்சிட்டு தம்பியன் எண்டுதானே கூப்பிட்டுக் கொண்டு திரியிறியள்... அது சரி, எப்ப ஹரி வாறான்" எனத் தனது பையை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

"சும்மா அவனை அமெரிக்காவிலை இருந்து அலைக் கழிச்சுக் கொண்டு...." நான் முணுமுணுக்க.... "அவன் இந்த வெள்ளி வருகிறான். ஒரு கிழமை நிற்பான்" என்ற பவித்திரா, "அண்ணாவை வாசல்வரை கொண்டு போய் விட்டு விட்டு வருகிறன்" என பாலன் பின்னால் கிளம்பினாள்.

எனக்கு நல்லாய்த் தெரியும்.

என் உடம்பு இன்னும் எத்தினை நாட்களுக்கு தாங்கும் எனப் பாலனிடம் தனியாகக் கேட்கப் போகின்றாள்.

அவள் திரும்பி வரும் பொழுது அவளின் கண்கள் எனக்குக் காட்டித் தரும் என்ன பேசியிருப்பார்கள் என்று.

பாலனுக்கும் மனதுக்குள் ஏதோ இருந்துதான் ஹரி எப்போ வருவான் என்று கேட்டானோ தெரியாது.

*

பவித்திரா திரும்பி வந்த பொழுது நான் அயர்ந்து

கொண்டு போகின்றேன் போலும்.

இப்பவெல்லாம் அதிகமாகக் கதைத்தால் கெதியாகக் களைக்குது.

அப்பிடியே களை கண்களை அழுத்தித் தூங்க வைத்து விடுகிறது.

அசதித் தூக்கத்தில் சின்னவன் பயணத்தால் வந்து நிற்பது போல இருந்தது. பின்னால் ஹரிணி அசைந்து திரிவது போலத் தெரிந்தது.

கண்ணை நன்கு விழித்து அகட்டி உற்றுப் பார்த்தேன்.

பவித்திரா ஏதோ மந்திரங்களைச் சொல்லிக் கொண்டு குறுக்கும் நெடுக்குமாய் நடந்து கொண்டு இருந்தாள்.

"பாலன் உன்னட்டை என்ன ரகசியமாய்ச் சொன்னவன்?"

"உங்களுக்கு விசர் எண்டு சொன்னவர்..." என்னைச் சட்டைசெய்யாது தொடர்ந்து தனது மந்திரத்தினுடனேயே நடந்து கொண்டு இருந்தாள்.

"தம்பியனைக் கூப்பிட யார் எயர்ப்போர்டுக்கு போறது?"

"ஏன் இராகுலன் தான்... சித்தப்பாவைக் கூப்பிடத் தாங்களும் வாறன் எண்டு இரண்டு பேத்திமாரும் போகினமாம்..."

"அப்பா குடும்பத்தில் இறந்து போன அவரின் அக்காவை விலத்திப் பார்த்தால் இரண்டு ஆண்பிள்ளைகள். ஒரு பெண் பிள்ளை. எங்களுக்கும் வீட்டிலை இரண்டு ஆண்பிள்ளைகள். ஒரு பெண் பிள்ளை. இரண்டு இடத்திலும் பெண் பிள்ளை வழியால்தான் பிரச்சனையும் வந்தது."

"மனதைப் போட்டு அலைக்கழிக்காதையுங்கோ... பிறகு பிரக்கடிக்கத் தொடங்கி விடும்"

"இனி என்ன நடந்தென்ன.... பார்க்கிறதெல்லாம் பார்த்து... சந்தோசப்படுகிறது எல்லாம் சந்தோசப்பட்டு... கவலைப்படுறது எல்லாம் கவலைப்பட்டு... அவமானப் படுறது எல்லாம் அவமானப்பட்டு முடிஞ்சிட்டுது... இனியென்ன?"

"ஏன்?... ஹரி இருக்கிறது உங்கடை கண்ணுக்குப் படவேயில்லையோ..."

"ஊஹம்...", ஆழமான ஒரு பெருமூச்சு என்னுள் எழுந்து தாழ்கின்றது.

"நீயும் நானுமாய் அவன்ரை காலைக்கட்டிப் போடாட்டி, நேற்று வந்து நெஞ்சிலை கிடந்தது போல இன்னும் ஒண்டையோ இரண்டையோ நாளைக்கு கூட்டி வந்து வந்து என்னைப் பாத்திருப்பான்"

"ஏன் என்னையும் உங்களோடை சேர்க்கிறியள்?... நீங்கள்தான் அவன்ரை காலைக்கட்டிப் போட்டியள்... உங்களைக் கட்டின பாவத்தாலை நான் உங்களுக்கு கட்டுப் பட்டு நிண்டன்"

அவள் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை.

தொடர்ந்து அறையினுள் நிலவிய மௌனம் என்னைக் கொன்றது.

பவித்ராவும் மனதுக்குள் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கின்றாள் போலும்.

*

ஹரி... ஹரிணி...

பார்த்தால் முழுக்க முழுக்க ஒரு பிராமணப் பையன் போன்ற என் மகன் ஹரியும்.... யாரும் எளிதில் பிராமணப்பிள்ளை என்று சொல்லிவிட முடியாத பொது நிறம் கொண்ட பாலனின் மகள் ஹரிணியும்... சின்ன வயது முதல் ஒன்றாக விளையாடி... ஒன்றாகப் படித்து... நல்ல நண்பர்களாய் பள்ளிக்கூடத்தில் படித்துக் கொண்டிருந்த பொழுது எனக்கிருந்த வேண்டுதல் எல்லாம், இந்த நட்பு என்பது எந்த வேளையிலும் ஒரு துளியும் அதனைத் தாண்டிச் சென்று விடக்கூடாது என்பதே.

ஹரிணி பாலனின் மகளாய் இல்லாமல் இருந் திருந்தால், நானும் பவித்திராவும் அவளைப் பெற்றவர் களிடம் போய்க் கை ஏந்தி இருந்திருப்போம் - அவளை எங்களுக்கு மருமகளாய்த் தாருங்கள் என்று.

அப்படி ஒரு தெய்வீகக் களை.

அம்மனின் களை முகத்தில்.

முன்னால் பிள்ளையாரின் தேர்... நடுவே வள்ளி தெய்வானை சகிதமாய் எழுந்தருளி முருகனின் தேர்.... பின்னால் பெண்கள் இழுத்து வரும் தேரில் வீற்றிருக்கும் அம்மன் போல... அந்த அம்மனின் கருணை... தெய் வீகம்... கம்பீரம்... கருணை... அத்தனையும் ஹரிணியின் முகத்திலும் பழக்க வழக்கங்களிலும் இருக்கும்.

ஹரியை விடவும் அவளுக்கு என்னிடமும் பவித்திரா விடமும் அப்படி ஒரு ஈடுபாடு.

பவித்திராவும் அப்படித்தான்.

பானுவுக்கு எங்கே எப்போது எது வாங்கினாலும் ஹரிணிக்கும் வாங்காமல் விடுவதில்லை.

பொது விழாக்களில் பலர் என்னிடமும் பாலனிட

மும் தனித்தனியே கேட்டிருக்கிறார்கள்"

"உங்களுக்கு இரண்டு பெண் பிள்ளைகளா" என்று. பானு மூத்தவள்... ஹரிணி இளையவள் என்பது பலரின் நினைப்பாய் இருந்தது.

பாலன் இங்கு வந்த பின்பும் கோயில் காரியங்கள் பார்ப்பதால் அவன் ஆசாரத்தை தொடந்து கடைப்பிடித்துக் கொண்டு இருந்தான்.

அவனும் மனைவியும் என்றுமே எங்கள் வீட்டில் கை நனைப்பதில்லை.

போத்தலுடன் கொடுக்கும் சோடாவை மட்டும் வாய் போத்தலில் படாமல் அவனும் மனைவியும் அருந்துவார்கள்.

எனக்கு இன்னோர் சாம்பசிவக்குருக்களைப் பார்ப்பது போல இருக்கும்.

ஆனால் ஹரிணிக்குச் சின்னச் சின்னச் சுதந்திரங்கள் கொடுக்கப்பட்டிருந்தன.

ஹரிணி வீட்டுக்கு வருகிறாள் என்றால் அன்று எங்கள் வீட்டில் மாமிசம் சமைக்கும் அனைத்துச் சட்டிகள்... கோப்பைகள்... கத்தி கரண்டிகள் என்பன பின் அறைக்குப் போய் விடும்.

கோயில் திருவிழாக் காலங்களில் வீடுகளில் சமையல் நடப்பது போல.... அல்லது அதனையும் விடப் பரிசுத்தமாயும் ஆசுவாசமாகவும் பவித்திரா பல விதமான பலகாரங்கள் செய்து வைத்திருப்பாள்.

"அன்ரி... அன்ரி..." என்று ஹரிணி பவித்திராவின் பின் சுற்றுவாள்.

எல்லாத்தையும் எப்படி எப்படிச் செய்வது என்று கேட்டு எழுதி எடுத்துச் சென்று அடுத்தமுறை எங்கள்

வீட்டுக்கு வரும் பொழுது தானே செய்து வருவாள்.

அப்போது தான் பானுவுக்குப் பவித்திராவை உதாரணம் காட்டிப் பேச்சும் விழும்.

"அந்தப் பிள்ளைக்குச் சமையலிலை இருக்கிற அக்கறை உனக்கு ஒரு சதமேனும் இல்லை", என.

நான் - பவித்திரா - இராகுலன் - பானு - ஹரி பாலன் - அபிராமி அண்ணி - ஹரிணி அனைவரும் சம்மர் காலங் களிலும் இலைதளிர் காலங்களிலும் தோட்டத்தில் இருந்து பொழுது போக்குவதும்... பூங்கன்றுகள் நடுவதும்.... கோடைகாலத்தில் இருவீட்டுக்கு வெளியேயுள்ள புல் தரையை புல் வெட்டி அழகுபடுத்துவதும்... பின்பு கடற் கரைக்குச் செல்வதும்... இலையுதிர் காலங்களில் காடுகளுக் குள் நடந்து திரிந்து காளான் பொறுக்குவதும்... பவித்திரா வும் அபிராமி அண்ணியும் வின்ரர் காலத்திற்கான சுவெற்றர் பின்னுவதும்.... நானும் பாலனும் பிள்ளைகளுடன் இருந்து சீட்டு விளையாடுவதும்... பனிக்காலங்களில் நிலவு வெளிச்சம் வீசும் கால் புதைய புதைய பனிமேட்டுகளில் நடந்து செல்வதும்... அது ஒரு இனிமை யான காலம்.

சில வேளைகளில் எனக்கே ஆச்சரியமாய் இருக்கும்.

ஒரு கோயில்கேணியைச் சுற்றித் தொடங்கிய நட்பு எத்தனை மைல்கள் தாண்டியும் இப்போதும் தொடர்கிறது என.

அதேபோல் எது நடந்து விடக்கூடாது என்று நினைத்திருந்தேனோ... அது நடந்து விட்டது என்று ஒரு நாள் உணர்ந்த பொழுது என்னை அதே கேணிக்குள் யாரோ பிடித்துத் தள்ளியது போல இருந்தது.

ஆழமாய்ச் சேற்றினுள்ளும் தாமரைக் கொடி

களுக்குள்ளும் அகப்பட்டது போல இருந்தது.

ஹரிக்குச் சரியாய் பதினெட்டு வயது முடிந்திருந்தது.

ஹரிக்கு அன்றுதான் கார் லைசென்ஸ் கிடைத்திருந்தது.

வீட்டுக்கு வந்து தனது லைசென்ஸைக் காட்டிவிட்டு பாலன் மாமாவுக்கும் காட்டி வருகிறேன் என எனது காரை எடுத்துக் கொண்டு போனான்.

நானும் பவித்திராவும் சந்தோசமாய்க் கைகாட்டி வழி அனுப்பினோம்.

ஆனால் வரும் பொழுது ஹரிணியை முன் சீற்றில் வைத்து ஓட்டி வந்தான்.

எங்கள் இருவருக்கும் அது நல்லதாய்ப் படவில்லை.

பின்பு ஹரிணி திரும்பிச் செல்ல புறப்பட்ட பொழுது ஹரி கார்த்திறப்பைக் கையில் எடுத்தான்.

"இல்லை ஹரி! நான் கூட்டிக் கொண்டு போய் விட்டிட்டு வாறன்", என்று நான் கூட்டிக் கொண்டு போனேன்.

அவனது முகமாற்றம் எனக்கு நல்லதாய்ப் படவில்லை.

பவித்திராவும் அதனை அவதானித்திருக்க வேண்டும்.

நான் திரும்பி வருவதற்குள் பவித்திரா ஹரியிடம் கேட்டிருக்க வேண்டும்.

வீட்டினுள் ஒரு பூகம்பம் நடந்து முடிந்திருந்தது போல இருந்தது.

இராகுலனும் பானுவும் புத்தகத்தினுள் முகத்தைப் புதைத்தது போல அமர்ந்திருந்தார்கள்.

ஆனால் அவர்கள் அதனுள் இல்லை என்றது

தெளிவாகத் தெரிந்தது.

பவித்திராவின் கண்கள் அழுது சிவந்து இருந்தன.

நான் கோபப்பட்டு ஹரியை ஏதும் செய்து போடுவனோ என்ற பதட்டமும் பயமும் பவித்திராவிடமும் இராகுலனிடமும் பானுவிடமும் இருந்தது.

நான் பவித்திராவிடம் மெதுவாக "உண்மையா" எனக் கேட்டேன்.

அவள் "ஆம்" எனத் தலையாட்டினாள்.

"அவனைக் கூப்பிடு" என பவித்திராவிடம் சொல்ல மெதுவாக விரல் நகங்களைக் கடித்தபடி வீங்கிய முகத்துடன் மெதுவாக படியில் இருந்து இறங்கி வந்தான்.

நிச்சயம் பவித்திரா அவனுக்கு அடித்திருக்க வேண்டும்.

"ஹரி... நீ வாழ்க்கையிலை யாரை வேண்டு மானாலும் கட்டப் போறன் என்று என்னிடம் சொல். நான் உனக்குச் செய்து தாறன்... ஆனால் இது மட்டும் வேண்டாம்... இதை அப்பாவாக உனக்குக் கட்டளை இடேல்லை... ஒரு பிச்சைக்காரனாயப் பிச்சை கேட்கிறன்"

அதற்கு மேல் எனக்கு எதுவுமே கதைக்க முடிய வில்லை.

உடைந்து விட்டேன்.

நல்ல ஞாபகம் இருக்கு... வாய் விட்டு அழுதேன்!

பவித்திரா வந்து என்னைக் கட்டிக்கொண்டு அவளும் அழுதாள்.

"நீங்கள் சொன்னால் எங்கடை பிள்ளை கேட்பான் தானே...."

"இல்லை... இல்லை... என்னதான் தகப்பன்

எண்டாலும் "நீ உன்ரை காதலை விட்டு விடு" என்று ஒரு ஆண்பிள்ளையிடம் கேட்கக் கூடாதது. அதை இண்டைக்கு என்னைக் கேட்க வைச்சிட்டானே என்ரை பிள்ளை.... என்னை மன்னிச்சிடுடா ஹரி. என்ரை பிள்ளையை சாம்ப சிவக்குருக்களின்ரை பரம்பரை சரி... தன்ரை பிள்ளையை நம்பி எங்கடை வீட்டுக்கு வந்து போக விட்ட பாலன் சரி சபிச்சிடக் கூடாது...."

ஹரி ஏதும் பேசாது தனது அறைக்குள் போய் அறையைச் சாத்திக் கொண்டான்.

இராகுலனும் பானுவும் மௌனமாக என்னைப் பார்த்தபடி இருந்தார்கள்.

"இண்டைக்கு நீங்கள் படிக்க மாட்டியள்... சாப்பிட்டுட்டு போய் படுங்கோ" என பவித்திரா அனுப்பி வைத்தாள்.

நான் சோபாவில் இருந்தபடி முகட்டைப் பார்த்துக் கொண்டேயிருந்தேன்.

சரியான ஒன்றைத் தான் செய்திருக்கிறேன் என அறிவு சொன்னாலும் என் மனம் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. அது முழுக்க முழுக்க என்னை ஒரு குற்றவாளியாவே பார்த்துக் கொண்டு இருந்தது.

"துளிர்த்து வந்த என் பிள்ளையின் காதலை நானே நசுக்கிப் போட்டேனே" என்ற வேதனை என்னைப் போட்டு வாட்டிக் கொண்டு இருந்தது.

அவனது முதல்காதல் அவனை வாழ்நாள் முழுக்க வாட்டி வாட்டிக் கொண்டிருக்கப் போகிறது என்று வேதனைப்பட்டுக் கொண்டிருந்தேன்.

பவித்திரா ஏதும் பேசாமல் சுவாமி அறைக்குள் போய் இருந்து கொண்டாள். அவளால் வேறு என்ன செய்ய

முடியும்... ஹரியின் மன அமைதிக்காக கடவுளுடன் தான் வாதாட முடியும்.

நடுநிசியாகிய பொழுது ஹரியின் அறையை மெதுவாகத் திறந்து பார்த்தேன்.

நன்றாகத் தூங்கிக் கொண்டு இருந்தான்.

நானே வெட்டியெறிந்த வாழைக்குட்டியாக என் பிள்ளை படுத்திருந்தான்.

"என்னை மன்னிச்சுக் கொள்ளடா என் ஹரிக்குட்டி"

என் வாய் முணுமுத்தது.

கைகள் அவனைக் கூப்பிக் கும்பிட்டன.

கண்கள் தாமாக வழிந்தன.

பபிதா இயக்கத்திற்குப் போன இரவு உடல் முழுவதும் குளிர்ந்து நடுங்கித் தவித்தது போலவே அன்றைய இரவு எனக்குக் கழிந்தது.

என்ன நியாயங்கள் கற்பித்தாலும் ஒருவன் தன்னைத் தானே குற்றவாளியாக உணரும் தருணம் போலக் கொடிய நிகழ்வு எதுவும் இந்த உலகத்தில் இல்லை.

என் பிள்ளைக்கு நான் குற்றம் இழைத்துப் போட்டேன் என்ற வேதனையை என் வாழ்நாள் முழுக்க என்னால் மறக்கமுடியவில்லை.

பின்னாளில் பானுவின் பிரச்சனை வீட்டினுள் வெடித்த பொழுதும் "குடும்பத்துக்கு என்ன அவமானம் வந்தாலும் பறவாயில்லை... நீ ஓடிப்போறதென்டால் ஓடு" எனக் கண்களை மூடிக்கொண்டு இருந்தது போல இருந்ததுக்கும் நான் ஹரிக்கு இழைத்த இந்த துரோகம் என்னை ஏதோ இடத்தில் வலிக்கப்பண்ணிக் கொண்டேயிருந்ததும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

# 11

எவ்வாறு இந்த உலகத்திற்கு தனித்து வந்தமோ... அவ்வாறே காதற்ற ஊசியைக் கூட எடுத்துச் செல்லாமல் இந்த உலகத்தை விட்டுச் செல்ல இருக்கின்றோம் என அனைவருக்கும் தெரிந்திருந்தாலும்... யாருமின்றி வாழ்வில் தனியே பயணப்படும் சந்தர்ப்பங்களில் அந்தத் தத்துவங் களைப் புரிந்து கொள்ள முடியும்.

அவ்வாறே யாருமின்றி தனியே அப்பா அம்மா கூட இன்றி கொழும்பிற்கு பயணப்பட்டுக் கொண்டிருந்த பொழுது இருந்தது.

வளந்த ஊர்... விளையாடிய கோயில்... தூக்கித் தோளில் வாகனத்தின் முன்பக்க கொம்பு... பெரிய வீடு... அப்பா... அம்மா... மேலாக பபிதா...

கொழும்பிற்கு வந்து இறங்கிய பொழுது பாலன் பஸ்தரிப்பு நிலையத்தில் காத்திருந்தான்.

பயண அலுவல்களை ஏறக்குறைய எல்லாம் முடித்து வைத்திருந்தான்.

தனியே ஒரு ரூறிஸ்ட் என்றி விசாவுடன் மொஸ்கோ போவது தான் நோக்கம்.

அதன் பின்பு தான் ஏதோ ஒரு ஐரோப்பிய நாட்டிற்கு.

ஏரோபிளோட்டில் நாங்களாக ஒரு ரிக்கற்றை எடுத்துக் கொண்டு போயிருக்கலாம் என்று பின்புதான் தெரிந்தது.

ஏஜன்றுக்கு வேறு தேவையில்லாமல் ஆளுக்கு ஐயாயிரம் ரூபா கட்டியிருந்தோம்.

அதைவிட அவரின் புளுகுகள்.. ஏடெடுப்புக் கதைகளை இரண்டு நாட்களும் மௌனமாகக் கேட்க வேண்டிய தலைவிதி வேறு இருந்தது.

“பூனை இளைத்தால் எலி முன்னால் நின்று நாட்டியமாடுமாம்” - அந்த நிலைதான்.

நான்தான் பெரிதாகப் படிக்கவில்லை. ஆனால் பாலன் ஒரு டாக்டராய் முதல் வாரம்தான் பட்டம் பெற்றிருத்தான்.

ஏஜன்ரின் ஆபீஸ் பையன் தொடக்கம்... அலுவலகத்தில் வேலை செய்யும் பெண்கள், ஏஜன்ற் வரை யாருமே அங்கு பயணிக்க வருபவர்களை மதிப்பதேயில்லை.

பாலன் ஆங்கிலத்தில் ஏதோ வார்த்தையை ஏஜன்ரிடம் சொல்ல அதற்கு ஏஜன்ற் தடுமாறிய பொழுது எனக்கு ஏஜன்ரின் தகுதி விளங்கியது.

என்ன செய்வது?

ஒவ்வோர் கொழும்பு ஏஜன்ற்றுக்கும் பின்னால் யாரோ ஒரு ஆளுங்கட்சி அரசியல்வாதி. அவர்களுக்குப் பின்னால் காவற்துறை.

எதுவும் செய்ய முடியாது.

நான் பொலிஸ் ஸ்ரேசனில் போய்க் கையெழுத்து வைக்க வேண்டிய அதே நாளின் அதிகாலைப் பொழுதில்

மொஸ்கோ செல்லும் விமானத்தில் எங்களுக்கு ரிக்கற் ரிசேவ் செய்யப்பட்டிருந்தது.

அடுத்த இரண்டு நாட்களும் இயந்திர மனிதர்கள் போல் நாமிருவரும் கொழும்பில் இயங்கிக் கொண்டு இருந்தோம்.

குளிருக்கான இரண்டொரு உடைகளை வாங்கிக் கொண்டோம்.

ஆளுக்கு 500 டொலர்கள் ட்ரவலேர்ஸ் செக்குகளை வங்கியில் வாங்கிக் கொண்டோம்.

அப்பா அம்மாவுக்கு எந்தப் பிரச்சனையும் வந்து விடக்கூடாது என்பதற்காக சாம்பசிவக் குருக்கள் வீட்டிற்கே கடிதம் போட்டோம்.

எங்கள் பயணவிபரங்களை எழுதி அனுப்பினோம்... இறுதியாக கடிதத்தை வாசித்தவுடன் கிழித்து எறியும் படியும் எழுதியிருந்தோம்!

மனித வாழ்வில் பயம் என்பது எப்படி எப்படி எல்லாம் யோசிக்க வைக்குது... நடக்க வைக்குது என்பதனை நினைக்க ஆச்சரியமாய் இருந்தது.

ஆம்!

பயம்!!

... உயிர்வாழ்தலுக்கான பயம்!!!

எங்களினதும்... எங்களையுச் சார்ந்தவர்களின் உயிர்களுக்கும் உடமைகளுக்குமான பயம்!!!

கட்டுநாயக்காவைத் தாண்டும் வரை அடர் மௌனமும்... "உம்" என்ற தலையாட்டலையும் தவிர வேறு மார்க்கம் இருக்கவில்லை.

மௌனத்தினுள் வார்த்தைகள் கைகட்டி வாய் பொத்தி நின்றன.

விமானம் மேலே பறக்கத் தொடங்கத்தான் என்னுயிர் என் மீது வந்து அமர்ந்து கொண்டது.

*

ஏஜன்ற் சொல்லி விட்டது போல மொஸ்கோவில் பெரிய பிரச்சனை ஏதுமில்லை.

கொழும்பு வீதிக்கடைகளில் "லாபாய்... லாபாய்...." என்று வியாபாரிகள் கூப்பிடுவது போல்... "கொழும்பு யாழ்ப்பாணம்" "கொழும்பு யாழ்ப்பாணம்" பஸ்காரர்களும் வான்காரர்களும் அழைப்பது போல.... "ஒரு கிழமைக்குள் ஐரோப்பா... ஒரு கிழமைக்குள் கனடா.... சாப்பாடு ஹோட்டல் இலவசம்" என இரண்டு மூன்று பேர் தனித்தனி குழுக்களாக நின்று கூவி அழைத்துக் கொண்டு நின்றார்கள்.

எமது கொழும்பு ஏஜன்ற் நம்பிக்கையான ஆட்கள் என்று சொன்னவர்களும் நின்றிருந்தார்கள்.

இவர்களா அவர்கள் என்று உறுதி செய்ய முதலே எங்களின் பெயரைச் சொல்லிக் கொண்டு கிட்டவாக வந்தார்கள்.

நாங்கள் அணிந்திருந்த ஆடைகளின் விபரங்கள்... தோற்றங்கள்... அனைத்தும் அவர்களுக்கு கொடுக்கப் பட்டிருக்க வேண்டும்.

"ஒன்றுக்கும் யோசிக்காதையுங்கோ... ஒரு கிழமைக்குள்ளை போடர் தாண்டிப் போய் விடுவியள்... பிறகு எந்த நாடு என்டதை அங்காலை நிக்கிறவையோடை கதைத்துக் கொள்ளுங்கள்"

நம்பிக்கை பிறந்தது.

அவர்கள் பின்னாலேயே சென்றோம்.

வெளியில் பனி கொட்டிக் கொண்டிருந்தது.

கொழும்பில் வாங்கி வந்த சுவற்றரையும் தடித்த காலுறையையும் அணிந்து கொண்டோம்.

எங்களைப் போல் வந்த இன்னும் மூவரையும் எங்களின் வானில் ஏற்றிக் கொண்டார்கள்.

அதில் ஒரு பெண் வேறு.

ஊரில் சம்பந்தம் கலந்த பின் இத்தாலியில் இருக்கும் தனது வருங்காலக் கணவனிடம் போய்ச் சேருவதற்காக வந்திருந்தாள்.

எங்களுடன் விமானத்தில் வந்த மற்ற மற்ற ஆட்களை மற்ற மற்ற குறூப்பினர் அழைத்துக் கொண்டு சென்றார்கள்.

எங்களது தங்குமிடம் ஆகோ... ஓகோ என்ற ரகம் இல்லாவிட்டாலும் சமாளிக்கக் கூடியதாய் இருந்தது.

பல அறைகள் கொண்ட பெரிய வீடு.

4 தொடக்கம் 6 பேர் தங்கக் கூடிய ஒவ்வோர் அறை களினுள் இரண்டு இரண்டாக அடுக்கு கட்டில்கள் போடப் பட்டிந்தன.

அறையின் மூலைகளில் முற்றாக அல்லது பாதி காலியான மதுபானப் புட்டிகள்.

மொத்தமாக எல்லா அறைகளிலும் சுமார் 25-30 பேர் அங்கு இருந்திருக்கலாம்.

பெரிய குசினி ஒன்றில் ஏஜன்ரின் ஆட்கள் நின்று சமைத்துக் கொண்டு நின்றார்கள்.

எங்களுக்கு முன்பு வந்தவர்கள் குசினிக்குப் பக்கத்தில் அமைந்திருந்த சாப்பாட்டு அறைக்குள் இருந்து சீட்டு

விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

அவர்களுடைய சத்தம் ஒரு புறம்... சமைப்பவர்களின் சத்தம் ஒருபுறம்... சின்னதான ஒரு ரேப் றெக்கோடரில் இருந்து பெரிதான சத்தத்தில் சினிமாப்பாடல்கள் ஒரு புறம்... ஆங்காங்கே பெண்கள் தனியாகவும்... ஆண்கள் தனி யாகவும்... சிலவேளைகளில் பெண்களைச் சீண்டும் ஆண் களின் கேலிப்பேச்சுகள் என்றும் போய்க் கொண்டு இருந்தன.

கொழும்பில் தங்கியிருந்த விடுதிக்கும் இதற்கும் பெரிதாக வித்தியாசம் தெரியவில்லை.

எவ்வேளையும் ஆமியும் பொலிசும் வந்து பிடித்துக் கொண்டு போவார்கள் என்ற பயம் மட்டும் இங்கு இருக்கவில்லை.

விமானத்தில் வந்த களை... யாழ்ப்பாணத்தில் தொடங்கி மொஸ்கோவரை தொடர்ந்த ரென்ஷன்.... மதிய உணவுக்குப் பின் குட்டித்தூக்கம் போட மனம் சொன்னது.

ஆனால் அது முடியாமல் இருந்தது.

அறைக்குள்ளேயே முடங்கிக் கிடக்காமல் வெளியே கொஞ்சம் காலாற நடப்போம் என நினைத்த பொழுது... எங்களுடைய அறையில் இருந்த ஒரு சிறுவன் - 14 வயதிருக்கும் - தனக்கு இடங்கள் தெரியும் என்றும்... தான் இடங்கள் காட்டுவதாகவும் கூறிக் கூட்டிச் சென்றான்.

பனி பூப்போல் கொட்டும் என்று பல இடங்களில் வாசித்திருந்ததை, முதன் முதலாக அனுபவித்தது அன்று தான்.

தண்ணீர் தேங்கியிருக்கும் வயலுக்குள் வெறும் காலுடன் ஓடுவது ஒரு வித சுகம் என்றால்... கைகளில் பூப்போல விழும் பனித்துகள்களை ஏந்துவதும் அது

உருகிவிடுவதும் இன்னோர் வகைச் சுகம்.

அந்தப் பனிப்பூக்கள் மிகவும் குளிர்ந்தாலும் கையுறையைக் கழற்றி விட்டு அவற்றை ஏந்துவதில் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

அந்த நாட்டுப் பிள்ளைகளை மரத்தாலாக தட்டை களில் இருத்திப் பெற்றோர்கள் பனிவழியே இழுத்துச் சென்று கொண்டிருந்தார்கள்.

சிலர் பனியை உருட்டி வெவ்வேறு உருவங்கள் செய்து மகிழ்ந்து கொண்டிருந்தார்கள்.

அவர்கள் செய்யும் பனிமனிதர்களின் கண்களுக்கு சிறிய காய்ந்த பழக்கொட்டைகளையும்... மூக்கிற்கு கரட்டையும் வைத்து அதனைச் செய்து கொண்டிருந்தார் கள். அதற்கு தங்களின் தொப்பிகளையும் போட்டு அழகு பார்த்து கொண்டிருந்தார்கள்.

வறுமையுடனும் இயற்கையுடனும் போராடும் மக்கள் என்றாலும் அவர்களும் இயற்கையுடன் இணைந்து மகிழ்ந்து கொண்டுதான் இருந்தார்கள்.

மகிழ்ச்சியை எங்கிருந்து நாம் பெறுகின்றோம் என்பதுதான் முக்கியமே தவிர எத்தனை இலட்சங்களும் கோடிகளும் செலவழித்துப் பெறுகின்றோம் என்பது முக்கியமல்ல.

மாலை நான்கு மணிக்கே இருளத் தொடங்கியது.

வீதியோரத்தில் மிகவும் நாகரீகமாக உடையணிந்து அந்தக் குளிரிலும் தங்கள் உடம்பைக் காட்டியபடி சில பெண்கள் நின்று எங்களை நோக்கி கையசைத்தார்கள்.

எங்களைக் கூட்டிச் சென்ற சிறுவன் விசமத்துடன் எங்களைப் பார்த்துச் சிரித்தான்.

“தனிய வந்து முத்திப்போட்டாய்” என அவன் பிடரியில் தட்டினேன்.

“என்ஜோய் அண்ணா... ஐரோப்பாவுக்கு போன பிறகு ரீட்மென்ற் பண்ணிக்கலாம்”

“எல்லாத்தையும் ரீட்மென்றால் சரிப்பண்ணேலாது கவனமாய் இரடா தம்பி” என பாலன் டாக்டராய் அறிவுரை சொன்னான்.

இனி அறைக்குத் திரும்புவோம் எனப் பாலன் அபிப்பிராயப்பட்டான்.

நாங்கள் தங்கியிருந்த வீட்டடிக்கு வந்த பொழுது நன்கு இருட்டி விட்டது.

வீட்டிற்குத் தூரமாக வரும் பொழுது வீட்டடியில் ஏதோ கலகலப்பு நிகழ்வது போல உணர்ந்தோம்.

ஒரே கூச்சலும்.. சில கெட்ட வார்த்தைகளும்...

நடையின் வேகத்தைக் குறைத்துக் கொண்டு மெது மெதுவாக முன்னேறினோம்.

கைகலப்பு நடந்து கொண்டிருந்தது.

இரு பகுதியாகப் பிரிந்து நின்று காது கொடுத்துக் கேட்க முடியாத வாய் வார்த்தைகள்.

இரண்டொருவரின் கைளில் வாள்கள் வேறு.

காலையில் எங்களுடன் வந்திருந்த பெண்ணை மற்ற ஒரு ஏஜன்ற் தங்களுடன் கூட்டிச் சென்றிருக்க வேண்டுமாம்.

எங்கள் ஏஜன்ற் அவளை தன்னுடன் கூட்டி வந்து விட்டானாம்.

சரி... அவர்களுடனேயே போ என்றால் அந்தப் பெண் மாட்டேன் என அடம்பிடித்தாள்.

அவளுக்கு வந்து ஐந்தே மணித்தியாலத்துள் ஏஜன்ரின் தம்பியைப் பிடித்து விட்டதாம்.

காசுகட்டிக் கூப்பிட்ட இத்தாலிப்பையன் "அவளை அங்கே அனுப்பாவிட்டாலும் உயிரோடை விட்டிடாதை யுங்கோ" என அதிகமான காசை மற்ற ஏஜன்றுக்கு உண்டியலில் அனுப்பியிருக்கிறான்.

அந்தப் பதினாலு வயதுப் பையன் மெதுவாய்ச் சொன்னான், "அண்ணா இப்பிடி ஏதாவது சண்டை இந்த குறூப்புகளுக்கை நடந்து கொண்டேயிருக்கும். தூள் வியாபாரம்... நாட்டாமை... பொம்பிளைப் பிரச்சனை எண்டு ஏதாவது நடந்து கொண்டேயிருக்கும். முந்த நாள் இவங்கள் போய் யாரையோ வெட்டினது எண்டு பொலிஸ் வந்தது... நாளைக்கு விடிய என்னை அனுப்புறது எண்டு சொல்லியிருக்கிறான்கள்... எயர்ப்போட்டிலை பேசின காசுக்கு மேலாலை இனி உங்களிட்டைப் கேட்பான்கள்... குடுக்காட்டி வைச்சு இழுத்தடிப்பான்கள்... அதுபடியாலை ஐநூறு டொலரோ... ஆயிரம் டொலரோ கூடக் குடுத்தெண்டாலும் கெதியாய் இங்கையிருந்து வெளிக்கிடுங்கோ".
அந்தச் சிறியவனுக்கு நிய உலகம் அனுபத்தைக் கற்றுக் கொடுத்திருந்தது.

ஐரோப்பாவின் மறுபக்கம் புரியத் தொடங்கிய முதல் நாள் அது.

*

எல்லைகளைக் கடக்கும் போது நடைபெறும் அனர்த்தங்களைப் பற்றி இலங்கையில் இருந்த பொழுது பத்திரிகைகளில் வாசித்ததை விட அங்கு தங்கியிருந்த இரண்டு நாட்களில் நேரடியாகக் கேட்டவையும்...

குசுகுசுப்பினூடு கேட்டவையும் பயங்கரமாய் இருந்தன.

என்னையும் பாலனையும் போல் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய நிலையில் உள்ளவர்கள் ஒரு காற்பங்கு என்றால் மற்றைய முக்காற்பங்கினரும் ஐரோப்பிய சுகத்திற்காகக் தங்கள் வாழ்வைத் தொலைத்தவர்களே.

இத்தியாதி... இத்தியாதிக் கஷ்டங்களைத் தாண்டி... ரஷ்யாவில் இருந்து தொடரும் ஐரோப்பியப் பயணத்திற்கு போதுமான பணத்தை எடுத்து வந்திராதவர்களை... அல்லது எல்லைகளைத் தாண்டும் பொழுது பிடிபட்டுப் பிடிபட்டு, திரும்பி வந்தவர்களை... தங்களது போதைப் பொருள் கடத்தலுக்குப் பயன்படுத்திக் கொண்டிருந்தார் கள்.

அதுவும் வாய் வழியேயான இரைப்பையையும்... குதவாசல் வழியான பெருங்குடலையும் போதைப்பொருள் கடத்துவதற்குப் பயன்படுத்துகிறார்களாம் என்பதனை ஜீரணிக்க முடியாதிருந்தது.

அதுவும் நாங்கள் தங்கியிருந்த வீட்டின் பேஸ் மென்றில் வைத்தே அந்த அப்பாவிகளின் உடலினுள் இதனைச் செலுத்தி அனுப்புகின்றார்களாம்.

உடலினுள் அந்தப் போதைவஸ்துப் பொட்டலங்கள் உடைந்தால் அவ்வளவுதான்.

உயிர் சொல்லிக் கொள்ளாமால் போய்விடும்.

“பிழையான ஒரு இடத்திற்கு வந்திருக்கின்றோம்” என மெதுவாகச் சொன்னேன்.

“பார்க்கிற வகையில் எந்த ஏஜன்ற் கையில் அகப்பட்டாலும் இதுதான் கதியாக இருந்திருக்கும்” பாலன் ஆழ்ந்த சிந்தனையுடன் சொன்னான்.

அடுத்தநாள் ஏஜன்ரிடம் நேரே சொன்னோம்.

“உங்களுக்கு இன்னும் எவ்வளவு மேலதிகமான காசு தருவதாயினும் தருகின்றோம்... இந்த போடர் தாண்டுற வழிகளைத் தவிர்த்து வான்வழியாக எந்த ஐரோப்பா நாட்டுக்கு என்றாலும் எங்கள் இருவரையும் அனுப்பி வையுங்கள்”

பாலன் ஒரு டாக்டர் என்பதால் அனைவருக்கும் அவன் மீதும், அவனுடைய நெருங்கிய நண்பன் நான் என்பதால் என் மீதும் அவர்களுக்கு ஒரு மரியாதை இருந்தது. அதனாலேயே மொஸ்கோவில் இருந்து டென்மார்க்கின் தலைநகரமாகிய கொப்பனேகன் வழியாக இலங்கை செல்லும் வகையில் விமான ரிக்கற் போட்டு.... மொஸ்கோ விமான நிலைய அதிகாரிக்கு எது வேண்டுமோ அதனைக் கொடுத்து எங்களை அனுப்பினார்கள்.

அந்த அதிகாரிகளுக்கான இலஞ்சம் என்பது அதி விலையுயர்ந்த மதுவாக இருக்கலாம்... போதை வஸ்து களாய் இருக்கலாம்... இலங்கைப் பெண்களாய் இருக்கலாம். இவை மூன்றுமே ஏஜன்றமாரின் கைகளில் இருந்தன.

அன்று எது கொடுக்கப்பட்டதோ எங்களுக்கு தெரியாது

“ஆண்டவா ஒரு இலங்கைப் பெண்ணின் கண்ணீரில் எங்கள் பயணம் அமையக் கூடாது” என்று ஆண்டவனைப் பிரார்த்தித்துக் கொண்டு நாங்கள் விமானம் ஏறினோம்.

மொஸ்கோவில் விமானம் மேலே எழுந்ததும் உள்ளே இழுக்கப்பட்ட பின் சில்லுகள் இரண்டும்.... 2 மணித்தியாலம் 25 நிமிடங்களின் பின்பு.... கொப்பனேகன் விமான ஓடுதளத்தை தொட்டு விரைவாக ஓடத்தொடங்கின.

சரியாக அரைமணித்தியாலம் இருந்த பொழுது, "நான் ரொயிலற்றுக்கு முதல் போயிட்டு வரட்டா" என பாலனிடம் கேட்டேன்.

அவனுக்கு விளங்கி விட்டது.

"நான் வரேல்லை... நீயே என்னுடையதையும் கொண்டு போ"

நான் மௌனமாய் அவனுடைய பாஸ்போட்டையும் வாங்கிக் கொண்டேன்.

உள்ளே போய்க் கதவைச் சாத்தியதும் என்னுடைய பாஸ்போட்டை ஒரு விநாடியில் கிழித்து ரொயிலற்றினுள் போட்டுத் தண்ணீரை இழுத்து விட்டேன்.

பாலனுடையதை உடன் கிழிக்க மனம் வரவில்லை.

நாலு வருடங்களுக்கு முதல் இந்தியாவுக்கு ஒரு தடவை போய் வருவோம் என என்னுடன் எடுத்த படம்.

தெய்வீகக் களை நிறைந்திருந்த அவன் முகம்.

இன்றும் அப்படித்தான்.

கண்களை அவனது பெயருக்கு கிட்டவாக மேய விட்டேன்.

டொக்டர். பாலகிருஷ்ணன் சாம்பசிவக்குருக்கள்.

மிகவும் கவலையாக இருந்தது.

ஒரு டொக்டர்.

எங்கள் பரம்பரைக் குருக்களின் மகன்.

டாக்டர் பட்டம் முடித்த கையுடன் குருக்கள் பட்டம் பெறக் காத்திருந்தவன்.

ரொயிலற் கதவை யாரோ தட்டுவது போல இருந்தது.

கண்களை மூடிக்கொண்டு கிழித்துப் போட்டு

மீண்டும் தண்ணீரை இழுத்து விட்டேன்.

கதவைத் திறந்த பொழுது “பிளேன் வில் லாண்ட் நவ். பிளீஸ் ரேக் யுவ சீற் அண்ட் பாஸ்ற்ன் யுவ சீற் பெல்ட்” அன்பாக வேண்டிக் கொண்டாள் விமானப் பணிப்பெண்.

இருக்கைக்கு வந்த பொழுது எல்லாம் முடிந்ததா எனப் பாலன் கண்களால் கேட்டான்.

“ஒரு டாக்டர் அண்ட் குருக்களை முடிச்சுப் போட்டு வந்திருக்கின்றன்”

அவன் சிரித்தான்.

அதுதான் பாலன்.

வெளியே வந்த பொழுது அங்கு கண்ணில் பட்ட பொலிசாரிடம் “வீ ஆர் சீக்கிங் அசைலம்” என்றோம்.

“பீ சீற்றற் தெயர்... ஐ வில் கோல் த ரான்ஸ்லேற்றர்”

தினமும் அவர் இதற்குப் பழக்கப்பட்டவர் போன்ற தோரணையில் அந்த பொலிசார் கூறினார்.

அவர் கைகாட்டிய இடத்தில் ஒரு இலங்கைத் தமிழரும் இரண்டொரு வேறு நாட்டவரும் அமர்ந்திருந் தார்கள்.

பிற தேசத்திற்கு வரும் பொழுது இன்னோர் தமிழரைக் காண்பது எவ்வளவு மகிழ்ச்சி என்பதனை சொல்லி விட முடியாது.

அனுபவித்து உணர வேண்டும்.

அதேபோல் வாழ வந்த இடத்தில் இவர் இவர் களைச் சந்திக்காமலேயே இருந்திருக்கலாம் என்பதனையும் என் 30 வருட புலம் பெயர்வாழ்வு பின்னாளில் எனக்கு கற்றுத் தந்திருந்தது.

*

# 12

அமெரிக்காவில் இருந்து இலண்டன் வந்து... அங்கு இரண்டு மணித்தியால ரான்சிற்றின் பின்... அடுத்த பிளைட்டில் ஹரி இன்னும் கொஞ்ச நேரத்தில் கொப்பனேக னில் வந்து இறங்கி விடுவான்.

இராகுலனுடன் விமான நிலையத்தில் இருந்து நேரே இங்கு வந்துவிடுவான் என்ற நினைப்பே... அவன் அமெரிக்காவுக்குப் போனதற்கான காரணத்தை நினைப் பூட்டி நினைப்பூட்டி என்னை மீண்டும் மீண்டும் குற்ற வாளியாக்கிக் கொண்டிருந்தது.

ஹரியின் காதலைத் தியாகம் செய்யச் சொல்லிக் கையேந்திய.... அல்லது அவன் காதலை முளையிலேயே கிள்ளி எடுத்து என் காலின் கீழ் போட்டு நசித்த அந்த இரவிற்குப் பிறகு எங்கள் வீட்டை அதுவரை நிறைத்திருந்த ஆனந்த அலையை... என்னால் சரி... பவித்திராவால் சரி... மீண்டும் கண்டு பிடிக்க முடியவில்லை.

அந்தக் கிழமை முழுக்க எல்லோரும் இயங்கிக் கொண்டே இருந்தோம்.

எல்லோருக்கும் பாடசாலை... பாடசாலையால் வந்தாலும் பின்னேரங்களில் ஏதாவது வேலைகள்.. அல்லது உடல் மெலிவதற்கான நடைப் பயிற்சிகள்... விளையாட்டு றெயினிங் என்று ஓடிக்கொண்டு இருந்தோம்... அல்லது ஆளை ஆள் சந்திப்பதைத் தவிர்த்துக் கொண்டு இருந்தோம் என நினைக்கின்றேன்.

பாலன் மட்டும் வழமை போல் பின்னேரங்களில் நேரம் இருக்கும் பொழுது டெலிபோன் எடுத்து ஊர்ப் புதினங்கள் கதைப்பான்.

ஹரிணியும் வீட்டுப்பக்கம் வரவில்லை.

பாடசாலை வேலைகளில் அவள் மூழ்கி இருக்கலாம்.

அல்லது ஹரியே அவளுக்கு விடயத்தைச் சொல்லி யிருக்கலாம்.

அவள் என்ன சொல்லியிருப்பாள்?... அல்லது என்னைப் பற்றி என்ன நினைத்திருப்பாள்??

அடுத்த சனிக்கிழமை வழமைக்குப் மாறாக நன்கு வெயில் எறித்துக் கொண்டிருந்தது. கடலுக்குப் போய் குளித்து வந்தால் மனதுக்கும் உடம்புக்கும் ஆறுதலாய் இருக்கும் என்று நினைத்து மதியம் போல் சென்று மாலை போல் வீட்டுக்கு வந்த பொழுது வீட்டினுள் ஒரு வித்தி யாசமான மௌனம் நிலவியது.

சிலவேளை எல்லோரும் இருந்து பேசிக்கொண்டு இருந்து விட்டு என்னைக் கண்ட போது ஒரு அமைதி தானாகவே பிறந்திருக்க வேண்டும்.

ஒரு வினாடிக்கு மேல் அந்த அமைதியைப் பவித்திரா அனுமதிக்கவில்லை.

"நீயே அப்பாட்டைச் சொல்" என ஹரியைப் பார்த்துச் சொன்னாள்.

"என்ன?" என்பது போல அவனைப் பார்த்தபடி கதிரையில் உட்கார்ந்தேன்.

பவித்திரா கோப்பியைக் கொண்டு வந்து முன்னால் வைத்தாள்.

"சொல்லு ஹரி"

"அப்பா... எனக்கு இந்த செமிஸ்ரர் வாற மாதத்துடன் முடிகிறது.... எக்ஸாம் முடிய நான் யு.எஸ்.க்குப் போய் தொடர்ந்து படிக்கப் போறன்"

கூறிவிட்டு மௌனித்தான்.

நான் என்ன சொல்லப் போகின்றேன் என்று எல்லோரும் என்னைப் பார்த்தபடி இருந்தார்கள்.

"நீங்கள் என்ன சொல்லுறியள்" என்று இராகுலனையும் பானுவையும் பார்த்துக் கேட்டன்.

"அவன் அங்கை போறதுதான் நல்லது அப்பா", இது இராகுலன்

"அவன் அப்பிடிப் போறதெண்டால் அதுக்கு அப்பாதான் காரணம்... ஒருத்தியை விரும்பி விட்டு அமெரிக்காவுக்கு ஓடிப் போறதாலை இந்தப் பிரச்சனை தீரப்போவதில்லை" இது பானு.

"அப்பாவுக்கு நீ வாய் காட்டுறியா?" இது பவித்திரா.

"நான் இன்றுவரை ஏதாவது சொன்னனானோ... அப்பா கேட்டபடியாலை சொன்னனான்... நான் என்றால் உயர்சாதியோ... கீழ்சாதியோ உண்மையில் லவ் பண்ணினால் கூட்டிக் கொண்டு போய்விடுவன்...இவனைப்

போலை பயந்து அமெரிக்காவிற்குப் போக மாட்டன்" பானு தொடர்ந்தாள்.

இந்தத் தைரியம் தான் அவளைக் கூட அப்படி ஒரு முடிவெடுக்க வைத்தது என்பதைப் பின்னாளில் தெரிந்து கொண்டோம்.

"பானு பிளீஸ் நிற்பாட்டு".... ஹரி சொல்லி விட்டு எல்லோரையும் ஒரு தரம் பார்த்தான்.

"பானு சொல்லுறதிலை எவ்வளவு நியாயம் இருக்கோ அதேயளவு அப்பா சொல்லுறதிலையும் நியாயம் இருக்கு.... அப்பா இங்கை வாறதுக்கே காரணம் பாலன் அங்கிளின்ரை அப்பா சாம்பசிவக் குருக்கள் அப்பாக்குக் குடுத்த காசுதான். இப்பிடி ஒன்று எனக்கும் ஹரிணிக்கும் நடந்திட்டால் பாலன் அங்கிள் என்ன பெரிய டொக்டர் படிப்பு படிச்சிருந்தாலும் அவரை அவற்றை ஆட்கள் கோயிலுக்கை பூசை செய்ய விடமாட்டினம்...." ஹரி சொல்லச் சொல்ல அவனை கையெடுத்துக் கும்பிட வேணும் போலை இருந்தது.

"அப்ப உன்ரை லவ் சும்மா ரைம் பாஸா" பானு கேட்க பவித்திரா அவளை முழிசிப் பார்த்தாள்.

"இல்லை பானு... உண்மையானது தான்.... அதுக் காக அப்பாவையும் பாலன் அங்கிளையும் தலைகுனியப் பண்ணி... அவையின் பிறண்ட்சிப்பை உடைத்து நாங்கள் இரண்டு பேரும் வாழ வேணும் எண்டு இல்லை"

அவன் சொல்லி முடிக்கவில்லை பானு குறுக் கிட்டாள்.

"அப்ப தாடி வளர்த்துக் கொண்டு திரி... பிறகு அவள் தன்ரை ஆம்பிளைப் பிள்ளைக்கு ஹரி என்றும்... நீ உன்ரை பொம்பிளைப் பிள்ளைக்கு ஹரிணி என்றும் பெயர் வைச்சுக்

கொண்டு திரியப் போறியளா? தருமர் சூதாட்டத்தை தர்மம் என்று சொல்லி தன்ரை மனுசியையே வைச்சு சூதாடிய மாதிரி நீ உன்ரை காதலைத் தியாகம் செய்யுறதுதான் உன்ரை தர்மம் என்று சொல்லிக் கொண்டு திரியப் போறியா?... புல்சிட்..." கையில் இருந்த புத்தகத்தை சோபாவில் எறிந்து விட்டு எழுந்து தனது அறைக்குள் போய்விட்டாள்.

"அப்பா இவளுக்கு நீங்கள் ரொம்ப இடம் குடுத் திட்டியள்... வாயைப் பாருங்கோ..." பவித்திரா கண்டிக்கும் தோரணையில் சொன்னாள்.

ஹரி மீண்டும் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு... "அப்பா! நான் விட்டுக் கொடுக்கிறன் என்றதாலை அந்த வருத்தம் இல்லாமல் போய்விடும் என்றில்லை...அதுதான் கண்காணாத ஒரு இடத்திலை போய்ப் படிக்க விரும்புறன்... நானும் குழம்பாமல்... ஹரிணியையும் குழப்பாமல்..."

அவனை மேலும் பேச விடாமல் அணைத்துக் கொண்டேன்.

அவனின் கண்ணீர் எனது தோள்ப்பட்டையில் விழுந்தது.

"இவன் என் பிள்ளை" என மனத்துள் அவனைக் கொண்டாடினேன்.

"நீ போறதுக்கு எல்லா ஏற்பாட்டையும் செய். காசைப்பற்றி ஒண்டுக்கும் யோசிக்காதை... ஆனால் அம்மா வின்ரை முழு விருப்பத்தையும் கேட்டுட்டுப் போ... பிறகு என்னைத்தான் குற்றம் சொல்லிக் கொண்டு இருப்பாள். இவள் பானு போலை..."

"நான் ஏன் சண்டைக்கு வாறன்... என்ரை பிள்ளை யின்ரை முகத்தை இந்த நாலு நாளும் பார்க்க ஏலாமல் நான்

பட்டபாடு எனக்குத்தான் தெரியும்... நான் அந்த முருகனிட்டைத்தான் ஒவ்வொருநாளும் வாதிட்ட னான்... என்ரை பிள்ளைக்கு எந்த தீங்கும் இல்லாமலும்... பாலன் அண்ணைக்கும் அண்ணிக்கும் எந்த அவமானமும் இல்லாமலும் ஒரு வழியைக் காட்டு என்று”

மலைபோலை வந்த ஒரு பிரச்சனை பனிபோல கரைந்து போனது போல இருந்தது.

*

அன்று மாலையே நானும் பவித்ராவும் பழங்களும் வாங்கிக் கொண்டு பாலன் வீட்டுக்குப் போனோம்.

மூன்றாவது மனிதர்கள் யார் மூலமோ.... அல்லது ஹரி மூலமோ.... அவன் அமெரிக்கா போவதை ஹரிணியோ பாலனோ அபிராமி அண்ணியோ அறியக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தோம்.

ஹரிணியும் வீட்டிலேயே நின்றிருந்தாள்.

அவள் முகத்தில் எந்தச் சலனமோ சஞ்சலமோ தெரியவில்லை.

ஆகவே இதுவரை ஹரி ஹரிணிக்கு எதுவும் சொல்ல வில்லை என்பது உறுதியானது.

“பிள்ளையளைக் கூட்டியந்திருக்கலாமே”, எனப் பாலன் கேட்ட பொழுது,

“இராகுலனுக்கு இப்பதானே கம்பஸ் தொடங்கி யது... ஆள் சரியான பிஸி.... பானுவைத் தெரியும் தானே... முதல்தடவை கோட்டை விட்டுட்டு இப்ப தான் வலு அக்கறையாகப் படிக்கிறாள்...” என முன்னமே தயார் செய்து வந்த பதிலைக் கூறினேன்.

“ஹரி புட்போலுக்கு போயிட்டானா?” ஹரிணியே கேட்டாள்.

“இல்லை... அவன் அமெரிக்கா போய்ப்படிக்கிற யோசினை... இவரும் “ஓம்“ எண்டிட்டார்” பவித்திரா விசயத்தை உடைத்தாள்.

ஹரிணியின் முகத்தில் ஒரு தெறி வந்து போனது.

ஒரு செக்கன் தான்.

பாலன் சிரித்தபடி, “ஆள் ஏதும் குழப்படி கிளப் படியோ... அதுதான் பிடிச்சு அனுப்புறியளோ...” என்றான்.

“இல்லை... இல்லை... அவனாய் ஆசைப்பட்டான் அதுதான்...”

“நான் சும்மாதான் கேட்டன்... ஏதாவது மாறிக்கீறிக் கல்யாணம் செய்தாலும் எண்டு எங்கடை ஆட்கள் பெண்பிள்ளைகளை இலண்டனுக்குக் கொண்டு போன சம்பவங்கள் இரண்டு மூன்று எங்கடை சிற்றியிலை நடந்தது தானே... அதுதான் பகிடியாகக் கேட்டனான்”, பாலன் சொல்ல எனது மனது வலித்தது.

“உங்களுக்கு எல்லாத்துக்கும் முஸ்பாத்தி... ஹரியை அண்ணையும் அண்ணியும் அப்படியா வளர்த்து வைச்சிருக் கினம்... எங்கடை பிராமண ஆக்களுக்கிடையே கூட ஹரியைப் போல ஒரு நல்ல பிள்ளை இல்லை என்று இவரோடை அடிக்கடி கதைக்கிறனான்”

அபிராமி அண்ணி கதைக்கக் கதைக்க மனதிற்குள் நான் எங்கடை குலதெய்வம் முருகனுக்குத்தான் நன்றி சொல்லிக் கொண்டு இருந்தேன்.

ஹரிணி மௌனமாகப் புத்தகத்தினுள் முகத்தைப்

புதைத்தபடி உட்கார்ந்து இருந்தாள்.

பின்பு சிறிது நேரம் அது இது என்று கதைத்துக் கொண்டு இருந்து விட்டுப் புறப்படும் பொழுது பாலனும் அண்ணியும் சுவாமி அறையில் இருந்து ஒரு தட்டத்துடன் வந்து..."ஹரிணி நீயும் வா" என்று அவளையும் சேர்த்து அந்தத் தட்டை எங்கள் இருவரிடமும் நீட்டினார்கள்.

அதில் 10 ஆயிரம் குறோன்கள் இருந்தது.

"என்ன பாலன் இது?"

"அவனும் எங்கடை பிள்ளை தானே... இது அவன்ரை பயணத்துக்கும் படிப்புக்கும் எங்கடை சின்னக் காணிக்கை" ஹரிணியின் கண்கள் கலங்கியிருந்தன.

பவித்திரா அவளை அணைத்து முத்தம் இட்டு விடைபெற்றுக் கொண்டாள்.

எனக்கு மனதைப் பிழிந்தது.

"நியாயங்கள் என்பது வேறு... நியாயப்படுத்துவது என்பது வேறு"

போராட்டங்களில் அடிக்கடி பாவிக்கப்படும் இந்த வார்த்தைகள் "வாழ்க்கைப் போராட்டத்திற்கும் எத்தனை பொருத்தமாய் இருந்தது".

விடை பெற்றுக் கொண்டோம்.

## 13

நாம் வந்திறங்கிய டென்மார்க் ஏதோ மும்மாரி பொழிந்து மூன்று நான்கு தடவை சாகுபடி பண்ணும் புண்ணிய பூமி இல்லை.

வருடத்தின் மூன்று மாதங்கள் பனிப்பாறையினுள் மூழ்கிவிடும்.

பூப்போல் கையில் விழும் பனித்துகள்களே பனிப் பாறையாக மாறுவது போலவும்... வழிந்தோடிய நீர் பனிப்பாளங்களாக இறுகி விடுவது போலவும்..... இங்குள்ள வாழ்விலும் வசந்தமும் சூறாவளியும் மாறிமாறி வந்து கொண்டேயிருக்கும்.

“எனது பண்ணையில் இத்தனை அடிமைகள் இருக்கின்றார்கள்.... உன் பண்ணையில் எத்தனை அடிமை கள் இருக்கின்றார்கள” எனத் திராட்சை ரசத்தை ஒரு கையில் வைத்துக் கொண்டும்... மறுகையால் சுங்கானையும் ஏந்தியபடியும்... சதுரங்கப் பலகையில் கண்களை வைத்துக் கொண்டு கௌரவம் பேசும் நிலப்பிரபுகள் போலத்தான் 80களில் “நான் இத்தனை அகதிகளை ஏற்றிருக்கின்றேன்... நீ

எத்தனை அகதிகளை ஏற்றிருக்கின்றாய்", என ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகள் கௌரவப் பிதற்றல்கள் செய்து கொண்டிருந்த பொழுதுதான் நானும் பாலனும் ஐரோப்பா வுக்குள் காலடி எடுத்து வைத்தோம்.

எனவேதான் அகதி அந்தஸ்த்துப் பெறுவதற்கு விசாரணைகள் வழக்குகள் என்று பெரிதாக ஏதும் இருக்கவில்லை.

சரியாக நாம் வந்து 30வது நாளில் எங்கள் இருவருக்கும் அகதி அந்தஸ்துக் கிடைத்தது.

அதுவரையில் எங்களுக்கு கஷ்டமான விடயமாக இருந்தது ஒரே ஒரு விடயம் தான்.

முதல் நாளே எங்களுக்குத் தரப்பட்ட சாப்பாட்டுக் கோப்பையுடனும் தேநீர் கோப்பையுடனும் கன்ரீனில் மூன்று வேளையும் நீண்ட வரிசையில் சாப்பாட்டுக்கு நிற்பது தான் மிகப் பெரிய கடினமான விடயமாக இருந்தது.

எங்கள் பெரிய வீட்டுத் திருவிழாவின் பொழுது எத்தனை மக்களை நாங்கள் வரிசையில் காத்திருக்க வைத்து உணவு பரிமாறியிருப்போம்.

பந்தியில் மக்களை இருத்தி விட்டு நானும் மற்றவர் களும் வேட்டியின் வெளிச்சுற்றை பாதியளவில் உயர்த்திக் கட்டிக் கொண்டு உணவு பரிமாறியதில் எத்தனை சந்தோசம் இருந்தது என நினைத்துப் பார்ப்பேன்.

பாலனின் குடும்பம் யாரிடமும் கையேந்தாத குடும்பம்.

தட்டில் வைத்துக் கொடுக்கும் அரிசியையும் மரக்கறியையும் தண்ணீர் தெளித்துப் பூவும் போட்டு

மந்திரம் சொல்லி வாங்கிக் கொள்ளும் குடும்பம் அது.

வேகவைக்காதவற்றை மட்டும் காணிக்கையாக பெறுவார்கள்.

இப்போ........?

மிக நீண்ட வரிசையில் அனைத்து நாட்டு மக்களும் நிற்பார்கள்.

மற்றவர்கள் என்ன நினைக்கின்றார்கள் என்று நினைக்காமல் சிலர் வரிசையின் இடையில் வந்து புகுவார்கள்.

தமிழர்கள் தங்களுக்குள் தாங்கள் அவர்களைத் திட்டிக் கொள்வார்கள்.

ஆனால் கிட்டவாகச் சென்று நியாயம் கேட்க மாட்டார்கள்.

சில நாட்டு மக்கள் மிகவும் பெரிய சத்தத்துடன் பேசிக்கொள்வார்கள்.

என்ன பேசிக்கொள்கிறார்கள் என்றும் விளங்காது.

சண்டை பிடிக்கின்றார்களோ என்று தோன்றும்.

ஆனால் அவர்கள் நட்புடன்தான் பழகிக் கொள்வார்கள்.

"இவர்களின் கடவுள்களின் செவிப்பறை செப்புத் தகட்டால்தான் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். அல்லது அது வெடித்து விடும்" போன்ற பாலனின் நகைச்சுவைகளை விளங்கிக் கொள்வதற்கு கொஞ்சம் விஞ்ஞானபாட அறிவு வேண்டும்.

சாப்பாட்டைப் பொறுத்தவரை எனக்கு எந்தப் பிரச்சனையும் இருக்கவில்லை. ஏதோ ஒரு இறைச்சிவகை

அல்லது மீன்வகை இருக்கும்.

பாலன்தான் பாவம்... அவிக்காத மரக்கறியையும் தக்காளி சோசையும் ஏதோ ஒரு விதமாக சோற்றுடன் அல்லது பாணுடன் சமாளிப்பான். மேசையில் இருக்கும் உப்பையும் மிளகையும் அளவுக்கதிகமாய் சேர்த்து ஏதோ வகையில் சமாளிப்பான்.

பார்க்கக் கஷ்டமாய் இருக்கும்.

"எள்ளோடை சேர்ந்த எலிப்புளுக்கையாய் நீ கஷ்டப்படுகிறாய் பாலன்"

"இல்லை... 83 கலவரத்தோடை வெளியாலை போறது எண்டு தீர்மானித்ததுதான். ஆனால் இது வேறு விதமாய் அமைஞ்சிட்டுது. அதுதான் வித்தியாசம்" சிரித்தபடியே சொல்லுவான்.

*

டென்மார்க்கிற்கு வந்து சேர்ந்த செய்தியை மட்டும் கொழும்பில் இருந்த பாலனின் நண்பன் ஒருவனுக்குக் கடிதத்தில் எழுதினோம்.

நேராக எங்கள் வீட்டிற்கோ.. பாலன் வீட்டிற்கோ கடிதம் அனுப்புவது உசிதமாகப் படவில்லை.

இரண்டு கிழமைக்குள் அந்த நண்பனிடம் இருந்தும் அம்மாவிடமும் சாம்பசிவக் குருக்களிடமும் இருந்து கடிதங்கள் வந்திருந்தன.

சாம்பசிவக்குருக்களும் மனைவியும் பொலிஸ் ஸ்டேசனுக்குச் சென்று கொழும்பில் பாலனின் பட்டமளிப்பு விழாவில் நான் கலந்து கொண்டதாக சொல்லி விட்டு வந்து விட்டார்களாம்.

பாதுகாப்பிற்காக ஊர் விதானையாரையும் சேர்மனையும் குருக்கள் அழைத்துச் சென்றதால் அவரை வெருட்டவோ... துன்புறுத்தவோ இல்லையாம்.

ஒரு மரணவீடு முடிந்து உற்றார் உறவினர்கள் எல்லாம் தங்கள் தங்கள் வீட்டுக்கு போன பின்பு வீட்டினுள் ஒரு பயங்கர அமைதி நிலவுமே... அவ்வாறுதான் எங்கள் வீடு இருக்கின்றது என அம்மா கடிதத்தில் எழுதியிருந்தா.

"பபிதாவாலும் உன்னாலும் நிறைந்திருந்த வீடு... இப்ப எந்தச் சலனமும் இல்லாது... ஏதோ சமைக்கிறம்... சாப்பிடுகிறம்... ஐயர் வீட்டிலும் இதே நிலைதான்... அப்பா இப்போது அதிகமாக கோயிலடிக்கு போகிறார்... பெரிதாக கும்பிடுவதற்காக இல்லாவிட்டாலும்... நடை யைச் சாத்திய பின் சாம்பசிவக்குருக்களுடன் உன்னைப் பற்றியும் பாலனைப் பற்றியும் கதைத்துக் கொண்டு இருக்கிறதுக்கு... அத்தோடு ஏதாவது போராளிப் பெண் பிள்ளைகள் எங்கை யாவது இறந்தார்களா என கோயிலுக்கு வருபவர்களிடம் விசாரிப்பதற்காக...."

அம்மாவின் கடிதத்தை வாசிக்கும் பொழுது கண்கள் கலங்கிக் கொண்டு வரும்.

தொடர்ந்தும் ஆமி என்னைத் தேடி வருகிறதாம்.

நானும் இயக்கத்துக்குப் போய்விட்டேனா என்று கேட்டு விட்டுப் போவார்களாம்.

பெரியப்பா அண்ணன்மார் இருவரையும், சின்ன மாமி மச்சான் இருவரையும் வெளிநாட்டுக்கு அனுப்பி போட்டு மச்சாளை மட்டும் தங்களோடை வீட்டில் வைத்திருக்க விரும்பினமாம் என்றும்... டென்மார்க்குப் போய் டெனிஷ் பாசையைப் படித்து என்ன செய்கிறது

என்றும்... அதுபடியால் கனடா அல்லது இங்கிலாந்துக்கு தான் அனுப்ப அவை விரும்பினமாம் என்ற கொசுறு செய்திகளும் வந்து சேர்ந்தன.

பெரியப்பாக்கு அண்ணன்மாரை வெளிநாட்டுக்கு அனுப்புவதில் பெரிதாக எந்தப் பொருளாதாரப் பிரச்சனையும் இருக்கவில்லை... பெரியம்மா நல்ல கெட்டிக்காரி... கொழும்பில் இருந்த பொழுதே தங்கள் வீட்டில் பல்கலைக் கழகத்தில் படிக்கும் பிள்ளைகளுக்கு அறைகளை வாடகைக்கு கொடுத்து... அவர்களுக்கு அரைவயிறு முக்கால் வயிறு சாப்பாடும் கொடுத்துச் சம்பாதித்துக் கொண்டு இருந்தவா... தவிரவும் மாதச்சீட்டு - வட்டி என இதர வருமானங்கள் வேறு. பெரியப்பாவின் வருமானத்தோடு தனது வருமானங்களைக் கலக்காமல் தன்னுடைய சேமிப்பு என்று சேர்த்துக் கொண்டு இருந்தவா.

சின்ன மாமி கலவரத்துடன் மலையகத்தில் இருந்து ஊருக்கு வந்த பின்பு சின்ன மாமாவின் வாகன ஏஜன்ற் வியாபாரத்திற்கு யாழ்ப்பாண ரவுணில் ஒரு சின்னக் கடை எடுக்கவும் அவரது தொழிலை மீண்டும் ஸ்தாபிக்கவும் பெரியம்மாதான் வட்டிக்குக் காசு கொடுத்தவா என்பது எங்கள் குடும்பத்தினர்கள் அனைவருக்கும் தெரியும்.

பின்வளவு காத்திகேசுவின் மகன்மார் சவுதிக்குப் போய் அவனும் ஆட்களுக்கு வட்டிக்கு காசு கொடுக்கத் தொடங்கியிருந்தான்.

பெரியம்மா காசு கொடுக்காவிட்டால் காத்திகேசுவிடம் சின்ன மாமா வட்டிக்கு வேண்டுவார் போல இருக்கு என்று சின்னமாமி வந்து பெரியப்பாவிடம் மூக்கைச் சிந்திய பொழுது... மானம் மரியாதைக்குப் பயந்து பெரியப்பா

பெரியம்மாவிடம் பேசி... பெரியம்மா அந்தக் காசை வட்டிக்குக் கொடுத்தவா.

மேலும் பெரியப்பா அப்பா சின்னமாமியையும் எச்சரித்தவராம், "காத்திகேசனிடம் காசு வேண்ட இருந்ததை என் அப்பா அறிந்தால் எல்லாரையும் உண்டு இல்லை என்று ஆக்கிப் போடுவார்", என்று.

பின்பு ஏதோ விதமாக ஆளுக்காள் குசுகுசுத்துத் தான் எங்கள் வீட்டுக்குக் கதை வந்தது.

அப்போ அப்பா சொன்ன ஒரு விடயம் இப்போதும் எனக்கு நினைவிருக்குது.

எந்தளவு தீர்க்கதரிசனமாய் யோசித்திருக்கிறார் என்று பின்நாளில் யோசித்திருக்கின்றேன்.

அப்பப்பா இருந்திருந்தால் சின்ன மாமிக்கு தன் சொந்தத்தில் வட்டுக்கோட்டைப் பக்கத்தில்தான் செய்து வைத்திருப்பார். எங்கடை குடும்பத்தில் ஒருவரைச் செய்தால் தான் எங்கள் குடும்ப பெருமைகள் பரம்பரை பரம்பரையாக காப்பாற்றப்படும் என்று அடிக்கடி சொல்வார் என அப்பம்மா இருந்தவரை சொல்லியபடியே இருந்தா..

அது எவ்வளவு உண்மை.

அப்பம்மா அடிக்கடி சொல்லும் "சொந்த உறவு களுக்குள் திருமணம் செய்தால் தான் பின்னாளில் பரம்பரைப் பெருமைகள் காப்பாற்றப்படும்" என்ற விடயம் அப்பாக்கும் அம்மாவுக்கும் மனத்தில் இருந்ததாலோ என்னவோதான் எனக்குத் திருமணம் செய்ய வேணும் என்ற பொழுது அம்மா வழியில் நெருங்கிய உறவுப் பெண்ணான பவித்திராவை எனக்குப் பார்த்தவர்கள்.

நான் டென்மார்க்கில் நல்லபடியாகக் காலூன்றி இருக்கின்றேன் என்பதும்... ஏதோ ஒருவகையில் பாலனின் கண்காணிப்பில் வழிதவறிவிடாமல் இருக்கின்றேன் என்பதனை விடவும், மிகப்பெரிய பணக்காரர்கள் ஆகிய பவித்திரா வீட்டார் என்னை மாப்பிளையாக எடுக்க அப்பப்பாவின் பரம்பரைப் பெருமைகள்தான் காரணம் என அம்மா கடிதத்தில் எழுதியிருந்தா.

கல்யாணம் முற்றாகிய பொழுது அப்பா எனக்குத் தொலைபேசியில் சொன்னது இதுதான், "வருகிறவளுக்கு அவர்கள் கடையில் லிப்ஸ்ரிக், ஐபுரோ மை, நெயில்ப் பொலிஸ் அது இது எல்லாம் இருந்தும் அதுகளைப் பாவிக் காத பிள்ளை... ஆனால் அம்மா என்னையும் உன்னையும் பபிதாவையும் இத்தனை வருடங்களாய்ப் பார்த்தது போல உன்னையும் உனக்குப் பிறக்கப் போற பிள்ளைகளையும் பார்த்துக் கொள்ளுவாள்".

சாம்பசிவக்குருக்களும் எனக்கு ஒரு கடிதம் எழுதி யிருந்தார், "அப்பா அம்மா ஒரு மகாலட்சுமியை உனக்கு நிச்சயித்து இருக்கின்றார்கள்... அப்பிடி ஓர் அம்மனைத் தான் பாலனுக்கும் பார்த்துக் கொண்டு இருக்கின்றோம்" என்று.

அந்தக் கடிதம் வந்தவுடன் வீட்டுக்கு ஒரு கடிதம் எழுதினேன்.

"பாலனுக்கும் பெண் பார்த்துக் கொண்டு இருக் கின்றார்கள். எனவே அதுவும் சரி வந்தவுடன் இரு பெண் களையும் ஒன்றாக இங்கு அனுப்புங்கள். எனக்காக ஏதோ விதத்தில் தன் வாழ்க்கையைத் திசைதிருப்பிய பாலனை விட்டுட்டு நான் மட்டும் கல்யாணம் செய்வது சரியில்லை"

என்று.

அப்பாவும் அம்மாவும் தயங்கியபடியே போய் இதனைப் பவித்திரா குடும்பத்துக்குத் தெரிவித்த பொழுது "இப்படியொரு மருமகனைப் பெற நாங்கள் தான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்" என பவித்திராவின் பெற்றார் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்களாம்.

அந்தச் சமயத்தை எதிர்பார்த்திருந்தது போல அம்மா, "எப்பிடியும் எங்கள் பிள்ளையின் கல்யாணத்தை நாங்கள் பார்க்கப் போறதில்லை. கல்யாணத்திற்குப் பிறகு மருமகளுடன் வாழுற பாக்கியமும் எங்களுக்கு இல்லை. பபிதாவும் போனதாலை வீடு வெறிச்சோடி இருக்கு. அதாலை...."

அம்மாவிற்கு தொடந்து கதைக்க முடியாமலும்... அப்பாவையும் நிமிர்ந்து பார்க்கும் தைரியம் இல்லாமலும்... பவித்திராவின் பெற்றார் தான் சொல்வதை எவ்வாறு ஏற்பார்கள் என்ற தயக்கத்துடனும்... தடக்கித் தடக்கி தடுமாறி அவாவின் வார்த்தைகள் வெளிவரமுடியாது தடுமாறிய பொழுது...

பவித்திராவே அம்மாக்கு பக்கத்தில் வந்து, "நான் உங்களோடையே வந்து இருக்கவா மாமி" என்ற பொழுது அம்மா ஏதும் பேசமுடியாது "ஆம்" எனத் தலை யாட்டினாவாம்.

அப்பாவுக்கும் மிகவும் மகிழ்ச்சியாக இருந்ததாம்.

ஆனாலும் பவித்திராவின் பெற்றார்கள் என்ன சொல் வார்களோ என அவரும் மௌனமாகவே இருந்திருக்கின்றார்.

"சண்முகத்தார் குடும்பத்துக்கை போறதே எவ்வளவு பெருமை. நீங்கள் ஏன் தயங்கித் தயங்கிக் கேட்க வேணும்.

இப்பவே கூட்டிக் கொண்டு போகப் போறம் எண்டு நீங்கள் சொல்லியிருந்தாலும் நாங்கள் தடுத்திருக்க மாட்டம்" பவித்திராவின் பெற்றார் இருவருமே சேர்ந்து சொன்னார் களாம்.

அப்பாதான் அடுத்த மாதம் வர இருக்கும் எங்கள் கோயில் திருவிழா அன்று கோயிலில் வைத்து எங்கள் உறவினர்கள் முன்னிலையில் சம்பந்தம் கலந்து விட்டுப் பெரிய வீட்டு வளவுளுக்குள் சாத்திரப்படிக்குக் காலை வைத்து விட்டு எங்கள் வீட்டுக்கு கூட்டி வருவதாகச் சொன்னாராம்.

எல்லோருக்கும் மிக மகிழ்வான தினமாக அது அமைந்ததாம்.

*

58ல் அப்பப்பாவின் மறைவிற்குப் பிறகு 85வரை அப்படியொரு திருவிழாவை எங்கள் குடும்பம் கொண்டாடி யிருக்கவில்லையாம் என்று ஊர் முழுக்க கதைத்திருந்ததாம்.

83 கலவரம் வந்ததால் முழுநாட்களும் பகல் பூசை யுடன் தான் கழிந்தது.

அந்த ஆண்டு மட்டும் தான் எங்கள் குதிரை வாகனம் வெளிவீதிக்கு வராதது.

பபிதா இயக்கத்திற்குப் போய் நானும் பாலனும் நாட்டை விட்டு வெளியேறிய ஆண்டு அது.

ஆனால் 85ல் எனக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டு அங்கேயே சம்பந்தம் கலக்கப்பட்டதால் பவித்திராவின் குடும்பத்தினரே அந்தத் திருவிழாவைத் தம் பொறுப்பில் எடுத்துக் கிட்டத் தட்ட அப்பப்பா செய்யும் அளவுக்கு

பிரமாண்டமாகச் செய்தார்களாம்.

அவர்களுக்கும் கொழும்பிலும் வவுனியாவிலும் யாழ்ப்பாணத்திலும் பெரிய புடவைக்கடைகள் உண்டாம்.

“சண்முகத்தார் குடும்பம் தங்களைப் போன்ற இடத்திலைதானாம் பெண் எடுத்திருக்கினம். ஆனால் அந்தப் பிள்ளையைப் பார்த்தால் அப்பிடி எந்த ஏடெடுப்பும் இல்லை”, என கோயிலுக்கு வந்திருந்தவர்கள் பேசிக் கொண்டது அப்பாக்கும் அம்மாக்கும் மிகச் சந்தோசமாம்.

பெரியப்பா, சின்ன மாமி குடும்பத்தினர் எல்லோருக்கும் கோயிலில் வைத்துப் பவித்திராவை அறிமுகம் செய்து வைத்தார்களாம்.

கோயில் கொடி இறக்கத்துடன் அண்ணன்மார் இரண்டு பேரும் கனடாக்கும்... மூத்த மச்சானும் இளைய மச்சானும் இங்கிலாந்திற்கும் போவதற்கும் ஏஜன்றிடம் கதைத்திருக்கிறார்கள் என்றும் அப்பா அம்மாவிடம் தெரிவிக்கப்பட்டதாம்.

குடும்பத்தினுள் நிலவிய எந்தச் சின்னச் சின்னக் கீறல்களையும் எவரும் வெளிக்காட்ட வில்லையாம்.

அனைத்துக் குடும்பத்தினரும் தர்ப்பை அணிந்து செய்யும் எங்கள் திருவிழாவுக்கு, இந்த முறை பவித்திராவையும் அப்பா அம்மாக்கு நடுவில் இருத்தி அவளின் கையிலும் தர்ப்பை போட்டது பவித்திரா வீட்டாருக்கு மிகவும் சந்தோசமாய் இருந்ததாம்.

பவித்திராவின் தந்தையாரும் ஐந்து ஆண்சகோதரர்களும் சேர்ந்து குதிரை வாகனத்தைக் காவியது ஊருக்கே கண்பட்டது போல இருந்திருக்கும் என அம்மா எழுதியிருந்தா.

மதியம் சுவாமி இருப்பிடம் வந்த பின்பு இரு குடும்பங்களையும் சாம்பசிவக்குருக்கள் வசந்த மண்டபத்தில் இருத்தி... தட்டு மாற்றிச் சிறப்பாக சம்பந்தம் கலந்து வைத்தாராம்.

பின் அனைவரையும் சின்ன மாமி வீட்டுக்குக் கூட்டிச் சென்று அங்கேயே மதிய விருந்து கொடுக்க அப்பா ஒழுங்கு செய்திருந்தாராம்.

அப்பொழுதுதான் அப்பப்பா அப்பம்மாவின் ஆசி முழுக்க முழுக்க பவித்திராவுக்கும் எனக்கும் கிடைக்கும் என்பது அப்பாவின் நம்பிக்கை.

சின்ன மாமியும் எந்த மறுப்பும் சொல்லவில்லை யாம்.

பெரிய ஒரு பணக்காரச் சம்பந்தம் வந்தது மனத்தில் பெரிய நெருடலைக் கொடுத்திருக்கும் என்றாலும் தாங் களும் பெரிய பணக்காரர்களுக்குச் சம்பந்தி என்ற பெருமை யில் சின்ன மாமியோ சின்ன் மாமாவோ எதையுமே வெளிக்காட்டவில்லையாம்.

சின்ன மச்சாள் பச்சைத் தண்ணி.

"அக்கா... அக்கா" என்று பவித்திராவுடன் நன்கு ஒட்டிக் கொண்டாளாம்.

இரவுத் திருவிழாவும் முன்னையது போல வீதிக்கு வீதி மேளச்சமாக்கள்... வாள் விளையாட்டுகள்.. வேல் விளையாட்டுகள்... வானவேடிக்கைகள்.... அத்தனையும் நடந்ததாம்.

"நான் நின்றிருந்தால் சம்பந்தபகுதிக்கு இரும்பு வளைய சுருள்வாள் வீசிக்காட்டியிருப்பன்" என்று

பவித்திராவுக்கு அம்மா என் புகழ் ஓதிக் கொண்டு இருந்தது ஒரு பக்கம் என்றால்...குதிரை வாகனத்தின் பெருமையைப் பற்றியும், எங்கள் பரம்பரைக் கதைகள் பற்றியும், மற்ற மற்றப் பெருமைகள் பற்றியும் அப்பா கூறிக் கொண்டேயிருந் தாராம்.

நடுவில் குதிரை வாகனத்தில் எழுந்தருளி முருகன் வள்ளி தெய்வானை சமேதரராயும்.... வலது பக்கத்தில் பிள்ளையாரும்... இடது பக்கத்தில் அம்மனும்... லைற்று களால் ஜோடிக்கப்பட்டு வீதி உலாவலம் வந்தது கண் கொள்ளாக் காட்சியாய் இருந்ததாம்.

சுவாமி இருப்பிடத்துக்கு வந்ததும் காளாஞ்சி வேண்டுவதற்குப் பவித்திராவைத்தான் அப்பா அம்மா முன்னுக்கு விட்டார்களாம்.

சாம்பசிவக் குருக்கள் அவளுக்கு மாலை போட்டுத் தனது பூரண ஆசீர்வாதத்தை வழங்கினாராம்.

அவளும் குருக்களையும் மனைவியையும் காலில் விழுந்து வணங்கினாளாம்.

*

இரவு பூசை முடிந்த பின்பு எல்லோரையும் எங்கள் வீட்டுக்கு அழைத்து வந்து அங்கேயே இரவு விருந்து கொடுத்தார்களாம்.

பெரியப்பா குடும்பத்தையும் சின்ன மாமி குடும்பத்தையும் கூட அழைத்திருந்தார்களாம்.

நல்லதொரு நாளில் இருபகுதியும் ஓரிடத்தில் கை நனைத்தது இரு பகுதிக்கும் நிறைவாய் இருந்ததாம்.

எல்லாம் நிறைவாய் நிறைவேற, முன்பே ஒப்பந்தம்

செய்தது போல பவித்திராவை எங்கள் வீட்டையே விட்டு விட்டுப் போகின்ற நேரம் தொடக்கம்... அவர்கள் கார் ஏறும் வரை கடைசி அரை மணித்தியாலங்கள் வரையும்.... யாரும் யாருடனும் கதைக்கவில்லையாம்.

அப்படியொரு இறுக்கம் அங்கு நிலவியதாம்.

எவர் எந்த வார்த்தை கதைத்தாலும் உடைந்து விடுவார்கள் என்ற நிலைதானாம்.

பவித்திரா தன் தகப்பனின் கையைப் பிடித்துக் கொண்டு நின்றாளாம்.

தாயை விடத் தகப்பனுடன் அவள் நல்ல ஒட்டு என்பது அனைவருக்கும் தெரியும்.

எனவேதான் தகப்பனை விடவும் தமையன்மார் ஐவரிலும் அவளது அதிகாரம் அந்தக் குடும்பத்தில் கொடிகட்டிப் பறக்குமாம்.

தாயும் தகப்பனும் கட்டிப் பிடித்துக் கொஞ்சிவிட்டு காரில் ஏறப்போகும் பொழுது எல்லோரின் கண்களும் கண்ணீரால் நிறைந்திருந்ததாம்.

பார்த்துக் கொண்டு நின்றவர்களின் கண்கள் உட்பட.

அனைவரும் போனபிறகும் வீட்டினுள் போகாமால் பௌர்ணமி நிலவு காய்ந்து கொண்டும்... சோளகக் காற்றும் இதமாக வீசிக் கொண்டும் இருந்த வீட்டின் வாசற்படியில் அம்மாவின் மடியில் தலை வைத்து பவித்திரா படுத் திருந்தாளாம்.

அம்மா பபிதாவை அணைத்து வைத்திருப்பது போல அணைத்து வைத்திருந்தாவாம்.

*

எங்கள் திருவிழா முடிந்து ஐந்தாம் நாள் வரும் தேர்த்திருவிழாவுக்கும் பவித்திராவின் குடும்பம் முழுவதும் வந்திருந்தார்களாம்.

மீண்டும் பவித்திராவின் முகம் மேலும் மலர்ந் திருந்ததாம்.

அடுத்தநாள் கொடி இறக்கத்துடன் அண்ணன்மாரும் மூத்த மச்சானும் இளைய மச்சானும் கொழும்புக்குச் சென்று விட்டார்களாம் - அவர்களினது கனடாவிற்கும் இங்கி லாந்திற்குமான பயணத்திற்காக.

கடைசிநாள் நாள் பூங்காவனத் திருவிழாக்கு பாலனின் அம்மாவுடன் ஒரு அழகிய பெண்ணொருத்தி நின்றிருந்தாளாம்.

சாம்பசிவக்குருக்கள் கொடிக்கம்பத்திற்கு பக்கத்தில் நின்றிருந்த அப்பா, அம்மா, பவித்திராக்கு கிட்டவாய் வந்து பாலனுக்கு பார்த்திருக்கிற பெண் இதுதான் என அறிமுகப் படுத்தினாராம்.

நல்லூர் கந்தசாமிக் கோயில் பிரதம குருக்களின் மகளாம்.

பெயர் அபிராமி.

பூசை முடிய அப்பாவும் அம்மாவும் பவித்திராவும் சாம்பசிவக்குருக்களின் வீட்டிற்குச் சென்று அவர்கள் குடும்பத்தின் மகிழ்ச்சியில் கலந்து கொண்டார்களாம்.

பவித்திராவும் அபிராமியும் ஒருவருடன் ஒருவர் நன்கு ஒட்டிக் கொண்டு விட்டார்களாம்.

இருவரையும் வைத்து இரண்டு குடும்பத்திற்கும் முன்பு சாம்பசிவக்குருக்கள் ஒரு வேண்டுகோளை

வைத்தாராம்.

"நண்பர்கள் என்றதைத் தாண்டி இரண்டு சகோதரங்கள் போல வளர்ந்திட்ட அவை இருவருடைய உறவும் எவ்வாறு இன்றுவரை இறுக்கமாக இருக்கிறதோ... அது நீங்கள் அங்கு போன பிறகு இன்னமும் நெருக்கமாக இருக்க வேணும்"

ஒரு தந்தையாக... எங்கள் குடும்பத்தின் குருக்களாக... எங்களில் என்றும் அக்கறையுள்ள சாம்பசிவக் குருக்களின் வேண்டுகோள் முற்று முழுதாக நியாயமாகவே அனைவருக்கும் பட்டதாம்.

"இதனை நான் என் வாயால் கூடச் சொல்லியிருக்கக் கூடாது... ஆனால் சிலவற்றைக் காலம் தாழ்த்திச் சொல்லாமல் விட்டு விட்டோம் என்று பின்னாளில் நாங்களே வருந்தக் கூடாது என்பதற்காகத் தான் சொன்னேன்", என்று சொல்லிவிட்டு எல்லோரின் முகங்களையும் பார்த்தாராம்.

சாம்பசிவக்குருக்களின் உணர்வுமிக்க இந்த வேண்டுகோள் எல்லோரையும் ஒரு கணம் அமைதியாகக் கட்டிப் போட்டிருந்தது.

"இன்னும் கொஞ்சம் காலம் தாழ்த்தி நீங்கள் உங்கள் மருமகளைக் கண்டு பிடிச்சிருந்தால் நான் என்ரை மருமகளோடை இன்னும் கொஞ்சக் காலம் ஒண்டாய் இருந்திருப்பேனே" என தன் மகிழ்ச்சியையும் ஆதங்கத்தையும் வெளிப்படுத்தி அந்த மௌனத்தையும் இறுக்கத்தையும் அம்மாதான் கலைத்தாவாம்.

பவித்திரா அம்மாவின் தோளில் சாய்ந்து கொண்டாளாம்.

அவர்கள் நிச்சயம் செய்த பின்புதான் பாலனுக்கே

அபிராமி அண்ணியின் படம் வந்தது.

பவித்திராவின் விடயத்தில் நானே படம் பார்த்து சம்மதம் தெரிவித்த பின்பு எங்கள் குடும்பத்தில் அடுத்த படி எடுக்கப்பட்டது.

ஆனால் பாலன் ஒரு விநோதப்பிறவி.

அதுவும் இந்த நூற்றாண்டில்.

படத்தைப் பார்த்துக் கொண்டேயிருந்தான்.

அவன் வெட்கப்பட்டுப் பார்த்த முதல் நாள் அது.

அவனுடைய பூரண சம்மதத்தை அறிந்த பொழுது, "இனிமேல் பாலனின் மனைவியை வயதில் இளமை என்றாலும் அதிகம் என்றாலும் அண்ணி என்றும் அல்லது அபிராமி அண்ணி என்றும் தான் நாம் இருவரும் அழைக்கவேண்டும்" என்று பவித்திராவுக்கு கடிதத்தில் தெரிவித்து இருந்தேன்.

காரணம் அவர் வெறும் என் நண்பனின் மனைவி மட்டுமில்லை டென்மார்க்கில் உள்ள ஒரு கோயிலின் குருக்களின் மனைவி என்பதால் நாம் அந்தக் கௌரவத்தைக் கொடுக்க வேண்டும் என்பதே.

"அபிராமி எனக்கு மாதக்கணக்கில் இளையவர்தான். ஆனாலும் தற்பொழுது நான அவரை "அக்கா" என்றே அழைக்கத் தொடங்கி விட்டேன்" என பவித்திராவின் பதில் வந்திருந்தது.

இருண்டு போயிருந்த எல்லோர் வாழ்விலும் முகில்களின் கரைகளில் வெள்ளிக் கம்பிகள் தென்படத் தொடங்குவது போல சந்தோசக்களை பரவத்தொடங்கின.

# 14

ஏதோ ஒரு நியாயப்படுத்தலுக்காக ஹரியை நான் அனுப்பி வைத்தது போலத்தான்.... முன்பின் தெரியாத டென்மார்க்கிற்கு நானும் பாலனும் வந்து சேர்ந்ததும்.

அன்று அன்னிய நாடு ஒன்றிற்கு வந்திறங்கிய பொழுது இருந்த துணிவில் எதுவுமே ஹரியை அமெரிக்கா வுக்கு நான் அனுப்பும் பொழுது எனக்குள் இருக்கவில்லை.

முற்று முழுதாக அறிந்த ஒரு நாட்டிற்கு பயணத்திற் கான பணம்... தங்குமிடம்... படிக்க இருக்கும் பாடசாலை என அனைத்தையும் ஒழுங்கு செய்து அவனை அனுப்பிய பொழுதும் நான் அவனுக்குச் செய்த துரோகம் என்பது என்னை உறுத்திக் கொண்டிருந்தது காரணமாக இருக்கலாம்.

ஆனால் விமானநிலையத்தில் இருந்து புறப்படும் பொழுது அவன் எந்தச் சஞ்சலத்தையும் காட்டவில்லை.

பாலனும் மனைவியும் வந்திருந்தனர்.

ஹரிணி வந்திருக்கவில்லை.

அவளுக்கு அன்று மாலை வகுப்பு இருக்குதாம் எனப்

பாலன் சொன்னான்.

அது உண்மையோ பொய்யோ தெரியாது.

பொய்யாக இருந்திருந்தால் அதுவும் நியாயம் தானே.

எல்லோரையும் மகிழ்ச்சியாகக் கட்டித் தழுவிக் கொண்டு விடை பெற்றுக் கொண்டான்.

பானுவிடம் மட்டும், "அப்பா அம்மாவுக்கு வாய் காட்டாமல்... சண்டை பிடிக்காமல் இரு" என பொறுப் பாகச் சொல்லி விட்டுப் புறப்பட்டவன் இன்னும் கொஞ்ச நேரத்தில் வரப் போகிறான்.

இராகுலன் கட்டாயம் நேரத்துடன் விமான நிலையத்திற்குப் போயிருப்பான்.

அது எங்கள் பரம்பரையில் எல்லோருக்கும் வருவது.

பாலன் விளையாட்டாகச் சொல்வான், "என்ரை ஐயா நித்திரையாலை எழும்ப முதலே நீ கோயில் வாசலில் நிற்கிறனீ" என.

அது அப்படியே இராகுலனுக்கும் வந்து விட்டது.

"வீட்டில் இருந்திருந்தால் பிள்ளைக்குப் பிடித்த மீன்ரின் கட்லட் செய்து கொடுத்திருப்பன்"

திரும்பிப் பவித்திராவைப் பார்த்தேன்.

"இப்ப நீ வீட்டை தனிய என்றபடியாலைதான் என்னோடை நிற்க நான் ஒமெண்டனான்.... இனிமேல் நீ வீட்டை போய் வா... ஹரி நிக்கிற இந்தக் கிழமை முழுக்க அவனோடையே நில்லு... அவனுக்கு விரும்பின சாப்பாடு களைச் செய்து கொடு... அவனோடையே ஒவ்வொரு நாளும் வந்து போ... எனக்கு எதுவும் நடந்து விடாது... ஏதும்

அவசரம் என்றாலும் ஆஸ்பத்திரி உனக்கு அறிவிக்கும்... உனக்கு முதல் பாலனும் ஓடி வந்து விடுவான்"

பவித்திரா மெளனமாக என்னைப் பார்த்தபடி நின்றுவிட்டு, ஏதும் சொல்லாமல் மாடி யன்னலால் இராகுலனும் ஹரியும் வருகிறார்களா என்று பார்த்துக் கொண்டு நின்றாள்.

இரண்டு வருடத்திற்கு முன் பானு வீட்டை விட்டு ஓடிவிட்டாள் என அறிந்த பொழுதும் இது போன்று ஒரு கிழமை லீவில் அவசர அவசரமாக வந்து அவசர அவசர மாகப் போனவன் தான்.

இப்போது மீண்டும் இரண்டு வருடங்களுக்குப் பின் ஒரு கிழமை லீவில் வருகிறான்.

பானு வீட்டை விட்டுப் போனதால், எங்களுக்கு ஆறுதலாய் இருக்கிறன் என்று வந்தவனை நாங்கள் தான் ஆறுதல்படுத்த வேண்டியிருந்தது.

வந்தது தொடக்கம் போகும் வரையும் பானுவை ஏசிக் கொண்டும்... அவளை வீட்டை இழுத்துக் கொண்டு வரவேண்டும் என்ற வேகத்துடனும்... பானுவின் வீட்டுக் கார ஆட்களுக்குப் போய் அடிக்க வேண்டும் என்றும் சத்தம் போட்டுக் கொண்டு இருந்தான்.

"அவள் வீட்டை விட்டுத் தானே வெளிக்கிட்டுப் போயிருக்க வேண்டியதுதானே?... என்ன துணிவு இருந்தால் அவங்கள் உங்கள் வீட்டு வாசலுக்கு வந்து காரிலை ஏற்றிக் கொண்டு போவான்கள்?"

கொதித்தான்.

அவனை அமைதிப் படுத்துவது பெரியபாடாக

இருந்தது.

"அண்ணை என்ன செய்து கொண்டிருந்தவர்" என்று இராகுலனையும் இழுத்து ஏசிக் கொண்டிருந்த பொழுது இராகுலனின் மனைவி வீட்டுக்குள் வந்ததை ஹரி காணவில்லை.

எனக்கும் பவித்திராவுக்கும் ஒரு மாதிரியாகப் போய்விட்டது.

"ஓம் ஹரி... நீ சொன்னது போலை நான் இவரை இன்னும் நாலைந்து பேரோடை விட்டு சண்டித்தனம் செய்திருக்கலாம் தான்.. ஆனால் அவளுக்கு நாளைக்கு குழந்தை குட்டி வந்த பிறகு இவையாய் அவளைத் தேடிப் போவினம்... இல்லாட்டி அவளாக இவையைத் தேடி வந்தால் "வரவேண்டாம்" என்றா சொல்லப் போகினம். அப்போ நானும் இவரும் முகத்தை எங்கை கொண்டு போய் வைக்கிறது?"

அன்று மருமகள் சொன்னது தான் அச்சொட்டுப் பிறழாது நேற்று நடந்ததும்... சாப்பாடுடன் வந்த மருமகள் இன்று கோபித்துக் கொண்டு சென்றதும்!

மருமகளுக்கு இருந்த இந்தத் திறமை அச்சொட்டு மாறாது அப்பம்மாக்கும் இருந்தது.

எதையும் முன்கூட்டியே எதிர்வு கூறும் திறமை அது.

அவா பல தடவைகள் எங்கள் குடும்பத்தில் எச்சரித்தது தானே கடைசியில் நடந்ததும்!

*

பேத்திமார் இருபுறமும் ஹரியின் கைகளைப் பிடித்துக் கொண்டு வர அவன் உள்ளே வந்தான்.

பவித்திரா ஓடிச்சென்று அவனைக் கட்டிக் கொண்டாள்.

"என்னடா கோலம் இது"

அவன் சிரித்தபடி என்னை வந்து கட்டிக் கொண்டான்.

இராகுலன் வழமைபோல அமைதியாக வந்து எனக்கருகில் இருந்து எனது அன்றாட வைத்தியப் பதிவுப் பத்திரங்களைப் பார்க்கத் தொடங்கினான்.

ஹரி சரியாக 70களின் ஹிப்பிகள் போல மாறி யிருந்தான்.

கழுத்து.. மணிக்கட்டுகள் எல்லாம் மாலைகளும் தடித்த பவுணோ... அல்லது கிளிற்றாலே ஆன சங்கிலிகளும்.

தலையும் இருபக்கமும் மொட்டை அடித்தது போல இருந்தது.

நடுத்தலையில் தான் மயிர்கள் இருந்தது.

முகத்தில் தாடிமயிர்கள் இடையே கோடுகள்... கோடுகள் போல....

அமெரிக்க ரி.வி.யில் வரும் அமெரிக்க வெள்ளையர் கள் போல...

நல்ல காலம் அவனின் தோல் நிறம் மட்டும் மாறவில்லை.

"ஹரி மட்டும் ஐயர் குடும்பத்தில் பிறந்திருந்தால் கையிலை தர்ப்பையையும் கொடுத்து பூணூலும் போட்டு விட்டால் சரி" என பாலன் சொல்லி ஆனந்திக்கும் அதே தளதளக்கும் உடம்பும் நிறமும் இப்போதும் மாறாமல் இருந்தது.

எல்லோரின் சுக நலன்களையும் ஹரி விசாரித்துக் கொண்டிருந்தான்.

பவித்திராவால் பாலன் குடும்பத்தின் சுக நலன் களையும் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

“தினமும் பாலன் வந்து அப்பாவைப் பார்த்துக் கொள்கிறார்... எங்களுக்கு மிகவும் பக்க பலமாக இருக் கிறார்... அபிராமி அண்ணியும் நல்ல சுகமாய் இருக்கின்றா... ஹரிணியும் நடனம்-சங்கீதம்-வயலின்... அத்துடன் தன் படிப்பு என்று ஒரே பிசி....”

ஹரி “உம்“ கொட்டிக் கொண்டு இருந்தான்.

“கட்டாயம் நீ பாலன் மாமா வீட்டுக்குப் போய்ப் பார். ஆனால் போகேக்கை உந்த உருத்திராட்சக் கொட்டை களைக் கழட்டிப் போட்டு தலைமுடியையும் ஒழுங்காக வெட்டிக் கொண்டு போ”, அவனின் எந்தப் பதிலையும் எதிர்பாராது இராகுலனின் பக்கம் திரும்பி, “உனக்கு நேரம் இருக்கேக்கை நீயும் அவனோடை ஒருக்காப் போட்டு வா... வேணுமெண்டால் அம்மாவையும் கூட்டிக் கொண்டு போ” என்றேன்.

இராகுலனும் “ஓம்” எனத் தலையாட்டினான்.

அவனுக்குள் நான் உருவாக்கிய தழும்பு நாலு வருடத்துக்குள் ஆறிவிட்டிருக்கும் என்று நான் சொல்ல மாட்டேன்.

அவனுக்கு நான் இன்னமும் இடரைக் கொடுக்க விரும்பாட்டியும்... அவன் அமெரிக்கா போகப்போறான் என்ற பொழுது தட்டத்தில் 10.000 குறோன்களைத் வைத்துத் தந்த பாலனையும் அபிராமி அண்ணியையும் ஹரி மதிக்க கற்றுக் கொள்ள வேண்டும் என்ற விருப்பம் தான் நான்

அவனைப் பாலன் வீட்டை போகும்படி சொல்ல வைத்தது.

நான் இங்கே அனுமதிக்கப்பட்ட பிறகு இரண்டொரு தடவை ஹரிணி பாலனோடும் அபிராமி அண்ணியுடனும் வந்து என்னையும் பார்த்துப் பவித்திராவோடும் பேசிச் சென்றவள்.

ஆனால் "அன்ரி... அன்ரி", என்று பவித்திராவை வளைய வரும் அந்தப் பழைய ஹரிணியை என்னால் காண முடியவில்லை.

அது என் மனப்பிரேமை மட்டும் தானா என உறுதிப்படுத்த பவித்திராவிடம் கேட்ட பொழுது அவளும் அதையே சொன்னாள்.

கம்பஸ்சுடன் நடனம் சங்கீதம் வயலின் மூன்றையும் விடாமல் கற்றுக் கொண்டு இருக்கிறாளாம்... கொஞ்சம் ஒன்றிரண்டை விட்டிடு என்று சொன்னாலும் கேட்கிறாள் இல்லை என பாலன் சிலவேளை சொல்வான்.

தனக்குள் ஏற்பட்ட இழப்புகளுக்கு... தழும்புகளுக்கு இவற்றால் களிம்பு தடவிக் கொண்டு இருக்கிறாள் போலும்.

எனக்கு மனச்சாட்சி வந்து உறுத்திச் செல்லும்.

வீட்டில் இருந்த பொழுதும் சரி... ஆஸ்பத்திரியில் இப்படிப் படுத்திருக்கும் பொழுதும் சரி... ஹரிணியின் பெயர் எந்த ரூபத்தில் வந்தாலும் என்னுள் எழும் மாற்றத்தைப் பவித்திரா கண்டு கொள்வாள்.

அவளால் என்ன செய்ய முடியும்?

பாவம் - பவித்ரா!

"என்னப்பா யோசனை"

ஹரி என்னை இழுத்து வந்தான்.

"இல்லையடா.... ஏதோ என்னை அறியாமல்"

பவித்திராவுக்கு மட்டும் தான் பதில் தெரியும்.

"அப்பா நான் ஹரியை வீட்டை கூட்டிக் கொண்டு போய்ச் சாப்பாடு கொடுத்திட்டு பின்னேரம் கூட்டி வாறன்"

"அம்மா நீங்களும் வாறியளா?" இராகுலன் கேட்டான்.

நான் பவித்திராவை திரும்பிப் பார்த்தேன்.

"இல்லை.... அப்பா பின்னேரம் ஹரியோடை போகச் சொன்னவர். அப்ப நான் வாறன்"

இப்போ பாலன் வீட்டுக் கதை வந்ததால் நான் உள்ளுக்கை தவிக்கின்றேன் என்று தெரிந்தபடியால்தான் பவித்திரா என்னைத் தனிய விட்டுப் போகவில்லை என எனக்கு நன்கு தெரியும்.

பேத்திமார் இருவரும் என்னை இறுகக் கட்டி முத்தம் தந்து விடை பெற்றுக் கொண்டார்கள்.

நாலு பேரும் அறையை விட்டு போவதையே பார்த்துக் கொண்டு இருந்தேன்.

*

ஹரியின் தோற்றம் எனக்குள் பல கேள்விகளையும் கவலையையும் தோற்றிவித்திருந்தது.

ஹரிணியின் காதல் தோல்வி அவனை ஏதாவது பிழையான வழிகளில் கொண்டு சென்று கொண்டிருக்கின்றதா?

அமெரிக்காவில் ஏகாந்தமாய் வாழும் இளைஞர்கள் கூட்டத்துடன் சேர்ந்து போதைவஸ்துகள்... அது... இது.. என்று அவனும் தன்னுடைய வாழ்க்கையைப் பாழடித்துக் கொண்டிருக்கின்றானா??

அல்லது உலகமெங்கும் பரவிக் கொண்டிருக்கும் ஏதாவது பயங்கரவாத இயக்கங்களுடன் இவனுக்குத் தொடர்புகள் ஏதாவது ஏற்பட்டுவிட்டதா???

அல்லது இவை எல்லாம் என் மனப்பிரமையா????

என் ஆழமான அமைதியைப் பவித்திரா கவனித் திருக்க வேண்டும்.

"என்ன சண்முகத்தார் பெரிய யோசனை போலை"

பவித்திரா என்றும் என்னைப் பெயர் சொல்லி அழைத்ததில்லை.

ஏதாவது விளையாட்டுக்குப் பெயர் சொல்லி அழைக்க வேண்டும் என்றால் அப்பப்பாவின் பெயரைச் சொல்லி அழைப்பாள்.

இன்றும் அப்பிடித்தான் அழைத்திருந்தாள்.

ஆனால் என் மனவேதனையை அறிந்தால் அவள் இப்படி விளையாட்டாக அழைத்ததற்காக நிச்சயம் வருந்து வாள்.

திரும்பிப் பார்த்தேன்.

"என்னப்பா யோசனை?" மீண்டும் கேட்டாள்.

"இல்லை" எனத் தலையாட்டினேன்.

என் பக்கத்தில் வந்து அமர்ந்து என் தலையைத் தடவினாள்.

என்னையும் அறியாமல் என் கண்கள் கலங்கத் தொடங்க தன் சேலைத் தலைப்பால் என் முகத்தைத் துடைத்து விட்டாள்.

"சொல்லுங்கோப்பா"

"நீ எனக்கு ஒரு உதவி செய்ய வேணும்"

இப்படி "உதவி" என்ற வார்த்தையை இத்தனை வருட தாம்பத்தியத்தில் நான் பவித்திராவிடம் பகிர்ந்ததில்லை.

அதில் உள்ள அழுத்தத்தையும் ஆழத்தையும் அவள் புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

"சொல்லுங்கோப்பா"

கண்களை இறுக மூடி மூச்சை ஒரு தரம் நன்கு இழுத்து விட்டுக் கொண்டேன்.

"சொல்லுங்கோப்பா... எது என்றாலும் சொல்லுங்கோ"

"ஊம்... ஹரி திரும்பி அமெரிக்காக்குப் போக முதல் நீ அவனிட்டை இரண்டு விடயம் கேட்டுச் சொல்ல வேணும்...."

"ஏன் நான்? நீங்களே அவனிட்டைக் கேட்கக் கூடாதா?"

"இல்லை பவித்திரா... ஹரி விடயத்தில் ஏதோ விதத்திலை எனக்கு நானே தண்டனை கொடுத்துக் கொண்டு வாழுற ஒரு குற்றவாளி போலத்தான் நடந்து கொள்கிறேன். அவன் எனக்கு முன்னாலை நிற்கும் பொழுதெல்லாம் அந்த உணர்வு எனக்குள் இருந்து உறுத்திக் கொண்டேயிருக்குது. அதுபடியாலைதான் என்ரை பிள்ளையிட்டை எனக்கு எதுவும் கேட்கத் துணிவும் இல்லாமல் இருக்கு...."

பவித்திராவுக்கு கொஞ்சம் புரிந்து விட்டது.

"என்ன கேட்க வேணும்?"

"இப்பவும் ஹரிணியின் நினைப்பிலேயே இருக்கின்றானா? அப்படியிருந்தால் அப்பாவிலை இன்னமும் அவனுக்குக் கோபமா?? அந்த இழப்பு... அல்லது அந்தக்

கோபத்திலை ஏதாவது பிழையான வழிகளிலை போய்க் கொண்டு இருக்கின்றானா???" கதைத்துக் கொண்டு இருக்கும் பொழுது எனக்குப் பிரக்கடிக்கத் தொடங்கியது.

இது வேறு.... இப்ப இரண்டு மூன்று நாட்களாய் இந்த பிரக்கடிப்பு அதிகமாய் இருக்கிறது.

பவித்திரா எழுந்து சென்று மிதமான சூட்டில் கொஞ்சம் ஹோர்லிக்ஸ் கலந்து கொண்டு வந்து தந்தபடியே சொன்னாள்.

"நீங்கள் கேட்டு நான் எப்ப மறுத்திருக்கிறன்... கட்டாயம் பிள்ளையிட்டை இரவுக்குக் கேட்டு நாளைக்குச் சொல்லுவன். ஹரிணியின்ரை நினைப்பு... அதாலை உங்களிலை கோபம் இருக்கிறதா என்ற எங்களின்டை கேள்விக்கு அவன்தான் பதில் சொல்ல வேணும். அப்பிடி ஒரு கோபம் உங்களிலை இருந்தால் என்னிலும் தான் இருக்கும். அம்மாவும் தானே அப்பாக்கு உடந்தையாக இருந்தவா என்று... அல்லது பிள்ளைக்காகக் கதைக்கவில்லை என்று..."

ஹோர்லிக்ஸ் கோப்பையை என்னிடம் இருந்து வாங்கியபடி, "நீங்கள் கேட்ட கடைசிக் கேள்விக்கு எனக்குப் பதில் தெரியும்".

ஆச்சரியமாய் அவளைப் பார்த்தேன்.

"அவன் உங்கடை பிள்ளைதானே?"

"ம்... இல்லை உன்னுடையதும் தான்...."

"அதுபடியால்தான் நூறுவீதம் சொல்லுகிறன்.... அவன் எந்தத் தப்பான வழிக்கும் போகமாட்டான். அவனுக்குள்ளை உங்களுக்குள்ளை இருக்கிற ஒரு குட்டிச் சண்முகத்தார் இருக்கிறார்... அதோடை முடிவுகள் எடுக்கிற

விடயத்தில் என்ரை அப்பாவைப் போல நூறு வீதம் தீர்க்கதரிசனத்தோடு யோசித்து நடக்கிறவன்”

அவளை நிமிர்ந்து பார்த்தேன்.

புன்சிரிப்புடன்... “பெரிய ஒரு வியாபாரி... இணுவி லிலேயே பெரிய பணக்காரர்.. மூன்று பெரிய புடவைக் கடை... ஐந்து ஆம்பிளைச் சகோதரங்கள்... ஒரு டொக்ட ரையோ அல்லது எஞ்ஜினியரையோ செய்து தந்து என்னை வீட்டோடை வைத்திருந்திருக்கலாம். ஆனால் உங்களைப் பற்றி சாம்பசிவக்குருக்கள் சொன்னதையும் உங்கடை பரம்பரையைப் பற்றியும் கேள்விப்பட்ட பிறகு நல்லாய் விசாரித்து அவர் தீர்க்கதரிசனமாய் யோசித்ததாலையும் தானே இந்தச் சண்முகத்தார் எனக்குக் கிடைச்சவர்” என்றவாறு என் தலையில் முத்தமிட்டாள்.

திடீரென உள்ளே வந்த பின்னேர வைத்தியத்தாதி “வணக்கம்” கூற, பவித்திரா வெட்கப்பட்டு கட்டிலில் இருந்து தள்ளிப் போனாள்.

பவித்திரா சொன்னது போல ஹரி எந்தப் பிழையான வழியிலும் போகமாட்டான் என உறுதியாகவே நம்பினேன்.

ஆம்!

இயல்புகள் கடத்தப்படுவது பரம்பரை அலகுகளி னூடாகத் தானே!

# 15

பபிதா இயக்கத்திற்குப் போனது... அதனால் நான் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது... சுழற்றிப் போட்ட இந்த இரண்டு சோழியா லும் பாம்பின் வாய் வழியே கீழ் இறங்கிய காய்கள் போல பாறி விழுந்த எங்கள் குடும்பத்தின் சந்தோசங்கள் எல்லாம், மீண்டும் அதே காய்கள் ஏணி வழியாக மேலே ஏறி வந்தது பவித்திராவை எனக்கு திருமணம் பேசிய போதுதானாம்.

முன்பு போல அப்பா மீண்டும் தினமும் கோவிலுக்குப் போய் வருகிறாராம் என அம்மா கடிதத்தில் எழுதியிருந்தா.

அப்பாக்கு என்ன தைரியம் இருந்தாலும் சின்னக் கற்கள் கூட அவரைத் தடக்கி விழுத்தி விடும். ஆனால் அம்மா நாணல் போல... மிகவிரைவில் கவலைகளில் இருந்து விடுபட்டு மீண்டும் எழுந்து கொள்வா.

நான் நாட்டை விட்டு வெளியேறியதற்கு பபிதா ஏதாவது ஒரு வழியில் காரணமாய் இருந்தாலும்... எனது பிரிவை விட பபிதாவின் பிரிவுதான் அவாவை வாட்டி வதைக்கிறது எனவும்.... ஆனால் அதனை வெளியில்

காட்டாமல் நடந்து கொண்டு இருக்கின்றா என்றும் அப்பா எழுதும் கடிதங்களில் குறிப்பிட்டுக் கொண்டேயிடிருந்தார்.

யாராவது ஒரு பெண் வீரச்சாவு அடைந்து விட்டால்... அந்தப் பெண்பிள்ளை யார் எவர் என்று அறியும் வரை அமைதியின்றி அலைந்து கொண்டிருப்பாவாம்.

தனக்கு இனியொரு பெண்பிள்ளை பிறந்து விட்டால் பபிதாவை ஏதோ வகையிலை அந்தப் பிள்ளை பிறத்தி யாக்கிப் போடும் என்ற காரணத்தாலையே வேறு ஒரு பிள்ளைக்கு ஆசைப்படாமல் இருந்த அம்மாவை நினைத்து என்றும் நான் பெருமைப்படுவதுண்டு.

பின் நாட்களில் பவித்திரா அடிக்கடி அம்மாவைப் பற்றிச் சொல்லும் பொழுதும் தான் நின்ற நாட்களில் தன்னை அம்மா பார்த்துக் கொண்ட விதங்களைப் பற்றியும் பெருமையாகச் சொல்வாள்.

ஒருநாள் தற்செயலாகத் தேங்காய் உடைக்கும் பொழுது அதனுள் இருந்த சிறிய பூரான் பருப்பைக் கண்டு பவித்திரா விருப்பமாய் எடுத்துச் சாப்பிட்டதை அம்மா கண்டு விட்டாவாம்.

அன்றிலிருந்து அக்கம் பக்க வீடுகளுக்குச் சொல்லி வைத்து விட்டாவாம், "யார் வீட்டுக்கு முகிழ்விட்ட தேங்காய் வந்தாலும் தனக்கு அதை தரச்சொல்லியும்... தான் மாற்றுத் தேங்காய் தருவதாயும்".

அம்மா மற்றவர்களிடம் இது பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தது காற்றுவாக்கில் அப்பாவின் காதில் விழ.... அப்பாவோ காக்கைதீவில் யாரிடமோ சொல்லி கடற் கரையில் தேங்காய் மட்டையுடன் விளைத்தேங்காய்களைப் புதைப்பித்து மூன்று மாதங்களுக்குப் பிறகு முழுப்பூரான்

வரப்பண்ணி நாலைந்து தேங்காய்கள் கொண்டு வந்தாராம்.

உடைத்தால் தேங்காய் முழுக்கப் பூரான் பருப்பு நிறைந்து இருந்தாம்.

பவித்திராவின் சந்தோசத்திற்கு அளவே இருக்க வில்லையாம்.

ஒவ்வோர் ஞாயிறும் மதியம் போல புடவைக்கடை பூட்டிய பின்பு, மாலை நேரங்களில் பவித்திராவின் பெற்றோர்கள் பவித்திராவைப் பார்ப்பதற்காக எங்கள் வீட்டுக்கு வரும் சமயங்களில் எல்லாம் அவள் அப்பா அம்மாவின் புகழ்தான் பாடுவாளாம்.

"நல்லாய்த் தான் மருமகளை மயக்கி வைச்சிருக் கிறியள்" என அவர்கள் பகிடி பண்ண அப்பா சொன்னாராம், "பவித்திராவைப் பபிதாவாகவே அவா பார்க்கிறா என எனக்குத் தெரியும்" என்று கண்களைக் கசக்கி கொண்டா ராம்.

எப்படி பபிதாவைத் தன்னுடன் வைத்துக் கொண்டு படுத்திருந்தாவோ அவ்வாறேதானாம் பவித்திராவையும் தன்னுடன் வைத்துக் கொள்வாராம்.

சில இரவுகளில் பவித்திரா எழுந்து வெளிக்குப் போனால் "பொறு பபிதா நானும் வாறேன்" என்று சொல்லி விட்டு பின் தன்னைச் சுதாகரித்துக் கொள்வாவாம்.

"இப்ப என்ரை பிள்ளை எந்தக் காட்டுக்கை... எந்தத் தோட்டத்துக்கை தனியப் போறாளோ?" எனக் கவலைப்படுவாவாம்.

"பபிதாவுக்கு ஏதும் நடக்காது மாமி கவலைப் படாதையுங்கோ" என பவித்திரா தான் ஆறுதல்

படுத்துவாளாம்.

"பவித்திரா உங்கு வந்த பிறகுதான் அம்மா சரியாக கஷ்டப்படப் போறா" என அப்பா ஒருநாள் எழுதியிருந்தார்.

ஆனால் நடந்தது வேறுமாதிரி!

பவித்திராவை இங்கு அனுப்பிய பின்பு அம்மாவை விட அப்பாதான் மிகவும் தனிமைப்படுத்தப்பட்டவர் போலவும்... ஒன்றில் தலையை ஓட்டினுள் இருத்த ஆமை போல மிகவும் ஒடுங்கி... அல்லது புற்றினுள் இருந்து சீறி வரும் பாம்பு போல மிகவும் கோபப்படுபவராயும் இருந்தாராம்.

"நீயும் நானும் பார்த்த அப்பா இப்போது இல்லை", என ஒரு கடிதத்தில் அம்மா கவலைப்பட்டு எழுதியிருந்தா.

ஒருநாள் கோயிலடியில் பாய் விற்கும் முஸ்லீம் வயோதிபர் ஒருவர் கேணியடியில் உள்ள கிணற்றில் தண்ணீர் அள்ளிக் குடிப்பதைக் கண்ட பொழுது கோயிற்கிணறு தீட்டாகி விட்டது என்று அந்த வயோதிபரைத் திட்டி ஏசி அடிக்கப் போய் விட்டாராம்.

உண்மையில் சாதி.. அது... இது... இன்னார் இன்னார்தான் இந்த இந்தக் கிணறுகளில் தண்ணீர் அள்ள லாம் என்ற விதிமுறைகளைத் தாண்டி... கேணியடிக்குப் பக்கத்தில் இருக்கும் கிணற்றில் சாம்பசிவக்குருக்களையும் மற்ற ஐயர்மாரையும் தவிர எவரும் தண்ணீர் அள்ளுவ தில்லை.

அந்தக் கிணறு கோயில் தேவைக்கு மட்டும் தான்.

ஐயர்மார் மட்டும்தான் அதில் தண்ணீர் அள்ளுவது.

அது ஊருக்கே தெரியும். அனைவரும் அதனை

மதித்தே வந்திருந்தார்கள்.

இதனை அந்த முஸ்லீம் வயோதிபருக்கு அப்பா அமைதியாகவே சொல்லி விளங்கப்படுத்தியிருக்கலாம்.

ஆனால் அவருக்குள் இருந்த ஏதோவொரு தனிமை அல்லது வெறுமை அவரை அவ்வாறு கோபப்பட வைத்திருக்க வேண்டும்.

"மாடு தின்னிகள்... அது இது.... கோயிலின்ரை அருமை தெரியுமா" என்று வார்த்தைகளை வேறு விட்டு விட்டாராம்.

அந்த வயோதிபரை அதில் நின்றவர்கள் சமாதானப் படுத்தி கேணியடியில் சோடாவும் வாங்கிக் குடிக்கக் கொடுத்து அனுப்பி விட்டு, அன்று பின்னேரம் கிணற்றை முற்றாக இறைத்துத் தூர்வாரி சாம்பசிவக்குருக்களைக் கொண்டு சாந்தியும் செய்து கொண்டார்களாம்.

இனிமேல் இவ்வாறு நடக்கக் கூடாது என்பதற்காக கப்பியில் தொங்கும் கிணற்று வாளியை கோயிலுக்குள் கொண்டு போய் வைப்பது என ஒழுங்கு செய்யப்பட்டதாம்.

அவ்வழியே வந்த சின்ன மாமியும் அப்பாவைக் கடிந்து கொண்டாராம் - வீணாக எல்லா விடயங்களிலும் தலையிடுவதாக.

அப்பாக்கு அது இன்னமும் கோபத்தைக் கூட்டவே... "அது எனக்கு தெரியும் நீ உன்ரை வீட்டுக்காரரை ஊர் எல்லாம் கடன் வாங்கி மரியாதை கெடாமல் பார்த்துக் கொள்" என்று ஏசிவிட்டு சைக்கிளில் ஏறி வந்து விட்டாராம்.

அது மாமாவின் காதுக்கு எட்டிவிடவே அன்று முழுக்க அப்பாவை ஏசிக் கொண்டு இருந்தாராம்.

கலவரத்துடன் நொடித்துப் போன தனது மோட்டார் சைக்கிள் ஏஜன்சியை நிமிர்த்த அவர் பலரிடம் கடன் வாங்குவது பற்றியும்... குறிப்பாக மகன்மார் சவுதிக்கு போய் வந்ததால் ஊரில் புதுப்பணக்காரனாகிவிட்ட காத்திகேசு விடமும் மாமா கடன் வாங்கியிருந்தார் என யாரோ அப்பாவின் காதில் போட்டிருந்ததும் தான் கோவிலடியில் சின்ன மாமியிடம் அப்பா கோவிக்கக் காரணமாய் இருந்தது.

எப்போதும் ஊர் இரண்டு பட்டால் தூபம் போட இரண்டொருவர் இருப்பார்கள். அது தான் எங்கள் வீட்டுக்கும் சின்ன மாமி வீட்டுக்கும் இடையில் நடந்து கொண்டிருந்தது.

பெரியப்பாவிடம் இருபகுதியின் வழக்கும் போகும். அவர் வழமைபோல இருபகுதியின் வழக்குகளையும் தீர்ப்பின்றி ஒத்தி வைத்துக் கொண்டே தன் வழியில் போய்க் கொண்டிருந்தாராம்.

அவருக்கும் மகன்மார் இருவரும் கனடாவுக்குப் பதிலாக இலண்டன் றான்சிற்றில் அங்கேயே அகதி அந்தஸ்து கேட்க வேண்டி வந்ததும்... அவர்களுக்கு விசா கிடையாத கவலையும் அவர்களை அனுப்பிய கடனுக்காகக் கட்ட வேண்டிய வட்டிக் காசு பற்றிய யோசனைகளும் தான்.

இந்தக் குடும்பங்களுக்கு இடையே புகைந்து கொண்டிருந்த வெட்கையை அம்மாதான் பொதுவாகச் சின்ன மாமியுடனும் பெரியம்மாவுடன் கதைத்துக் கதைத்துத் தணித்துக் கொள்வது வழமை.

அன்று கூட சின்ன மாமியிடம் போய் மன்னிப்புக் கேட்கும் வண்ணம் சொன்னாராம் "அவர் பிள்ளைகள் இரண்டும் தன்னுடன் இல்லை என்ற கவலையிலை

திரியிறார். அதுதான் அந்த முஸ்லீம் கிழவனுடன் பாய்ந்திருக்கிறார்... நீரும் சனங்களுக்கு முன்னாலை ஏதோ சொல்ல அவர் வீணாய்க் கோவித்து விட்டார்" என்று.

கோயில் சம்பவம் நடந்து ஒரு கிழமை போயிருக்கும்.

ஒரு வெள்ளிக் கிழமை அதிகாலை.

கோயில் வாசலிலும் கேணிக்கிணற்றடியிலும் அழுகிய ஒரு மாட்டின் தலையும் உடம்பும் போடப்பட்டு இருந்ததாம்.

ஊரே கொந்தளித்தது.

அப்பா அடக்க முடியாத கோபத்துடன் நின்றிருந் தாராம்.

அவ்வாறே ஊரின் மற்ற மற்றோரும்.

"இவங்களை இனி இந்த ஊருக்கை வியாபாரம் செய்ய வர விடக்கூடாது" என்று ஒருவர் ஒரு பொறியைத் தட்டி விட "இந்த ஊருக்கை இல்லை... யாழ்ப்பாணத்தாலையே எழுப்பிக் கலைக்க வேணும்" என்று அப்பாவின் வாயில் இருந்து ஒரு வார்த்தை வந்து விழுந்து விட்டது.

எவ்வளவு பெரிய தப்பான ஒரு வார்த்தை அது!

எமது மனதும் வாழ்வும் தடுமாறும் பொழுது எமது வார்த்தைகளும் தள்ளாடிப் போகின்றன குடை சரிந்த வண்டியில் இருந்து தம்மை விடுவித்துக் கொண்டு மாடுகள் தறிகெட்டு தம்பாட்டிற்கு ஓடுவது போல.

நிச்சயமாய் இது எனது அப்பாவின் சுய அறிவுடன் அவரின் வாயில் இருந்து வரும் வார்த்தைகள் இல்லை.

மிகவும் கவலையும் அதிர்ச்சியும் அடைந்தேன்.

# 16

ஹரியுடன் கதைத்துவிட்டு அடுத்த நாள் பவித்திரா வந்து என்ன சொல்வாளோ என்ற நினைப்பிலே அன்று இரவு முழுக்க நித்திரை கொள்ளவே முடியவில்லை.

அடுத்தநாள் அவள் ஹரியுடன் சேர்ந்து வரவிருப்ப தால், வந்தவுடனேயே அவளால் எனக்குப் பதில் சொல்ல முடியாது இருக்கும் என்ற நினைப்பு வேறு.

என் பிள்ளை இன்னமும் என்னில் கோபமாய் இருந்தால், இந்த நோயை ஆண்டவன் எனக்கு தந்த தண்டனை என்றுதான் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பின்பு ஏன் கடவுள் என்னை இழுத்து இழுத்து இந்தக் கட்டிலில் வைத்திருக்க வேண்டும். இப்போ தினம் தினம் உடம்புவலி அதிகமாய் இருக்கின்றது. உடம்பு நோய்க்கு பனடோலில் தொடங்கி இப்போ மோர்வின் குளிசை பாவிக்கத் தொடங்கியிருந்தேன்.

எங்கள் பெரிய வீட்டின் பின் பக்கத்தில் இருந்த மிகப்பெரிய நாவல் மரக்கொப்பைக் குலுக்கும் பொழுது கீழே சிதறி விழும் நாவற்பழங்கள் போலவே எங்கள் குடும்பத்தில் இருந்த அனைவரும் சிதறி நாட்டுக்

கொருவராய்ப் போய் விட்டோம் என்பது கவலையாக இருந்தது.

பெரியப்பாவின் இரண்டு மகன்மாரும் இலண்டனுக்கு வந்து இரண்டு பேருமே பல்கலைகழகம் போய் மிளிரத் தொடங்கிய பொழுது மூத்தண்ணா ஒரு ஆபிரிக்க நாட்டுப் பெண்ணை விரும்புவதாகக் கதை வந்தது.

அம்மாதான் எழுதியிருந்தா, "பெரியப்பாவை விட அப்பாதான் தலையைக் குனிஞ்சு கொண்டு திரிகிறாராம்... அவர்கள் கிறிஸ்தவர்கள் என்றும் கதை உலாவுதாம்... இஸ்லாமியர் என்றும் கதை உலாவுதாம் என்றும்... அந்த முஸ்லீம் வியாபாரியைக் கோயில் வீதியில் வைத்து தண்டித்ததுக்குத்தான் இந்தத் தலைகுனிவை அவருக்கு கடவுளாய் கொடுத்து விட்டாராம் என ஊர் குசுகுசுக்குதாம்" என்று.

பெரியப்பா வழமை போல் எதுவும் பேசாமல் மௌனமாம்.

பெரியம்மாதான் "இது நடந்தால் பின்பு எங்களை உயிரோடை காணமாட்டாய்" என வழமையாக அம்மாமார் விடுகிற அஸ்திரங்களை விட்டுப் பார்த்திருக்கின்றார்.

ஆனால் பலன் எதுவுமில்லை.

அவரின் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு நடந்த அன்று மாலையே அந்த ஆபிரிக்கப் பெண்ணை அவர்கள் நாட்டுச் சமுதாய வழக்கத்தின்படி திருமணம் செய்து கொண்டாராம்.

சின்னண்ணா மட்டும் போய் இருந்தாராம்.

எனக்குத் திருமணத்திற்குப் பின்பு தான் இது தெரிய வந்தது.

இதற்குப் பின்பு பெரியம்மா பெரியண்ணாவை

முற்றாகத் தலை முழுகிய மாதிரியே நடந்து கொண்டாவாம்.

சின்னண்ணா நன்றாய்ப் படித்து வங்கியொன்றில் நல்ல வேலை பார்த்துக் கொண்டாலும்... தனிமைப்படுத்தப் பட்டு வாழ்ந்ததால்... அவரையும் அறியாமல் அவருடன் சேர்ந்த நண்பர்கள் கூட்டம் அவரைப் பல பிழையான வழிகளுக்குக் கொண்டு போய் விட்டதாம்.

விடுமுறை நாட்களில் குடி.. டிஸ்கோரெக் என்று மேலைநாட்டு இளைஞர்கள் போல் வாழ்ந்ததுடன் மட்டும் நிறுத்தியிருந்தால் பறவாயில்லை.

அதனையும் தாண்டி நட்பு ரீதியில் ஒரு நண்பனுக்குத் தனது கணினி அறிவைப் பாவித்துக் கள்ளக் கிறடிற்காட் செய்ய உதவி செய்திருக்கிறாராம்.

நேரடியாக எதிலும் சம்பந்தப்படாமல் இருந்த பொழுதும்... அவரின் நண்பர் பொலிசில் மாட்டிக் கொண்ட பொழுது... அவரின் அறையிலும் கம்பியூட்டரி லும் இருந்து அனைத்துத் தகவல்களையும் இங்கிலாந்துக் காவல்துறை கைப்பற்றியிருக்கின்றது.

மேலாக அவருக்கே தெரியாமல் அவரின் நண்பன் ஒருவன் அவரின் அறையில் ஒளித்து வைத்திருந்த போதைவஸ்தும் கைப்பற்றப்பட்டிருக்கின்றது.

விளைவு?

அவர் வங்கியில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் பொழுது இங்கிலாந்தின் அதியுயர் குற்றத்தடுப்பு காவல் துறை சென்று கைது செய்து இருக்கின்றார்கள்.

இங்கிலாந்து செய்தித்தாளின் மாலைப்பதிவில் வெளிவந்த அந்தச் செய்தி அடுத்தநாள் காலையில் லங்காசிறி மூலம் ஊருக்குள் பரவியிருக்கின்றது.

அன்று முழுக்க கோயிலடி... மரக்கறிச் சந்தை... மீன் விற்கும் ஒழுங்கை எல்லாம் இதே குசுகுசுப்புத்தானாம்.

பின் அப்பாவின் காதுகளுக்கும் எட்டிய பொழுது அப்பாவும் அம்மாவும் பெரியப்பா வீட்டுக்குப் போய் இருக்கிறார்கள்.

அங்கு பெரியப்பா குனிந்த தலையுடன் இருந்தாராம்.

சிறிது நேரத்தில் சின்ன மாமாவும் சின்ன மாமியும் சின்ன மச்சாளும் வந்தார்களாம்.

எவருடன் எது கதைப்பது என்ற நிலைமை!

ஊரிலேயே தலை நிமிர்ந்து நின்ற சண்முகத்தாரின் மூத்த பேரன் ஒரு ஆபிரிக்கக்காரியைத் திருமணம் செய்து குடும்பத்தில் இருந்து ஒதுக்கப்பட்டு இருக்க.... அடுத்தவன் இவ்வாறு குடும்பத்தைத் தலை குனிய வைத்து விட்டான். பிள்ளை என வளர்த்த பபிதாவும் எங்கே போனாள்? எப்படி இருக்கிறாள்?? என்று தெரியாது போய் விட்டாள். எங்கள் குடும்பத்திற்கு ஏதோ சாபம் இருக்குப் போல.... சாம்ப சிவக்குருக்களைக் கொண்டு ஏதாவது ஒரு சாந்தி செய்ய வேண்டும் என்று அப்பா அபிப்பிராயப்பட்டாராம்.

சின்னமாமா அன்று கொஞ்சம் தண்ணி பாவித் திருந்தாராம்.

சின்ன மாமா சும்மா இருக்காமல்... "எல்லாம் அப்பப்பா சிங்களத்தி ஒருத்தியை வீட்டுக்கை வைத்திருந்த தும்... பின்னால் புகையிலைக் கொட்டிலுக்கை வைத்து சுருட்ட வந்தவர்களின் கூத்தால் பபிதா பிறந்ததும்... பழிபாவத்திலை பிறந்த பிள்ளையை அப்பா சொந்தப் பிள்ளையைப் போலை வைத்துப் பார்த்ததும்... அந்தப் பாவம் போதாதோ? இதிலை என்ன சாபம்... என்ன சாந்தி??"

என வளர்த்துக் கொண்டு போனாராம்.

பபிதாவை இழந்து உள்ளுக்குள் தகித்துக் கொண்டிருந்த அப்பா அம்மா இருவருக்கும் இதுவே போதுமாய் இருந்திருக்கிறது.

அப்பா சின்ன மாமியைப் பார்த்து "உன்ரை மாப்பிளைக்கு எங்கடை பரம்பரைக் கதையள் எல்லாம் சொல்லிக் கொடுத்திட்டியோ?" என்று கேட்டாராம்.

சின்ன மாமி சுவரைப் பார்த்துக் கொண்டே "இந்தப் பரம்பரைப் பெருமை எல்லாம் ஊருக்கே தெரியுமே... பிறகு நான் ஏன் சொல்லிக் கொடுக்க வேணும்" என்று பதில் சொல்லியிருக்கிறா.

சின்ன மாமா தொடர்ந்தாராம்.

"சண்முகத்தார் செய்த பாவம் தான் இந்தக் குடும்பத்தை இந்தப் பாடுபடுத்துதே... அந்தக் காணிகுள்ளை இருக்கிற எங்களை என்ன பாடுபடுத்துமோ?... இங்கிலாந்துக்கு என்று புறப்பட்டு மலேசியாவிலை நிக்கிற என்ரை இரண்டு பொடியளையும் என்ன பாடுபடுத்துமோ என எனக்கு நெஞ்சிடியாய் இருக்கு" எனத் தொடர்ந்திருக்கிறார்.

"அவை அவையின்ரை பிள்ளையள் செய்யிற நன்மை தீமைகளுக்கு பாட்டன் பூட்டன்மாரை யாரும் இழுக்காதையுங்கோ... அந்தக் காணிக்குள்ளை இருக்கிறதாலை ஏதும் நடக்கும் எண்டு பயந்தால் சொல்லுங்கோ... நான் அதுக்கு வழி செய்யுறன்", அப்பா உறுதியாகச் சொல்லியிருக்கின்றார்.

நானும் பாலனும் டென்மார்க்கிற்கு வந்து நன்கு காலூன்றி இருந்ததும்... எனக்கு நல்ல இடத்தில் சம்பந்தம் நடந்திருந்ததும்... சின்ன மாமா சின்ன மாமிக்கு முதலில் இருந்தே புகைச்சல் என்பதும் எனக்குத் தெரியும்.

அப்பா சொல்லி முடிக்க முதல்... "புதுப்பணக்காரர் ஒருத்தரும் எங்களுக்குப் பிச்சை போட வேண்டாம்... எனக்கு என்ன செய்ய வேணும் எண்டு தெரியும்... நான் போறன்... நீ இருந்து உன்ரை சகோதரங்களுடன் கிடந்து சா" எனச் சொல்லி விட்டுச் சைக்கிளை எடுத்துக் கொண்டு போய் விட்டாராம்.

"இப்ப உங்களுக்குச் சந்தோசம் தானே.... கலவரத் தோடை தன்ரை மோட்டார் சைக்கிள் ஏஜன்சி எரிஞ்சு போச்சு என்று இங்கை வந்து சின்னக்கடை போட்டு கடன் கிடன் பட்டு மனம் நொந்து போய் இருக்கிற மனிசனை இப்ப நீங்கள் உசுப்பேத்தி விட்டுட்டியள்... இனி நாலைஞ்சு நாளைக்கு வீட்டிலை இந்தக் கூத்துதான்"

சின்ன மாமி அப்பா மீது குறைப்பட்டுக் கொண்டாவாம்.

அப்பா ஏதோ சொல்ல வெளிக்கிட அம்மா அப்பா வின் கையை அழுத்தி அதனை நிற்பாட்டி விட்டாராம்.

அதன் பின் ஒரு கால் மணிநேரம் மௌனமாய் இருந்த சின்ன மாமி எதுவும் பேசாது கண்களைக் கசக்கிக் கொண்டு எழுந்து போய்விட்டாவாம்.

இத்தனைக்கும் பெரியப்பா எதுவும் பேச வில்லையாம்.

பெரியப்பா பெரியம்மாவுக்கு ஆறுதல் சொல்ல வந்து இவ்வாறு நடந்தது உண்மையில் அப்பாக்கும் அம்மாவுக்கும் ஒருவகையில் மன வேதனைதான்.

அன்று இரவுமட்டும் அங்கேயே தங்கியிருந்து இரவு உணவுகளை அம்மாவே ஆக்கி அவர்களுடன் சேர்ந்து உண்டு விட்டு புறப்படும் பொழுது பெரியம்மா ஒருநாளும் இல்லாத மாதிரி "இரவுக்கு தங்கி விட்டு போகலாமே" என்று

கேட்டிருக்கிறா.

சரி என்று இவர்களும் அவர்களுடன் தங்கியிருக்கின்றார்கள்.

விடியப்புறம் போல பெரியம்மாவின் அலறல் சத்தம் கேட்டு அப்பாவும் அம்மாவும் அவர்களின் அறைக்கு ஓடியிருக்கிறார்கள்.

பெரியப்பா எல்லோரையும் விட்டுவிட்டுப் போய் இருந்தாராம்.

எல்லாம் முடிய அம்மா விபரமாய் எழுதியிருந்தா.

கடிதத்தின் முடிவில் மட்டும் அப்பா, அம்மாவிடம் இருந்து கடிதத்தை வாங்கி தன் கைப்பட எழுதியிருந்தார்.

"அண்ணா எங்களை எல்லாம் விட்டிட்டுப் போக முதல் நாள் மச்சான் கதைத்த கதையிலை ஏதோ ஒரு சந்தேகம் இருக்கு. எந்தக் காலகட்டத்திலும் எங்கள் காணிக்கு எண்டாலும் சரி.. பெரிய வீட்டுக்கு எண்டாலும் சரி....எங்கள் திருவிழாக்கு எண்டாலும் சரி...குதிரை வாகனத்திற்கு எண்டாலும் சரி.... ஏதும் பிரச்சனை வந்தால் நீதான் காப்பாற்ற வேண்டும். இதை மட்டும்தான் அப்பா என்ற முறையில் நான் உன்னிடம் கேட்டுக் கொள்கிறன். இதைத்தவிர உன்னிடமும் பவித்திராவிடமும் வாழ்க்கையில் நான் கேட்பதற்கு எதுவுமே இல்லை.

அப்பாவின் அந்தக் கடிதம் என்னை மிகவும் குழப்பிக் கொண்டே இருந்தது.

பழைய நினைவுகளில் சிந்தனை சிதறியோடிக் கொண்டிருக்கும் பொழுது ஹரியும் பவித்திராவும் உள்ளே வந்தார்கள்.

என் கண்கள் பவித்திராவின் கண்களை ஊடுருவிப்

பார்த்துக் கொண்டு இருந்தன.

எனது முதல் நாள் கேள்விகள் இரண்டிற்கும் ஏதாவது பதிலை அவள் தன் கண்கலாளாவது எனக்குச் சொல்வாளோ என்று.

அவளுக்கும் எனது பார்வையின் அர்த்தம் தெரியாமல் இல்லை.

"ஹரி சாப்பிட்டானா?"

"உங்களோட தான் சாப்பிடப்போறன் என்றான். மூன்று பேருக்கும் சாப்பாட்டையும் எடுத்துக் கொண்டு வந்து விட்டேன்"

ஹரி எனது படுக்கையை நிமிர்த்தி விட்டபடி தனது சாப்பாட்டுக் கோப்பையுடன் எனக்குப் பக்கத்தில் வந்து அமர்ந்தான்.

பவித்திரா எனது சூப்பை எடுத்து வந்தாள்.

நானே குடிக்கின்றேன் என்று சொன்ன போதும் கரண்டியால் எடுத்து அதனை ஊதி ஊதி எனக்குத் தந்து கொண்டிருந்தாள்.

நான் அடிக்கடி பவித்திராவைக் கேள்விக்குறியுடன் பார்ப்பதை ஹரி அவதானித்திருக்க வேண்டும்.

"அப்பா உங்களை நான் ஒன்று கேட்கட்டுமா?"

"கேள்" புன்னகைத்தேன்.

"நான் யாருடைய பிள்ளை"

"என்ரையும் இவளின்ரையும் தான்"

"அப்போ நான் உங்களைப் போலவும் அம்மாவையும் போலவும் தானே இருப்பேன்"

எனக்குக் கண்களால் ஓடியது.

பவித்திராவைப் பார்த்தேன்.

அவள் "ஆம்" என்று தலையாட்டினாள்.

அவனைச் சைகையால் கிட்டவரும்படி அழைத்து அவன் தலையைக் கோதி விட்டேன்.

அவனும் என் நெற்றியில் முத்தமிட்டான்.

"நீ சாப்பிடடா ஹரி"

அவனின் முகத்தில் என்னதொரு சாந்தம்.

அவனின் முகத்தில் அம்மாவின் முகத்தில் உள்ள சாந்தம் எப்பவும் உண்டு.

இரண்டொரு கவளம் சாப்பிட்டவன்... "அப்பா இன்னொரு விடயம்" என்றான்.

எனது முதல் கேள்விக்குப் பதில் சொல்லப் போகின்றான் என்று புரிந்தது.

பவித்திராவைப் பார்த்தேன்.

அவன் சொல்வதைக் கேளுங்கள் என்பது போல தன் முகத்தில் பாவனை காட்டினாள்.

"எனக்கும் ஹரிணிக்கும் ஒரு சின்ன... இல்லை யில்லை.... மிகப் பெரிய ஈர்ப்பு இருந்தது உண்மையப்பா... ஆனால் நாங்கள் இரண்டு பேரும் சந்தோசமாய் இருக்கிறதை விட அது உங்களை... அம்மாவை... பாலன் மாமாவை... அபிராமி மாமியை... ஊரிலை இருக்கிற பாலன் மாமா வின்ரை குடும்பத்தை எல்லாம் எப்படிச் சாகடிக்கும் என்று அமெரிக்காவுக்குப் போய் தனிய இருந்த காலத்திலையே உணர்ந்து விட்டேன். ஹரிணிக்கும் விளக்கமாக் கடிதம் எழுதியிருந்தனான், "நானும் நீயும் விரும்பினது உண்மை என்றால் நானும் நீயும் இரண்டு குடும்பத்திற்கும் எப்பிடி நல்ல இரண்டு பிள்ளைகளாய் இருந்தமோ அப்படியே

தொடர்ந்து இருக்க வேணும" என்று. இப்பவும் எனக்கு உங்கள் சுக துக்கங்கள் பற்றி எழுதுவாள்... உங்களைத் தான் வந்து பார்த்துப் போவது பற்றி எழுதுவாள்... நீங்கள் அடிக் கடி சொல்லுறது தான் "நான் - எனது" என்று பார்க்கிறதை விட "நாங்கள் - எங்களது" என்று பார்க்கிற சந்தோசத்திற்குப் பலம் அதிகம் என்று. அது இப்ப புரியுதப்பா. பானு தனது விருப்பம் என்று மட்டும் பார்த்தாள். நானும் ஹரிணியும் எங்கள் எல்லோரினதும் விருப்பம் என்று பார்த்தம்"

அவனை ஒரு தெய்வம் போல் பார்த்தேன்.

இந்த மார்க்கண்டேயனுக்குள் இப்படி ஒரு மாணிக்க வாசகனா?

இந்தக் குட்டி ஹரிக்குள்ளே இப்பிடி ஒரு பீஷ்மரா?.... பாவங்களைக் கழுவிவிடும் கங்கையின் மைந்தன்... கங்கா புத்திரன்... பீஷ்மர் போல தியாயங்களைச் சுமந்தபடி என் சின்னக் குட்டி ஹரி...

தந்தைக்கு உபதேசம் செய்த பாலகன் முருகன் போல...

அவனின் முன் முழங்காலில் நின்று அவனின் உபதேசத்தைக் கேட்டது போல உணர்வு எனக்குள்!

வீட்டை விட்டு ஓடிப்போன பானுவுடன் ஒப்பிடும் பொழுது இவன் எத்தனையோ பனையுயரத்தில் உயர்ந்து நிற்கின்றான்??

எனக்குத் தொடர்ந்து சூப்பைக் குடிக்க முடியாமல் இருந்தது.

மீண்டும் விக்கல் எடுத்தது.

இந்த விக்கலுடன் இறந்தாலும் இனி நான் கவலைப்படமாட்டேன்.

## 17

எப்பொழுதும் பானுவைப் பற்றிய யோசனைகள் வரும் பொழுது பபிதாவின் யோசனையும் என்னுடன் இணைந்து விடும்.

ஒரு வகையில் இருவருமே எங்கள் குடும்பத்தில் இருந்து ஓடிப்போனவர்கள்.

ஒருத்தி தன் காதலன் மீதிருந்த காதலால்.

மற்றவள் நாட்டின் மீதிருந்த காதலால்.

பானுவின் பிரிவு என்னைத் தள்ளி விழுத்தி விட வில்லை. மூத்தவனின் திருமணத்தை நடத்தி முடித்திருந்தா லும் இளையவனைக் கரையேற்றும் பொறுப்பு என் கையில் இருந்தது.

ஆனால் பபிதாவின் பிரிவு காரணமாக நான் நாட்டை விட்டு வெளியேற நேர்ந்ததால்.... அது அப்பா அம்மாவை அடியோடு கோடாலி கொண்டு தறித்து விழுத்திய துக்கும்... இதுவரை மிடுக்கோடு இருந்த அப்பா தொடர்ந்தும் அதே அப்பாவாக நடந்து கொள்ளமுடியாது போவதற்கும் காரணமாய் இருந்தது.

மனத்தளவில் ஏற்பட்ட அப்பாவின் தளர்வுதான் எங்கள் குடும்பத்தின் ஆணி வேரையே அசைத்தது போல அமைந்தது. எனவேதான் ஒரு பிரச்சனை வந்த பொழுது அப்பாவால் அதனை எதிர்த்து நின்று போராட போதிய மனப்பலம் இல்லாமல் போவதற்குக் காரணமாயிருந்தது. அல்லது மனம் அந்தளவு தூரம் தளர்ந்து போகக்காரண மாயிருந்தது.

கோயில் வீதியில் அந்த முஸ்லீம் வியாபாரியை அடித்த பிரச்சனையின் பொழுது "இவங்களை யாழ்ப் பாணத்தில் இருந்தே வெளியேற்ற வேண்டும்" என்று சொன்ன ஒரு வார்த்தை பின்னாளில் உண்மையாகிப் போய் அதுவே வினையாகி விட... இயக்கம் அவர்களை யாழ்ப் பாணத்தில் இருந்து வெளியேற்றிய பொழுது... அவர்கள் வெளியேற ஒரு மணித்தியாலத்திற்கு முன்பு அந்தக் குடும்பம் ஒரு காரில் அப்பாவைத் தேடி வந்திருந்ததாம்.

அச்சமயம் அப்பா வீட்டில் நின்றிருக்கவில்லையாம்.

அம்மா மட்டும் நின்றிருந்தாராம்.

"எயக்த்தில இரிக்க மகள வெச்சி ஒண்ட புரிசன்சன் கோயிலடியில சென்னத செஞ்சி போட்டார். ஒரு குடும்பத்த பழிவேண்டுறத உட்டுப்போட்டு ஆண்டாண்டு காலமா ஒண்டா இருந்த எங்கள எழுப்பிப்போட்டயள். அல்லா பாத்துக்குத்தானிரிக்கான். ஒரு நாளைக்கி நீங்களும் ஒங்கட ஊடு வாசல் உடுமானாத்தையும் பறிகொடுத்துப்போட்டு கத்திக் கொளறத்தான் போறயள். வயிறுபத்திச் செல்லிப் போட்டுப்போறன். எண்டு ஒண்ட புரிசனுக்குச் செல்லி வெய்", என்று ஏசிவிட்டு வந்த வேகத்துடன் காரில் ஏறிப் போய் விட்டார்களாம்.

அம்மாவுக்கு கையும் ஓடவில்லையாம்... காலும் ஓடவில்லையாம்.... அப்பாவைத் தேடி கோயிலடி சந்தையடி எல்லாம் போய்ப் பார்த்து இருக்கிறார்.

அன்று காலை எங்கள் கோயில் திருவிழாவிற்கான பட்டோலை வந்திருந்தபடியால் அப்பா அதனை எடுத்துக் கொண்டு போய் சின்ன மாமியுடன் பெரிய வீட்டில் இருந்து கதைத்துக் கொண்டு இருக்கிறார் என அறிந்து அங்கு போனாராம்.

இப்பொழுதும் கோயில் பட்டோலையில் பண்டார வளை சண்முகத்தார் வீட்டுத் திருவிழா என்று போடப்பட்டு அது அப்பாவிடமே சேர்ப்பிக்கப்படுமாம்.

அம்மா வந்த கோலத்தைப் பார்த்து அப்பாவும் சின்ன மாமியும் பயந்து விட்டார்களாம்.

அம்மா சொன்ன எல்லாத்தையும் கேட்டு விட்டு சின்ன மாமா சொன்னாராம், "விரும்பியோ விரும்பாமலோ ஒரு சிங்களத்தியைக் கொண்டு வந்து... பிறகு அவளின்ரை பிள்ளையைப் பிள்ளை போல வளர்த்து... இப்ப இந்தக் குடும்பத்துக்கே அவன்கள் சாபம் போட்டிட்டுப் போகிற நிலைமை வந்திட்டுது... இன்னும் என்ன என்ன நடக்குமோ?".

சின்ன மாமா எது சொன்னாலும் உடனே திருப்பி நியாயம் கதைக்கும் அப்பா அன்று எதுவும் கதைக்க வில்லையாம்.

"நீ வா... வீட்டை போவம்" என்று சொல்லி விட்டு மாமரத்தில் சாத்தியிருந்த சைக்கிளை எடுக்கப் போனவர் அப்படியே வீட்டைப் பார்த்துக் கொண்டு நின்றாராம்.

பிறகு சைக்கிளில் ஏறியிருந்து வழமைபோல

அம்மாவை முன்னால் இருக்கச் சொல்லி விட்டுச் சைக்கிளை மிதித்துப் புறப்பட, அப்படியே சைக்கிள் முள்முருங்கை வேலியுடன் சரிந்து விழுந்து விட்டாராம்.

சின்ன மாமியும் சின்ன மாமாவும் அவர்கள் வீட்டை வந்து கொண்டிருந்த காத்திகேசுவும் ஓடி வந்து தூக்கி விட்டார்களாம்.

அப்பா உடம்பு நடுங்கியபடியே சைக்கிளை உருட்டிக் கொண்டு வீட்டை வந்தாராம்.

இவர்கள் நடக்கத் தொடங்க, பின்னால் சின்ன மாமி சின்ன மாமாவைப் பேசிய சத்தம் இவர்களுக்கும் கேட்டதாம்.

“மனமுடைஞ்சு இருக்கிற நேரத்திலை இப்பிடியா கதைக்கிறது?”

“பொத்தடி வாயை... உன்ரை கொப்பனுக்கு இருக்கிற அதே தடிப்புத்தான் உன்ரை கொண்ணைக்கும்.... வாயை வைச்சுக் கொண்டு இருந்திருக்கலாம் தானே... மகள் இயக்கத்திலை இருக்கிற துணிவு... மகன் டென்மார்க்கிலை இருக்கிற தடிப்பு.... எங்கடை பொடியள் இரண்டும் மலேசியாவிலை ஏஜன்ற்காரன்ரை கையில் சிக்கி நிக்கிற இளக்காரம்...”

“தம்பி... தம்பி... ஒண்டுக்கை ஒண்டு... நீங்கள்... அமைதியாய் இருங்கோ... என்ன மாதிரி வாழ்ந்த குடும்பம் உங்கடை” காத்திகேசு சொல்லிக் கொண்டு நின்றானாம்.

*

அன்று இரவு அப்பா தூங்கவே இல்லையாம்.

பெரிய வீட்டின் முன்னே நின்ற மாமரத்தைச் சூறா

வளி வந்து பிடித்து உலுக்கிவிட்டது போல உணர்ந்தாராம்.

அதிலிருந்த மாங்காய்கள் அனைத்தும் முற்றாமலும் பழுக்காமலும் திசைக்கொன்றாகச் சிதறிப்போனது போல எங்கள் குடும்பமும் சிதறிப் போய் விட்டது என்று கவலைப்பட்டுக் கொண்டு இருந்தாராம்.

58 கலவரத்தின் பொழுது பண்டராவளையில் அப்பப்பாவின் கடைகள் தீக்கிரையாக்கப்பட்டு அவரும் கொலை செய்யப்பட்டது....

அதே கோபத்தில் ஜாமினி புகையிலை மாலுக்குள் வைத்து தாக்கப்பட்டது... யாரோ ஒருவனால் கற்பழிக்கப் பட்டது...

பபிதா பிறந்தது...

பெரிய வீட்டுக் குடும்ப நிலை நொடிக்கத் தொடங்கியது....

காலச் சுற்றில் அடுத்த கலவரம் வரவே பெரியப்பா கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்ததும்.... சின்ன மாமியும் ஹற்றனில் இருந்து சீதனமாய் கொடுத்த பெரிய வீட்டுக்கு வந்ததும்... அதுவரை அங்கிருந்த நாங்கள் அப்பாவுக்கு கொடுத்திருந்த அம்மாவின் சீதன வீட்டுக்கு போனதும்....

பெரியப்பாவின் அண்ணன்மார் இங்கிலாந்து போனது... ஒருத்தன் ஆபிரிக்கக்காரியைத் திருமணம் செய்தது... மற்றவர் போதை வஸ்த்துக்கும் கள்ளக் கிறடிக்காட் வழக்கிலும் சம்மந்தப்பட்டது... அதுவே பெரியப்பாவை எங்களை விட்டுப் பிரித்தது.....

சின்ன மாமியின் குடும்பம் யாழ்ப்பாணத்திற்கு வந்தது

தொடக்கம் சின்ன மாமா தனது இன்ஸ்சூரன்ஸ் வியாபாரத்தை நிமிர்த்த முடியாது ஊர்முழுக்க கடன்பட்டது... அதனை நிமிர்த்த இரண்டு மச்சான்மாரையும் வெளி நாட்டுக்கு அனுப்ப முயற்சித்தது... அவர்கள் போய் மலேசியாவிலை சிக்குப்பட்டு நின்றது...

பபிதா இயக்கத்துக்குப் போனது... அதனால் அப்பா அம்மா என்னை வெளியே அனுப்பி விட்டுப் பிள்ளைகள் இல்லாதவர்கள் போல தனித்து வாழ்ந்தது...

இத்தனையும் கொடுத்த மன அழுத்தங்களால் ஒரு சாதாரண முஸ்லீம் வியாபாரியை அடிக்கப் போய்... அது இப்போ தேவையில்லாமல் பபிதாவுக்கும் கெட்ட பெயரைக் கொண்டு வந்து தனக்கும் கெட்ட பெயரைக் கொண்டு வந்து விட்டது என்று ஒட்டு மொத்தமாய் பெரிய வீட்டுக் குடும்பத்திற்குமாய்ச் சேர்த்துக் கவலைப்பட்டுக் கொண்டு இருந்தாராம்.

அந்தக் கடிதம் வந்த பொழுது அது என்னையும் இரண்டொரு நாள் அலைக்கழித்துக் கொண்டிருந்தது.

அப்பாவுக்கு எந்த வகையில் என்னால் சந்தோசத்தைக் கொடுக்கலாம் எனத் தெரியவேயில்லை.

ஒருநாள் பவித்திராவே முன் வந்து ஒரு யோசனையைச் சொன்னாள்.

“உங்கள் மாமாவுக்கும் அப்பாவுக்கும் என்ன மனஸ்த்தாபம் இருந்தாலும் மலேசியாவிலை உங்கடை மச்சான்மார் இருவரும் நிக்கிறது கவலையாகத்தானே இருக்கும். ஏன் அதுக்கு ஏதாவது செய்யக் கூடாது?”

பவித்திராவை நிமிர்ந்து பார்த்தேன்.

அதுதான் என் பவித்திரா.

எந்தப் பிரச்சனை என்றாலும் அதன் ஆணிவேர்வரை சென்று யோசிப்பாள்.

எனக்கு அப்பாவைப் போல்... சிலவேளைகளில் எனது உணர்ச்சிகள் என் சிந்தனைகளைத் தடுத்து விடும்.

மலேசியாவில் நிற்கும் மச்சான்மாருக்கு உதவுவது பற்றிப் பாலனுடனும் பேசினேன்.

அவனுக்கும் அது நல்ல யோசனையாகவே பட்டது.

அவர்களைத் தேடிச் செல்வதற்கு மச்சான்மார் மலேசியா வந்ததும் "வந்து விட்டோம்" என்று போட்ட கடிதத்தில் இருந்த விலாசத்தைத் தவிர வேறு எதுவே என்னிடம் இருக்கவில்லை.

மேலதிக விபரங்கள் கேட்டு சின்ன மாமிக்குக் கடிதம் போட்டேன்.

பதில் வரவில்லை.

எனது கடிதம் கிடைக்கவில்லையோ... அல்லது அப்பாவில் இருந்த கோபத்தில் சின்ன மாமா சின்ன மாமியைப் பதில் கடிதம் போட விடவில்லையோ தெரியாது.

டென்மார்க்கில் அரிவுவெட்டும் அல்லது கிழங்கு பிடுங்கும் லீவு எனச் சொல்லப்படும் ஒரு கிழமை மாசி மாத லீவு வந்த பொழுது நானும் பாலனும் மலேசியாவுக்குக் கிளம்பினோம்.

புதிய நாடு.... புதிய அனுபவங்களைத் தரலாம்.... இலங்கைக்கு தேயிலைப் பயிர் செய்ய வந்தது போல மலேசியாக்கு றப்பர் தொழிலுக்காகப் போன எம் சக

இனத்தின் உதவியை ஏதாவது ஒரு வகையில் தேடிப் புறப்பட்டோம்.

இங்கிருந்து ஜேர்மனிக்கு ஸ்கண்டினேவியன் எயர்லைன்.... பின் அங்கிருந்து நேரடியாக மலேசியாவிற்கு மலேசியன் எயர்லைன்ஸ்.

எங்கள் பயணம் ஆரம்பமானது.

*

மொழி ஒரு தடையில்லாத பொழுது பல விடயங்களை இலகுவாகக் கடந்து சென்று விடலாம்.

அவ்வாறே எங்கள் பயணமும் நடைபெற்றது.

கோலாலம்பூர் விமான நிலையத்தில் மட்டும் பிரத்தியேகமாக எங்கள் உடம்பும் உடமைகளும் பரிசோதிக்கப்பட்டன போதை வஸ்துகள் எதையாவது கடத்தி வந்திருக்கலாம் என்று.

ஆனால் அவர்கள் எந்தக் கண்டிப்பும் காட்டவில்லை.

விமான நிலையத்தில் இருந்து ஒரு மணித்தியால டக்ஸிப் பிரயாணத்தின் பின்பு மச்சான்மாரின் விலாசத்துக்குரிய இடத்திற்கு வந்து சேர்ந்தோம்.

பல இலங்கையர்கள் நின்றிருந்தார்கள்.

எல்லோரும் ஏதோ ஒரு வகையில் ஐரோப்பாவிற்கோ... அவுஸ்திரேலியாவிற்கோ... கனடாவிற்கோ போவதற்காக அங்கு காத்திருக்கின்றார்கள் என்று மிக விரைவில் புரிந்து கொண்டோம்.

நாம் டென்மார்க் வர முதல் மொஸ்கோவில் காத்திருந்த ஞாபகம் வந்தது.

அங்கு நின்றவர்களிடம் மச்சான்மாரின் படத்தைக்

காட்டி விசாரித்தோம்.

"நம்ம டொனியையும் மைக்கலையும் தேடி வந்திருக்கினம்" ஒருவன் சொல்ல எனக்கும் பாலனுக்கும் வியப்பாய் இருந்தது.

சிவரூபன்... சிவபாலன் என்ற மச்சான்மார்கள் இருவரின் பெயர்களையும் எதற்காக டொனி என்றும்... மைக்கல் என்றும் அழைக்கின்றார்கள் என்று புரியவில்லை.

பின்பு தான் எல்லாம் புரிந்தது.

அவர்களின் பயணம் தொடர்ந்து பல தடவைகள் தடைப்பட.. கையில் இருந்த காசுகள் எல்லாம் கரைந்து போக... இலங்கையில் இருந்து கூட்டி வந்த ஏஜன்றுக்கு இருவரும் சப்-ஏஜன்ற் போலை வேலை பார்த்துக் கொண்டு இருக்கின்றார்களாம்.

எயர்ப்போட்டுக்கு வெளியில் நின்று ஆட்களைக் கூட்டி வருவது... கள்ள விசா எடுப்பது... பாஸ்போட்டில் தலை மாற்றுவது... தாய்லாந்துக்குக் கூட்டிச் சென்று அங்கிருந்து பயணம் அனுப்புவது என எல்லா வேலைகளை யும் செய்து கொண்டு இருக்கிறார்கள் என அறிந்த பொழுது வியப்பாயும் வேதனையாயும் இருந்தது.

மூத்த மச்சானின் பெயர்தானாம் டொனி. அவர் நாங்கள் சென்ற சமயத்தில் தாய்லாந்திற்குப் போயிருந்தார். இளையவர் மைக்கல் இரவுக்கு வருவாராம் என்று சொல்லி அங்கிருந்தவர்கள் எங்களை மிக நன்கு கவனித்துக் கொண்டார்கள்.

அவர்கள் சொன்னது போல் இளைய மச்சான் இரவு பத்து மணி போல் வந்து சேர்ந்தான்.

அவனின் தோற்றத்தை நம்பவே முடியவில்லை.

தலையின் இருபுறமும் மொட்டை போலக் கத்தரிக் கப்பட்டு... பெரிய முறுக்கி விட்ட மீசையும்...கழுத்தில் பெரிய தடித்த சங்கிலியும், கைகளில் பெரிய காப்பும் போட்டிருந்தான்.

"எங்கை மலேசியாப் பக்கம்?" என பொக்கற்றுக்குள் இருந்த நாலைந்து வெவ்வேறு நாட்டு பாஸ்போட்டுகளை எடுத்து மேசையில் அலட்சியமாய்ப் போட்டபடி கேட்டான்.

இதுவா இளையமச்சான் என்ற வியப்பு எனக்கும் பாலனுக்கும் விலகவேயில்லை.

சின்ன மாமியுடன் ஒவ்வொரு வெள்ளியும் கோயிலுக்கு வந்து சங்கு ஊதிக் கொண்டும் அல்லது சேமக்கலம் அடித்துக் கொண்டும் ஐயருக்குப் பின்னால் திரியும் அவனா இவன் என்பது தான் அந்த ஆதங்கம்.

"மூன்று வருசத்துக்கு மேலை இங்கை வந்து நிக்கிறியள் என்று சின்ன மாமாவும் சின்ன மாமியும் கவலைப் பட்டுக் கொண்டு இருக்கினம். அதுதான் வந்து பார்த்திட்டு ஏதாவது வகையிலை டென்மார்க்கிற்கு கூட்டிப் போவமா என்றுதான்...", நான் சொல்லி முடிக்கு முதல் அவன் புன்னகைத்தான்.

"இல்லை மச்சான்... இங்கை இப்ப இது சுலப மில்லை... பெரிய காசு கை மாறுகிற தொழிலாய் போச்சு... அப்பிடி நடந்தாலும் இயக்க கோஷ்டி சண்டைகள் போலை ஆட்களை ஆட்கள் காட்டிக் கொடுக்கிறாங்கள்... பிளேனுக்கை வந்தே பொலிஸ் இறக்கிக் கொண்டு போறாங்கள்... நாலு தடவை முயற்சித்து விட்டுத்தான் இப்ப

இப்பிடிக் காலத்தை ஓட்டிக் கொண்டு இருக்கிறம்"

"எல்லாத்துக்கும் ஒரு வழியிருக்கும்.... உனக்கும் மூத்த மச்சானுக்கும் தொழில்களும் வழிகளும் தெரியும். நானும் பாலனும் எங்களாலை முடிஞ்சளவு பணத்தை ஒழுங்கு செய்து தாறாம். நாங்கள் இங்கை நிற்கிற ஒரு கிழமைக்குள்ளை வெளிக்கிடுற வேலையைப் பாருங்கோ".

நகத்தைப் பற்களுக்கிடையே கடித்தபடி யோசித்தான்.

"சரி.. நாளைக்குக் காலமை அண்ணாவும் தாய் லாந்திலை இருந்து வந்திடுவார்... யோசிப்பம்" என்றபடி பிறிச்சில் இருந்து நாலைந்து பியரை எடுத்து வந்து முன்னால் வைத்தான்.

நாங்கள் இருவரும் வேண்டாம் எனத் தலை யசைத்தோம்.

"நீங்கள் இப்பவும் கோயிலோடையே இருக்கிறியள் போல...."

அப்போதுதான் எனக்கு ஞாபகம் வந்தது அன்று எங்கள் குதிரைவாகனத் திருவிழா நாள் என்று.

வாழும்வரைதான் ஊர்.... இருக்கும் வரைதான் நாடு... கடலைத் தாண்டும் போது பல விடயங்கள் எங்களை யும் தாண்டிச் சென்றுவிடும் என்று எங்கோ படித்தது ஞாபகம் வந்தது.

*

அடுத்தநாள் அதிகாலையில் மூத்த மச்சானும் தாய்லாந்தில் இருந்து வந்திருந்தான்.

அவன் முகத்தில் ஏதோ வெற்றிப் பெருமிதம்

நிலவியது.

இந்த முறை அவன் தாய்லாந்திற்குக் கூட்டிச் சென்ற ஐவரும் எந்தப் பிரச்சனையும் இல்லாமல் பிளேனில் ஏறிப் புறப்பட்டு விட்டார்களாம்.

ஆளுக்கு 500 டொலராய் கொமிசன் கிடைத்தாலும் அதில் ஆயிரத்திற்கு மேல் இன்றிரவே பார்ட்டி... தண்ணி... டிஸ்கோ... அது இது என்று போய் விடுமாம்.

அப்படி ஒரு பதிவு செய்யாத கலாசாரம் அங்கிருந்ததை இலகுவில் நானும் பாலனும் உணர்ந்து கொண்டோம்.

அடுத்த தடவை ஐந்து பேரின் பயணம் காலை வாரி விட்டால் கவலையைப் போக்க இன்னோர் தண்ணிப் பார்ட்டி என்று இந்த முறை வந்த இலாபத்தில் ஒரு பகுதி போய் விடும்.

இந்த ஆடு புலி ஆட்டத்தில் இருந்து கட்டாயம் இவர்களை மீட்டுக் கொண்டு போக வேண்டும் என்று நானும் பாலனும் திடமாக முடிவெடுத்தோம்.

நாங்கள் இருவரும் எங்கள் முடிவில் மிகவும் சீரியஸாக இருப்பதை இரு மச்சான்மாரும் உணர்ந்து கொண்டார்கள்.

அவர்களுக்கு மட்டும் அந்த வாழ்க்கைக்குள் அமிழ்ந்து போக வேண்டும் என்று விருப்பமா என்ன?.... வழி யில்லாமல் அமிழ்ந்து அமிழ்ந்து போய்க் கொண்டிருந் தார்கள்.

அடுத்த நாள் நாலு பேரும் ஒரு சாப்பாட்டுக் கடையில் சாப்பிடுக் கொண்டிருந்த பொழுது மூத்த மச்சான் எங்கள் இருவரின் பாஸ்போட்டையும் ரிக்கற்றையும் பார்ப்பதற்கு

எனக் கேட்டான்.

கொடுத்தோம்.

மிகவும் ஆழ்ந்த சிந்தனைக்குப் பின்பு தனக்குள் புன்னகைத்தான்.

"ஒரு வழியிருக்கு" என்றான்.

என்ன என்பது போல நிமிர்ந்து பார்த்தோம்.

"இந்தப் பாஸ்போட்டிலை முகம் மாத்திறது சுலபம். விரல் அடையாளம் ஏதுமில்லை. நானும் தம்பியும் உங்கடை ரிக்கற்றைப் பாவித்து டென்மார்க்குக்குப் போகலாம். நீங்கள் தொலைந்து போச்சுது என்று உங்கடை டென்மார்க் எம்பசிக்கும், இன்சூரன்ஸ் கம்பனிக்கும் சொன்னால் உங்களுக்குப் புதுப் பாஸ்போட்டும் ரிக்கற்றும் கிடைக்கும்" சொல்லி விட்டு என்னை ஊடுருவிப் பார்த்தான்.

எனக்குள் சின்னதொரு நடுக்கம்.

பாலனை நிமிர்ந்து பார்த்தேன்.

பாலன் மிக இலகுவாக "நல்ல ஐடியாவாக இருக்கே" என்றான்.

அவனுக்கு எங்கள் குடும்பம் என்ன கைமாறு செய்யப் போகின்றது என்றே எனக்குத் தெரியவில்லை.

*

எனதும் பாலனினதும் பாஸ்போட்டுகளில் மச்சான் மாரின் படங்கள் மாற்றும் விடயங்கள் மிகத் துரித கதியில் நடந்தன. அங்கிருந்த ஒருவன் துல்லியமாகச் செய்திருந் தான். "தலைமாற்றி" என்ற பெயராலே அவன் அறியப் பட்டிருந்தான். ஏதாவது ஒரு வெளிநாட்டுக்குப் போக வேண்டும் என்ற கனவுடன் வந்து இது நிறைவேறாமல்

"தலைமாற்றி"யாக தன் வாழ்வைத் தொடர்ந்து கொண்டிருந்தான்.

பவித்திராவுடனும் அபிராமி அண்ணியுடனும் இடைக்கிடை தொலைபேசியில் கதைத்தாலும் இவைகள் பற்றி எதுவும் சொல்லவில்லை.

டென்மார்க் போனதும் எங்கள் வீட்டிற்குப் போய், அங்கு நாங்கள் வரும் வரை தங்கியிருக்கும் படியும்... நாங்கள் வந்த பின்பு டென்மார்க்கில் அகதி அந்தஸ்த்துக் கேட்கும் வேலைகளைப் பார்க்கலாம் என்று சொல்லி, வீட்டு விலாசம் தொலைபேசி எண்கள் எல்லாம் கொடுத் திருந்தோம்.

நாங்கள் புறப்பட வேண்டிய தினத்தில் மச்சான்மார் இருவரும் டென்மார்க்கிற்கு விமானம் ஏறினார்கள்.

அவர்களின் விமானம் புறப்பட்ட பின்பு டென்மார்க் எம்பசியுடனும், இன்ஸ்சூரன்ஸ் கம்பனியுடனும் தொடர்பு கொண்டோம்.

பாலன் டாக்டராய் இருந்ததாலும் நானும் ஏதோ ஒரு வகையில் நல்ல வேலையில் இருந்ததாலும் எவரும் எங்களைச் சந்தேகப்படவில்லை.

அடுத்த 3 நாட்களுக்குள் எமர்ஜென்சி பாஸ் போர்ட்டும் ரிக்கற்றும் தருவதாக வாக்களித்திருந்தார்கள்.

திட்டமிட்டபடி எங்கள் வரவைப் பார்த்திருப்பார் கள் என்பதால் பவித்திராவுக்கும் அபிராமி அண்ணிக்கும் எங்கள் பயணத் தாமதத்தைப் பற்றிச் சொல்ல தொலைபேசி எடுத்த பொழுது அங்கு மச்சான்மார் வந்திருப்பதற்கான எந்த அறிகுறிகளையும் காணவில்லை.

மச்சான்மார்கள் எங்கேயோ சொதப்பி விட்டிருக் கிறார்கள் என்று புரிந்தது.

பட்ட கஷ்டம் எல்லாம் வீணே என மனம் வேதனைப்பட்டது.

தொடர்ந்து வந்த 3 நாட்களும் இன்ஸ்சூரன்ஸ் கம்பனி ஏற்பாடு செய்திருந்த ஹோட்டலிலேயே தங்கியிருந்தோம்.

மச்சான்மார் தங்கியிருந்த பக்கம் போகவேயில்லை.

தினம் தினம் டென்மார்க்கிற்குத் தொலைபேசி எடுத்தாலும் மச்சான்மார் அங்கு வந்ததாகத் தகவல் இல்லை.

எங்கேயோ ஒரு தப்பு நடந்திருக்கிறது என்று மட்டும் உறுதியாகப் பட்டது.

தொடர்ந்து ஹோட்டலில் அடங்கியிருக்க அலுப் பாய் இருக்க பாலன் ஒரு நாள் கேட்டான் ”பத்துமலை முருகன் கோயிலுக்குப் போயிட்டு வருவமா?”, என்று.

நான் எனக்குள் தயங்கினேன்.

எதற்கும் உடனே “ஆம்“ அல்லது “இல்லை“ என்று உடனே சொல்லும் நான் அன்று காட்டிய தயக்கம் பாலனுக்கு வியப்பாய் இருந்தது.

என்னைப் பார்த்தபடி இருந்தான்.

“எங்கள் இருகுடும்பமும் சிங்கப்பூருக்கும் வந்து... பிறகு இங்கே வந்து அந்த முருகன் கோயிலுக்கும் போக வேண்டும் என்று பவித்திரா சொல்லியிருந்தாள்” என இழுத்தேன்.

“பரவாயில்லை” என புன்முறுவலித்தவன், பின்பு தொடர்ந்தான் “இவ்வளவு நாளும் பவித்திராவைக் கல்யாணம் செய்ய நீதான் குடுத்து வைத்திருக்க வேண்டும்

என்று நினைத்திருந்தனான். இப்பதான் தெரியுது பவித்திராவும் உன்னைக் கல்யாணம் செய்யக் குடுத்து வைத்திருக்கிறாள்" என்று.

"இல்லைப் பாலன்... போவோம்" என அவனின் விருப்பத்தை மறுக்காமல் அரை மனதுடன் சொன்ன பொழுது அவனே சொன்னான், "வேண்டாம்... அபிராமியும் பாவம் தானே. இப்ப போய்ப் பார்த்திட்டால் பிறகு பார்க்கிற எண்ணமே இல்லாமல் போயிடும். நாங்கள் எல்லோரும் ஒன்றாய் வருவோம்" என்று.

"பாலன்!... பவித்திரா என்றாலும் அது வேண்டும் இது வேண்டும் என்று சொல்லுவாள். ஆனால் அபிராமி அண்ணி அதுவும் சொல்லமாட்டா என்று நினைக்கிறன்".

"உண்மைதான்.... என்னைத் தவிர வேறு எந்த ஒரு உலகமுமே தெரியாத ஒரு அப்பாவி அவள்... அவளின் உலகமும் மிகச் சிறியது.. தேவைகளும் மிகச் சிறியன. அதனால் தானோ என்னவோ அவள் எப்போதும் அப்படிச் சந்தோசமாய் இருப்பாள்" பெருமையாகக் கூறிக்கொண்டே இருந்தான்", பாலன்.

*

மூன்றாம் நாள் மீண்டும் எமது பயணம் ஆரம்பமானது.

இந்த முறை இன்சூரன்ஸ் கம்பனி எமக்கு நேரடியாகக் கோலாலம்பூரில் இருந்து டென்மார்க்கிற்கு ரிக்கற் செய்து தந்திருந்தார்கள்.

மிகவும் சுவை மிகுந்த மலேசியா றம்புட்டான் பழங்கள்... மங்குஸ்தான் பழங்களுடன் டென்மார்க்கிற்கு வந்து சேர்ந்தோம்.

வந்த பின்புதான் பவித்திராவுக்கும் அபிராமிக்கும் உண்மையை உடைத்தோம்.

இருவருமே வாயடைத்துப் போனார்கள்.

இனி ஆள்கடத்துற ஏஜன்சி தொடங்கலாமே எனப் பவித்திரா பகிடியாகச் சொன்னாலும் அவளுக்கு இதில் நூறு வீத உடன்பாடில்லை என எனக்குத் தெரிந்தது.

"அவனை ஏசாதையுங்கோ... நான் பத்துமலை முருகன் கோயிலுக்கு போவதற்கு கேட்க உங்களுடன்தான் போவேன் என மறுத்துவிட்டு வந்திருக்கிறான்"

அவள் கண்கள் ஈரலித்ததை எல்லோரும் கண்டு கொண்டோம்.

பின்பு சீரியஸாக மச்சான்மாரின் விடயங்களை விசாரித்தோம்.

மலேசியன் எயர்லைன் அவர்கள் மலேசியாவில் இருந்து ஜேர்மன் பிராங்போட் எயர்ப்போர்ட்டுக்கு வந்தவர்கள் என்றும்... ஸ்கண்டினேவிய எயர்லைன் அவர்கள் ஜேர்மன் விமானநிலையத்தில் இருந்து டென்மார்க்கிற்கு வரவில்லை என்றும் உறுதிப்படுத்தினார்கள்.

எனவே அவர்கள் ஜேர்மனியிலேயே கைதாகி அங்கு அகதி அந்தஸ்துக் கேட்டிருக்க வேண்டும்... அல்லது அங்கேயே அவர்கள் விருப்பத்தின் பெயரில் அகதி அந்தஸ்துக் கேட்டிருக்க வேண்டும் என்பது உறுதியானது.

"அப்படியானால் எதற்காக எங்களுக்குச் சொல்ல வில்லை?"

"உங்கள் குடும்ப உறவுகள் தெரிந்தது தானே... அதுதான் ஏன் இங்கை வந்து எங்களிட்டைக் கடமைப்

பட்டது போல வாழ வேண்டும் என்று யோசிச்சிருக்கலாம். உங்க சின்ன மாமா சின்ன மாமியும் அதனை விருப்பாமலும் இருந்திருக்கலாம்"

"எப்பிடிப் பவித்திரா இப்படி யோசிக்கிறாய்?"

"நீங்களும் பாலன் அண்ணையும் தான் எப்போதும் உங்களைப் போலவேதான் மற்றவர்களை யோசிக்கிறது... உலகத்தில் உள்ள எல்லோரும் அப்படி யோசிக்கிறது இல்லை... அவை அவைக்குள்ளை ஓர் அரசியல் இருக்கு... அவை அவைக்குள்ளை ஒரு உலகம் இருக்கு... அதன்படி தான் அவையவை யோசிக்கிறது".

அவள் சொன்னது நூறுவீத உண்மை என அடுத்த கிழமை ஜேர்மனியில் இருந்து வந்த அவர்களது கடிதம் உறுதிசெய்தது.

"டென்மார்க்கை விட ஜேர்மனியில் முன்னேற வசதிகள் இருப்பதாக நாங்கள் மலேசியாலேயே அறிந்திருந்த படியால் இங்கேயே அசூல் கேட்டு விட்டோம். உங்கள் உதவிக்கு நன்றி"

இவ்வளவுதான் கடிதம்.

அடுத்தடுத்த நாள் காலையில் அம்மாவின் கடிதம் வந்தது.

நல்ல காலம் பவித்திராவுக்கு என் குணம் தெரிந்திருந்த படியால் அன்று இரவு நான் சாப்பிடும்வரை பொறுத்திருந்து நான் சாப்பாடு முடிந்த பின்பே அதனை என்னிடம் தந்தாள்.

"என்ரை பிள்ளையள் ஏன் டென்மார்க்கிற்கு போய் அவை இரண்டு பேருக்கும் முன்னாலை தலை குனிஞ்சு வாழ வேணும். அதுதான் அங்கை போகாமல் ஜேர்மனியிலேயே

இறங்கீட்டான்கள். நல்லாய் இருக்கிற காலத்திலை அவையின்ரை பிளைட் ரிக்கற் காசைக் கொடுப்பான்கள் தானே” என சின்னமாமி கோயிலடியில் நின்று கதைத்ததாக வந்திருந்தது.

எனக்குக் கண்கள் சிவந்து உதடுகள் துடித்தது நன்கு ஞாபகம் இருக்கு.

கைகள் நடுங்கியது போல இருந்தது. நானும் பாலனும் பட்ட பாடுகள்... நெஞ்சிடிகள்... மேலாக குடும்பத்துடன் கழிக்க வேண்டிய எங்கள் லீவுகள்... இவையெல்லா வற்றையும் அவர்களின் ரிக்கற் காசு ஈடுகட்டுமா என்ற நினைப்பு மீண்டும் மீண்டும் வந்து என்னைக் குழப்பிக் கொண்டு இருந்தது.

சோபாவில் பக்கத்தில் அமர்ந்திருந்த பவித்திராவின் மடியில் படுத்து விட்டேன்.

அவள் என் தலையைக் கோதியபடியே இருந்தாள்.

எனது மனம் கொஞ்சம் அமைதியாகிக் கொண்டு வந்த பொழுது “நான் உங்களுக்கு ஒன்று சொல்லட்டுமா?” என்று கேட்டாள்.

“சொல்”

“உங்கடை அப்பப்பாவுக்கு 3 பிள்ளைகள் இருந்தாலும் உங்கடை அப்பா மட்டும் தன்னை அவரின்ரை பிரதிநிதியாகப் பார்த்துக் கொண்டு வந்திருக்கிறார். அதை அப்பிடியே... அல்லது உங்க அப்பாவுக்கும் மேலாக நீங்கள் அப்பப்பாவை உள்வாங்கிக் கொண்டு பெரியவீட்டையும் குதிரை வாகனத்திருவிழாவையும் கொண்டாடிக் கொண்டிருக்கிறியள். இலண்டனிலை இருக்கிற பெரியப்பாவின் பிள்ளைகளோ... இப்ப ஜேர்மனிக்கு வந்திருக்கிற உங்கடை

மச்சான்மாரோ... திருமணம் செய்யாமல் இருக்கிற உங்கள் சின்ன மச்சாளோ உங்கள் அளவுக்கு அந்த உறவுகளையும் பாரம்பரியங்களையும் காக்க வேணும் என்று நினைக்கிறார்களோ என்று எனக்குத் தெரியவில்லை. நீங்கள் எல்லோரும் ஒரு குடைக்குள்ளை கட்டிக் கொண்டு நிற்க வேண்டும் என்று நினைக்கிறியள்.. மற்றவை தங்கள் தங்கள் குடைக்குள்ளை நின்று கொண்டு காணும் பொழுது கை கொடுத்தால் போதும் என்று நினைக்கினம்"

பவித்திராவை நிமிர்ந்து பார்த்தேன்.

"இங்கிருந்து மலேசியா வரை எங்களை இங்கு தனியே விட்டு விட்டு பாலன் அண்ணையோடை போய் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று உங்கள் மனம் அடித்துக் கொண்டிருந்தது. போய் வாங்கோ என நானும் சந்தோசமாய் அனுப்பினன். ஆனால் அவர்களோ போய் வந்த பிளைட்காசைக் கொடுத்தால் போதும் என்று கணக்குப் பார்க்கிறார்கள்".

நான் நினைத்து நினைத்து குமைந்தவற்றையே பவித்திரா சொல்லிக் கொண்டு இருந்தாள்.

நாங்கள்-எங்களது என்ற கிழக்காசிய கலாசாரத்தைப் பற்றி நிற்கும் என்னையும்... நான்-எனது என்ற மேலைத் தேயக் கலாசாரத்துள் அமிழ்ந்து போயிருக்கும் அண்ணன் மாரைியும் மச்சான்மாரையும் அவள் தனது மொழியில் ஒப்பீடு செய்து கொண்டிருந்தாள்.

இன்னமும் என்ன என்ன சோதனைகளை எங்கள் குடும்பங்கள் சந்திக்க இருக்கின்றனவோ என்ற நினைவில் அன்றிரவு சோபாவிலேயே தூங்கி விட்டேன்.

## 18

பாலனில் எனக்கு பிடித்த விடயமே எந்தப் புயல் மழை வந்தாலும் தனது புன்சிரிப்பை மட்டும் மாற்றாமல் வைத்துக் கொண்டு நிதானமாக யோசித்து நிதானமாகச் செயல்படுவதுதான்.

என்னோடு இத்தனை வருடங்கள் நான் இழுத்த பாட்டிற்கு அவனும்... அவன் இழுத்தபாட்டிற்கு நானும் என.... ஓடிக் கொண்டிருந்த பொழுதும் அவன் தனது நிதானத்தைத் தவறவிடவில்லை.

ஆனால் இன்று எனது வார்ட்டுக்கு வந்த பொழுதும் சரி... பவித்திராவுடனும் ஹரியுடனும் பேசிக் கொண்டு நின்ற பொழுதும் சரி... அவன் அவனாக இல்லை.

இதிலிருந்து எனக்கு ஏதோ சொல்லக் கூடாததை... அல்லது மறைக்க வேண்டிய ஒன்றை மறைத்துக் கதைக் கின்றான் எனப் புரிந்தது.

"பாலன்"

"என்ன?"

"நீயாக எனக்குச் சொல்லாவிட்டால் நாளைக்கு வாட்

ரவுண்ட் வருகிற டாக்டரிடம் நானே கேட்டுத் தெரிந்து கொள்வன்"

"கொஞ்சம் வாயை மூடுறியா!"

"கையிலை இருக்கிற தர்ப்பையாலேயே உனக்கு மற்றவைக்கு அடிக்கிற தைரியம் இல்லை... நீ என்னை வெருட்டுறியா"

அவன் கண்கள் கலங்குகின்றன.

அவ்வாறே பவித்திராவுக்கும்.... தள்ளி நிற்கும் ஹரிக்கும்!

"பிளீஸ்... எல்லாரும் எதையாவது சொல்லித் தொலையுங்கோ... உங்கடை கவலையான முகமும்... கண்ணீரும் என்னை இன்னும் வருத்தக்காரனாக்கிப் போடும்... உடம்பும் இரவில் அதிகமாக வலிக்கிறது... இப்பவே அடிக்கடி பிரக்கடி வருகுது...இதுவே மூச்சை அடைத்தால் பிறகு நீங்கள் வந்திருந்து என்ன உரத்துச் சொன்னாலும் எனக்கு கேட்காமல் போயிடும்"

ஹரி மெதுவாக என் பக்கத்தில் வந்து இருந்து என் கைகளைப் பிடித்துக் கொள்கின்றான்.

"சொல்லடா" என என் முகத்தால் அவனிடம் கெஞ்சுகிறேன்.

"அப்பா உங்களுக்குப் பார்வையிலை ஏதாவது வித்தியாசம் இருக்கா" கேட்க முதல் அழத் தொடங்கி விட்டான்.

சின்னப் பிள்ளை போலை தேம்பித் தேம்பிப் போய் யன்னல் கரையில் நின்று அழுகிறான்.

பவித்திரா கிட்டப் போக அவளது தோளில் சாய்ந்து

கொண்டு விம்முகின்றான்.

எனக்கு பாலனில் தான் கோபம் வருகிறது.

"இந்த இடியட் ஏதாவது சொன்னானா? எனக்குப் பார்வை தெரியாமல் போயிடும் அது இது என்று.... முட்டாள் இவனுக்கு என்ன தெரியும்? சிறிலங்காவிலை ஆக ஐஞ்சு வருசம் படிச்ச டொக்டர் சேர்ட்டிபிக்கட்தானே இவனிட்டை இருக்கு! அதுவும் கலவரம் அது இது என்று அரைவாசி நாள்தானே இவன் பலகலைக்கழகம் போனவன். டென்மார்க்கிலை ஒழுங்காய் எட்டு வருசம் படிச்சிருந்தால் இந்த வருத்தங்களைப் பற்றித் தெரியும்"

பாலன் சுவர்ப் பக்கம் திரும்பி நிற்கின்றான்.

எனக்கு ஹரிபடும் வேதனையை விட பாலனின் வேதனையே அதிக வலியை ஏற்படுத்தியது.

ஒரு கணம் நிதானமாக யோசித்தேன்.

மூச்சை நன்கு உள்ளே இழுத்து வெளியில் விட்டுக் கொண்டேன்.

"மூன்று முட்டாள்களும் எனக்குக் கிட்ட ஒருக்கா வாங்கோ"

எனது குரலில் உறுதி தொனிக்கும் பொழுது அனைவரும் எனக்குக் கட்டுப்படுவது இயல்பு.

அவ்வாறே இன்றும்.

மூவரும் என்னருகே வந்தார்கள்.

பவித்திரா வியர்த்திருந்த என் நெற்றியைத் துடைத்து விட்டாள்.

ஹரி முன்போல் எனக்குப் பக்கத்தில் அமர்ந்து என் வலக்கையைத் தன் கையினுள் பொத்தி வைத்துக்

கொண்டான்.

பாலன் கால்மாட்டடியில் நின்று கொண்டிருந்தான்.

“பாலன் என் பார்வைக்கு ஏதும் வந்து விடுமோ என்று பயப்பிட்டு உங்களையும் பயப்பிடுத்தி இருக்கிறான். ஆனால் இதுவரை இப்ப அடிக்கடி வாற பிரக்கடிப்பைத் தவிர வேற எனக்கு ஏதுமில்லை. போன கிழமை எடுத்த டெஸ்டுகளைப் பார்த்து இந்த முட்டாள் ஏதும் பயந்தானோ தெரியாது. ஆனால் தற்சமயம் அவன் பயப்பிடுகிற மாதிரி ஏதும் நடந்திட்டால் தயவு செய்து எனக்கு செய்யிற எல்லா மருத்துவத்தையும் நிற்பாட்டச் சொல்லி விடுங்கோ. நீங்கள் எவரும் என்னையும் பார்க்க வர வேண்டாம்”

ஹரி பழையபடி விசும்பத் தொடங்கினான்.

“நீ வளர்த்திருக்கிற தலைமுடி.. போட்டிருக்கிற உந்த வடச் சங்கிலியள்... குத்தியிருக்கிற பச்சைகள் எல்லாத் துக்கும் உன்ரை அழுகை பொருந்துதே இல்லை. கொஞ்சம் உன்ரை சென்ரிமென்டுகளை நிற்பாட்டிப் போட்டு உன்ரை அப்பா... முழு நினைவோடை சொல்லுறதுகளைக் கேள்”

பாலன் வந்து என் இடக்கையைப் பிடித்தபடி “ரிலாக்ஸ்” என்கிறான்.

“பிளீஸ் பாலன்... கண்கள் போன பிறகு எதுவுமே தெரியாமல் மூக்காலை மணந்து கரண்டி எங்கே நிற்குது என்று யோசித்து வாயைத் திறந்து... அந்தக் கொடுமை எல்லாம் வேண்டாமடா”

பவித்திரா ஏதும் பேசவில்லை.

பாலனையும் ஹரியையும் விட அவளே அதிகமாக மனதுக்குள் குமைந்து கொண்டு நிற்பாள் என எனக்குத் தெரியும்.

ஆனால் அழுத்தமாகவே நின்றிருந்தாள்.

"நீ மட்டும் ஏன் பேசாமல் நிற்கிறாய்"

அவளை வேண்டுமென்றே சீண்டினேன்.

"நான் என்னத்தைச் சொல்லுறது... நாளையிலை இருந்து நான் இங்கை வராமல் இருக்கிறன். அது இன்னமும் உங்களுக்குச் சந்தோசம் தானே", கதைக்கத் தொடங்கி யவள் உடைந்து விட்டாள்.

தனது பேர்ஸைத் திறந்து அதற்குள் இருந்த எங்கள் முருகன் குதிரை வாகனத்தில் வரும் படத்தை எடுத்து வைத்து முறைத்துப் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

பின் இல்லையில்லை என்பது போல தன் தலையைப் பலமாக ஆட்டினாள்.

பின்பு மீண்டும் அமைதியானவள் போலத் தெரிந்தது.

ஒரு நிமிட பயங்கர அமைதிக்கு பிறகு பெரிதாக மூச்சு மேலும் கீழும் வாங்கியது போல இருந்தது.

அடுத்த ஒரு நொடிதான்.

அவள் அலறியது எல்லோரையும் நடுநடுங்க வைத்தது.

"இதுக்காகத்தானா உனக்கு நான் காலம் காலமாய் கந்தசஷ்டி பிடித்தது... இதுக்காகத்தானா பரம்பரை பரம் பரையாய் இவையின்ரை குடும்பம் உன்னை வைச்சு ஆதரித்தது.... இதுக்காகத்தானா குதிரைவாகனத்திலை உன்னை வைச்சுத் சுத்தியது... இப்பிடி ஒரு கொடிய வருத்தம் வந்து கொஞ்சம் கொஞ்சமாய் அவரை அழிக்கவா உன்னைக் கையெடுத்துக் கும்பிட்டது.... உனக்கும் எனக்கும் என்ன சம்மந்தம்?... ஆனாலும் அவரின்டை குலதெய்வம் என்று

உன்னை நானும் கும்பிட்டன்... உன்ரை சன்னதியிலை தானே இவரை எனக்கு நிச்சயித்தது... இப்போ... இப்போ... எல்லாத்தையும் தாரை வார்த்து யார் யாருக்கோ குடுத்தது போல இவரை யாருக்குத் தாரை வார்த்துக் குடுக்கப் போறாய்... காய்ச்சல் தான் எண்டினம்... கான்சர் போல எண்டினம்... இல்லையின்லை கான்சர்தான், ஆனால் மாற்றிப் போடலாம் எண்டினம்... இப்ப கண்ணும் போகப் போகுது எண்டு சொல்லினம்... என்னையும் வர வேண்டாம் எண்டினம்... கண் கெட்ட கடவுளே உனக்கு எதுவும் தெரியேல்லையா"

நான் அதிர்ந்து போனேன்.

பவித்திராவா இது!

நிலம் அதிர நடக்கமாட்டாள்.. உதடு பெரிதாகப் பிரியப் பேசமாட்டாள்...

ஆனால் இன்று வேதனையின் உச்சத்தில் அவளின் வாயிலிருந்து வந்த வார்த்தைகளைக் கேட்டு எங்கள் முருகனே பயந்திருப்பான்.

குதிரை வாகனம் ஒரு தடவை தள்ளாடியிருக்கும்.

மனதுக்குள் வேண்டிக் கொண்டேன்.

"என் பார்வை போக முதல் என்னை நீ எடுத்துக் கொள் முருகா!"

ஹரி தாயைச் சமாதானப்படுத்த முயற்சி செய்து செய்து தோற்றுக் கொண்டு இருந்தான்.

பவித்திரா தன்னையும் மீறித் தொடர்ந்து கொண்டிருந்தாள்.

"நீ சும்மா இரு.... நீ இன்னும் ஒரு கிழமையில்

அமெரிக்காவுக்கு போய் விடுவாய்... பானு இல்லாத வளாகவே போயிட்டாள்.... இராகுலன்... அது ஒரு ஊமை. இஞ்சையும் நான் வரக் கூடாது என்றால் நான் வீட்டுக்கை இருந்து விசரி ஆகிறதோ... இஞ்சை எனக்கு எவருடைய பெயரும் தெரியாது.. முகம் தெரியாது... ஐந்து சகோதரங் கள்... அப்பா அம்மா எல்லாரையும் விட்டிட்டு இவரும் இவரின்ரை குடும்பங்கள் என்றுதானே இன்று மட்டும் வாழ்ந்தனான். நான் சரி... செத்துப் போன என்ரை அப்பா அம்மா சரி என்ன குறையை இவருக்கு விட்டனாங்கள்.... என்னை விட இவரைத்தானே தூக்கி வைச்சுக் கொண்டா டினவை... இன்றைக்கும் எங்கள் குடும்பத்தின்ரை சொத்துப் பத்திலை ஒரு துளி கூட அண்ணாமாருக்கு எழுதி வைக்காமல் அத்தனையும் எனக்கும் இவருக்கும் எங்களுக் குப் பின்னாலை பிள்ளையள் உங்களுக்குத் தானே எழுதி வைச் சிட்டுப் போனவை.... வாழ்க்கையிலை யாருக்கும் முன்னாலை தலைகுனியாத என்ரை அப்பா இவையின்ரை பெரிய வீட்டு விவகாரத்திலை எவ்வளவு தூரம் கீழை இறங்கிப் போய் அவமானப்பட்டவர்... இப்ப வர வேண்டாம்... நீ வீட்டிலை இரு....நான் தனிய செத்துப் போறன் என்கிற நீங்கள் இப்பிடியே தனிய டென்மார்க்கிலை இருந்திருக்கலாம் தானே.... கடைசியாய் வெள்ளைச் சீலையை உடுத்துக் கொண்டு பெட்டியைச் சுற்றி வரவும் .... பொட்டையும் அழிச்சு... பூவையும் தாலியையும் கழட்டிப் பெட்டிக்கை போடவும் தானா நான் இங்கை இருக்கிறன்" விம்மினாள்.

ஒரு வினாடி தன்னைச் சுதாகரித்து விட்டு, "பாலன் அண்ணை எனக்கு நாளைக்கே எனக்கு ஒரு ரிக்கற் வாங்கித்

தாங்கோ... நான் ஊரிலை போய் இருந்திடுறன்... எந்தக் கண்றாவிக் காட்சியையும் நான் பார்க்க வேண்டாம்... ஏதும் நடந்தாலும் எனக்கு ஒருதரும் அறிவிக்காதையுங்கோ... லங்காசிறி அது இது எண்டு எதிலும் போடாதையுங்கோ... அவர் இப்படியே இருக்கிறார் எண்டு நினைச்சுக் கொண்டு பூவோடையும் பொட்டோடையும் அங்கை இருக்கிற அனாதைப் பிள்ளைகளோடை இருந்திடுவன்... என்ன?... ஒரு கவலைதான்... என் சூர்யாவைத் தான்... காணாமல்...” விக்கினாள்.

ஒரு நேர்ஸ்வந்து எட்டிப் பார்த்து விட்டுப் போனாள்.

“நெடுகலும் சொல்லுவார் ஹரி... நான் செத்தால் உனக்கு இவ்வளவு வரும்... அவ்வளவு வரும்... நீ ராசாத்தி மாதிரி இருக்கலாம் என்று. நீங்கள் போனபிறகு நான் நல்லது கெட்டதுக்கு பிறகு முன்னாலை போக முடியுமோ?... ஊரிலை மட்டுமில்லை... இங்கை டென்மார்க்கிலும் தான். நான் ராசாத்தியாகவே என்ரை அப்பா அம்மாவோடையே இருந்திருக்...க...லா...” சொல்லி முடிக்க முடியாமல் திணறினாள்.

அவளது ஒவ்வொரு வார்த்தையும் ஈட்டியாக என் மார்பில் குத்தியது.

பவித்திரா பாவம்!

நான் அறிவுபூர்வமாக அதனை நினைத்திருந்தாலும் மனப்பூர்வமாகச் சொல்லி அவளை மன வேதனைப்படுத்தி யிருக்க கூடாது.

பாலன் கிட்டவாக வந்து, “நீதான் அவாக்கு சமாதானம் சொல்லி நிற்பாட்ட வேணும்... இல்லாட்டிக் கடைசி வரை நிற்பாட்டவே மாட்டா”.

ஊஹூம்.

ஒரு கணம் நிதானித்தேன்.

"கொஞ்ச யூஸ் கரைத்து தாறியா?"

அவ்வளவு தான்!

கண்களைத் துடைத்தபடி ஓடிப்போய்த் தோடம் பழங்களைப் பிழிந்து யூஸாக எடுத்து வந்தாள்.

"நேர்ஸ்மாரைக் கொண்டு பெட்டி யூஸ் வாங்கிக் குடிக்கிறது தானே... இதுக்கு மட்டும் தான் நான் வேணு மாக்கும்.... எல்லாம் சண்முகத்தார் குடும்பத் தடிப்பும் மிடுக்கும்" செல்லக் கோபம் காட்டியவள் பின் மெதுவாகச் சிரித்தாள்.

பாலனின் முகத்திலும் ஹரியின் முகத்திலும் புன்முறுவல் பூத்தது.

அதுதான் என் பவித்திரா!

எதையுமே மனத்தினுள் வைத்திருக்க மாட்டாள்.

அத்தனையும் கொட்டி விட்டு அக்கணமே மறந்து விடுவாள்.

பாலன் கிட்டவாக வந்தான்.

"தயவு செய்து என்னை மன்னித்துக் கொள்ளடா... இப்படி இப்படி எல்லாம் ரிஸ்க் வரும் என்றுதான் சொன்னனே தவிர உனக்கு இப்படி நேரும் என்று சொல்ல வில்லை"

ஒரு வினாடி மூச்சை உள்ளே எடுத்து விட்டு, "போடா... பூல்! உன்னை எனக்கு தெரியாதா.. நீ போய் மன்னிப்பு அது இது என்று பெரிய பெரிய வார்த்தைகள் பேசிக் கொண்டு... பார் ஹரியை! அவன் எப்பிடி

ஸ்றோங்காய் நிற்கின்றான்”

ஹரி மனத்துள் கதறுகிறான் என்று எனக்குத் தெரியும். அவனும் உடைந்து விடக்கூடாது என்றுதான் அப்பிடிச் சொன்னேன்.

இப்படி ஒரு மனைவி... பிள்ளைகள்.. நண்பன்... இவர்களை எனக்குத் தந்தற்குக் கடவுளுக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்.

மதிய உணவுடன் நேர்ஸ் வந்தாள்.

“பாலன்... உனக்கிருக்கிறதே இந்த ஒரு நாள் ஞாயிறு லீவு மட்டும் தான். ஹரிணியும் அபிராமி அண்ணியும் பார்த்துக் கொண்டு இருப்பினம். நீ போ... ஹரியையும் இராகுலன் வீட்டடியிலை இறக்கி விடு... தமையன் வீட்டை சாப்பிட்டிட்டுப் பின்னேரம் வரட்டும்”

பாலன் “ஆம்“ எனத் தலையாட்டினான்.

ஹரி சற்றுத் தயங்கினான்.

“நீ பாலனுடன் போ” எனச் சைகையால் காட்டினேன். அவன் கிட்டவாக வந்து என்னை முத்தமிட்டுவிட்டுச் சென்றான்.

பவித்திரா, நேர்ஸ் கொண்டு வந்த டெனிஸ் சாப்பாட்டை ஒரு புறம் வைத்து விட்டுத் தான் ஆக்கி வந்த சாப்பாட்டை என்னருகில் கொண்டு வந்தாள்.

“சொறியடா” என் கண்கள் கலங்க அவளிடம் மன்னிப்புக் கேட்டது.

கலங்கிய கண்களின் முன் அவள் நிழலாகத் தெரிந்தாள்.

தன் கைகளால் என் வாயைப் பொத்தினாள்.

“மரணம் யாருக்கும் வரலாம். ஆனால் உங்களுக்கு எதுவும் தீங்காக நடக்கக் கடவுள் விடமாட்டான். நீங்களும் பயப்பிட்டு எங்களையும் பயப்பிடுத்தாதையுங்கோ”

கரண்டியை வாய்க்குக் கிட்டவாகக் கொண்டு வந்தாள்.

அவளின் கைப்பக்குவம் அறையை நிறைத்தது.

ஆம்!

எனக்குப் பிடித்த சுறாமீனைச் சரக்குக் கறியாக ஆக்கி வந்திருந்தாள்.

நேற்று சனிக்கிழமை.

இலங்கையில் இருந்து வந்திருக்க வேண்டும்.

இத்தனை வேலைகளுக்குமிடையில் தூரத்தில் இருக்கிற மீன் கடைக்குப் போய் வந்திருக்கிறாள்.

“நீ உன் அப்பா அம்மா சகோதரங்களுடனேயே இருந்திருக்கலாம்”

“சண்டியர் என்னட்டை இண்டைக்கு அடி வாங்கப் போறார்”

என் நெற்றியில் முத்தமிட்டபடியே சாப்பாட்டைத் தரத் தொடங்கினாள்.

சாப்பிடும் பொழுதே கண்கள் களைத்த மாதிரி அயர்ந்து போகின்றன.

“களைக்குதா அப்பா”

“இல்லை” என என் தலையாட்டலாலும் புன்சிரிப்பாலும் அவளுக்கு தெரியப்படுத்துகின்றேன்.

வாழ்வில் வரும் போராட்டங்களும் மன அலைச்சல்களும் எங்களின் முழுச்சக்தியையும் எடுத்துக் கொள்ளும்

சந்தர்ப்பங்கள் சிலவேளைகளில் நடந்து விடுவதுண்டு.

அது இன்றும் நடந்திருக்கின்றது.

பபிதா இயக்கத்துக்கு போன அன்றும் இது நடந்தது!

பானு வீட்டை விட்டுப் போன அன்றும் இது நடந்தது!!

எங்கள் பெரிய வீடு தலை குனிந்த பொழுதும் இது நடந்தது!!!

## 19

ஒரு மரம் செழித்து வளர்ந்து... கிளைகள் விட்டு... அனைத்துக் கிளைகளும் செழிப்பாக இருக்கும் பொழுது தான் அந்த மரத்திற்கு அழகு.

மாறாக நன்கு வெய்யில் படாத பக்கத்தில் இருக்கும் கிளைகள் செழிப்புக் குன்றியும் மறுபக்கத்தில் இருப்பவை மிகவும் செழிப்பாகவும் இடையில் இருப்பவை இரண்டுக் கும் இடைப்பட்ட நிலையிலும் இருப்பது போலத்தான் எங்கள் பெரிய குடும்பமும் மாறியிருந்தது.

பபிதா இயக்கத்திற்குப் போய் விட்டது அப்பா அம்மாவை ஓரளவு நடைப்பிணமாக்கி விட்டிருந்தாலும், எனது டென்மார்க் வாழ்வும் எனது முன்னேற்றமும் அவர்களுக்கு நிச்சயமாய் மனநிறைவைக் கொடுத்திருக்கும். .

பெரியப்பாவின் அண்ணன்மார் இலண்டன் வந்து மூத்தண்ணா ஆபிரிக்கக்காரியைக் கட்டியதாலும்.... சின்னண்ணா கள்ளக் கிறடிற்காட் விவகாரத்தில் சிக்குப் பட்டதாலும் அந்தப் பக்கம் செழிப்புக் குன்றியதாகவே இருந்தது.

மச்சான்மாரின் வாழ்க்கைப் போராட்டம் மலேசியாவில் மிகவும் கவலைக்குரியதாக இருந்து... பின்பு ஏதோ எனது உதவியாலும் பாலனின் உதவியாலும் ஜேர்மனிக்கு வந்து... ஒருவன் ரவல் ஏஜன்ற் நடாத்தியும்... மற்றவனுக்கு இலக்கியத்துறையில் ஆர்வம் இருந்ததால் அரச உதவியையும் வர்த்தக விளம்பரங்களின் வருமானத்தையும் பெற்றுத் தமிழ் பத்திரிகை நடாத்திப் பெயர் எடுத்தும்.... கருகிப் போகவிருந்த அவர்கள் வாழ்வு சற்றுத் தளைக்கத் தொடங்கியிருந்தது.

இந்தச் சமயத்தில் தான் சின்ன மச்சாளுக்குப் பெரிய இடத்தில் திருமணம் வந்து பொருந்தியிருக்கிறது என அம்மா கடிதம் போட்டிருந்தா.

நல்லூரரடி ஆட்களாம்... கொழும்பிலேயே இருப்பவர்களாம்... வருடத்தில் ஒரு தடவை நல்லூர் தேருக்கு மட்டும் ஊருக்கு வருவபவர்களாம்... ஒரே மகன் - மத்திய வங்கியில் மனேஜராய் இருக்கிறானாம்.

சாதகம் நன்கு பொருந்தியிருந்ததாலும் மச்சாளின் அழகும் பிடித்துக் கொண்டதாலும் அந்தச் சம்பந்தத்தை எப்படியும் முடித்து விடவேண்டும் என இருபகுதியும் உறுதியாக இருந்தார்களாம்.

சீதனம் எதுவும் வேண்டாம்... ஆனால் உங்கள் மகள் கொழும்பில் சந்தோசமாய் வாழ்தற்கு ஒரு வீடு வேண்டும் என்பது மட்டும் தான் கோரிக்கையாக முன் வைக்கப் பட்டதாம்.

பதினைந்து வருடங்களுக்கு முன்பு அதன் பெறுமதி கிட்டத்தட்ட 15 இலட்சங்கள்.

மாமாவும் மாமியும் சம்மதம் தெரிவித்து விட்டார்கள்

என்பது அனைவருக்கும் ஆச்சரியமாய் இருந்தது.

இன்று பதினைந்து இலட்சங்கள் பெரிய பணம் இல்லை. ஆனால் பதினைந்து வருடங்களுக்கு முன்பு அது ஒரு பெரிய தொகை. அப்போதுதான் ஜேர்மனிக்கு வந்த மச்சான்மாரால் எப்படிப் அந்தத் தொகையைப் பிரட்ட முடியும் என்ற பெரிய கேள்விக்குறி எனக்குள் இருந்தது.

மச்சான்மார் தங்களால் அதிகூடியது ஐந்து இலட்சங்கள் மட்டும்தான் புரட்ட முடியும் என்றும்... விருப்பம் என்றால் அதற்கேற்றவாறு வேறு மாப்பிள்ளையைப் பேசிக் கொள்ளுங்கள் என்று தங்கள் முடிவை தெளிவாகச் சொல்லி விட்டார்களாம்.

மாமாவும் மாமியும் முதலில் அந்த 5 இலட்சத்தையும் அனுப்புங்கள். நாங்கள் மிகுதியை பார்த்துக் கொள் கின்றோம் என்று சொல்லி விட்டார்களாம்.

ஆனால் இடைக்கிடை இவர்கள் கொழும்புக்குப் போவது... கதைப்பது... என்று தொடர்ந்து மாப்பிள்ளை பகுதியும் ஒருநாள் ஊருக்கு வந்து கை நனைத்துச் சென்றார்களாம் எனவும் அம்மா அறிந்து கொண்டாவாம்.

கோயிலடியில் அம்மா அந்தக் குடும்பத்தைச் சின்னமாமா சின்னமாமியுடன் கண்ட பொழுதும் யார் எவர் என அம்மாக்கு அறிமுகப்படுத்தவில்லையாம்.

பூசை முடிந்த பொழுது சாம்பசிவக் குருக்கள்தான் சொன்னாராம் சின்ன மச்சாளின் பெயருக்கும் அந்த மாப்பிள்ளைப் பையனின் பெயருக்கும் அர்ச்சனை செய்து கொண்டு போகின்றார்கள் என்று.

அம்மா வந்து அப்பாக்குச் சொன்ன பொழுது அப்பா உடனே சொல்லி விட்டாராம், "இவங்கள் இந்தக்

கல்யாணத்திற்காக கட்டாயம் வீட்டையும் வளவையும் விற்கப் போறாங்கள். அல்லது இதனைச் செய்ய முடியாது" என்று.

இந்தச் செய்தி பற்றி குசுகுசுப்பு எங்கள் குடும்பத்தின் விருட்சமாய் இருந்த வீடு பாறி விழுந்தது போல இருந்தது.

இரண்டொரு நாட்களுக்குள் அது உண்மைதான்... பெரிய வீட்டை விற்கத்தான் போறார்களாம் என கதை உறுதியாகப் பரவ அப்பா, அம்மாவையும் கூட்டிக் கொண்டு சின்ன மாமி வீட்டை போனாராம்.

எத்தனையோ காரணங்களைச் சொல்லி அதை விற்க வேண்டாம் என்றும் அப்படி விற்பதானால் டென்மார்க்கில் இருக்கிற நான் அதனை வாங்குவேன் என்றும் சொன்னார் களாம்.

அப்போது சின்ன மாமா சொன்ன ஒரு வார்த்தை அத்தனை நேரமும் அப்பா முன் வைத்த வேண்டுகோள் களுக்கு முற்றுப் புள்ளி வைத்ததாம்.

"உங்கடை மகனுக்குக் கல்யாணம் பேசேக்கை எங்கடை பிள்ளைக்கு ஒன்பது வயது தான் வித்தியாசம். ஒன்பது வயது வித்தியாசம் ஒரு பெரிய வித்தியாசம் இல்லை எண்டாலும் என்ரை பிள்ளையின்ரை நினைப்பு உங்களுக்கு வரேல்லைத் தானே?... அண்டைக்கு உங்களுக்குத் துணிக் கடைக்காரன்ரை சொத்துப் பத்து தான் கண்ணுக்குத் தெரிந்தது. இப்ப வீடு விக்கப்போறம் எண்டவுடனை ஓடி வந்திருக்கிறியள். உங்கடை மகனின்ரை பிச்சையிலை என்ரை பிள்ளையின்ரை கழுத்திலை தாலி ஏறவேணும் என்றால் வாழ்க்கை முழுக்க அவள் கன்னி கழியாமல் இருக்கட்டும்"

அப்பா அம்மா அதற்கு மேல் எதுவும்

பேசவில்லையாம்.

இருவரும் எழுந்து வந்து விட்டார்களாம்.

எவர் இனி அதனை வாங்குகின்றார்களோ, அவர்களிடம் இருந்து அதனை வாங்குவதுதான் என் அடுத்த நடவடிக்கை என்று அப்பா முடிவாக என்னிடம் தொலைபேசியில் சொன்னார்.

நானும் என்ன விலை என்றாலும் அதனை வாங்குங்கள் என்று எனது சம்மதத்தைச் சொல்லி விட்டேன்.

பவித்திரா தொலைபேசியை என்னிடம் இருந்து வாங்கி ”எதற்கும் மாமா... அப்பாவிடமும் சொல்லி வையுங்கோ... கட்டாயம் யார் வாங்கினாலும் அதனை உங்களுக்கு வாங்கித் தந்து விடுவார். அவருக்கு கன பேரைத் தெரியும் தானே”.

“ஓம் பிள்ளை!... நானும் மாமியும் அடிக்கடி உங்கடை வீட்டை போய் வந்திருக்கிறம். ஆனாலும் இதுவரை எந்த உதவிக்கு என்று சம்பந்தி வீட்டுப் பக்கம் போனதில்லை. அது படியாலை நீயே ஒருக்கா அப்பா அம்மாட்டைச் சொல்லி விடு” என்றார்.

“ஓம் மாமா.. நானும் இவரும் அப்பாட்டைக் கதைக்கிறம்”

“எங்கடை குடும்பத்துக்கு வந்த மகராசி நீ”

இப்படியான சம்பிரதாய வார்த்தைகள் பொதுவாக அப்பாவிடம் இருந்து வருவதில்லை.

இப்போ அது வருகிறது என்றால் எவ்வளவு தூரம் அவர் மனம் நொந்து இருக்கிறார் என விளங்கிக் கொள்ள முடிந்தது. வாழ்வு எவ்வாறு ஒருவரைப் பலசாலியாகவும்

பலவீனமாக்கின்றது என்று பல தடவைகள் அப்பாவில் பார்த்துப் புரிந்து கொண்டிருக்கின்றேன்.

*

அன்று ஞாயிற்றுக் கிழமை.

பின்னேரம் கடையைப் பூட்டிவிட்டு வந்தவுடன் பவித்திரா தகப்பனுடன் தொலைபேசியில் பேசக் காத்திருந் தாள்.

"நீங்களும் ஒரு வார்த்தை அப்பாவுக்குச் சொல்லுங் கோவன்"

"ஏன்?... நீ சொன்னால் உங்கப்பா செய்ய மாட்டாரா??" சிரித்தபடியே கேட்டேன்.

"அப்பிடியில்லை... மருமகன் சொன்னவர் என்றால் அப்பா மிகச் சந்தோசப்படுவார். மற்றும்படி இப்பவும் நான் தான் எங்கடை குடும்பத்தின் இராஜகுமாரி. நான் எது சொன்னாலும் அது நடக்கும்" என்றபடியே டெலிபோன் நம்பரைச் சுழற்றினாள்.

பவித்திரா நீட்டி முழக்கி மகாபாரத, இராமாயண உபதேசம் போல விசயங்களை விளக்கிய பொழுது அவர் திருக்குறள் போல இரண்டடியிலை கூட இல்லை.... இரண்டு சொற்களில் சொன்னார்.

"கவலையை விடுங்கோ"

"அப்பா இவரும் உங்களோடை கதைக்க வேணும் என்று சொன்னவர்"

"ஏன் அவர் சொன்னால் தான் நான் செய்வன் என்று நீ அவருக்குச் சொன்னியா? எனக்கு நீ வேறை... அவர் வேறையா...." பவித்திரா அசடு வழிய, நான் அவளைப்

பார்த்து சிரித்துக் கொண்டு இருந்தேன்.

"சரி... அவரின் குரலைக் கனநாட்களாய் கேட் கேல்லை. நீ குடு"

நான் ரிசீவரை வாங்கிக் கொண்டேன்.

"நீங்கள் எதுக்கும் யோசிக்காதையுங்கோ... யாழ்ப்பாணத்திலை எந்தக் கொம்பன் வாங்கினாலும் நான் மடக்கிப் போடுவன். பிறகு உங்களுக்கு எழுதி விடுறன்"

"சந்தோசம் மாமா... நாளைக்கே நான் காசு றான்ஸ்பர் பண்ணிவிடுகிறன்... பாங்கா? உண்டியலா?? எது உங்களுக்கு வசதி???"

"மாப்பிள்ளை இத்தனை சொத்து இருந்தும் இவளுக்கு என்று நாங்கள் பெரிதாய் எதுவும் செய் யேல்லை... அதை நானே வேண்டி உங்கள் இருவரின் பெயருக்கும் எழுதி விடுறன்"

எனது பதிலைச் சொல்ல ஒரு நிமிடம் தயங்கினேன்.

"என்ன மௌனமாய் நிக்கிறியள்"

"இல்லை மாமா.... நான் சொல்லப் போறதைக் குறையாக எடுக்காதையுங்கோ... மாமியும் பக்கத்திலை நின்றால் டெலிபோனிலை சத்தத்தைப் போடுங்கோ..."

"கிட்டத்தட்ட முழுக்குடும்பமே இங்கை தான் நிற்கினம்"

கொஞ்சம் தயங்கினேன்.

"சொல்லுங்கோ... நாங்கள் எல்லாரும் கேட்கிறம்"

என்னை நன்கு அறிந்தவள் ஆதலால் பவித்திரா ஓரளவு ஊகித்து விட்டாள்.

"மாமா! பெரிய வீடு என்றது சண்முகத்தார்

பரம்பரையின்ரை சொத்து மட்டுமில்லை. அது சண்முகத் தார் குடும்பத்தின்ரை அடையாளம். அதை நான் இன்றைக்கு வாங்கினாலும் அதில் நான் எந்த உரிமையும் எடுக்கப் போவதில்லை. அது எண்டைக்கும் எங்கள் குடும்பத்தின் சொத்தாய்த் தான் இருக்கும். அதை அடுத்த வினாடியே யாரும் யாருக்கும் விற்கமுடியாத பரம்பரைச் சொத்தாய் எங்கள் கோயிலுடனேயே இணைத்து விட இருக்கிறன். சொத்தும் அனைத்து உரிமையும் எல்லாம் பேரப்பிள்ளை களுக்கும் பூட்டப் பிள்ளைகளுக்கும் தொடர்ந்து வரும் சந்ததிக்கு இருக்குமே தவிர எதிர்காலத்தில் எவரும் எவர்க்கும் விற்க முடியாதவாறு தான் இருக்கும். எனவே அது பவித்திராவின் சீதனச் சொத்தாய் எனக்கு மட்டும் வாறதிலை உடன்பாடு இல்லை”

பவித்திரா ஓடி வந்து என்னைப் பின்னால் அணைத்துக் கொண்டாள்.

அவளின் கண்ணீர் என் கைகளை நனைத்தது.

மறுபக்கத்தில் எந்தச் சத்தமும் இல்லை.

பவித்திரா என்னிடம் இருந்து ரீசீவரை வாங்கி... “அப்பா... அப்பா ஏன் பேசாமல் இருக்கிறியள்... இவர் ஒன்றும் பிழையாய்ச் சொல்லேல்லைத் தானே”.

“அப்பா கண்கலங்கிப் போயிருக்கிறார்... அவர் எதுவும் கதைக்க முடியாமல் இருக்கிறார்” என தாய் கூறினார்.

“நீங்கள் இரண்டு பேரும் இந்தக் கவலையை விடுங்கோ... அந்த வீடும் வளவும் உங்களுக்குத்தான்... யார் அதை வாங்கிறது என்று பார்த்திடுவம்... எங்களைத் தவிர யாரும் வாங்கினால் இவ்வளவு காலமும் நாங்கள் யாழ்ப் பாணத்திலை தொழில் செய்யுறதுக்கே மரியாதை இல்லை”

பவித்திராவின் மூத்த சகோதரனின் குரல் பின்னால் கேட்டது.

அத்துடன் அன்றைய தொலைபேசி உரையாடல் முடிந்தது.

அப்பா அம்மாவுக்கும் விடயத்தைச் சொல்ல அவர்களும் அன்று பின்னேரமே பவித்திரா வீட்டிற்குப் போய்த் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவிப்பதாகச் சொன்னார்கள்.

அன்றைய ஞாயிறு அனைவருக்கும் நல்லதொரு நாளாய் அமைந்தது அனைவருக்கும் மகிழ்ச்சியே.

*

அன்று மாலை பவித்திராவின் வீட்டை போய் வந்த பிறகு அம்மா எழுதிய கடிதம் அடுத்த சனிக்கிழமை காலை எமக்கு வந்திருந்தது.

இவர்கள் போன அன்று முழுவதுமே பவித்திராவின் அப்பா என் புராணம் தானாம் என மகிழ்ந்து எழுதியிருந்தா.

சொத்துப் பத்தோடை பிள்ளையைக் கண்காணாத தேசத்திற்கு அனுப்பிய பொழுது ஊர் உலகம் எல்லாம் பழித்ததாம். இப்போ தன் மருமகனை எல்லோருக்கும் காட்ட வேண்டுமாம் என்று பெருமையாகச் சொன்னாராம். எனது பெயரைச் சொல்லியோ... மருமகன் என்று உறவுமுறையைச் சொல்லி என்னை விழிப்பதில்லையாம்.

“என்ரை பிள்ளை கதைத்தவள்”அல்லது “என்ரை பிள்ளை கதைத்தவர்” என்பதில்தான் தெரியுமாம் அவர் பவித்திராவைப் பற்றிக் கதைக்கிறாரா அல்லது என்னைப் பற்றிக் கதைக்கிறாரா என்று.

அன்று உறுதியாகச் சொன்னாராம், "இத்தனை வருசத்திலை என்ரை பிள்ளை என்னிடம் எதுவும் கேட்டதில்லை. முதன் முதலிலை காணி விடயமாய்க் கதைச்சிருக்கிறார். அதை முடிச்சிட்டுத்தான் என்ன கடை வேலையள் எண்டாலும் செய்வேன்" என்று.

அம்மா மேலும் எழுதியிருந்தார்

"அங்கு போய் வந்த பிறகு அப்பா அடிக்கடி சொல்லிக் கொண்டு இருக்கிறார். சண்முகத்தார் அப்படியே நீயாகப் பிறந்திருக்கிறாய் என்று. எந்த வேலைக்கு எவரைப் பிடிக்க வேணும் என்று அப்பப்பா தெரிஞ்சு வைத்திருப் பாராம். அதைப் போலைதான் நானும் எங்கள் குடும்பத்தில் ஆக வேண்டிய காரியத்திற்குப் பொறுத்த ஆளைப் போய் பிடித்திருக்கின்றேன்" என்று.

அவ்வாறே பவித்திராவின் தாயின் கடிதத்திலும் இருந்தது.

தகப்பனும் சகோதரங்களும் அதிசயப்பட்டார்களாம் எந்த ஒரு சொத்துக்கும் ஆசைப்படாத ஒரு பிறவியாய் நான் வந்து வாய்த்து இருக்கின்றேன் என்று எழுதியிருந்ததை பவித்திரா அன்று முழுக்க சிலாகித்துக் கொண்டு இருந்தாள்.

ஆனால் நான் தான் அவர்கள் ஒவ்வொரு வருடமும் அனுப்பும் புழுக்கொடியலையும் ஒடியல் மாவாவையும் இந்த வருடம் அனுப்பவில்லை என அவளை சீண்டிக்கொண்டு இருந்தேன்.

"இப்பிடி ஒரு சாப்பாட்டு இராமன் எண்டு யாருக்கு தெரியும்... அப்பா அம்மாவைக்கு தான் நல்ல மாப் பிள்ளை... எனக்குத் தான் தெரியும் சண்டியரைப் பற்றி" அவளும் சீண்டினாள்.

"சண்டியனோடை இன்றைக்கு நீ சண்டை பிடிக்கிறதாய் தீர்மானிச்சிட்டியா?"

அவள் மௌனமாக தலை குனிந்தாள்.

என் கைகள் அவளை அரவணைத்தது.

சண்டிக்குதிரை சண்டியனின் பிடியுள் அடங்கிக் கொண்டிருந்தது.

# 20

இந்த ஆஸ்பத்திரிக்கு வந்த இந்த இருபத்தியெட்டு நாளிலும் நோய் என்னில் இருந்து எட்டி நிற்பது போலவே உணர்ந்து கொண்டு வந்தேன் - சிலவேளைகளில் மட்டும் அது கிட்ட வருவது போலத் தோன்றும். ஆனால் அடுத்த நாளே அது எட்டிச் சென்று விடும். ஆனால் நேற்று இரவு தொடக்கம் அது மிகவும் நெருங்கி வந்து விட்டது போல இருக்கின்றது.

நடுச்சாமத்தில் உடம்பு தெப்பமாக வேர்த்து படுக்கைத் துணிகள் கூட நனைந்திருந்தன. காய்ச்சலும் அதிகமாயிருந்தது. அதிகாலையில் வந்த நேர்ஸ் படுக்கைத் துணிகளை மாற்றி விட்டாள்.

இப்போ கொஞ்சம் பறவாயில்லை ஆயினும் கண்ணைத் திறக்க மனமில்லாமல் இருக்குது.

அறையைச் சுத்தம் செய்பவர் திறந்து விட்ட யன்னலினூடு வரும் மெல்லிய காற்று அது காலை எனப்புரிய வைக்கிறது.

கட்டிலில் சூரிய வெளிச்சம் படுகிறது.

ஆனால் எழுந்து காலைத் தேநீரைக் குடிக்க மனம் ஏவுதில்லை.

இப்படியே படுத்திருக்க வேண்டும் போல இருக்கின்றது.

பவித்திரா தான் பாவம்!

இந்த நேரத்துக்குள் வந்து விடுவாள்.

ஆனால் ஹரி நிற்கப் போகும் இந்த இரண்டு மூன்று நாட்களும் அவனுக்கு பிடித்த ஏதாவது இரண்டொரு சாப்பாடு செய்து கொடுக்க அவள் மனம் விரும்பும். அதே வேளை தனியே நான் இங்கு இருக்கின்றேன் என அவள் மனம் படபடக்கும்.

இந்த உலகத்தில் இருந்து நான் போய் விட்டால் அனாதையாய் நிற்கப் போவது பவித்திரா தான்.

பிள்ளைகள் மூவரும் ஏதோ தங்கள் தங்கள் வாழ்க்கையில் காலூன்றி விட்டார்கள்.

இராகுலன் மிக ஆழமாகத் தன் வாழ்வை அமைத்துக் கொண்டு பெரியப்பா போல் எதிலும் பெரிதாக முட்டிக் கொள்ளாமலும் பட்டுக் கொள்ளாமலும் தானுண்டு தன் வேலையுண்டு தன் வாழ்வுண்டு என வாழப் பழகிக் கொண்டு விட்டான்.

பானு சாதிமாறித் திருமணம் செய்தது எனக்கு மட்டுமில்லை சண்முகத்தார் குடும்பத்திற்கே ஒரு களங்கத்தைக் கொடுத்து விட்டுப் போனாலும் தன் காலில் உறுதியாக நிற்கிறாள். நன்றாக வாழ்கிறாள். நெஞ்சில் படுத்திருந்த என் பேரன் என் நெஞ்சு மயிருடன் விளையாடிய சுகம் இப்போதும் நெஞ்சாங்கூட்டினுள் இருந்து என்னைத்

தொந்தரவு செய்கிறது. இன்னுமொருமுறை அவன் வரமாட்டானா என மனம் ஏங்குகின்றது. அப்பப்பாவின் நினைவாக அவனுக்கு சூர்யா எனப் பெயரிட்டதுக்கு பானுக்கு மனம் நன்றி சொல்லிக் கொள்கிறது. நிச்சயம் அவளுக்குள்ளும் என் பரம்பரை இயல்புகள் தானே ஓடிக் கொண்டு இருக்கும்.

ஹரி! பாலனின் கௌரவத்திற்கும்... சாம்பசிவக் குருக்களின் பெருமைக்கும் தலைக் குனிவு வரக் கூடாது என்பதற்காக அவனின் காலையையும் கையையும் கட்டிய போது.... நிதானமாய் அதனை ஏற்றுக் கொண்டு இன்றுவரை தன் கோபத்தைச் சரி... ஏமாற்றத்தைச் சரி என மீது காட்டிக் கொள்ளாமல் எதிலும் ஒட்டுறவு இல்லாது தெளிந்த நீரோடை போல தன் வாழ்வைக் கொண்டு போய்க் கொண்டிருக்கின்றான்.

அவனைப் பற்றியும் எனக்குக் கவலையில்லை.

ஆனால் பவித்திராவைத் தான்.... எப்படி என்னிடம் வந்தாளோ... அப்படியே இன்றுவரை வெளியுலகம் தெரியாது வைத்திருந்து விட்டேன். பொருளாதாரத் தேடல் என்பது தேவையில்லாததால் அவளை இந்த நாட்டு மொழியையோ.. வேறு கல்விக் கற்கவோ அனுப்பாது எனக்கு அன்பான மனைவியாகவும் பிள்ளைகளுக்கு பாச முள்ள தாயாகாவும் வைத்துக் கொண்டு இருந்து விட்டேன்.

யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் உயர்கல்வி பயின்ற அவளை இங்கு தொடந்து படிக்க வைத்திருக்க லாம்.

அதனைச் செய்யாதது என் தவறு என்று இப்போ

தான் புரிகிறது.

என்றும் அவளுக்கு ஆலமரம் போலிருப்பேன் என நினைத்திருந்தேனே தவிர ஆலமரம் பாறி விட்டால் அவள் என்ன செய்வாள் என்று யோசிக்கவேயில்லை.

இந்த நகரத்தினுள் சுற்றிச் சுற்றி வரும் பஸ்.... செவ்வாய்க் கிழமைகளில் இலங்கை மீன்வகைகளும் வியாழக்கிழமைகளில் மரக்கறிகளும் வரும் தமிழ்க்கடை.... இந்த இரண்டும் தான் அவளுக்குத் தெரிந்த வெளியுலகமாக இருந்தது.

யாரோ வரும் காலடி கேட்கிறது.

இது பவித்திரா இல்லை.

ஆனாலும் அறிமுகமான காலடி தான்.

ஆம்! பாலனின் காலடி தான்!!

பாலனுடன் அபிராமியும் ஹரிணியும் வந்திருந் தார்கள்.

மிகவும் கஸ்டப்பட்டு கண்களைத் திறந்தேன்.

பாலன் நேர்ஸ்மாரின் அறையை நோக்கிச் சென்றான்.

“அண்ணாவுக்குப் பிடித்த இராசவள்ளிக் கிழங்கு செய்து வந்திருக்கிறன். இந்தச் சின்னச் சாப்பாட்டுப் பெட்டி யில் இருக்கு. பெரியதில் பவித்திரா அண்ணிக்கும் ஹரிக்கும் எடுத்து வந்திருக்கிறன். ஹரிக்கும் இது விருப்பம் என்று தெரியும்”

என் கண்கள் கலங்குகின.

இன்னும் எவரும் ஹரியை வெறுக்கவும் இல்லை... ஒதுக்கவும் இல்லை என்பது மனத்துக்குள் மகிழ்ச்சியாக இருக்கின்றது.

"அங்கிள் அன்ரி வரும் பொழுது இது ஆறிவிடும். நான் தரட்டா?" என்றவாறு ஹரிணி இராசவள்ளிக் கிழங்கை எடுத்துக் கொண்டு என்னருகில் வந்தாள்.

கண்டோம்... ஹாய் சொன்னோம்... பழகினோம்... பிரிந்தோம் என்ற இந்த நாட்டு வாழ்க்கையில் இத்தனை வருடங்கள்... கோயில் தீர்த்தக் கேணியில் தொடங்கிய உறவு இன்றுவரை இம்மியளவும் பிசகாது....

கழுத்தடியில் துணியைப் போட்டு விட்டு இராசவள்ளிக் கிழங்குக் கிண்ணத்தை என்னிடம் தராது தானே ஊட்டத் தொடங்கினாள்.

காலையிருந்து எனக்குள் இருக்கும் களைக்கு இதமாக இருந்தது.

ஹரிணி ஊட்டி விட்டுக் கொண்டு இருக்கும் பொழுதே பாலன் திரும்பி வந்தான்.

அவன் முகத்தின் வாட்டம், காலையிலிருந்து எனக்குள் ஏற்பட்டிருக்கும் இருக்கும் களையைப் பிரதி பலித்தது.

எதுவுமே பேசாமல் முழுசிக் கொண்டு நின்றான்.

கட்டாயம் நேர்ஸ்மாருடன் ஏதாவது கதைத் திருப்பான்.

என்பக்கம் திரும்பாமல் யன்னல் கரையோரம் நின்றபடி வெளியில் பார்த்துக் கொண்டு சம்பந்தம் சம்பந்தமில்லாது பேசிக் கொண்டு இருந்தான்.

ஹரிணி எனக்கு ஊட்டியபடியே நின்றிருந்தாள்.

"டே.. பாலன்... கிட்ட வாறியா"

சாவி கொடுத்து முடிக்கி விட்ட பொம்மை போல

வந்து நின்றான்.

"உனக்கு ஒன்று சொல்லட்டா"

"ஆம்" எனத் தலையாட்டினான்.

"இனிமேல் நீ இந்த வார்ட்டுக்கை வரேக்கை என் பாலனாக மட்டும் வா!"

நான் சொல்லி முடிக்கவில்லை அவன் தேம்பித் தேம்பி அழத் தொடங்கி விட்டான்.

கூடவே அண்ணியும் ஹரிணியும்.

"இவ்வளவு பெரிய டாக்டராய் இருந்தும் இவ்வளவு முட்டாளாய் இருக்கிறியே... இது தேதியை எக்ஸ்ரென்சன் பண்ணிப் போடுற பிளைற் ரிக்கற் இல்லை. அ(எ)றைவல் டேற்தான் எங்களுக்குத் தெரியும். டிப்பாச்சர் எங்களிட்டை இல்லை. நீ ஒரு பெரிய டாக்டர். அதுக்கு மேலாக நீ பெரிய குருக்கள்... சாஸ்த்திர ஞானக்கடல் சாம்பசிவக் குருக் களின்ரை மகன்... உனக்கே நான் அறிவுரை சொல்லுறதா?"

அவன் என் கைகளை இறுக்கிப் பிடித்துக் கொண்டான்.

"கடவுள் எனக்குத் தந்த கடமைகளை ஓரளவு செய்து முடித்து விட்டேன் - பல வெற்றிகளுடனும் சில தோல்வி களுடனும். எல்லாத்துக்கும் நீயும் எனக்கு உதவியாய் நின்றாய்... சாட்சியாயும் நின்றாய்.... இப்ப உனக்கு ஹரிணி யின்ரை பெரிய பொறுப்பு இருக்குது... நான் பவித்திராவுக்கு வெளியுலமே தெரியாமல் வைத்து விட்டது போலவே அண்ணியையும் நீ வீட்டுக்கையே வைத்திருந்து விட்டாய். இனியாவது அவவுக்கு வெளியுலகத்தை காட்டிக் கொடு. நாங்கள் போயிட்டால் அதுகள் பாவம் தவித்துப் போயிடுங்கள்"

தொடர்ந்து பேச முடியாது மூச்சு முட்டுவது போல இருக்கிறது.

சாப்பாடு போதும் என ஹரிணிக்குச் சைகையால் காட்டுகின்றேன்.

பிரக்கடித்து விடும் என்ற பயம் எனக்கு!

மாடிப்படிகளில் பலரின் காலடிச் சத்தம் கேட்கிறது.

பவித்திரா, ஹரி, இராகுலன் மனைவி மக்களுடன்!

பவித்திரா வந்து ஹரிணியை அணைத்தபடியே அவள் கையில் இருந்த கிண்ணத்தைப் பெற்றுக் கொள்கின்றாள்.

ஹரியும் ஹரிணியும் இத்தனை வருடங்களுக்குப் பின்பு முதன் முதல் நேரடியாக சந்திக்கிறார்கள் என நினைக்கின்றேன்.

எங்கள் பிள்ளைகளைப் பற்றி நினைக்கவே மிகவும் பெருமையாக இருக்கின்றது.

என்ன முதிர்ச்சி அவர்களுக்கு!

எவ்வளவு இயல்பாக பேசிக் கொண்டு இருக்கின் றார்கள்.

எனக்குள் இருந்த வலிகள் எல்லாம் அற்றுப் போய் விட்டது போல இருக்கின்றது.

பாலன் இராகுலனுடன் பேசிக்கொண்டு நிற்கின்றான்.

அவ்வாறே பவித்திரா அபிராமி அண்ணியுடன்.

பேரப்பிள்ளைகள் இருவரும் தங்கள் ஐப்பாட்டை நோண்டிக் கொண்டு... இடைக்கிடை என் முகத்துடன் தங்கள் முகத்தை ஒட்டியபடி செல்பி எடுத்துக் கொண்டு...

பானு மட்டும் தன் கணவனுடனும் என் பேரனுடன்

இங்கு நின்றிருந்தால் எல்லோரையும் ஒன்று சேர்ந்து பார்த்தது போல இருந்திருக்கும்.

என்ன செய்வது? அவரவர் விதியை அவரவர்களே தீர்மானித்துக் கொள்கின்றார்கள்.

"ஹரி நீ எத்தினை நாள் லீவில் வந்தனி... எப்போ திரும்பிப் போகின்றாய்?" பாலன் ஹரியிடம் கேட்டான்.

"அங்கிள், நான் சோட் லீவிலைதான் வந்தனான். நாளை மறுநாள் ஈவினிங் இங்கிருந்து இலண்டன் றான்சிற்.. பிறகு டிறெக்ராய் யு.ஸ்.ஏ. தான்"

"இவ்வளவு தூரம் வந்தனி... இன்னும் ஒரு கிழமை நின்று போனால் அப்பா அம்மாவுக்கும் சந்தோசமாய் இருக்கும் தானே"

பாலன் எங்கு வருகிறான் என எனக்குப் புரிந்து விட்டது.

"பாலன்...பிளீஸ்... " என பாலனை நான் தடுக்க முதல் எனக்கு பிரக்கடிக்கத் தொடங்கி விட்டது.

"ஏன் அங்கிள்" என ஹரி கேட்க, "ஒன்றுமில்லை" என்று சொல்ல வெளிக்கிட்டவன் உடைந்து விட்டான்.

அண்ணியும் பவித்திராவும் அவனைப் போய் அணைத்துக் கொண்டார்கள்.

அப்படியே கீழே இறங்கிப் போய் விட்டான்.

மற்ற அனைவரும் பேயறைந்தது போல என் கட்டிலைச் சுற்றி வந்து நின்று கொண்டார்கள்.

## 21

எந்தப் பிரபல தொடர்களினதும் இறுதி அத்தியாயங்களும் என்றும் நினைவில் இருப்பது போலவே இந்த வேளையிலும் எனக்கு நினைவில் இருப்பது எங்கள் குதிரைவாகனமும் எங்கள் பெரிய வீடும் தான்.

மற்றது அப்பாவையும் அம்மாவையும் நிலைகுலைவித்த நாட்டின் இறுதிப் போரும் பபிதாவைப் பற்றிய எதிர்பார்ப்பும் தான்.

மச்சாளின் நிச்சயதார்த்தத்துக்கு நாள் கிட்டிக் கொண்டு வந்திருந்தது.

எல்லோருக்கும் மாமா-மாமி எப்பிடி காசைப் புரட்டப் போகிறார்கள் என்ற எதிர்பார்ப்பு இருந்து கொண்டேயிருந்தது.

எங்கு மாமா-மாமி காசு புரட்ட இருக்கிறார்களோ அந்த இடத்தில் தான் போய் இறங்குவேன் எனத் தன் அப்பா சொல்லிக் கொண்டே இருக்கிறார் என பவித்திரா சொல்லிக் கொண்டிருந்தாள்.

தினம் தினம் என் அப்பாவும் பவித்திராவின்

அப்பாவும் அவர்கள் கடையில் அல்லது கோயிலடியில் அல்லது எங்கள் வீட்டில் சந்தித்துக் கொண்டு இருந்தார் களாம்.

அப்பொழுதுதான் அந்தச் செய்தி இடியாக வந்திறங்கியது.

எங்கள் வீட்டுக்கு பின்னால் இருந்த காத்திகேசுதான் எங்கள் வீட்டையும் வளவையும் வாங்கப் போகிறான் எண்டு.

எல்லோரையும் அந்தச் செய்தி நிலைகுலைய வைத்தது.

ஏற்கனவே சின்ன மாமா தன் வியாபாரத்திற்கு அந்தக் காணியை அவனிடம் ஈடு வைத்திருந்தாராம்.

அதற்காக அவனுக்குத்தான் விற்க வேண்டும் என்று எந்த நியதியும் இல்லை.

ஆனால் தன் பிள்ளைகள் சவுதிக்கு போய் உழைத்த தினால் புதுப் பணக்காரனாகி விட்ட அவன் தான் அடிமை போல வேலை செய்த எங்கள் பெரிய வீட்டையும் காணியை யும் வாங்க முன் வந்ததிற்கும்.... அதனை அவனுக்கு விற்பதற்கு முன்வந்த மாமாக்கும் ஏதோ ஒரு வகையில் எங்கள் குடும்பத்தின் மீது எங்கேயோ ஒரு கோபம் இருந்திருக்க வேண்டும்.

சின்னமாமா-சின்னமாமிக்கு எங்கள் குடும்பத்தின் கௌரவத்தில் பங்கு இருக்கிறது என ஏன் நினைக்கத் தோன்றவில்லை என்று படுக்கையில் இருக்கும் இந்த வினாடிவரை எனக்கு விளங்கவேயில்லை.

இதனை அறிந்தவுடன் பவித்திராவின் அப்பா நேரடியாக சின்னமாமா-சின்னமாமி வீட்டுக்குப் போய்

காத்திகேசன் தரவுள்ள பணத்தை விட அதிகம் தருவதாகச் சொல்லிப் பார்த்தாராம். ஆனால் சின்னமாமாவோ... சின்னமாமியோ... ஒத்துக்கொள்ளவில்லையாம்.

"டென்மார்க் மாப்பிள்ளையா அனுப்பி வைத்தவர்?" என்று ஏளனமாகப் பேசினார்களாம்.

"இவ்வளவு அக்கறையுள்ளவை உங்கள் வீட்டில் பெண் எடுக்க முதல் எங்கடை வீட்டையும் மச்சாள் முறை யுள்ள ஒருத்தி இருக்கிறாள் என்றும் யோசித்துப் பார்த்திருக்க வேணும்".

பேச்சை வளர்ப்பதில் எந்தப் பிரயோசனமும் இல்லை என்பதால் பவித்திராவின் அப்பா நேரே எங்கள் வீட்டுக் குப் போய் அப்பாவையும் கூட்டிக் கொண்டு காத்திகேசு வீட்டை போயிருக்கிறார்.

இவர்களைக் கண்டதும் குலைக்கத் தொடங்கிய இரண்டு பெரிய அல்சேசன் நாய்களைச் சங்கிலியால் கட்டிய படி கதிரையில் கிடந்த துவாயை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு "வாங்கோ" என வீட்டுக்குள் கூப்பிட்டானாம்.

"கார்த்திகேசு இப்ப இருந்து கதைக்கிறதுக்கு வரேல்லை.... ஏதோ மச்சானும் தங்கச்சியும் என்னிலை உள்ள கோபத்திலை எங்கடை பரம்பரைக் காணியை உனக்கு விற்கப் போகினம் எண்டு கேள்விப்பட்டன்"

"ஓம்! ஐயா"

"அது எங்கடை பரம்பரைக் காணி... ஒரு பத்துப் பரம்பரையாய் வைச்சிருக்கிற சொத்து. நீ ஈட்டுக்குக் காசு குடுத்திருந்தால் அதனை முழுதாய் இந்தக் கணமே அழிச்சு... வேணுமெண்டால் உனக்கு கொஞ்சம் கூட காசு தந்து

முடிச்சிடலாம். என்ன நான் சொல்லுறது....”

“ஐயா மறுக்கிறன் என்று நினைக்காதையுங்கோ... நாங்கள் உங்கள் குடும்பத்துக்கு அடிமைக்குடியாய்தான் இருந்தனாங்கள்.... ஆனால் என்ரை ஐயா கடுக்கன் போட்டிட்டார் எண்டு சின்னப் பொடியனாய் இருந்த என்ரை கண்ணுக்கு முன்னாலை உங்கடை ஐயா அவற்ரை காதை அறுத்ததும்... அவர் அலறித் துடித்ததும்... இப்பவும் என்ரை கண்ணுக்கு முன்னாலை நிற்குது. கோயில் வீதியில் நடுங்கி கொண்டு நின்டனான். அப்ப நான் சின்னப் பொடியன். அந்தக் காது அறுத்த நாளில் இருந்து உங்கடை குடும்பம் ஏதோ ஒரு நாள் தலைகுனிய வேணும்... நான் பார்க்க வேணும் எண்டு நினைச்சிருந்தன். இந்தக் கோயில் வீதியை எப்ப கடக்கேக்கையும் முருகனிட்டைக் கேட்டுக் கொண்டே இருந்தனான். இப்ப முருகன் உங்களுக்கு மட்டுமில்லை... எங்களுக்கும் இருக்கிறன் என்று காட்டி விட்டான். ஆனால் உங்கடை காணியை நான் வாங்கி அதாலை அந்தக் குனிவு உங்கடை குடும்பத்துக்கு வரும் எண்டு நினைச்சிருக்கேல்லை. அது தானாக வந்த போது நான் ஏற்கிறது நியாயம் தானே”

“காத்திகேசு....” ஏனக் குரலெடுத்து அப்பா கதைக்கத் தொடங்க பவித்திராவின் அப்பா கையை அசைத்து நிற்பாட்டி விட்டாராம்.

இவர்கள் திரும்பி நடக்க, காத்திகேசு கட்டியிருந்த நாய்களின் சங்கிலியைக் கழற்றி விட்டானாம்.

அதுகள் குலைத்துக் கொண்டு பின்னால் வருவதற்கு முதல் அவர்கள் வீட்டு கேற்றைத் தாண்டி றோட்டுக்கு வந்து விட்டார்களாம்.

அன்று பின்னேரம் பவித்திராவின் சகோதரங்கள் எல்லாம் கொதித்தார்களாம்.

காத்திகேசுவின் வீட்டையும் கொளுத்தி அவனுக்கும் ஏதாவது செய்வது என்று.

நாட்டு நிலைமையில் அது புத்திசாலித்தனம் இல்லையென்றும்... இயக்கம் வந்து இறங்கி இன்னும் பிரச்சனை வலுக்கும் என்றும்... அவ்வாறு வலுத்தால் அப்போதும் அது கார்திகேசுவின் குடும்பத்திற்குச் சார்பாகத்தான் இருக்கும்.... அத்தோடு பவித்திராவின் அப்பா அண்ணன்மாரின் வியாபாரத்துக்கும் கூடாது என அப்பாவும் சாம்பசிவக் குருக்களும் விடவில்லையாம்.

"ஏன் இயக்கத்தில் உள்ள பபிதாவின் உதவியை நாடக் கூடாது" என்று ஒரு யோசனையும் முன்வைக்கப்பட்டதாம்.

இந்தச் சச்சரவு சம்பாசணைகள் எல்லாவற்றாலும் மனமுடைந்து எதுவும் பேசாமல் இருந்த அம்மா அப்போது தான் முதல் தடவையாகக் கதைத்தாவாம்.

"அவளும் சரி... அவளோடை சேர்ந்த பிள்ளைகளும் சரி காடு கரம்பை எண்டு நாட்டுக்காகப் போராடிக் கொண்டு இருக்குதுகள்.... அதுகளை சொந்தப் பிரச்சனைகளுக்காகக் கொண்டு வாறது பிழை... அவளை இதுக்கை இழுக்காதையுங்கோ... தோல்வியைத் தோல்வி எண்டு ஒத்துக் கொள்ளுங்கோ..."

யாரும் அம்மா சொன்னதுக்கு எதிர்த்துக் கதைக்கவில்லையாம்.

பின்பு என்ன?

அப்பா முழு நடைப்பிணமாய் போனாராம்.

பவித்திராவின் குடும்பம் முழுவதும் தங்களிடம் எவ்வளவோ செல்வம் இருந்தும் எனக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியவில்லை என்று வேதனைப்பட்டுக் கொண்டு இருந்தார்களாம்.

கொழும்பில் பெரிய ஹோட்டலில் மச்சாளின் திருமணமும்... காத்திகேசு எங்கள் பெரிய வீட்டுக்குள் போனதும் ஒரே நாளில் நடந்ததாம்.

அன்று பின்னேரமே பெரிய வீட்டின் முன்னால் சடைத்திருந்த அந்தப் பெரிய மாமரம் வெட்டி வீழ்த்தப் பட்டதாம்...

அடுத்தடுத்த நாள் பின்னால் இருந்த சுருட்டு மாலும் இடிக்கப்பட்டதாம்...

அப்பா அன்று முதல் மூன்று கிலோ மீற்றர் சுற்றி வேறு ஒரு பாதையால் தான் கோயிலுக்குச் செல்லத் தொடங்கினாராம்.

# 22

எந்த நிலை வர முதல் என் உயிர் பிரியவேண்டும் என்று நினைத்திருந்தேனோ அந்த நிலை இன்று காலை வந்து விட்டது.

சுற்றிவர எல்லோரும் நின்று பேசிக் கொண்டு நிற்கின்றார்கள்.

விசும்புகின்றார்கள்....

இது பவித்திராவின் கை...

இது ராகுலனின் கை...

இது பானுவின் கை...

இது ஹரியின் கை...

என் நெற்றியைத் தடவும் கைகளைக் கொண்டு அடையாளம் கண்டு கொள்கின்றேன்.

மூடியிருக்கும் கண்களை வலுக்கட்டாயமாகத் திறந்து லைற்றை அடித்துப் பார்க்கும் பொழுது ஒரு துளி கண்ணீர் என் கன்னத்தில் விழுகிறது.

இது பாலன் தான்.

"மூளை இயங்கிக் கொண்டே இருக்கிறது".

சூர்யாவை என் நெஞ்சில் கிடத்துகிறார்கள் போலும்.

என் பேத்திமார் இருவரும் என் கன்னங்களில் முத்தமிடுகிறார்கள் போலும்.

அப்பாவும் இதனைப் போலவே இரண்டு நாட்களாக இருந்தாராம்.

பெரியவீடு காத்திகேசுவிடம் கைமாறிய பொழுது நடைப்பிணமாகிப் போன அவரினதும் அம்மாவினதும் ஒரேயொரு எதிர்பார்பார்ப்பு எப்போ போர் முடியும் பபிதா எப்போது தங்களிடம் வருவாள் என்பது தானாம்.

இறுதிப்போர் மூண்டு வெடித்துக் கொண்டிருந்த சமயம் அப்பாவும் அம்மாவும் தூங்குவதேயில்லையாம்.

றேடியோவில் காதையும்.... ரி.வி.யிலும் அனைத்து தினசரிப் பத்திரிகைகளிலும் கண்களையும் பதித்து வைத்துக் கொண்டு இருந்தார்களாம்.

அம்மா பபிதாவை நினைத்துக் கடுமையான விரதங்கள் பிடித்துக் கொண்டு இருந்தாவாம்.

நானும் டென்மார்க்கில் உள்ள பல இணையத்தளங் களில் இறுதிக்கட்டப் போரைப் பார்த்தபடியே இருந்தேன்.

போராடுபவர்கள்... இறந்து கிடப்போர்கள்.... அடைக்கலம் புகுவோர்கள்... அனைவருக்கும் இடையே பபிதாவைத் தேடியபடி....

ஆயுதங்கள் மௌனமாக்கப்பட்ட நாள்!

வீட்டிற்கு ஒரு தொலைபேசி வந்திருக்கு!

"அம்மா நான் பபிதா பேசுறன்"

மறுமுனையில் பபிதாதான்.

“எங்கை இருக்கிறாய்...”

“நாங்கள் சரணடையப் போறம்.... கெதியிலை உங்களிட்டை வந்திடுவம்”

“என்ரை முருகன் எங்கடை பிள்ளையைக் கை விடேல்லை”

“அப்பா எங்கை?”

“வயலுக்குப் போனவர்... நேற்று சூடு அடிச்சது.”

“அம்மா எனக்குப் பிடிச்ச குத்தரிச்சோறும் மீன் குழம்பும் இறால் சொதியும் உங்களின்டை கையாலை சாப்பிட வேணும் அம்மா”

“நீ கெதியிலை வா... அப்பாவும் நானும் உனக்குப் பிடிச்ச எங்கடை வயல் கைக்குத்தரிசி ஒன்று கூட எடுக்காமல் வைச்சிருக்கிறம்”

“அம்மா.... ஆமிக்காரன்கள் வாறான்கள்... நான் வைக்கிறன்... ஒரு கிழமைக்கை வந்திடுவம்”

மீண்டும் அப்பாவும் அம்மாவும் கொடிக்கம்பத்தின் உச்சிக்குப் போன நாள் அது.

ஆனால் ஒரு கிழமை... ஒரு மாதம்... ஒரு வருடம்.... போன போதும் பபிதா வீட்டை வரவில்லை.

பபிதாவைப் பாதுகாப்பு வலையத்துள் கண்டதாகப் பலர் சொன்னார்களாம்.

அப்பாவும் அம்மாவும் அன்றில் இருந்து வீட்டில் சோறு சாப்பிடவே இல்லையாம்.

சாப்பிட்டது எல்லாம் தானிய வகைகளும் மரக்கறி பழங்கள்தானாம்.

அப்படியொரு விரதம்.... ஆண்டவனுடன்

பபிதாவுக்கான வேண்டுதலை முன் வைத்த விரதம்.....

வாழ்வில் வைத்த நம்பிக்கைகள் அனைத்தும் தளர்ந்த பொழுது எல்லாப் பிடிப்பும் அவர்களுக்கு போய் விட்டது.

நானும் தொலைபேசியில் எத்தனையோ தடவைகள் சொல்லிப் பார்த்தேன்.

"அவளோடை சேர்ந்து தான் இனி நாங்கள் சோறு சாப்பிடுவம்" அம்மா அழுது கொண்டே சொன்னார்.

பவித்திராவின் பெற்றோர் எவ்வளவோ சொல்லியும் அவர்கள் கேட்கவில்லையாம்.

போர் முடிந்ததால் நாங்கள் வந்து பார்த்து வருகிறோம் எனச் சொல்லிப் பார்த்தோம்.

"போர் பேரளவில்தான் முடிந்திருக்கு... நீ கடைசி வரை இங்கு வர நினைத்தும் பார்க்க வேண்டாம்" என்று தடை போட்டார்கள்.

இரண்டு வருடம் போயிருக்கும்.

ஒரு நாள் அதிகாலையில் அப்பாவுக்கு மார்பில் சின்ன அடைப்பு என தகவல் வந்தது.

நினைவு இருக்கிறது... கண்ணைத் திறக்கிறார் இல்லை.. முழுக் கண்காணிப்பில் இருக்கிறார்... என்று தகவல்கள் வந்து கொண்டிருந்தன.

இப்போது நான் இருப்பது போல இருந்திருப்பார் போலும்.

மூன்றாம் நாள் "இனி எனக்கு ஓர் அப்பா இல்லை" என்ற செய்தி வந்தது.

என்னை விட்டு என் சக்தி அனைத்தும் போய் விட்டது போல இருந்தது.

அப்பாவின் இறுதிக்கிரியைகள் அனைத்தையும் பவித்திரா வீட்டார் நின்று நன்கு நடத்தினார்களாம்.

காத்திகேசுவும் வந்து மௌனமாக நின்று விட்டுப் போனானாம்.

சின்ன மாமா சின்ன மாமிக்கு யாரும் முகம் கொடுக்க வில்லையாம்.

அப்பாவின் எட்டுச் செலவு வீட்டுக்குக் கூடச் சோறு படைக்கவில்லையாம். படைத்ததெல்லாம் தானிய வகைச் சாப்பாடுகள் தானாம்.

ஊர் எல்லாம் வியந்தார்களாம்.

ஒரு வளர்ப்புப் பிள்ளைக்காக இப்படியொரு பெற்றாரா என்று.

அம்மாவைப் பவித்திரா வீட்டில் வந்திருக்கும்படி எல்லோரும் கேட்டார்களாம்.

“பிள்ளை வந்தால் அம்மாவைக் காணேல்லை என்று பரிதவித்து விடுவாள்” என்று அவா மறுத்து விட்டாராம்.

அப்பாவின் எட்டுச் செலவு... அந்தியேட்டி... ஆட்டத்திவசம்... எல்லாத்தையும் செய்து முடித்தவா... ஆட்டத்திவசம் முடிந்த அடுத்த நாள் நித்திரைப்பாயில் இருந்து எழவே இல்லையாம்.

டென்மார்க்கில் எங்கள் வீடு நிறைந்திருந்தது.

பாலன் என்னுடனேயே அந்த மூன்று நாளும் நின்றிருந்தான்.

இப்போதும் என் பக்கத்தில் நிற்கின்றான்.

என்னதான் சொன்னாலும் பவித்திரா தைரிய மானவள்.

எல்லாத்தையும் தாங்கிக் கொள்வாள்.

ஆனால் என் பாலன்.....

"அழாதே..." எனச் சொல்ல வேணும் போல் இருக்கு!

என்னால் முடியவில்லை!

கண்ணை மூடிக்கொண்டு இருப்பது சுகமாய்த் தான் இருக்கிறது.

மூச்சை மெதுமெதுவாக எடுத்து விடத் தியானத்துள் மூழ்குவது போல இருக்கின்றது.

எழுந்து வானத்தினுள் போய் நின்று இந்த உலகத்தைப் பார்க்க இருக்கும் ஒரு பரவசம்.

பவித்தராவின் கைகள் விபூதியை என் நெற்றியில் இடுகிறது.

எங்கள் குதிரைவாகனத் திருவிழா விபூதி வந்திருந்ததாம்.

விபூதியுள் கலந்திருக்கும் பன்னீரின் வாசம் என்னைப் பெரிய வீட்டுக்குள் கூட்டிப் போகிறது.

எங்கள் பெரிய வீடு கலகலப்பாய் இருக்கிறது.

முற்றத்து மாமரத்தில் பபிதா ஊஞ்சல் கட்டி ஆடுகிறாள்.

சுருட்டு மாலில் எல்லோரும் இருக்கிறார்கள். துரிதமாக வேலை நடக்கிறது.

ஜாமினி அனைவருக்கும் தேநீர் பரிமாறிக் கொண்டு இருக்கிறாள்.

சுருட்டு மாலுக்குள் வைத்திருந்த சுருள்வாளை எடுத்து வந்து தேர் முட்டியில் நின்று சுழற்றுகிறேன்.....

எல்லோரும் கைதட்டி ஆர்ப்பரிக்கின்றார்கள்....

வானம் முழுக்க வானவேடிக்கைகள்....

குதிரை வாகனத்தில் முருகன் வள்ளி தெய்வானை யுடன்....

சூரபத்மனின் அத்தனை தலைகளும் ஒவ்வொன்றாய் வீழ்கின்றன.

சனங்களின் நடுவே குட்டிச் சூர்யா... பட்டு வேட்டி உடுத்து... சின்னதாக ஒரு காவடியுடன்... மெதுமெதுவாக கால்களை எடுத்து வைத்தபடி.... நெஞ்சில் எனது புலிப்பல் போட்ட சங்கிலியுடன்... அவனுக்கு இருபுறமும் இரு பேத்திமாரும் பால் செம்பை தலையில் வைத்தபடி...

எனக்காக அவனைக் கொண்டு காவடி தூக்கு விக்கின்றார்களா?

எனக்காக அந்தச் சின்னன்கள் பால்குடம் தூக்கின்றார்களா?

சப்பாத்தே இல்லாமல் றோட்டில் இறங்காத இந்தப் பச்சைப் பிள்ளைகளுக்கு கல்லுக் குத்தப் போகின்றது என என் மனம் துடிக்கின்றது.

இது எனக்கான நேர்த்தி போலும்

இவர்கள் மூவருக்கும் பின்னால் பவித்திராவும்... பானுவும் கற்பூரச்சட்டி ஏந்தியபடி.... பானுக்குப் பக்கத்தில் நிற்பது அவள் கணவன் போலும்.... முகம் தெளிவாகத் தெரியவில்லை.

காத்திகேசு பட்டுவேட்டி சால்வை மார்பில் தொங்கும் தங்கச் சங்கிலியுடன் உள்ளே வந்து கொண்டிருக் கிறான். பின்னால் பறுவதம் மிகவும் அழகான காஞ்சிபுரச் சேலையுடன் பெரிய தட்டத்தில் அர்ச்சனைச் சாமான்களை

ஏந்தியபடி. அவனுடைய புதிய மோட்டார் சைக்கிள் வில்வ மரத்தின் கீழ் நிறுத்தி வைக்கப்படுகிறது. இளைஞர்களும் சிறுவர்களும் அதனைச் சுற்றி நின்று பார்த்தபடி.

"தம்பி சௌவுக்கியமா" என பணிவுடன் காத்திகேசு கேட்பது போல இருக்கிறது.

"ஆம்" எனத் தலையாட்டியபடியே அவனைக் கடந்து சென்றாலும் அப்பாவும் மாமாவும் அவன் வீட்டுக்குப் போய் காணி விடயமாக கதைத்து முடித்து திரும்பிய பொழுது நாயை அவிழ்த்து விட்டது மனம் நிறைந்த கோபம் எனக்கு. அப்பப்பாவின் கோபத்தை அப்பாவில் காட்டியிருக்க வேண்டாம்.

காவடியுடன் நின்றிருந்த சூர்யா குதிரை வாகனத்துக்கு கிட்டச் சென்று அதன் முன்னங்கால்களை மகிழ்ச்சி யுடன் ஒற்றைக் கையால் இழுத்து ஆட்டுகின்றான்.

"தொப்"பென்று அது பலத்த சத்தத்துடன் உடைந்து விழுந்து விடுகிறது.

எல்லோரும் கலவரப்படுகின்றார்கள்.

சூர்யா பயத்தால் வீரிட்டுக் கொண்டு தன் சின்னக் காவடியை நிலத்தில் போட்டுவிட்டு பானுவிடம் ஓடிச் செல்கின்றான்.

ஒரு நிமிடம் நிதானித்துக் கொண்டு குதிரை வாகனத்தைப் பார்க்கின்றேன்.

எங்கள் பரம்பரையின் சின்னம் இப்போது நொண்டிக் குதிரையாக...

அது எனக்குப் பல செய்திகளைச் சொல்வது போலத் தோன்றுகின்றது.

பானுவிடம் திரும்பி வருகின்றேன்.

சூர்யாவை அவளும் கணவனும் தூக்கி வைத்து ஆறுதல்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

மூவரையும் பார்த்தபடி "பானு" என விழிக்கின்றேன்.

எனது குரலில் உள்ள உறுதியைக் கண்டு கொண்டே "என்னப்பா" என்கின்றாள்.

"உனக்கு இனியொரு குதிரைவாகனத் திருவிழா வேண்டாம்"

"ஏனப்பா?"

"இந்தக் குதிரைவாகனம் எங்கடை பரம்பரையின் சின்னம் என்று நானும் வாழ்நாள் முழுக்க பெருமைப்பட்டுக் கொண்டு இருந்தாலும்... ஒரு அப்பாவியின்ரை காதை அப்பப்பா அறுத்த கதையிருக்கு. ஒரு வறிய முஸ்லீம் வியாபாரியை அப்பா ஏசி அடிக்கப்போன கதையுமிருக்கு. ஹரியின்டையும் ஹரிணியின்டையும் காதலை நான் காலில் போட்டு நசித்த வேதனைகளுமிருக்கு... உன்னைக் கூட இன்னும் முற்றாக எல்லோரும் ஏற்காத நிஜமிருக்கு. அது படியால்தான் சொல்லுறன் கட்டுடைச்சுக் கொண்டு புதுவாழ்க்கைக்குள் போன நீ மீண்டும் இந்த வட்டத்துக் குள்ளை வராதே. சூர்யாக்கு இது எதுவுமே வேண்டாம். அவனிலை புதுக்காற்றுப்பட நீ அவனுக்கு அனுமதி கொடு.

கம்பீரமாய் நின்ற குதிரை இன்றைக்கு நொண்டிக் குதிரையாகி விட்டது எங்கடை சண்முகத்தாரின் குடும்பங்கள் போல.

குடும்பத்திற்கு என்றிருந்த காணியும் பெரியவீடும் போன பின்பு இந்தக் குதிரை வாகனஅடையாளத்தை

வைத்து என்ன செய்யப் போகின்றோம்?

இந்தப் பெருமைகள் எங்களுக்கு என்னத்தை தந்து விடப் போகிறது??"

பானுவும் நிஜயத்தை உணர்ந்தவளாக "ஆம்" எனத் தலையாட்டுகின்றாள்.

என் நொண்டிக்குதிரை என்னைப் பரிதாபமாக பார்க்கின்றது.

நான் தலைகுனிந்தபடியே அதனை விலத்திச் செல்கின்றேன்.

*

முகவுரை எழுதப்பட்டது: 1958


முடிவுரை எழுதப்பட்டது: 2017

டென்மார்க்கை வசிப்பிடமாகக் கொண்டவரும்.... பவித்திராவின் அன்புக் கணவரும்..... இராகுலன், பானு, சூர்யா ஆகியோரின் அன்புத் தந்தையும்....

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வரும் ஞாயிறு மதியம் 12.00 மணிக்கு ....

(முற்றும்)






*சமூக மாற்றத்தினை மிருதுவாக வெளிப்படுத்தும் சமூகவரலாற்று ஆவணப் பதிவு இது.*

*ஜீவகுமாரன் குதிரை வாகனத்தின் மூலமாக புலம்பெயர் வாழ்வினைப் பதிவாக்குகின்றார் என்றோ அல்லது சொந்த ஊர் வாழ்வின் நனவிடைத் தோய்கிறார் என்றோ யாராவது இந்த நாவலை வரையறுப்பார்களேயானால் அது ஒருபரிமாணப் பார்வையாகவே அமையும்.*

*பெருமைகளென்று கருதியிருந்த ஒரு வாழ்வுமுறையின் கரடுமுரடான தோல் உதிர்க்கப்படுதலும் புதிய மென்மையான தோலின் உருவாக்கமும் உதிர்ந்தும் உதிராதிருக்கும் விகாரங்களும் வாழ்வுக்கான பல்வேறு களங்களில் எப்படி நிகழ்கின்றது என்பதை ஒரு சமூக வரலாற்றாசிரியனின் அணுகுமுறைகளுடன் பல்பரிமாணத்தன்மையுடன் நோக்குகின்றபோது யாழ்ப்பாணத்துச் சமூகமாற்றம் தொடர்பான புதிய புரிதல்கள் குதிரை வாகனத்தின் மூலம் சாத்தியமாகும்.*

***இ.இராஜேஸ்கண்ணன்***
*சிரேஷ்ட விரிவுரையாளர், சமூகவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

₹ 225/-

ISBN : 978-93-85471-78-0

9 789385 471780

UMi The Ultimate
Unique
Media Integrators
No.8, 6th Cross, 8th Main Road, Vaishnavi Nagar, Thirumullaivoyal,
Chennai-600 109. E-mail: umiinfobooks@gmail.com